மேய்ச்சலியம்

ஆய்வுக் கட்டுரைத் தொகுதி - 1

தமிழ்நாடு மேய்ச்சலியம்

பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி...

இந்தியாவின் முதல் மேய்ச்சலிய நிறுவனம்

தொழுவம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

Initiated & Supported by

NABARD

MABIF
An Initiative of NABARD & TNAU



மேய்ச்சலியம்

ஆய்வுக் கட்டுரைத் தொகுதி – 1

தொகுப்பாசிரியர்

முனைவர் பெரி.கபிலன்
மேய்ச்சலியச் செயற்பாட்டாளர்
தொழுவம்

தொழுவம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம்

8, NABARD – MABIF, **மதுரை வேளாண் கல்லூரி & ஆராய்ச்சி மையம்**

மதுரை - 625 104. www.thozhuvam.org

நூல் விபரக்குறிப்பு

நூலின் பெயர்	:	**மேய்ச்சலியம்** **ஆய்வுக் கட்டுரைத் தொகுதி - 1**
தொகுப்பாசிரியர்	:	முனைவர் பெரி.கபிலன் மேய்ச்சலியச் செயற்பாட்டாளர் தொழுவம், மதுரை 9894406111, kabilanmkuc@gmail.com
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	அக்டோபர் 2024
நூல் அளவு	:	B5
பக்கங்கள்	:	141
விலை	:	₹ 300/-
பதிப்புரிமை	:	தொழுவம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் 8, NABARD – MABIF மதுரை வேளாண் கல்லூரி & ஆராய்ச்சி மையம், மதுரை-625104. மின்னஞ்சல்: thozhuvam@gmail.com Ph: 984340 6111, 96596 65368
அச்சிட்டோர்	:	சான்லாக்ஸ் பதிப்பகம் 61,T.P.K மெயின் ரோடு, வசந்த நகர், மதுரை - 625 003. Ph: 72003 03383
வெளியீடு	:	யாம் வெளியீட்டகம் 27/1, தெற்குத்தெரு, தல்லாகுளம், மதுரை - 625002. மின்னஞ்சல்: yaamconnect@gmail.com Ph: 98403 69516, 99443 96651

அணிந்துரை

ஆவும் தொழுவும் போல் தொடர்க

பேராசிரியர் ம.பெ.சீனிவாசன்

ஆனிரைகளுக்கான மேய்ச்சல் நிலங்கள் அரசர்களால் விடப்பட்டதை இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் குறிப்பிடுகின்றன. **"விடுநில மருங்கும் படுதல் ஆர்ந்து"** என்பது மணிமேகலை.

விடுநிலம் - மேய்ச்சலுக்கு விடப்பட்ட நிலம்

'களரும் கன்று மேய்பாழும்'' என்னும் கல்வெட்டுக் குறிப்பில் பாழ் - தரிசு நிலத்தைக் குறிக்கிறது.

இனிப் பேச்சு வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரண்டிலும் தனக்கு ஒரு மாற்றுச் சொல்லின்றித் தனியரசு செய்வது, "மேய்ச்சல்" என்னும் சொல்லே ஆகும். எனினும் "மேய்கை, மேய்ப்பு, மேய்க்கிய'' என இது மருவி வழங்குதலும் உண்டு. குருகு இரை தேடுதலை,

கருங்கால் வெண்குருகு மேயும்
பெருங்குளம் (325: 5-6)

என்று குறிப்பிடுகிறது குறுந்தொகை.

மழையினால் தழைத்த வரகினை இரலை என்னும் ஆண்மான் மேய்ந்தமையால் அக்கதிரின் நுனி குறைந்து காணப்படுவதாகக் குறுந்தொகை காட்சிப்படுத்துகிறது.

பழமலைக் கலித்த புதுப்புன வரகின்
இரலை மேய்ந்த குறைத்தலைப் பாவை (220: 1-2)

என்பன பாடலடிகள். இங்குப் "பாவை'' என்பது அப்பொருளை உணர்த்தும் பாடலடியாகும். இப்படிச் செம்மொழி இலக்கியங்களில் இடம்பெறும் மேய்கை, மேய்ச்சல் என்னும் சொற்கள் பக்தி இலக்கியக் காலத்திலும் மாற்றமின்றித் தொடர்கின்றன.

கண்ணனின் குழலிசைக்கு மயங்கி,

மருண்டு மான் கணங்கள் மேய்கை மறந்து (3-6-9)

நின்றதாகப் பாடுகிறார் பெரியாழ்வார்.

ஆநிரை மேய்க்க நீ போதி
அருமருந்தாவது அறியாய் (2-7-1)

என்பதும் அவர் கூற்றே.

மேய்ச்சலுக்குச் செல்லும் மாடுகளின் பின்னே கண்ணன் போவது காரணமாகத்தாயின் மனம் நோவது பற்றிப் பேசுவது இப்பாட்டு.

அவர் திருமகளாகிய ஆண்டாளும்

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப்பெற்றான்
காடுவாழ் சாதியும் ஆகப்பெற்றான் (12-8)

என்று திருவாய்ப் பாடிக் கண்ணன் மேய்ச்சல் நிலத்துக்குச் செல்வது பற்றிப் பாடக் காணலாம்.

தாய் அசோதையைப் போலவே அவன் பிரிவுக்கு அஞ்சிய ஆய்ச்சியரும் அவன் பசுநிரை மேய்க்கப் போவதைத் தடுத்தார்களாம். ஆய்ச்சி ஒருத்தி,

வீவ நின் பசுநிரை மேய்க்கப் போக்கே! என்கிறாள்.

ஆநிரை மேய்க்கப் போக வேண்டாம் என்பது கருத்து.

இலக்கியங்களில் இல்லது புனைதலுக்கும் இடமுண்டு எனினும் உள்ளது புனைதலாக இருப்பதே ஏற்கத்தக்கது.

பொறந்தார் வட மதுரை போய்வளர்ந்தார் ஆய்ப்பாடி

என்று நாட்டார் பாடல்களில் தொடங்கி எழுத்து இலக்கியங்கள்வரை உவந்து உவந்து பேசப்பெறுவன கிருஷ்ணாவதாரக் கதைகளே ஆகும். அவற்றிலும் அடிகரும்பாக இனிப்பது அவனது இளம்பருவக் குறும்புகளே.

‘கண்ணன் இல்லையேல் கவிதை இல்லை’ (There is no song without Krishna) என்றொரு பழமொழி வங்கமொழியில் வழங்குகின்றது. வங்கத்தில் மட்டுமன்றி இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள நிலை இதுவே.

பேராசிரியர் பெரி.கபிலன் தொகுத்தளித்துள்ள, ‘மேய்ச்சலியம் ஆய்வுக் கட்டுரைத் தொகுதி (1)’ திணை நிலைத் காலந்தொட்டுத் தொடர்ந்து வரும் மேய்ச்சலியத்தின் தொடர் சங்கிலியாக இன்றளவும் தொடர்வதை உணர்த்துகிறது.

இத்தலைப்பில் உள்ள பத்தொன்பது கட்டுரைகளும் மேய்ச்சலியக் கூறுகள் பலவற்றைப் பகுத்துப் பகுத்து விரித்துப் பேசுவதாகவே அமைந்துள்ளன. குறிப்பாக மேய்ச்சல் நிலப்பழமொழிகள் மற்றும் கலைச்சொற்கள் பற்றிய இருகட்டுரைகளும் என்னை வியப்பில் ஆழ்த்தின. சொலவடைகள் அல்லது பழமொழிகள் சுருக்குப் பையில் போட்டுவைத்த பொற்காசுகள் போன்றவை. ஒருமுறை மார்க்சிய அறிஞர் எஸ்.என்.நாகராஜனோடு பேசிக்கொண்டிருக்கையில் (28.11.2015), “தமிழ் தொன்மையான பண்பாட்டு மொழி என்பதற்கு இதில் உள்ள ஒன்றரை லட்சம் பழமொழிகளே சாட்சி” என்று குறிப்பிட்டது என் நினைவுக்கு வருகின்றது.

கால்நடை வளர்ப்புச் சமூகத்தில் பிறந்து அதன் நடைமுறைப் பழக்கவழக்கங்களைக் கண்டு வளர்ந்தவன் நான். எனினும் பெரி.கபிலன் அவர்களின் இக்கட்டுரைத்தொகுப்பு நான் முன் அறியாதனவற்றை அறிவிப்பதாகவே அமைந்திருக்கிறது. வயது எண்பதைக் கடந்த எனக்கே இது ‘புதியது’ எனில் இன்றைய தலைமுறைக்கு இத்தொகுப்பு, முற்றும் புதியதாகவே தோன்றுவது இயல்பே. இவ்வரிய தொகுப்பை முயன்று கொண்டுவந்த பேராசிரியர் பெரி.கபிலனும் அறிவுக்கொடை நல்கிய கட்டுரையாளர்களும் பெரிதும் பாராட்டத்தக்கவர்களே. இதுபோன்ற அறிவார்ந்த பணிகளில் இவர் மேலும் மேலும் ஈடுபட விரும்புகிறேன் திரு. கபிலன் நன்முயற்சிகள், ‘ஆவும் தொழுவும் போல்’ தொடர்க என வாழ்த்துகிறேன்.

அன்புடன்

ம.பெ.சீனிவாசன்

சிவகங்கை

11.10.24

(கலைமகள் திருநாள்)

ஏன் இந்தத் தொகுப்பு நூல்?

இன்றைய நவீன உலகில் ஆடு மாடு மேய்ப்பது இழிவானதாகவும், எருமை மேய்ப்பது அதைவிட மோசமானதாகவும் பார்க்கப்படுகிறது. முற்போக்குப் பேசுபவர்கள் மேய்ச்சல் தொழிலை பிற்போக்குத் தனமான தொழிலாகப் பார்க்கிறார்கள். ஆன்மிகம் பேசுபவர்களிடம் நாட்டின கால்நடைகள் (ஆடு, மாடு, எருமை) குறித்த சரியான புரிதலும் தெளிவான பார்வையும் இல்லை. தமிழ் தேசியம் குறித்து பேசுபவர்கள் மேய்ச்சல் தொழிலில் ஈடுபடுவோர் ஒரு குறிப்பிட்ட சாதியினர் என்ற பொதுக் கருத்து சமூகத்தில் நிலவுவதால் விலகிச்செல்கிறார்கள். அறிவுசார் அமைப்புகள் பாரம்பரிய மேய்ச்சல் தொழில்நுட்ப முறையை அங்கீகரிக்க மறுக்கிறார்கள். இந்திய விடுதலைக்குப் பின்பு மத்திய மாநில அரசுகள் இன்று வரை ஒரு ரூபாய் கூட மேய்ச்சலில் ஈடுபடுவோருக்கு கொடுக்கவும் இல்லை, எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த முன்வரவில்லை.

அரசின் பல்வேறு நலத்திட்டங்களுக்கு மேய்ச்சல் நிலங்களை பயன்படுத்தப்படுவதால், மிகவேகமாக சமவெளி பகுதிகளில் மேய்ச்சல் நிலம் குறைந்து வருகிறது. புதிய நான்கு வழிச்சாலைகளால் பாரம்பரியமான மேய்ச்சல் வழித்தடம் தடுக்கப்பட்டு, திசை மாறிச் செல்லும் நிலைக்கு மேய்ச்சல் சமூகத்தினர் தள்ளப்பட்டுள்ளார்கள். மலைகள் மற்றும் காடுகளில் மேய்ச்சலுக்கு அனுமதியில்லை, வறட்சியான நேரங்களில் ஒருவேளை மேய்ச்சலில் ஈடுபட்டால் கைது, அபராதம் ஒருபக்கம். இரவு நேரங்களில் கால்நடைகளோடு நகர்ப்பகுதி சாலைகளை கடக்கும்போது சில காவல்துறையினர் தொந்தரவு. கண்மாய்களில் மீன் ஏலம் எடுப்பவர்கள் தண்ணீர் குடிக்கக் கால்நடைகளை அனுமதிப்பதில்லை, மேய்ச்சல்காரர்களைக் கண்டபடி திட்டி விரட்டுவது வழக்கமானது. இயற்கை வேளாண்மை செய்பவர்களுக்கும் கிடை அமர்த்துபவர்களுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அரசு கால்நடைத் துறைக்கும் மேய்ச்சல் காரர்களுக்கும் தொடர்பில்லை. அரசின் பார்வை படாத ஒரே தொழிலாக பாரம்பரியமான மேய்ச்சல் தொழில் இருக்கிறது.

மேய்ச்சல் நிலங்களில் தினமும் காலை பத்து மணி முதல் மாலை ஆறு மணி வரை மேய்ச்சலில் ஈடுபடுத்தும் கால்நடைகளையும் அதை மட்டுமே நம்பி வாழும் மக்களின் நிலையையும் “கொரோனா” பெருந்தொற்றுக்காலத்தில் எப்படி இருந்திருப்பார்கள் என்று சிந்தித்துப் பார்க்க யாருமில்லை. பாரம்பரிய மேய்ச்சல் முறையைப் பின்பற்றுவதால் இருபத்தி நான்கு மணி நேரமும் கால்நடைகளோடு மட்டுமே மேய்ச்சலில் ஈடுபடுவோர் இருக்கமுடியும், குடும்பத்தில் நல்லது கெட்டது நிகழ்வுகளில் கூடக் கலந்துகொள்ள முடியாது. கடுமையான புயல் மழைக் காலங்களில் வெட்ட வெளியில் கால்நடைகளோடு இருப்பதால் இரவு நேரங்களில் மின்னல்வெட்டி இறந்தவர்கள் எண்ணிக்கையில் பெரும்பாலானோர் மேய்ச்சலில் ஈடுபட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பருவ காலங்களுக்கு ஏற்றவாறும் இடம் விட்டு இடம் பெயர்ந்து மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகளுக்கும் அதை சார்ந்து வாழும் மக்களுக்கும் தனித்துவமான காப்பீடுகள் இல்லை.

மேய்ச்சலில் ஈடுபட்டுவரும் மக்களுக்கான மதிப்பும் மரியாதையும் பொது சமூகத்தால் நிராகரிக்கப்படுகிறது, அவர்களுக்கான சமூக அங்கீகாரமும் தான் சார்த்த சமூகத்திலேயே கிடைப்பதில்லை. மேய்ச்சலில் ஈடுபடும் இளைஞர்களுக்குத் திருமணம் செய்யப் பெண் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுவதால் இளைஞர்கள் பெரும்பாலோர் வெளிநாடுகளுக்கு

வேலைக்கு செல்கிறார்கள். மேய்சசல் தொழில் மிகவேகமாகக் குறைந்து வருகிறது. பாரம்பரிய மேய்ச்சல் நிலங்கள், காடுகள் மற்றும் மலைகளில் மேய்ச்சலில் ஈடுபட்டுவந்த நாட்டின கால்நடைகளுக்கான இயற்கை கொடுத்த ‘சமூக நீதி’யும் மறுக்கப்படுகிறது.

இதைப் பொறுமையாக படித்த தங்களின் மனத்தில், எதுக்கு இவர்கள் தேவையில்லாமல் கஷ்டப்பட்டு அரசின் உதவியில்லாமல், சமூக அங்கீகாரம் இல்லாமல் இந்த மேய்ச்சல் தொழிலைச் செய்யவேண்டும், இதை விட்டு விட்டு வேறு ஏதாவது ஒரு வேலை தேடலாமே அல்லது வெளிநாடுகளுக்கோ, நகர்பகுதிக்கோ வந்து விடலாமே... நிறைய வாய்ப்புகள் இங்கே இருக்கே... என்று தங்களின் மனத்தில் தோன்றுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. நவீன உலகை அறியாமல் இவர்கள் இந்த மேய்ச்சல் தொழிலில் ஈடுபடுவது போல் நமக்குத் தோன்றும்.

பாரம்பரிய மேய்ச்சல் தொழிலில் ஆயர்கள் என்றும் யாதவர் (கோனார்) மட்டுமல்ல, இவர்களைப் போலவே குறும்பக் கவுண்டர், முத்தரையர், வன்னியர், மறவர், அகமுடையர், கள்ளர், கம்பளத்து நாயக்கர், ஒக்கலிக கவுண்டர், லிங்காயத், நாடார், தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர், பறையர், இசுலாமியர் ஆகியோருடன் நிலமற்ற பலதரப்பினரும் மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அரசின் உதவியும் முதலீடும் இல்லாமலேயே மேய்ச்சல் தொழிலைச் சார்ந்து. தமிழ்நாடு முழுவதும் இருபது இலட்சத்திற்கு மேற்பட்டோர்க்கு வேலை கிடைக்கிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மிக மூத்த தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் ‘மேய்ச்சல்’ என்ற சொல் “மேய” என்பதன் அடிப்படையாகத் தோன்றியது என்பதை,

“மாயோன் மேய காடுறை உலகமும்” (தொல்:பொரு:5)

“மாயோன் மேய மன்பெருஞ் சிறப்பின்
தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்” (தொல்:சொல்:63)

என்னும் நூற்பாக்களால் புரிந்து கொள்ள முடிகிறது.

‘பொருந்துதல்’ என்றும் ‘விரும்புதல்’ என்றும் இதற்கான பொருளாக தொல்காப்பியம் விளக்குகிறது. மேய்ச்சல் என்பதன் முன்சொல்லான “மேவ“ என்பதன் பொருள் “விரும்புதல்” என்பதாகும்.

“நம்பும் மேவும் நசை ஆகும்மே” (தொல்:சொல்:8)

“அமர்தல் மேவல்” (தொல்:சொல்:380)

இந்த இரண்டு இடங்களிலும் தொல்காப்பியர் விளக்கமாக ‘விரும்புதல்’ என்ற மூலப்பொருளை விளக்குகிறார். இயல்பாக காட்டு விலங்குகள் “மேய்தல்” செயலில் ஈடுபட்டு வந்தன. அதாவது விரும்பித் தமது உணவை எடுத்துக்கொண்டிருந்தன. பின்னர் காட்டு விலங்குகள் வீட்டு விலங்குகளாக பழக்கப்படுத்தப்பட்ட பின்னர் “மேய்தல்” என்பது ‘மேய்த்தலாக’ ஆனது, என்பதை குறிப்பிட்டு ‘சூழலியலாளர் பாமயன்’ அவர்கள் இந்த மாநாட்டிற்கு “மேய்ச்சலியம்” என்ற சொல் பொருத்தமாக இருக்கும், தமிழ் அறிவுலகில் “மேய்ச்சலியம்” என்றசொல் புதிது என்று கூறினார்கள்.

தமிழ் நிலப்பகுதிகளில் அரசின் பார்வைபடாமல், வலசையோடிகளாக, அனாதைகளாக, அலையும் தமிழ் ஆதிக்குடிகளின் பாரம்பரிய மேய்ச்சல் முறையை பின்பற்றி மேய்ச்சலில் ஈடுபடும் ஐந்து லட்சத்திற்கு மேற்பட்டோரை ஏன்? பாதுகாக்கவேண்டும் என்ற அறிவியல் பூர்வமான புரிதலை, விழிப்புணர்வை அரசின் பல்வேறு துறைசார் அதிகாரிகளுக்கும், பொதுச் சமூகத்திற்கு ஏற்படுத்தும் முயற்சியே மதுரை வேளாண்மைக் கல்லூரி வளாகத்தில் அக்டோபர் 18, 19 ஆகிய நாட்களில்

நடைபெறும் தமிழ்நாடு மேய்ச்சலியம் மாநாடு. இம்மாநாட்டில் வெளிவரும் ‘மேய்ச்சலியம் 2024’ ஆய்வுக் கட்டுரைத் தொகுதி ஒன்றில் எழுதிய கட்டுரையாளர்கள் தனித்துவமான துறைசார் அறிவுப் பின்புலங்களையும், கள அனுபவங்களையும், மேய்ச்சலியம் குறித்த முழுமையான புரிதலையும் கொண்டவர்கள். இந்த பூமி தனிப்பட்ட மனிதனுடையதோ, ஒரு சமூகத்திற்கு உடையதோ, ஒரு நாட்டிற்கு உடையதோ அல்ல, ஏன், மனிதர்கள் கூட்டுச் சொத்துமல்ல நாம் இந்த பூமிக்கு விருந்தினர் மட்டுமே. பூமியில் நமக்குக் கிடைத்ததை விட உயர்ந்த நிலையில் அடுத்த தலைமுறைக்கு இதைக் கைமாற்றிக் கொடுக்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்ற காரல் மார்க்ஸின் கருத்தை உள்வாங்கி மேய்ச்சல் நிலம், பல்லுயிரியம், இயற்கைக்கான சமூகநீதி குறித்த பார்வையில் கட்டுரையாளர்கள் தங்களின் கருத்தை பதிவு செய்திருக்கிறார்கள் அவர்களுக்கு என் நன்றியை பதிவு செய்கிறேன்.

‘மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு - 2026’ என அறிவிக்கும் தீர்மானம் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் 15.03.22 அன்று நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை மங்கோலிய என்ற நாடு முன்மொழிந்தது. இதற்கு இந்தியா உள்பட 102 நாடுகளும் 320க்கும் மேற்பட்ட அமைப்புகளும் ஆதரவு அளித்தன, இதற்குத் “தொழுவம்’’ அமைப்பும் ஆதரவு அளித்தது.

உலகளாவிய பல்லுயிர் பெருக்கம், காலநிலை மாற்றம், சமூக-பொருளாதார பிரச்சினைகள் குறித்துத் தீர்வு காண “மேய்ச்சலியம்’’ உதவும் என்பதை உணர்ந்து ஐக்கிய நாடுகள் பொதுச் சபை முழுமையாகப் பாராட்டுகிறது. மேய்ச்சல் தொழில் ஆற்றல் வாய்ந்ததாகவும், வாழ்வாதாரம் மேம்படுத்தும் விதமாகவும் விளங்குகிறது. மேலும், பல்வேறு சூழல் அமைப்புகள், பண்பாடு, அடையாளம், தொன்மை அறிவு மற்றும் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான வரலாற்று அனுபவங்களை மேய்ச்சல் தொழில் தன்னோடு பிணைத்து வைத்திருப்பதை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்கிறது. வளமான மேய்ச்சல் நிலங்கள் தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்வதோடு, வளங்குன்றா மேய்ச்சலுக்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் முதன்மையானவை என ஐ.நா. பொதுச்சபை உறுதிப்படுத்துகிறது. 2026 ஆம் ஆண்டை மேய்ச்சல் நிலம் மற்றும் மேய்ச்சல் சமூக சர்வதேச ஆண்டாக (International year for Rangelands and Pastoralists) செயல்படுத்த உணவு மற்றும் வேளாண்மை (Food and Agriculture Organization of UN) அமைப்பிற்கு வேண்டுகோளும் வைத்திருக்கிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் மேய்ச்சலியம் குறித்த தீர்மானம் (15.03.22) நிறைவேற்றுவதற்கு முன்பே, ஜூலை 2020ஆம் ஆண்டு மதுரையில் ஆர்வமுள்ள இருபது இளைஞர்களால் பாரம்பரிய அறிவையும், திறனையும் பயன்படுத்தி மேய்ச்சலில் ஈடுபடுவோர் சந்திக்கும் பல்வேறு பிரச்சனைகளுக்கு அறிவியல் பூர்வமாக தீர்வு காண்பதற்காக, தமிழ்நாடு அரசின் பதிவுத்துறையில் பதிவு செய்யபட்ட அமைப்பாகத் **தொழுவம்** உருவாக்கப்பட்டது.

மதுரையிலிருந்து நூறு கிலோ மீட்டர் சுற்றளவில் மேய்ச்சலில் ஈடுபட்டோரை ஒருங்கிணைத்து மேய்ச்சல் கால்நடைகள், மேய்ச்சல் நிலம் குறித்தும் மேய்ச்சலில் ஈடுபடுவோர் வாழ்வியல் குறித்து இனவரைவியல் நோக்கோடு ஆவண நூலும், ஆவணப்படமும் வெளியிட்டோம்.

தொடர்ந்து பல்வேறு ஆக்கபூர்வ பணிகளின் மூலம் மதுரை வேளாண்மை கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள (NABARD - MABIF) நிறுவன உதவியோடு ‘தொழுவம்’ உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக (31.05.21) மாறியது. இந்தியாவின் முதல் மேய்ச்சலிய நிறுவனம் ‘தொழுவம்’ என்பது குறிப்பிடத்தக்கது, இந்நிறுவனத்தில் 400க்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

தொழுவம் (NABARD - MABIF) நிறுவனத்தின் நிதி உதவியோடு சோதனை முயற்சியாகக் கிடை மாட்டின் A2 பால் மதிப்பு கூட்டுப் பொருட்களான கிடை பசு நெய், பனீர், தயீர், ஐஸ்கிரீம் மற்றும் சாணத்தில் மதிப்புக்கூட்டுப் பொருட்களான பத்தி, கப் சாம்பிராணி, பூந்தொட்டி... மற்றும் தொழு உரங்களான பஞ்சகவ்யா, பூச்சி விரட்டி... கிடை ஆட்டு இறைச்சி (மொத்த விற்பனை) செய்யப்பட்டு வருகிறது. இயற்கை விவசாயம் செய்ய கிடைமாடு, கிடை ஆடுகளை விவசாய நிலங்களில் இரவு நேரம் கிடை அமர்த்தி மண்ணை வளப்படுத்தியும் வருகிறது. மேலும் பசுமைக்கழிவு, உணவுக்கழிவு, காகிதக் கழிவுகளில் இருந்து பயோ-கேஸ் (Bio-Gas) எடுக்க கிடை மாடு, ஆடுகளின் சாணத்தில் உள்ள பாக்டீரியா உதவுவதால் மாதம்தோறும் மொரிசியஸ் மற்றும் மாலத்தீவிற்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். தற்போது நான்காவது ஆண்டில் தொழுவம் அடி எடுத்து வைத்துள்ளது. தற்சமயம் மேய்ச்சலில் ஈடுபடும் 200க்கும் மேற்பட்டோர் இதன் மூலம் பயனடைந்து வருகிறார்கள். தொழுவம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் வெற்றியடையக் காரணமாக இருந்தது (NABARD - MABIF) நிறுவனமாகும்.

தமிழகம் முழுவதும் அந்தந்தப் பகுதிகளில் பாரம்பரிய மேய்ச்சலில் ஈடுபடுத்தும் ஆடு, மாடு, எருமை வளர்ப்போரை ஒருங்கிணைத்து புதிய உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களை நபார்டு உதவியோடு வரும் காலங்களில் தொழுவம் உருவாக்க முயற்சி எடுக்கும். இதன்மூலம் பசுமைப் பொருளாதாரம் எளிமையாக மீட்கப்படும்.

மேய்ச்சல் சமூகத்தினர் உற்பத்தி செய்யும் கால்நடைப் பொருள்களை தங்களுக்குள் வைத்துக் கொள்ளாமல், லட்சக்கணக்கான மக்களுக்குத் தமிழகம் முழுவதும் கொடுத்து வருகிறார்கள். மேய்ச்சலில் ஈடுபடுத்தப்படும் கால்நடைகள் மனிதர்கள் சாப்பிட முடியாத புல் மற்றும் தாவரங்களை உண்டு வாழ்வதோடு, மனிதர்களுக்குத் தேவையான மலிவான, சுத்தமான, புரதச்சத்து நிறைந்த உணவாகவும் மாறுகின்றன. மேலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் நல்ல விலைக்கு விற்பனைக்கு வருகின்றன. இவ்வாறாக மேய்ச்சல் சமூகத்தினரின் பங்களிப்பு தமிழக அளவில் சத்தான உணவிற்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் உதவுகின்றது.

மேய்ச்சல் நிலத்தின் முதன்மைப் பணியாளர்களான மேய்ச்சல் சமூகத்தினர் பல்லுயிர்ப் பெருக்கத்தை அதிகரிப்பதிலும், சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையிலும், கார்பன் வெளிப்பாட்டைக் குறைப்பதிலும், நீர்நிலைகளைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறார்கள். பண்ணைத் தொழில் முறையில் குறுகிய இடத்தில் அதிக எண்ணிக்கையில் வளர்க்கப்படும் கால்நடைகள் அதிக கார்பன் உமிழ்வையும், நீர்த் தேவையையும் கொண்டிருக்கும். அதேநேரம் பாரம்பரிய மேய்ச்சல் முறையில் வளர்க்கப்படும் கால்நடைகள் மிகக் குறைவான கார்பன் உமிழ்வும், நீர்த் தேவையும் கொண்டிருக்கிறது என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

மேய்ச்சலில் தொடர்ந்து ஈடுபடும் கால்நடைகளால் மேய்ச்சல் நில பூமியில் மிகப்பெரிய கார்பன் மடு உருவாகின்றது. காலநிலை மாற்றத்தை தணிப்பதற்கு, வளம்குன்றா மேய்ச்சல் முறை மேய்ச்சல் நிலங்களில் அவசியமாகிறது. மேய்ச்சல் முறையில் கால்நடை வளர்ப்பதற்கு மிகக் குறைவான எரிபொருளே தேவைப்படுகிறது. மேய்ச்சல் நிலம் இயற்கையின் உதவியால் சுயமாகவே தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது. மேய்ச்சலின் போது கால்நடைகள் நிலத்தின் மேல் பகுதியில் உள்ள புல் மற்றும் சிறு தாவரங்களை உண்பதால் காட்டுத் தீ ஏற்படாமல் தடுக்க மேய்ச்சல் முறை உதவுகிறது. எனவே, பாரம்பரிய மேய்ச்சல் முறையில் வளர்க்கப்படும் கால்நடை வளர்ப்பு, இயற்கைக்கு ஏற்றதாகவும் கால்நடை உற்பத்தி அமைப்பாகவும் இருப்பதோடு, நிலையற்ற காலநிலை மாறுபாடுகளுக்கு இடையில் உற்பத்தி மற்றும் வளங்குன்றா வளர்ச்சிக்கும் சமநிலையை உருவாக்குகிறது.

வளம்குன்றா மேய்ச்சல் நிலங்கள் மற்றும் பாரம்பரிய மேய்ச்சல் மூலமாக நிலச்சரிவு நடுநிலையை உருவாக்க உலகளாவிய எட்டு முக்கிய செயற்பாடுகளை ஐ.நா. சபை அறிவித்துள்ளது. மத்திய, மாநில அரசுகள் இதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மலைகள், காடுகள், வயல்கள் எங்கும் மேய்ந்து அலைந்து வாழும் கால்நடைகள் தங்கள் குளம்படிகளில் பல்லுயிரியத்தைப் பதியமிட்டுச் செல்கின்றன. இயற்கைச் சுழற்சியோடும், உயிரினங்களின் உணவுச் சங்கிலியோடும் தொப்புள் கொடி உறவினைக் கொண்டுள்ள மேய்ச்சல் பண்பாடு பசுமைப் பொருளாதாரத்திற்கு உரிய வளமான கூறுகளைக் கொண்டுள்ளது என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும்.

'மேய்ச்சலியம்' இயற்கையுடன் நின்று, மேய்ச்சல் அறிவின் துணை கொண்டு பல்லுயிர்மைக்கான சிந்தனைகளையும் செயல்திட்டங்களையும் முன்மொழிகிறது. அத்துடன் மேய்ச்சல் நிலப் பண்பாட்டின் தொன்மையினையும் தொடர்ச்சியினையும் ஆழ்ந்தறிந்து, இயற்கையோடு இயைந்த வாழுமைக்கான எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் திசையில், புவியியல், அரசியல், சமூகவியல், பொருளாதாரவியல், சூழலியல் ஆகியவற்றை உள்ளடக்கி, காலநிலை மாற்றம் குறித்த ஓர்மையோடு வரலாற்றின் கழிமுகத்தில் "மேய்ச்சலியம்" பல்லுயிர்மைக்கான பயணத்தைத் தடையில்லாமல் தொடர அரசும், பொதுச் சமூகமும் புரிதலோடு அனுமதிக்க வேண்டும்.

பட்டி பெருகிப் பால் பானை பொங்கவும், நல்ல மழை பொழிந்து உலகு செழிக்கவும் வேண்டும். அதன் பொருட்டு 'நீரின்றி அமையாது உலகு' என்பதைப் போல, 'ஆவின்றி அமையாது இயற்கைச் சமநிலை' எனும் உணர்வுடன் "மேய்ச்சலியம்" நிலையான வளர்ச்சிக்கு நாற்றுப் பாவுகிறது.

பசுமைப் பொருளாதாரத்திற்கான உறைமோர்... மேய்ச்சலியம்!

பெரி.கபிலன்
மேய்ச்சலிய செயற்பாட்டாளர்
தொழுவம்! 9894406111

மேய்ச்சலிய பசுமைப் பொருளாதாரத்தின் குறியீடு
'தொழுவம்'

பசுமைக் கழிவு, உணவுக்கழிவு மற்றும் காகிதக் கழிவுகளில் இருந்து 'பயோ கேஸ்' தயாரிக்க மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகளின் கழிவுகளில் உள்ள பாக்டீரியா உதவுவதால் மொரீசியஸ் மற்றும் மாலத்தீவு நாடுகளுக்கு தொழுவம் ஏற்றுமதி செய்து வருகிறது.

பொருளடக்கம்

வ. எண்.	தலைப்பு	பக்கம் எண்
1	மேய்ச்சலியம் என்னும் வாழ்வியல் **சூழலியாளர் பாமயன்**	1
2	தோடார் பழங்குடி - தொன்மையான மேய்ச்சல் குடி **முனைவர் ஒ.முத்தையா**	5
3	மேய்ச்சல் வாழ்வில் பொருளியல் சூழலியல் நோக்கு - **கதிர்நம்பி**	9
4	உயிர்ச்சூழலியமும், மேய்ச்சலியமும் **ஆய்வாளர் சு.விஜய் சர்மா, பேராசிரியர் பெ.இரவிச்சந்திரன்**	18
5	தற்சார்பை நோக்கிய ஊரக உள்ளாட்சிகள் - **முனைவர் க.பழனித்துரை**	27
6	மேய்ச்சல் நிலச் சிக்கலின் தோற்றுவாய் - **எழுத்தாளர் ஆர்.முத்துநாகு**	32
7	பன்னாட்டு நோக்கில் மேய்ச்சலியம் - **செ.சுந்தரேசன்**	37
8	பட்டி மாடும் பாறு கழுகும் - **சூழலியாளர் சு.பாரதிதாசன்**	44
9	நாட்டுத் தீவனப் புற்களும் தமிழ்நாட்டின் மேய்ச்சல் நிலங்களும் **பேராசிரியர் பெ.இரவிச்சந்திரன், ஆய்வாளர் சு.விஜய் சர்மா**	47
10	உள்ளூர் மாட்டினங்களின் இருப்பை உறுதி செய்வது எப்படி? - சில உயிர்ப்பான வழிமுறைகள் - **முனைவர் கி. ஜெகதீசன்**	56
11	தமிழர் வாழ்வில் வளம் சேர்க்கும் மேய்ச்சல் நிலங்களும், மேய்ச்சல்காரர்களும் **டாக்டர் எம்.எஸ்.சரவணன்**	63
12	“கொரங்காடு” மேய்ச்சல் நிலம் - **பி.விவேகானந்தன்**	68
13	திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பெருவெள்ளத்தால் மேய்ச்சல் சமூகம் சந்தித்த சிக்கல்கள் - **மு.மதிவாணன்**	73
14	தொண்டை மண்டல மேய்ச்சலியம் - **முனைவர் சா. கருணாகரன்**	79
15	பச்சையாற்றங்கரை நாகரிகத்தில் மேய்ச்சலியத்தின் தொன்மைச் சிறப்பு **சு.வானமாமலை**	86
16	மேய்ச்சல் சமூகப் பண்பாட்டு மரபும் நீட்சியும் - **கோ.அசோகன்**	92
17	தமிழ்ப் பண்பாட்டில் புலிக்குளம் இனக் கிடைமாடுகளும் ஜல்லிக்கட்டும் **முனைவர் க.சி.பழனிக்குமார்**	98
18	ஊர் காலி (ஊக்காலி) மாடு, ஆநிரையும் நிரை சார்ந்த பழமொழியும் **பழமொழி கோ.இராமசாமி**	107
19	கிடை (மரபும் புதுமையும்), மேய்ச்சல் நிலப் பழமொழிகள் மற்றும் கலைச்சொற்கள் - **எழுத்தாளர் வெற்றிச்செல்வன் இராசேந்திரன்**	113
	பின்னிணைப்புகள்	
	1. பர்கூர் மலைமாடு கிடைக்காரர்களின் கோரிக்கைகள்	130
	2. மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026	135
	3. வளங்குன்றாத மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் மூலமாக நிலச்சீரழிவு நடுநிலையை அடைய உலகளாவிய செயற்பாடுகள்	137

மேய்ச்சலியம் என்னும் வாழ்வியல்

சூழலியாளர் பாமயன்
pamayanmadal@gmail.com

மேய்ச்சலியம் என்ற சொல்லாட்சி, தமிழ் அறிவுலகில் புதிதாக நுழைந்துள்ளது. மேய்ச்சல் என்ற செயற்பாடு பன்னெடுங்காலமாகத் தமிழகம் மட்டுமல்லாது உலகின் பல பகுதிகளிலும் இயங்கி வருவதாகும். வளர்ந்த வளரும் நாடுகளின் தொய்வடைந்து வரும் மேய்ச்சல் வாழ்வியல்முறை ஆப்பிரிக்கப் பகுதிகளில் உயிர்ப்புடன் காணப்படுகிறது. மேய்ச்சல் என்ற சொல் “மேய'' என்பதன் அடிப்படையாகத் தோன்றியது.

“மாயோன் மேய காடுறை உலகமும்” (தொல்:பொரு:5)

என்கிறது தொல்காப்பியம்

“மாயோன் மேய மன் பெருஞ் சிறப்பின்
தாவா விழுப் புகழ்ப் பூவை நிலையும்” (தொல்:சொல்:63)

பொருந்துதல் என்றும் விரும்புதல் என்றும் இதற்கான பொருளாகத் தொல்காப்பியம் விளக்குகிறது. மேய்ச்சல் என்பதன் முன்சொல்லான “மேவ'' என்பதன் பொருள் “விரும்புதல்'' என்பதாகும்.

“நம்பும் மேவும் நசை ஆகும்மே” (தொல்:சொல்:8)
“அமர்தல் மேவல்” (தொல்:சொல்:380)

இந்த இரண்டு இடங்களிலும் தொல்காப்பியர் விளக்கமாக விரும்புதல் என்ற மூலப்பொருளை விளக்குகிறார். இயல்பாகக் காட்டு விலங்குகள் “மேய்தல்'' செயலில் ஈடுபட்டு வந்தன. அதாவது விரும்பித் தமது உணவை எடுத்துக்கொண்டிருந்தன. பின்னர் காட்டு விலங்குகள் வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்தப்பட்ட பின்னர் “மேய்தல்'' என்பது மேய்த்தலாக ஆனது.

முல்லை நில மக்களின் வாழ்வாதாரமான மேய்ச்சல் தொழில் மிகவும் பழமையானது. பன்னெடுங்காலமாக, சூழலியல், பொருளியல், அரசியல், சமூகவியல், பண்பாட்டியல் போன்ற பல கூறுகளை உள்ளடக்கி இயங்கி வருகிறது. வேளாண்மை என்பது சமூகத்தின் அடியாதாரமாக உள்ளதோ! அப்படியாக மேய்ச்சலும் அடியாதாரமாகவே உள்ளது. தொல்காப்பியம் குறிஞ்சிக்கு வேட்டையும், முல்லைக்கு மேய்ச்சலும், மருதத்திற்கு வேளாண்மையும், நெய்தலுக்குக் கடல் வேளாண்மையும் (உப்பும் மீனும்) பற்றிக் குறிக்கும்போது இதன் ஊடு கருத்தாக “விரும்பிச் செய்தல்'' என்ற பொருளையே கொண்டுள்ளது என்பது வியக்கத்தக்கது. வேட்டைக்கு “வேள்'' என்பதும், மேய்ச்சலுக்கு “மேவல்'' என்பதும், வேளாண்மைக்கு “வேள்'' என்பதும், நெய்தலுக்கும் அவ்வாறே விரும்பிச் செய்தல் என்ற உட்பொருளையே கொண்டிருப்பதை அறிய முடிகிறது.

இது ஒரு புறம் இருக்க, தொல்காப்பியம் தனது நூற்பாக்களில் முல்லை நிலத்தை முதல் அடிகளில் வைத்துப் பார்க்கின்றது. “மாயோன் மேய'' என்ற அடிகளில் முல்லையே முதலில் வைக்கப்படுகிறது. முல்லை நிலத்தில் தோன்றிய நாகரிக வாழ்வின் தொன்மைத் தொடக்கங்கள் இன்னும் ஆழமான ஆய்வுக்கு உரியன. கோன்மை என்ற அரசு முறையான முல்லையில்தான் தோன்றியது. கோல் கொண்டு ஆநிரைகளை மேய்ப்பதால்

கோல் என்பது கோன் என்று ஆகி அதுவே கோன்மை என்று அதாவது அரசு என்று ஆகியது.

“வெற்றமொடு வெறுத்து ஒழுகிய
கொற்றவர் தம் கோன் ஆகுவை!” (மதுரைக்காஞ்சி: 74)

மன்னர் மன்னன் என்ற அடிகளை இங்கு மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார்.

“அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்” (குறள்: 543)

என்று திருக்குறள் அரசனுக்கும் கோலுக்கும் உள்ள உறவைக் காட்டுகிறது.

கோல் - கோன் - கோன்மை என்று செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி குறிப்பிடுகிறது.

ஆயர் என்பவர்கள் முல்லை நிலத்து மக்கள் ஆவர்.

“மடவரே நல் ஆயர் மக்கள் நெருநை
அடல் ஏற்று எருத்து இறுத்தார்க் கண்டும் மற்று இன்றும்
உடல் ஏறு கோள் சாற்றுவார்” (கலி:102)

ஆயர் மக்கள் அஞ்சாது அலுக்காது காளைகளைத் தழுவுவர். அவர்களது வாழ்க்கை இன்பமோ துன்பமோ கால்நடைகளோடுதான் என்பது இதன் வழி விளக்கமாகிறது.

“ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை” (சிலப்:5:120)

என்ற அடிகள் கால்நடைகளைக் காத்து அதன் பயன்களை அனைவருக்கும் கொடுத்து வாழும் கோவலர் வாழ்க்கை இனிமையானது என்று விளக்கப்படுகிறது.

இந்த வாழ்க்கையின் வழியாகவே பல சமயத் தலைவர்களையும் தெய்வங்களையும் ஆயர்குடிகளாக வரையறுத்துள்ளனர். குறிப்பாக ஏசு பெருமகன் ஒரு ஆடு மேய்ப்பவராகவும், மகாபாரதத்தில் வரும் கண்ண பெருமான் மாடு மேய்ப்பவராகவும், ஔவையோடு விளையாடும் முருகன் மாடு மேய்ப்பவராகவும் சுட்டப்படுகின்றனர். ஏசுநாதர் நல்ல மேய்ப்பன் (Good shepherd) என்றே அழைக்கப்படுகிறார். இன்னும் கிறித்தவ மத குருமார்கள் ஆயர் என்றும் பேராயர் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இந்த வாழ்க்கை முறை இன்று மாறியுள்ளது. மிகக் கடுமையான சவால்களை இந்த விளிம்புநிலை சமூகம் சந்தித்து வருகிறது.

மேற்கத்திய சமூகங்கள் தங்களுக்கென்ற மேய்ச்சல் வாழ்வியலைக் கொண்டுள்ளன. நெடுந்தொலைவு சென்று, அதாவது நாடு விட்டு நாடு சென்று கால்நடைகளை மேய்த்துவிட்டு இருப்பிடத்திற்கு நெடு நாட்களுக்குப் பின்னர் திரும்பி வரும் மேய்ச்சல் சமூகங்களும் உண்டு. அவ்வப்போது சிறு தொலைவிற்குச் சென்று இருப்பிடங்களுக்குச் மேய்ச்சல் செய்பவர்களும் உண்டு.

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாம் சிறுபசு முகையே”

என்ற குறுந்தொகைப் பாட்டு அருகில் குடியிருப்பை உடைய ஆடுமேய்க்கும் சமூகத்தை வெளிப்படுத்துகிறது. “பறி” என்ற ஆடு அடைக்கும் கூடை ஈராயிரம் ஆண்டு கழிந்தும் அம்மக்களிடம் இருக்கிறது.

நாடோடி வாழ்க்கை கொண்ட மேய்ச்சல் சமூக மக்களும் இதில் ஒரு பிரிவாக உள்ளனர். இவர்கள் வெகு தொலைவு சென்று சொந்த நிலமற்று வாழ்க்கையை

மேற்கொள்வர். மேய்ச்சல் தொழில் கொண்டவர்கள் மட்டுமல்லாது, வேட்டை சமூக மக்களும் நாடோடிகளாகக் கருதப்படுவர்.

அதேபோல பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும் கொண்ட மக்களும் இருந்த குறிப்புகள் உள்ளன (நற்றிணை:121). மேய்ச்சல் தொழில் புரிவதற்குப் பரந்துபட்ட அறிவும், திறமையும் தேவை. அந்த அறிவையும் திறமைகளையும் அடுத்த தலைமுறைக்குக் கொடுத்துச் செல்லும் வழிமுறைகளும் தேவை. வாழ்க்கையில் இயற்கையின் நெருக்கடிகளை எதிர்கொண்டு அதற்கேற்றவாறு வாழ்வை அமைத்துக்கொள்ளும் எளிய வாழ்வியல் நுட்பங்களை மேய்ச்சல் சமூகங்கள் கொண்டிருக்கும். மேய்ச்சல் சமூகம் ஆழமான சூழலியல் அறிவைக் கொண்டிருக்கும். பல்வேறுபட்ட பருவ மாறுதலுக்கு ஏற்ப தங்களின் வாழ்நிலைகளை தகவமைத்துக் கொள்ள வேண்டும். நுட்பமான அறிவியல், பொருளியல், பண்பாடு இவற்றோடு சூழல் சார்ந்த நேயம் ஆகியவற்றைக் கொண்டு முழுமையாக இயங்கும் ஒரு சமூகத்தின் வாழ்வியலே மேய்ச்சலியம் என்பதாகும்.

தமிழ்த் திணைக் கோட்பாட்டடிப்படையில் மேய்ச்சல் சமூகம் முல்லை நிலத்திற்குரியது. ஆனால் அதன் பயன் அனைத்துத் திணைகளுக்கும் உரியதாக உள்ளது. குறிப்பாக உணவு, உடை ஆகிய இரண்டு பயன்களைப் பெருமளவு மேய்ச்சல் சமூகம் வழங்கி வருகிறது. பால், இறைச்சி, மயிர் என்று இதன் பயன்பாடு மட்டுமல்லாது மண்ணின் வளத்தை அதிகரிக்கச் செய்யும் உரத்தையும் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றன. சூழலில் உயிர்க்கண்ணிகளில் ஒரு இன்றியமையாத கண்ணியாக மேய்ச்சல் சமூகம் இயங்கி வருகிறது. விதைகளை முளைப்பிக்கும் பணிகளில் கால்நடைகள் மிகவும் சிறப்பான பணியினைச் செய்து வருகின்றன. அதாவது சில குறிப்பிட்ட விதைகள் ஆடு/மாடுகளின் வயிற்றுக்குள் சென்று வரும்போதே முளைக்கின்றன. (Jerónimo Vázquez-Ramírez, Susanna E. Venn - Seed Science Research) விதைகளைப் பரப்புவதிலும் கால்நடைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பல மூலிகைகள் பற்றிய வியன்ற அறிவைப் பெற்றிருக்கும் சமூகமாக இருந்த நிலை இப்போது மாறி வருகிறது என்பது வருத்தத்திற்குரியது. பன்மயமிக்க உணவுமுறைகள் இம்மக்களிடம் உள்ளன. உலகமயமாக்கமும், நகரமயமாக்கமும் இந்த வளமான அறிவை இழக்கச் செய்கின்றன. மாடு, ஆடு, வாத்து, ஒட்டகம், தேனீ என்று பல்வேறுபட்ட வளர்ப்பு உயிரிகளைக் கைக்கொள்ளும் இவர்களின் அறிவு மரபு பதிவு செய்யப்படாமலே அழிந்து வருகிறது. இந்த அறிவை மீட்டெடுப்பதோடு அதை அறிவியல் முறையின் ஆய்வு செய்து, மேம்படுத்தி அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல வேண்டிய அவசியமும் உள்ளது.

வேளாண்மையும் மேய்ச்சலும் ஒன்றுக்கொன்று உதவியாக இருந்த சூழல் மாறி எதிரும்புதிருமாக மாறிவருவதைக் காண முடிகிறது. குறிப்பிட்ட பருவத்தில் குறிப்பிட்ட நிலப்பரப்பில் அறுவடை முடியும்போது, அந்த நிலத்தில் கால்நடைகள் மேயச் செல்லும். அதன் பின்னர் விதைப்பும், நடவும் அங்கு தொடங்கும்போது அடுத்த நிலப்பரப்பிற்குக் கால்நடைக் கூட்டம் நகரும். மற்ற இடத்தில் அறுவடை முடியுமாறு அமைய அங்கு மேய்ச்சல் தொடங்கும். இப்படியாக அறுவடை - மேய்ச்சல் என்ற பிணைப்புத் துண்டிக்கப்பட்டு நிலங்கள் வேலிகளுக்குள் அடைபடத் தொடங்கிவிட்டன. இதன் விளைவாகக் கால்நடை வளர்ப்பும் வேலிகளுக்குள் சிறைப்படத் தொடங்கிவிட்டன.

இப்போது மேய்ச்சல் முறை பெரிதும் மானாவாரி நிலங்களை நம்பியே உள்ளது. நீர்நிலைகள் இப்போது அருகி வருவதாலும், காலநிலை மாற்றத்தால் மழையின் பொழிவு மாறுவதாலும் மேய்ச்சல் தொழில் கடும் சிக்கலுக்கு உள்ளாகி இருக்கிறது. கால்நடைகளுக்கான மருத்துவம் மரபுவழியாகப் பின்பற்றப்பட்டு வந்த நிலை இன்று மாறி அவர்கள் தங்களது தற்சார்பு மருத்துவத்தை மறந்து கடைகளில் அல்லோபதி

மருந்துகளை வாங்கிப் பயன்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். நீண்ட நேரம் வெயிலில் நின்று மேய்ச்சலில் ஈடுபடும்போது அவர்கள் அருந்துவதற்குப் போதிய தண்ணீர் கிடைப்பதில்லை. இதனால் சிறுநீரகம் தொடர்பான கோளாறுகள் மேய்ச்சல் சமூக மக்களிடம் உள்ளன.

பெரும்பாலான இடங்களில் வளர்ந்துவரும் படையெடுப்புத் தாவரங்களான சீமைக்கருவேலம், பார்தீனியம் போன்றவற்றால், பல்தரப்பட்ட ஊட்டமிக்க உணவுகள் கால்நடைகளுக்குக் கிடைப்பது அரிதாகிவிட்டது. சீமைக் கருவேல் காய்கள் உணவாக இருப்பினும் மற்ற ஊட்ட மிக்க உணவுகள் கிடைப்பதில்லை. இதனால் கால்நடைகளில் சத்துக்குறைபாடும் ஏற்படுகிறது.

தமிழகத்தைப் பொருத்த அளவில் மிகவும் நகரமயமாகிவரும் இந்திய மாநிலங்களில் முன்னோடியாக உள்ளது. ஏறத்தாழ 60 விழுக்காடு மக்கள் நகரங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர். மீதமுள்ள ஊரக மக்களில் பெரும்பான்மையோர் நகரத் தொழில்களை நம்பியே உள்ளனர். எனவே மேய்ச்சலியம் என்ற வாழ்வியல் மிகவும் சவாலான ஒன்றாகவே இருக்கப்போகிறது.

பொதுநிலங்கள் அருகி வருகின்றன, தனியார் நிலங்கள் வேலிபோடப்படுகின்றன, காடுகள் முதலிய அரசு நிலங்கள் தடை செய்யப்படுகின்றன. இந்தச் சூழல் மிகவும் நெருக்கடியானது.

யானை, புலி போன்ற காணுயிர்களுக்கு வேண்டிய நிலத்தை உறுதி செய்ய அரசுகள் முனைந்து வருகின்றதுபோல மேய்ச்சல் சமூகத்திற்கான மேய்ச்சல் முறைகளை உறுதி செய்யத் தேவையான வசதிகளைச் செய்ய வேண்டும். அதன் மூலமே மேய்ச்சல் சமூக வாழ்வை மேம்படுத்த முடியும்.

தோடார் பழங்குடி – தொன்மையான மேய்ச்சல் குடி

முனைவர் ஒ.முத்தையா
muthiahtamil@gmail.com

அறிமுகம்

காட்டாண்டி, நாடோடி, மேய்ச்சல், வேளாண்மை, தொழில்மயம், நவீன தொழில்நுட்பம் என்று பயணப்பட்டுக் கொண்டிருக்கும் மனித வாழ்வில் வாழ்க்கைக்கான நம்பிக்கை ஊட்டிய ஒரு களம், காலம் என்றால் அது மேய்ச்சல் நாகரிகக் காலம் தான். மனிதக் குழுக்கள் பன்னெடுங்காலம் மேய்ச்சல் குடிகளாகவே நின்று நிலைத்திருந்ததை வரலாறும் இலக்கியங்களும் பதிவுசெய்து வந்திருக்கின்றன. உலக இனங்கள் அனைத்தும் இந்த மேய்ச்சலில் இருந்துதான் தங்களுக்கான வாழ்வியலை, பழக்கவழக்கங்களை, பண்பாட்டைக் கட்டமைத் திருக்கின்றன என்பது கண்கூடு. பசும் புல்வெளிகள் தொடங்கிப் பனி படர்ந்த, மணல் சார்ந்த நி பாலைவன நிலங்களிலும் கூட மேய்ச்சல் தவறாமல் தொடர்ந்து நடந்துகொண்டு வருகின்றது. மனிதன் இயற்கையோடு இயைந்த, இயற்கையை ஆளக் கற்றுக்கொண்டதன் மூல அடையாளமாக இந்த மேய்ச்சல் திகழ்கின்றது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் தொடங்கிய இந்த மேய்ச்சல் பாரம்பரியம் பல்வேறு தடைகளுக்கு இடையில் உலகளாவிய நிலையில் இன்றுவரை தொடர்வதுதான் ஆகச்சிறந்த ஆச்சரியம்.

இந்திய நாட்டின், குறிப்பாகத் தமிழ் நாட்டில் ‘‘புனித எருமைகளின் புதல்வர்கள்’’ என்று அறியப்படும் பழங்குடி மக்களான தோடர்களின் மேய்ச்சல் சார்ந்த வாழ்க்கை முறையை, அது சார்ந்த அவர்களின் பண்பாட்டினை எடுத்துரைப்பதாக இந்தக் கட்டுரை பயணிக்கின்றது.

தோடர்களின் தனித்துவம்

இயற்கை வளம் மிகுந்த நீலகிரி மலைச் சிகரத்தில் வாழ்ந்துவரும் திராவிட இனக்குழுவினரான தோடர் பழங்குடிகள் மேய்ச்சல் தொழிலை முழுநேர வாழ்க்கையாகக் கொண்டவர்கள். இந்தியாவின் மக்கள் தொகையில் ஒரு மிகச்சிறிய இனக்குழுவினர் (1,400 பேர்). தோடா, தோடர், தொதவர் (தோடா மொழியில் ‘‘ஹேள்‘‘) என்று அறியப்படும் இவர்கள் தங்களின் தனித்த பண்பாட்டுக் கூறுகளால் மானுடவியலார், இனவரைவியலார் மற்றும் பண்பாட்டு ஆய்வாளர்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தவர்கள். தோற்றம், தொழில், வழிபாடு, பண்பாடு, பழக்கவழக்கங்களில் ஏனைய பழங்குடிகளிலிருந்து பெருத்த வேறுபாட்டைக் கொண்டவர்கள். உலகில் புலால் உணவு உண்ணாத ஒரே பழங்குடிகள் இவர்கள் மட்டுமே என்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும்.

தோடர்களின் தனித்துவம்

தோடர்களின் குடியிருப்புகள் ‘‘மந்து’’ என்று அழைக்கப்படும். (ஒத்தக்கல் மந்து என்பதுதான் பலரது உளரலில் உதக மண்டலமாக மாறிவிட்டதாகத் தோடர்கள் குறிப்பிடுகின்றனர்). மந்தில் நான்கு முதல் ஏழு வீடுகள் மட்டுமே காணப்படும். அவை வானவில் வடிவில் குறுகிய வாசல்களைக் கொண்டவையாக இருக்கும். இரத்த

உறவுடைய பங்காளிகள் மட்டுமே அங்கு வாழ்வர். எல்லா மந்துகளிலும் வடபுறம் கோயிலும் தென்புறம் எருமைத் தொழுவமும் (பொது எருமைகளுக்குத் தனி, கோவில் எருமைகளுக்கு அதாவது புனித எருமைகளுக்குத் (தீ இர்) தனி) தவறாமல் இருக்கும். வானவில் வடிவக் கோயில்கள், அவற்றின் அழகிய கூரை அமைப்பு, முத்துநாடு மந்தில் உள்ள புனிதக் கோயில், புனித எருமைகள், தொழுவங்களின் அமைப்பு, எருமைகளை நோய்களிலிருந்து பாதுகாக்கச் செய்யப்படும் உப்புச் சடங்கு, இளவட்டக் கல், பூத்குழி ஆடை, பச்சைகுத்துதல், சிகை அலங்காரம், சைவ உணவுப் பழக்கம், பால் உணவுகள் பெண் கருவுற்ற ஐந்தாவது மாதத்தில் நடைபெறும் வில் அம்பு சடங்கு, வட்டவடிவ ஆட்டமுறைகள், அவர்கள் எழுப்பும் ‘‘ஹேய் ஹேய்’’ ஒலி, ஏகாந்தமான பாடல்கள், இயற்கை நேயம் என்று தோடர்களின் தனித்துவங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தோடர் பழங்குடியும் மேய்ச்சல் பண்பாடும்

தோடர்கள் தங்களைப் புனித எருமைகளின் புதல்வர்கள் என்று பெருமையாகக் கூறிக்கொள்வது உண்டு. ‘‘பூமியின் மேற்பரப்பில் கொம்புகள் முளைத்திருந்தன. எங்களின் முன்னோர் ஒருவர் அந்தக் கொம்புகளைப் பிடித்து இழுத்தார். பூமிக்குள்ளிருந்து எருமை மாடுகள் வெளிவந்தன. அவை புனித எருமைகளாகவும் எங்களின் வாழ்வாதாரமாகவும் மாறின,’’ என்று கூறினர். (இதேமாதிரியான ஒரு கதையைக் கம்பளத்து நாயக்கர்களிடமும் கேட்டிருக்கின்றேன்). ஓட்டர்ஸ் என்ற மலையின் வியர்வையிலிருந்து தோன்றியவை இந்தப் புனித எருமைகள் என்று அவர்கள் நம்புகின்றனர்.

தோடர்களின் வாழ்க்கை, பொருளாதாரம், பண்பாடு எல்லாமே எருமை மந்தைகளை அடிப்படையாகக் கொண்டவை. எருமைகளிலிருந்து பெறப்படும் பால் பொருட்களே ஆதார வருமானம். எருமைப் பால் பாலாடைக்கட்டி, மோர், தயிர், வெண்ணெய், பாலாடைக்கட்டி என்று பல்வேறு வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றது. (தோடர் இல்லத்தில் பால்சோறும் காரமான துவையலும் சேர்த்துச் சாப்பிட்டது உண்மையிலேயே மறக்க முடியாத அனுபவம். மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி அவர்களுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.)

திருமணச் சடங்கில் பெண் வீட்டாரும் மாப்பிள்ளை வீட்டாரும் பரிமாறிக்கொள்ளும் முக்கியமான சீதனப் பொருளே எருமைகள் தான். எருமை மந்தைகளின் எண்ணிக்கையை வைத்துத் தான் ஒருவரின் செல்வாக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. ஒருமுறை விக்டோரியா மகாராணி இவர்களைப் பார்க்க வந்தபோது, மகாராணியின் செல்வாக்கைத் தெரிந்துகொள்ள விரும்பிய ஒருவர் ‘‘உங்கள் வீட்டில் எத்தனை எருமை மாடுகள் இருக்கின்றன? என்று கேட்டாராம். (இது உண்மையா, இல்லையா என்று தெரியாது. தோடர்களின் மனநிலை அப்படிப்பட்டது.)

தோடர் கோயில்களில் எருமையின் பங்கு

தோடர் பழங்குடியினரின் கோயில்கள் ஏனையோரது கோயில்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. கற்களால் அமைந்த வட்ட வடிவக் குழியின் நடுப்பகுதியில் கோயில் கட்டப்பட்டிருக்கும். தோடர்களின் வானவில் அமைப்பிலான கோயில்களில் (தே குர்டி) முன் சுவற்றில் எருமைத் தலை உருவம் தவறாமல் இடம்பெறும். இதுவே தோடர்களின் கோயில் என்பதற்கான தனித்த அடையாளம். பால் பண்ணையை நிர்வகிப்பவர்களும் கோயில் பூசாரிகளும் ஒரேநிலையில் வைத்து மதிக்கப்படுகின்றனர். இவர்களைத் தேர்வு செய்வதற்கென்று தனியே சடங்குகளும் செய்யப்படுகின்றன. தோடர்களின் வழிபாடு எருமைகளை மேய்க்கும் நடைமுறைகளுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளது. எருமைக்



கன்றுகளுக்குப் பெயர் சூட்டுவதையே ஒரு சடங்காகச் செய்கின்றனர். சிலவேளைகளில் எருமைக் கன்றுகளைப் பலியிட்டும் சடங்குகளை நடத்துகின்றனர். பலியிட்ட கன்றுகளை பிற இனத்தவர்களுக்குக் கொடுத்து விடுகின்றனர். எருமைகள் நிறையப் பால் சுரக்க வேண்டும் (கார்மா) என்று அவற்றைப் போற்றிப் பெண்கள் பாடல்களைப் பாடுகின்றனர். கோயிலுக்குள் பெண்கள் நுழையவோ, அருகில் செல்லவோ அனுமதி இல்லை. எட்ட இருந்தே வழிபாடு செய்ய வேண்டும்.

எருமை மந்தைகளுக்கு உப்புக் கொடுப்பது (ஆண்டிற்கு இரு முறை) ஒரு சடங்காக நிகழ்த்தப்படுகின்றது. எருமைகள் நீர் குடிக்கும் வகையில் வட்டமான பெரிய குழிகளைத் தோண்டி அதில் உப்பு மூட்டைகளைக் கொட்டி, மூலிகைச் செடிகள், இலைதழைகள் இவற்றைப் போட்டு ஊறவைத்து வழிபாடு செய்து பின்னர் எருமைகளைக் குடிக்கச் செய்கின்றனர். படுகர்களும் தாங்கள் வளர்க்கும் மாடுகளுக்கு இதுபோன்ற உப்புச் சடங்கினைச் செய்வதை அறியமுடிகின்றது. (நண்பர் சுனில் ஜோகி இது குறித்துத் தனிக்கட்டுரை எழுதியுள்ளார்.) இதனால் எருமை மாடுகளுக்கு வரும் வெப்பு, கோமாரி, கழிச்சல் நோய்கள் நீங்குவதாகத் தெரிவித்தனர்.

இறந்தவர்களுக்காக எருமையைப் பலியிடும் வழக்கம் உள்ளது. இந்த நேரத்தில் பலியிடும் எருமைகளை விரட்டிப் பிடிப்பது என்பது ஒரு ஜல்லிக்கட்டுப் போல நடைபெறுகின்றது. எருமைகளை விரட்டிப் பிடித்து அடக்கிப் பலியிடுவதை ஒரு போர்த்தொழில் போலச் செய்து முடிக்கின்றனர். பலியிடப்படும் எருமை மாடுகள் இறந்தவர்களுக்குப் பால் கொடுப்பதற்காக அனுப்பி வைக்கப்படுவதாக நம்புகின்றனர்.

மேய்ச்சலை முதன்மையாகக் கொண்டிருந்த தோடர்கள் வேளாண்மை, வணிகம், சுற்றுலா வழிகாட்டி என்று பிற தொழில்களில் இன்று ஈடுபட்டு வருகின்றனர். வெளி உலகத்துடன் தொடர்பு, தொழில்நுட்பங்களின் ஆதிக்கம், நிறையப் பொருளீட்ட வேண்டுமென்ற பெருவிருப்பம் இவற்றின் காரணமாக இனக்குழுப் பண்பாட்டு வாழ்க்கையும் எருமை சார்ந்த பண்பாட்டுச் செயல்பாடும் வலுவிழந்து வருவதைக் காணமுடிகின்றது.

அந்நியர்கள் மற்றும் நமது மண்ணியர்களின் கண் நீலகிரி மலையின் பசுமைச் சோலையில் சொக்கிப் போனதால் தோடர்களின் மேய்ச்சல் நிலங்கள் கையப்படுத்தப் பட்டு இன்று விளைநிலங்களாகவும் தொழிற் கூடங்களாகவும் மாறிப்போய்விட்டன. தோடர்கள் தங்களின் எருமைகளுக்கான மேய்ச்சல் நிலமின்றி வாழ்க்கை முறையையே மாற்றிக்கொள்ளும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். (தோடர் சகோதரி வாசமல்லி அவர்களுடன் ஊட்டியை வலம் வந்தபோது பல இடங்களைச் சுட்டிக்காட்டி இவையெல்லாம் எங்கள் எருமைகளின் மேய்ச்சலுக்கான புல் வெளிகள். இன்று யார்யாரோ வந்து அவற்றையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டு எங்கள் குலதெய்வங்களைப் (எருமைகளை) பட்டினிபோட்டு விட்டார்கள். எருமைகளற்ற வெறும் தொழுவங்களை மட்டுமே நாங்கள் இப்பொழுது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம் என்று அழுகாத குறையாக ஆதங்கத்தோடு கூறினார்).

நிறைவாக

மேய்ச்சலுக்கான எல்லா வளங்களும் இருந்தும் தோடர் பழங்குடிகள் தங்களின் புனிதமான எருமைகளை விட்டு, அவை சார்ந்த பண்பாட்டுச் செயல்பாடுகளை விட்டு விலகிச் செல்வது ஏன்? ஒற்றை மயம் என்ற அசுரத்தனமான உலக மயம் விசுபரூபம் எடுத்துச் சுற்றிச் சுழன்று அடிப்பதும் அது இயற்கை வளங்களை கபளீகரம் செய்யத் துணிந்திருப்பதும் தான். மேய்ச்சல் என்பது ஒரு தொழில், பொருளாதாரத் தேவைக்கான ஒன்று, வணிகச் சந்தைக்கானது, வனங்களை வளரவிடாமல் செய்வது என்று பொத்தாம்

பொதுவாக அதன் ஆழ்ந்த பொருண்மைகளைச் சுருக்கி ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா என்ன? மேய்ச்சல் ஒரு பண்பட்ட, பண்பாடு சார்ந்த வாழ்க்கைமுறை, இயற்கையோடு இயைந்து வாழ்ந்த மனிதனின் ஆதார சுருதி. மக்களுக்கும் மாக்களுக்குமான உறவைக் கட்டியெழுப்பிய உன்னதக் களம். இவையெல்லாம் தான் மேய்ச்சலின் பின்னணியில் உள்ள யதார்த்தம். பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் இழப்புகளுக்கு இடையிலும் மேய்ச்சல் குடிகள் இன்றளவும் மேய்ச்சல் தொழிலை விட்டுவிடாமல் இழுத்துப்பிடித்து தொடர்வது வெறும் ஆதாயத்தை நோக்கி மட்டுமல்ல. மேய்ச்சலியம் பொதிந்து வைத்திருக்கின்ற இயற்கையை, அதன் தொன்மையை, மேம்பட்ட பண்பாட்டுத் தொடர்பை, எல்லாருக்குமான பண்பட்ட வாழ்க்கையை மீட்டெடுப்பதற் காகத்தான். மேய்ச்சலே தமிழ்ப் பண்பாட்டின் பெருமை, தமிழ் இனத்தின் வலிமை.

மேய்ச்சல் வாழ்வில் பொருளியல் சூழலியல் நோக்கு

கதிர்நம்பி
sethu.raghunath@gmail.com

உலகில் வாழும் அனைத்துத் தொல்குடிகளில் தமிழர்களினது தனித்துவமாகவும் சிறப்பாகவும் விளங்குவது ‘‘திணைக் கோட்பாடு’’. நிலத்தையும் பொழுதையும் முதலில் வைத்து நிலத்தை நான்காக வகுத்து அந்த நிலத்தின் சூழலுக்கு ஏற்ப வாழ்வினையும் அதோடு இயைந்த பொருளியல் கோடலையும் வரையறை செய்தனர். சங்க கால இலக்கியங்கள் மற்றும் தொல் நூல்களில் இருந்து திணைக் கோட்பாட்டியல் உருப்பெறுகிறது. சங்க இலக்கியங்களில் மனித மையப் (anthropo centric) பார்வை இருப்பினும் அதன் காட்சிப் படிமங்களில் இயற்கை விவரிப்புகளும் சூழல் அமைவுகளும் (ecosystem) திணைக் கோட்பாட்டை வரையறை செய்ய பெரிதும் துணை நிற்கின்றன.

‘‘மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே’’

என்று தொல்காப்பியம் தெய்வங்களையும் சூழலையும் வைத்து நான்கு நிலத்தைக் குறிக்கிறது.

இவ்வாறான நிலம் காலநிலை மாற்றத்திற்கு உட்படும் பொழுது ஏற்படுகிற சூழல் சிதைவையும் முன் உணர்ந்து அந்த நிலத்தினையும் ஏற்கிறது சிலப்பதிகாரம். மலையும் காடும் அதன் இயல்பில் இருந்து மாறுகிற பொழுது வறட்சி ஏற்படுகிறது. அந்த வறட்சியான நிலத்தைப் பாலை என்கிறது திணை மரபு.

‘‘முல்லையுங் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து
நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப்
பாலை யென்பதோர் படிவங் கொள்ளும்’’

ஓர் உலகம், ஓர் உடல்நலக் கொள்கை (One World One Health) என்று உலக ஐக்கிய நாடுகள் மன்றம் தொடக்கம் உலக சுகாதாரக் கொள்கை வகுப்பாளார்கள் வரைக்கும் முன் வைக்கிறார்கள். குறிப்பாகப் பெருந்தொற்றுக் காலத்திற்குப் பிறகு இக்கொள்கையை அதிகம் வலியுறுத்தி வருகிறார்கள். இது ஒற்றைத் தன்மை கொண்ட சிந்தனையாக விளங்குகிறது. மேற்சொன்ன தொல்காப்பியப் பாடலில் ஓர் உலகத்தை நான்கு உலகமாக உருவகப்படுத்துவதில் சூழலின் பன்முகத் தன்மையை வெளிப்படுத்துகிறார் தொல்காப்பியர். இன்றைய உலகில் பெருமளவு இயற்கைச் சூழல் சிதைவுக்கு உட்பட்டிருந்தாலும் உலகமயமாக்கல் எனும் பொருளியல் கோட்பாடால் பொருளாதார அசமத்துவம் விளங்கி வந்தாலும் திணைக் கோட்பாட்டின் வழியான சூழலியல் பொருளியல் மண்டிலங்களை (Ecological Economic Zones) நம்மால் உருவாக்க முடியும். திணைக் கோட்பாட்டின் வழிப்பட்ட பொருளியல் வாய்ப்புகளை உருவாக்க வேண்டும். அதற்கு ஒவ்வொரு நிலத்தையும் ஆழப் படிக்க வேண்டும். முல்லை எனும் திணையின்

சங்க காலம் தொட்டுச் சம காலம் வரைக்குமான இயல்புகளையும் பண்புகளையும் குறிப்பாகத் தற்கால பொருளியல் சூழலையும் இக்கட்டுரையின் பேசுபொருளாகும்.

காடும் காடு சார்ந்த இடத்தை முல்லை என்கிறோம். காடு என்பது வெறும் மரங்களின் தொகுப்பு மட்டுமல்ல. பல்லுயிர்களின் தொகுப்பு காடு. காட்டில் காணப்படும் பூக்களின் நறுமணத்தைக் குறிக்கும் விதமாக இத்திணைக்கு முல்லை என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. காட்டாகக் ‘‘கொங்கு நாடு’’ என்பது மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் காடுகளின் மத்தியில் அமைந்த நாடு. கொங்கு என்பதற்குப் பூந்தாது என்று பொருள். மாந்தன் பழக்கிய முதல் விலங்கு ஆவே என்கிறார் தேவநேயப் பாவாணர். ஆ என்றால் மாடு. மா என்றால் விலங்கு. மாடுகளை வைத்துக் கொண்டு புன்செய் நிலத்தில் சிறுதவசங்களை (Millets) பயிரிட்டு வாழ்ந்தது முல்லைத் திணை வாழ்வாகும். எனினும் இத்திணை வாழ்வு முல்லையோடு சுருங்கி விடவில்லை.

குறிஞ்சி வேட்டைக் குமுகத்தின் முகமாகும். மருதம் வேளாண் குமுகத்தின் முகவரியாகும். மருதத் திணையில் நாற்றங்கால் அமைத்து நாற்றுப் பாவி ஏர் பூட்டி சாலுக்குச் சால் தொழி உழவு செய்து பயிர் செய்யப்படுகிறது. மறுதலையில் குறிஞ்சியில் உழாத வேளாண்மையைத் ‘‘தொய்யாது வித்திய துளர்படு துடவை’’ என்று பதிவு செய்கிறது மலைபடு கடாம். இவ்வாறு இரண்டு நிலத்திற்கும் இடையில் அமைந்த முல்லை நிலமானது இவ்விரண்டு நிலத்தோடும் கொள்வினைக் கொடுப்பினைக் கொண்டிருந்ததையும் காண முடிகிறது. மருத நிலத்தின் மிகை உற்பத்திக்கும் அரச தோற்றத்திற்கும் கால்நடை மேய்ச்சல் குமுகம் அடித்தளமாக இருந்திருக்கிறது. மருத நிலத்தின் வேளாண்மை செழிப்பிற்கு அடியுரமாகக் கால்நடைகளின் கழிவுகள் தொழிற்முறையாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது. சங்க இலக்கியத்தில் தாது எரு மன்றங்கள் என்று கால்நடைகளின் சாணக் குப்பைகளைக் கொட்டி வைத்திருக்கும் இடத்தைக் குறிப்பிடுவர்.

மாடு என்றால் செல்வம் என்றும் பொருள். திருவள்ளுவர் கல்வியை விட ஒருவர்க்கு வேறு எந்தச் செல்வமும் உயர்ந்தது இல்லை என்பதற்கு ‘‘மாடல்ல மற்றை யவை’’ என்கிறார். உலகில் உள்ள எல்லா இனக்குழுக்களிடமும் மாடுகளைச் செல்வமாகக் கருதும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஆநிரை மீட்டலும் கவர்தலும் செல்வத்தை (மாடுகள்) மையப்படுத்திய அரசியல் செயல்பாடுகள். உலகப் பொருளாதாரம் கல்நெய்யை (petrol) சார்ந்து இருக்கத் தொடங்கும் முன்பு வரைக்கும் கால்நடைகளையே சார்ந்து இருந்திருக்கிறது. வளைகுடா நாடுகளில் கல்நெய் எடுப்பதற்கு முன்பு வரைக்கும் அந்நாடுகளின் முதன்மைப் பொருளாதாரம் கால்நடைகளே. இன்றைக்கும் மேய்ச்சல் முறையில் ஒட்டகங்கள், ஆடுகள், குதிரைகள் ஆகியன மேய்க்கப்படுகின்றன. மங்கோலிய நாட்டின் முதன்மை பொருளாதாரம் கால்நடைப் பொருளாதாரம். உலக மேய்ச்சல் குமுகங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களை அங்கீகரிக்கும் பொருட்டும் பாதுகாக்கும் நோக்கிலும் ஐ.நா மன்றம் வருகிற 2026 ஆம் ஆண்டை மேய்ச்சல் நிலம் மற்றும் மேய்ச்சல்காரர்களின் ஆண்டாக (International Year of Rangelands and Pastoralists) அறிவித்திருக்கிறது.

உலகம் முழுக்க 10,000 ஆண்டுகளுக்கு மேலாகக் கால்நடை வளர்ப்பு மானுட வாழ்வோடு இணைந்து வருகிறது. தமிழகமும் இதற்கு விதி விலக்கல்ல. தமிழ்ச் சூழலில் கிடை அமர்த்துதல் என்பது வேளாண்மையின் அடி நாதமாக விளங்குகிறது. ஆடு, மாடு, சில இடங்களில் எருமைகளும் கிடை அமர்த்தப்படுகிறது.

கிடை என்றால் என்ன?

கிடை என்பது கிட எனும் சொல்லில் இருந்து வருகிறது. கிட -, கிடத்தல் -, கிடை என்கிறார் அரிமாப் பாமகன். கிடை மட்டமாக (horizontal) என்ற பொருளில் இருந்தும் எடுத்து ஆளப் பெறுகிறது. பகல் முழுவதும் மேய்ச்சல் முறையில் மேய்ந்து வருகிற கால்நடைகளை இரவு முழுக்க வயலில் அடைத்து வைப்பது கிடை அமர்த்துதல் ஆகும். அன்று இரவு முழுவதும் வயலில் படுத்துக் (கிடை மட்டமாக) கிடக்கும் ஆடு/மாடு/எருமை போடுகிற சாணம், புழுக்கை, சிறுநீர் மற்றும் அதன் உரோமங்கள் ஆகியன வயலிற்கு அடியுரமாக அமைகின்றன. “ஆட்டுக் கிடை அந்த ஆண்டு வருமானம் மாட்டுக் கிடை மறு ஆண்டு வருமானம்” என்பது உழவுச் சொலவடை.

கிடை அமைப்புகள்

பெரும்பாலும் செம்மறி ஆடுகளே ஆட்டுக் கிடையாக அமையப் பெறுகின்றன. செம்மறி ஆட்டின் குணமும் ஒத்திசைந்து போகும் தன்மையும் இதற்கு தோதாக அமைகிறது. அண்மைக்காலமாக ஆட்டுக் கிடையைச் சுற்றிலும் வலை அடித்து இரவில் பாதுகாக்கின்றனர். ஆட்டுக் கிடை வலசை என்பது உள்ளூரில் என்றால் அதிக பட்சம் 6 கிலோ மீட்டர் மேய்ச்சலுக்குப் போவது உண்டு. சிவகங்கை, இராமநாதபுரம் பகுதிகளில் உள்ள கிடைக்காரர்கள் வண்டிகளில் ஆடுகளை ஏற்றிக் கொண்டு படுகை மாவட்டங்களுக்கு வலசை செல்வர். ஆடுகளின் நிறையை ஆட்டுத் துண்டு என்று கணக்கிடுவர். ஒரு ஆட்டுத் துண்டு என்பது 120 ஆடுகள் வரைக்கும் இருக்கும். ஆட்டினுடைய புழுக்கை நல்ல பெறுமதியை உடையது. தமிழகத்தை விட கேரளத்தில் இதற்கு அதிகம் மதிப்புண்டு.

மாட்டுக் கிடை என்பது நீண்ட வலசைப் பாதை கொண்டது. வேளாண் காலத்தில் மலைகளிலும் வேனல் காலத்தில் வயல்களிலும் மேய்ச்சல் முறையில் மாடுகள் மேய்ந்து வலம் வரும். தை மாதம் தொடங்கி ஆடி மாதம் வரைக்கும் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் வயல்வெளிகளில் மேய்ச்சலில் ஈடுபடும். இரவு வயல்வெளிகளில் மாட்டுக் கிடை அமர்த்தப்படும். ஆடி தொடக்கம் தை வரைக்கும் மலைப் பகுதிகளுக்கு வலசை சென்று விடும். மேய்ச்சல்காரர்கள் தொடர்ச்சியாக நகர்ந்து கொண்டே இருப்பர்.

கிடை மாடு வகையினம்	வலசைப் பாதை
புலிக்குளம்	சிவகங்கை- மதுரை- விருதுநகர்- சதுரகிரி மலை (மேற்குத் தொடர்ச்சி மலை)
தஞ்சை வகையறா கிடை மாடுகள்	தஞ்சை - அரியலூர் - கள்ளக்குறிச்சி திருவண்ணாமலை (கிழக்குத் தொடர்ச்சி மலை) திருவாரூர் - அரியலூர் - கள்ளக்குறிச்சி திருவண்ணாமலை (கிழக்குத் தொடர்ச்சி மலை) மயிலாடுதுறை - கடலூர் - கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை (கிழக்குத் தொடர்ச்சி மலை) திருச்சி - பெரம்பலூர் - கள்ளக்குறிச்சி - திருவண்ணாமலை (கிழக்குத் தொடர்ச்சி மலை)
தேனி மலை மாடுகள்	தேனி மேற்குத் தொடர்ச்சி மலை
பர்கூர் செம்மறை மாடுகள்	அந்தியூர் - சத்தியமங்கலம் (மேற்குத் தொடர்ச்சி மலை)
திருநெல்வேலி மலை மாடுகள்	திருநெல்வேலி மேற்குத் தொடர்ச்சி மலை

வயல்களும் காடுகளும் வறள் புல் வெளிகளும் மேய்ச்சல் மாடுகளின் பண்பாட்டு உரிமையாக இருந்து வருகிறது. ஆனால் அண்மைக்காலமாக அதீத வேளாண்மை காரணமாகக் கோடையிலும் பயிர் செய்வதால் மேய்ச்சல் இல்லாமல் போகிறது. வன பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் மலைக்குள் மாடுகளை மேய்க்கவும் தடை போடப் பட்டதால் காட்டு மேய்ச்சல் உரிமையும் இழந்து மேய்ச்சல் கேள்விக் குறியாகி வருகிறது. எனினும் வன உரிமை அங்கீகாரச் சட்டம் 2006 இல் சட்டப்பிரிவு 3(1)(d) இன் படி வனத்தை நம்பி வாழும் இதர மக்களுக்கு வனத்திற்குள் கால்நடை மேய்ச்சலுக்கான உரிமை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது முறையாகக் கடைபிடிக்கப்படும் பட்சத்தில் மேய்ச்சல்காரர்களின் மேய்ச்சல் உரிமையும் காட்டின் சூழலும் பாதுகாக்கப்படும்.

தமிழகச் சூழலில் மேய்ச்சல் பொருளாதாரம் கவலை தரும் விதமாக இருக்கிறது. 64 வீதம் கல்நெய்யை ஏற்றுமதி செய்கிற ஓமன் நாடு கூடத் தன்னுடைய கால்நடை பொருளாதாரத்தில் கவனம் செலுத்துகிறது. தமிழகச் சூழலில் மட்டுமில்லாமல் இந்திய ஒன்றிய சூழலில் மேய்ச்சல் நிலங்கள் அருகி வருகின்றன. காலனியாதிக்க ஆங்கிலயே அதிகாரிகள் மேய்ச்சல் நிலத்தைப் "புறம்போக்கு" நிலம் என்றும் wasteland என்றும் வரையறை செய்தனர். இந்த நிலவியல் மற்றும் சூழலியல் புரிதலின்மையால் அவர்கள் செய்த வரையறை மற்றும் மனப்போக்குக் கெடுவாய்ப்பாக இன்றைக்கும் தொடர்கிறது. எந்த ஒரு வளர்ச்சித் திட்டம் என்றாலும் நீர் நிலைகளுக்கு அடுத்து மேய்ச்சல் நிலங்கள் தான் அதிகம் குறி வைக்கப்படுகின்றன.

மேய்ச்சல் நிலங்களைக் "காடு" என்ற வகைமையில் பார்க்கத் தவறுகிற கொள்கை வகுப்பாளர்களால் தான் இது அழிவை நோக்கிச் செல்கிறது. கள்ளிச் செடிகளும் இன்ன பிற புல் இனங்களும் மட்டுமே நிறைந்திருக்கும் இடத்தைக் கள்ளிக்காடு என்று நம் பயன்பாட்டில் கூறுவதுண்டு. ஆனால் ஐரோப்பிய காலனி ஆதிக்க வழிப்பட்ட அறிவியல் மனப்போக்கு இக்கள்ளிக்காட்டைப் புறம்போக்கு நிலம் என்று எழுதியது. இது போல மேய்ச்சல் காடுகளை/நிலங்களை இழந்தும் ஆக்கிரமிப்புக்குக் கொடுத்தும் மேய்ச்சல் தொழிலும் மேய்ச்சல் பொருளாதாரமும் சிதைந்து வருகிறது.

வறள் புல்வெளிகளின் தன்மையைப் புரிந்து கொள்ளாமல் காடு வளர்ப்பு என்கிற பெயரில் மரங்களை நடுவதன் மூலம் மேய்ச்சல் நிலங்களைச் சுருக்குகிற போக்கும் நிலவுகிறது. வறள் புல்வெளிகளும் உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்றன. வறள் புல்வெளிகளில் மேய்ச்சலில் உள்ள கால்நடைகளின் சாணக் கழிவுகள் மண்ணில் உள்ள நுண்ணுயிரிக்களான பாக்டீரியா போன்றவைகளால் நுண்ணூட்டமாக மாற்றப்படுகிறது. இந்த நுண்ணூட்டத்தை நிலைத் திணைகள் உட்கொள்கின்றன. இவ்வாறான சாணக் கழிவுகள் மற்றும் விலங்குகளின் எச்சங்கள் ஆகியவற்றைப் பாக்டீரியா போன்ற நுண்ணுயிர்கள் சிதைத்து மண்ணின் கரிம வளத்தை ஒருபுறம் அதிகரிக்கிறது. மறுபுறம் மழை நீரை ஈர்த்து வைத்துக் கொள்ள உதவுகிறது.

ஏன் மேய்ச்சல் தொழில் மீட்கப் பட வேண்டும்?

ஆடு மாடு மேய்ப்பது இழிவானது. அறிவிற்கு ஒவ்வாதது. பிற்போக்கானது என்கிற கருத்துப் போக்குகள் பொதுக் குமுகத்தில் நிலவுகின்றன. படிப்பு வரவில்லை என்றால் ஆடு மாடு மேய்க்க செல் என்பது மாதிரியான வசை சொற்களை அன்றாடம் கேட்கிறோம். மேய்ச்சல் நிலங்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி விட்டன. காட்டிற்குள் மேய்ச்சலிற்கு அனுமதி இல்லை. இளம் தலைமுறை வலசை வாழ்வை விரும்புவதில்லை. இவ்வளவுக்குப் பிறகும் மேய்ச்சல் தொழில் மீட்கப்பட வேண்டுமா என்றால் ஆம் அது மீட்கப்பட வேண்டும். மீட்பது இழந்ததைத் திரும்ப பெறுவது மட்டுமல்ல. இருப்பதை காப்பாற்றுவதுமாகும்.

வலசை பாதைகளைக் கொண்டு ஓரிடத்திலிருந்து பல்வேறு இடங்களுக்குச் சென்று மேய்ச்சலில் ஈடுபடும் மேய்ச்சல்காரர்களின் தொழில், பண்பாடு, அவர்களின் அறிவு, புழங்கு பொருட்கள் மற்றும் மேய்ச்சல் நிலம் ஆகியவற்றைப் பற்றிப் பேசுவது மேய்ச்சலியம் (Pastoralism) என்பதாகும். பண்ணை வடிவமைப்பிற்குள் (Industrial Livestock) கால்நடைகளைப் பொருத்தியதில் பார தூரமான விளைவுகளை அறிவியல் குமுகம் உள்வாங்கிக் கொள்ளவில்லை. பொதுக் குமுகத்திற்கும் அக்கறை இல்லை. மேய்ச்சல் நிலங்களில் கால்நடைகள் 36 வகைக்கும் மேலான நிலைத் திணை வேதிப்பொருட்களை (Phyto Chemical) புல், செடி மற்றும் கொடிக்களிலிருந்து உணவாக எடுத்துக் கொள்கின்றன. இவ்வாறான பன்முகத் தன்மையான உணவைத் தேடிக் கொள்கின்றன. பண்ணை வடிவில் வளர்க்கப்படும் கால்நடைகளின் தீவனம் மற்றும் தீவனப்புல் ஆகியவை ஒற்றைத்தன்மை கொண்டதாக இருக்கிறது. இவற்றை உற்பத்தி செய்ய செலவாகும் நீரின் அளவும் அதிகமாகிறது. தீவனங்களை உற்பத்தி செய்கிற ஆலையிலிருந்து பண்ணைக்கு வந்து சேரும் வரைக்கும் உமிழப்படும் கரி உமிழ்வு (Carbon Emission) கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பண்ணை வளர்ப்புக் கால்நடைகளுக்கு எதிர்-உயிரி (anti biotics) அதிகமாகவும் தேவை இல்லாமலும் கொடுப்பதை உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கிறது. இது மானுடர்களின் எதிர்ப்பு ஆற்றலில் சேதாரம் விளைவிக்கும் என்கிறது. மேற்கத்திய பண்ணை வளர்ப்பு இறைச்சியை முதன்மைப்படுத்துகிறது. இந்திய ஒன்றிய சூழலில் பண்ணை வளர்ப்புப் பாலினை முதன்மைப்படுத்துகிறது. ஒற்றைத் தன்மை உணவை எடுத்துக் கொள்கிற, அதிகம் கரி உமிழ்கிற, அதிகம் நோய்த் தொற்றுகளுக்கு ஆளாகிற பண்ணை வளர்ப்பு முறையில் இருந்து முற்றிலும் வேறுபட்டுத் தனித்துவமாக விளங்குபவை மேய்ச்சல் முறை கால்நடைகள்.

மரபு வழி கால்நடை மேய்ச்சல் முறையால் காட்டுத் தீ கட்டுக்குள் கொண்டு வரப்படுகிறது. காட்டுத் தீ பரவலுக்கு காரணமான புற்களை வேனல் காலம் வருவதற்கு முன்பு கால்நடைகள் மேய்ந்து விடுவதால் காட்டுத் தீ பரவல் தடுக்கப்படுகிறது. மேய்ச்சலில் பன்முகத் தன்மையான நிலைத் திணைகளை உணவாக எடுத்துக் கொள்ளும் கால்நடைகளின் இறைச்சியானது பண்ணை வளர்ப்பில் வளர்ந்த கால்நடைகளின் இறைச்சியை விடக் கூடுதலாகப் புரத ஆற்றல் பெற்று உள்ளது. பண்ணை வளர்ப்பில் உள்ள கால்நடைகள் உட்கொள்ளும் புரதம் அதிகமாக இருக்கிறது. இவை அதிகமாகப் புரதத்தை உட்கொண்டாலும் இவற்றின் இறைச்சியில் குறைவான புரதமே அடங்கி இருக்கிறது.

மகசூல், விளைச்சல் ஆகியவற்றில் மட்டுமே தொழில்மய வேளாண்மை கவனம் செலுத்தியது. உணவில் ஊட்ட ஆற்றல் (nutrients) குறித்துக் கவலைப்படவில்லை. போலவே பண்ணை வளர்ப்புக் கால்நடைகளின் உணவு வரையறையில் (food table) ஊட்ட ஆற்றல் குறித்து அக்கறை செலுத்தவில்லை. மேய்ச்சல் முறையில் வளரும் கால்நடைகள் முன்பு சொன்னது போல பன்முகத் தன்மை கொண்ட நிலைத் திணை (plants) உணவாகக் கொள்வதால் இயல்பாக ஊட்ட ஆற்றல் பெற்று விடுகின்றன. “வளமான மண் -> வளமான பயிர் -> வளமான உணவு -> வளமான வாழ்வு” என்பது இயற்கை வழி வேளாண்மையின் இலக்கு. போலவே வளமான மண்ணில் மேய்கிற கால்நடைகளின் மூலம் கிடைக்கும் உணவானது (பால், இறைச்சி முதலியன) ஆற்றல் நிறைந்ததாகவும் ஊட்டமிக்கதாகவும் அமைகிறது. பயிர் செய்யப்படும் மண் மட்டும் வளமான மண் கிடையாது. வறள் புல் வெளிகள், மேய்ச்சல் தரைகள் மற்றும் காடுகள் கூட வளமான மண்ணைக் கொண்டிருக்கின்றன.

2030 ஆம் ஆண்டின் பொழுது புவி வெப்பத்தின் அளவு 1.50 ஐ தாண்டும் என்றும் அதைத் தடுக்காவிடின் 20 ஆக அதிகரித்து விடும் என எச்சரிக்கிறது காலநிலை மாற்றத்திற்கான பன்னாட்டுக் குழு (IPCC). மேலும் செய்ய வேண்டிய வேலைகளாக அது கீழ்க்கண்டவற்றை முன் வைக்கிறது.

- மண்ணின் கரிம அளவு மேலாண்மை
- நீடித்த உணவு உற்பத்தி
- சூழல் பாதுகாப்பு
- நிலம் மீட்பு
- காடழிப்பைத் தவிர்த்தல் மற்றும் சீரழிவை நிறுத்துதல்

மேற்கண்ட முதல் மூன்று உறுப்புகளில் கிடை மற்றும் மேய்ச்சல் முறை நேரடியாகத் தாக்கம் செலுத்தக் கூடியவை. மற்ற இரண்டு உறுப்புகளிலும் மறைமுகமாகத் தாக்கம் செலுத்தக் கூடியவை ஆகும். மண்ணின் கரிம அளவை அதிகரிக்கக் கிடை அமர்த்துதல் முதன்மையான ஒரு வாய்ப்பாகும். புதைபடிவ ஆற்றல்களால் (fossil energies) மண்ணின் கரிம அளவை சுரண்டத் தான் முடியுமே ஒழிய அதிகரிக்க வைக்க முடியாது. நீடித்த உணவு உற்பத்திக்கு மண்ணின் வளம் முதன்மையானது. மண்ணின் வளத்தை அதிகரிக்க அல்லது நீட்டிக்க வைக்கக் கிடை அமர்த்துதல் நமக்கு எளிமையான இலகுவான வாய்ப்பாக இருக்கிறது. உலக கரி உமிழ்வின் 25 வீதத்தை காடுகளும், மேய்ச்சல் நிலங்களும் உட்கிரகித்து கரி நிலைநிறுத்தலில் (carbon sequestration) மீப்பெரும் பங்கு வகிக்கின்றன. இதன் பின்னணியில் மேய்ச்சல் நிலங்களின் ஆக்கிரமிப்பை அணுக வேண்டிய தேவை வருகிறது. மேய்ச்சல் நிலங்களின் மீட்பென்பது கரி நிலை நிறுத்தலின் உள்ளடக்கம் ஆகும்.

வளர்ச்சியடைந்த தொழில்மய நாடுகள் தங்களது கரி உமிழ்வைச் சமன்படுத்த திறன்மிகு மேய்ச்சலியத்தை ஊக்குவிக்கின்றன. இந்திய ஒன்றியத்தில் தொழில் வளர்ச்சியில் மிக முன்னேறிய மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. ‘‘அதீத தொழில்மயம் அதீத கரி உமிழ்வு’’ என்பது இயற்கை விதியாக இருக்கின்ற சூழலில் இவ்வாறான அதீத கரி உமிழ்வை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் காடுகளில் மேய்கின்ற கால்நடைகள் மூலம் ஓரளவு கட்டுக்குள் கொண்டு வரலாம். உலகெங்கும் உள்ள 25 வீதம் நிலமானது மேய்ச்சல் நிலமாக இருக்கிறது. இதில் கிட்டதட்ட 50 கோடி மக்கள் மேய்ச்சல் தொழிலில் ஈடுபடுகிறார்கள். தமிழகத்திலும் மேய்ச்சல் தொழிலில் ஈடுபடுகிற மக்களைச் சூழல் காப்பாளர்கள் என அங்கீகரித்து மேய்ச்சல் நிலங்கள் மற்றும் காடுகளில் முறையான மேய்ச்சல் நடக்க அனுமதிக்க வேண்டும்.

தமிழகத்தின் காலநிலை மாற்றத் தடுப்பு நடவடிக்கைகளில் மேய்ச்சலியம் முதன்மை பங்கு வகிக்க முழுமையான முகாந்திரமும் இருக்கிறது. ஓர் ஆண்டில் ஒரு ஹெக்டரில் 200-500 கிலோ கரியை (carbon) நிலை நிறுத்தும் பணியை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் காடுகள் மேற்கொள்கின்றன. மேய்ச்சலியத்தைத் திறம்பட மேற்கொள்கிற பொழுது உயிர் பன்மையம், மேய்ச்சல் நிலம் மற்றும் சூழல் ஆகியன பாதுகாக்கப்படுகின்றன. மானுட குலத்திற்கு ஏராளமான நன்மைகளை மேய்ச்சலியம் வழங்குகிறது என்கிறார் சூழல் பாதுகாப்பின் பன்னாட்டு ஒன்றிய (ICUN) ஒருங்கிணைப்பாளர் ஜொனாத்தன் டேவிஸ்.

மரபான கால்நடை மேய்ச்சலில் ஈடுபடும் ஒருவர் ஒரு கால்நடை மருத்துவராக, நீர் நிலை மற்றும் மேய்ச்சல் நிலம் சார்ந்த அறிவுடையவராக, சூழலுக்கு ஏற்ப மேய்ச்சலை மேற்கொள்ளும் மேலாளராக, வலசைப் பாதைகளை அறிந்தவராக, நிலைத் திணைகள் மற்றும் காடு சார்ந்த அறிவுடையவராக, கிடைபடு பொருட்களை வணிகம் செய்யும்

வணிகராக விளங்குகிறார். மரபான அறிவைக் கொண்டிருக்கும் இவர்கள் எழுத்து அறிவு இல்லாமல் இருக்கலாம். ஆனால் சூழல் சார் அறிவு உடையவர்களாக இருக்கிறார்கள், மரபு வழிப்பட்ட அறிவை நிறுவனமயப்பட்ட கல்வி எவ்வளவுக்கு எவ்வளவு உட்செறித்துக் கொள்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அது நடைமுறைக் கல்வியாகப் பரிணமிக்கும். காலநிலை மாற்றம் என்பது உலக சிக்கல். ஆனால் அதன் தீர்வு உள்ளூரில் இருக்கிறது. மேய்ச்சல்காரர்களிடமும் இருக்கிறது.

கிடைத் தொழில் ஒரு சாதிக்கு உட்பட்டதா?

தமிழ் சூழலில் மரபான கால்நடை மேய்ச்சல் தொழில் என்பது ஒரு சாதிக்கு உட்பட்டது எனும் பொதுக் கருத்து நிலவுகிறது. குறிப்பாகக் கோனார் எனும் சாதியின் குலத் தொழிலாகக் கருதும் போக்கு இருக்கிறது. முல்லைத் திணையில் ஆயர் முதன்மைத் தொழிலாகக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டனர். திணை வாழ்வை பொறுத்தவரை யாரெல்லாம் மேய்ச்சலில் ஈடுப்பட்டனரோ அவரெல்லாம் ஆயர்கள். அதன் நீட்சியாக அவர்களில் ஒரு குறிப்பிட்ட மக்கள் (கோனார் சாதியினர்) இன்று வரைக்கும் அத்தொழிலில் தொடர்ச்சியாக ஈடுபடலாம். அது அவர்களின் தனித்துவமாகவும் விளங்குகிறது. எனினும் தற்காலச் சாதிப் பிரிவுகளில் இருக்கும் பலர் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர். கோனார்களை போலவே மரபுத் தொடர்ச்சியாக குறும்ப கவுண்டர், முத்தரையர், மறவர், அகமுடையர், கள்ளர், கம்பளத்து நாயக்கர், ஒக்கலிகக் கவுண்டர், லிங்காயத் ஆகியோர் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். தற்காலத்தில் நாடார், தேவேந்திர குல வேளாளர், அருந்ததியர், பறையர், இசுலாமியர் (சில பகுதிகளில்) ஆகியோர் இக்கிடைத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இது தவிர, நிலமற்ற ஊரக மக்கள் (எந்தச் சாதியாகினும்) இத்தொழிலில் ஈடுபட இத்தொழில் ஏதுவாக இருக்கிறது. ஆகவே மேய்ச்சல் என்பது ஒரு சாதிக்கு உட்பட்டது என்ற கூற்றில் உண்மையில்லை. மேய்ச்சல் தொழில் பசுமைப் பொருளாதாரத்தின் முதன்மைக் கூறாக விளங்குகிற பொழுது புதியவர்களை இத்தொழிலில் ஈடுபடச் செய்தல் அவசியம். மேய்ச்சல் எனும் மரபு வழிப்பட்ட அறிவைக் காலத்திற்கு ஏற்ப நவீனப் படுத்துவது உள்ளூர் பொருளாதாரத்தில் பாரிய நன்மைகளை உருவாக்கும்.

மார்க்ஸ் ஊரகங்கள் சுருங்குவதையும் நகரங்கள் பெருகுவதையும் முறையே முதலாளித்துவ வேளாண்மை தொழிற்சாலைகளின் கைங்கரியம் என்கிறார். “பெருநிலவுடைமை வேளாண் மக்கள் தொகையை, ஊர்ப்புறங்களில் மேன்மேலும் குறைந்து செல்லும் குறைந்தளவுத் தொகையாகக் குறுகச் செய்கிறது. இதற்கு நேரெதிராகப் பெருநகரங்களில், மேன்மேலும் வளர்ந்து செல்லும் தொழில் துறைசார்மக்கள் தொகையை நெரிசலாய்ப் பெருகச் செய்கிறது. வாழ்வின் இயற்கை நியதிகளால் விதிக்கப்படும் சமூக வளர்சிதை மாற்றப் பிளவுக்குக் காரணமான நிலைமைகளை உருவாக்குகிறது. இதன் விளைவாக, மண்ணின் நுண்ணூட்டம் வீணடிக்கப்படுகிறது. இந்த வீணடிப்பு வாணிபத்தின் வாயிலாய் தனியொரு நாட்டின் எல்லைகளுக்கு அப்பால், நெடுந்தொலைவுக்குச் செல்கிறது” சூழலியல் நோக்கில் மார்க்சிடம் மிக முதன்மையாக நாம் பார்க்க வேண்டிய கருதுகோள் “வளர்சிதை மாற்றப் பிளவு (Metabolic Rift)” என்பதாகும். மானுடக் குலத்திற்கும் இயற்கைக்கும் இடையேயான வளர்சிதை மாற்றத்தில் (metabolism) தொழில்மய வேளாண்மை, பென்னம் பெரும் தொழிற்சாலைகள் ஆகியன மிகப் பெரிய பிளவு ஏற்படுத்தி விட்டன. மண்ணின் வளம் சூறையாடப்படக் கூடாது. மாறாக நிலத்திற்குத் “திருப்பி அளிப்பதே” அறிவுக்கு உகந்த வேளாண்மை என்கிறார் மார்க்ஸ். வேளாண்மையில் இந்த வளர்சிதை மாற்றத்தைச்

சீராகக் கொண்டு செல்ல மிகச் சிறந்த கருவியாகக் கிடையும் கிடைக்காரர்களும் இருப்பார்கள்.

நிறைவாக,

- ஆடு, மாடு மேய்த்தல் பிற்போக்கானதன்று. காலத்திற்குத் தேவையானது. அது நற்போக்கானது.
- கால்நடைகள் மேய்க்க அறிவு அவசியமானது. அவ்வறிவை ஆவனப்படுத்துவது அதனினும் அவசியமானது.
- மேய்ச்சல் தொழில் இழிவானதன்று. அரசும் தனியாரும் இத்தொழிலில் முதலீடு செய்கிற பொழுது இப்பசுமைப் பொருளாதாரம் உயர்வானதாகக் கருதப்படும்.
- சூழல் பாதுகாப்பில், நீடித்த மண் வள மேன்மையில், நலமான உணவு உற்பத்தியில் மேய்ச்சல் தொழில் முதன்மைப் பங்கு வகிக்கிறது.

மேய்ச்சல் தொழில் விரிவடைய எதிர்பார்ப்புகளாக,

- மேய்ச்சலில் ஈடுபடும் மேய்ச்சல்காரர்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாக்க நல வாரியம் ஒன்றை அரசு ஏற்படுத்த வேண்டும்.
- வலசைப் பாதைகள் அடையாளப்படுத்தப்பட்டுச் செயற்கை கோள் வரைபடங்களில் குறிக்கப்பட வேண்டும்.
- நீண்ட வலசை செல்லும் மேய்ச்சல்காரர்களுக்கு வலசைப் பாதைகளில் தங்குவதற்குக் குடில்கள் கட்டித் தரப்பட வேண்டும். இவ்வாறான குடில்கள் மேய்ச்சல் நல வாரியத்தின் கீழ்ச் செயல்பட வேண்டும்.
- நீர் நிலைகளில் மேய்ச்சல் கால்நடைகளின் உரிமைகளுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் நீர் நிலைகளின் அருகில் கால்நடைகளின் நீர் உரிமை குறித்தான அறிவிப்புப் பலகைகள் வைக்க வேண்டும்.
- பல்கலைக்கழகப் பாடத் திட்டங்களில் மேய்ச்சலியம் பற்றிய பாடங்கள், செயல் திட்டங்கள் ஆகியன அறிமுகப்படுத்த வேண்டும்.
- மேய்ச்சல்காரர்களைக் கல்வி நிறுவனங்களில் சிறப்பு விரிவுரையாளர்களாக (Guest Lecturers) அழைக்க வேண்டும்.
- மேய்ச்சலில் ஈடுபடும் இளைஞர்கள் இத்தொழிலை விட்டுவிட்டு வேறு புதிய வாய்ப்புகளைத் தேடிச் செல்கிற பொழுது இத்தொழிலில் ஈடுபட்டதற்கான சான்றிதழ் வழங்கப்படல் வேண்டும்.
- மேய்ச்சல் தொழிலுக்குள் புதிதாக வரும் இளைஞர்களுக்கு இத்தொழில் குறித்தானப் பட்டய/பட்ட படிப்புகளை வேளாண் மற்றும் கால்நடை பல்கலைகழகங்கள் வழங்க வேண்டும்.
- Internet of Things (IoT) மூலம் மேய்ச்சல் தொழிலுக்கான புத்தம் புதிய தொழில்நுட்பங்களைக் கண்டறிய அரசுசார் கல்வி நிறுவனங்கள் மாணாக்கரை ஊக்கவிக்க வேண்டும்.

பார்வை நூல்கள் மற்றும் இணைய தளங்கள்

1. Hoofprints on the Land, Ilse Kohler Rollefson
2. Pastoralism and the Green Economy – a natural nexus?, International Union for Conservation of Nature and Natural Resources, United Nations Environment Programme
3. Climate Change Synthesis Report-2023, IPCC
4. சூழலியல் புரட்சி, ஜான் பெல்லமி பாஸ்டர், விடியல் பதிப்பகம்
5. Soil Fertility And Animal Health, Dr. WM. A. Albrecht
6. Meat Atlas-2021, Heinrich Böll Stiftung, Berlin, Germany
7. கிடை, கால்நடை வளர்ப்போர் நல நடுவம், தமிழ்நாடு வெளியீடு
8. https://www.iucn.org/resources/issues-brief/drylands-and-land-degradation

உயிர்ச்சூழலியமும், மேய்ச்சலியமும்

ஆய்வாளர் சு.விஜய் சர்மா
vijaysharmabdu@gmail.com

பேராசிரியர் பெ.இரவிச்சந்திரன்
grassravi@gmail.com

உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு மனித இனக்குழுக்களும் வேளாண்மை எனும் நிலைத்த நாகரிகத்தை அடைவதற்கு முன் பூமியின் பரந்தவெளியில் அலைந்த குடிகளாகத் தங்களது கால்நடைகளோடு திரிந்த வாழ்நிலையைத் தான் ஆய்வாளர்கள் மேய்ச்சல் நிலை சமூகம் என்கிறார்கள். ஆப்பிரிக்க, சுமேரியா, எகிப்து மற்றும் சிந்து வெளி நாகரிகம் உட்பட அனைத்து முன்னேறிய நாகரிக சமூகங்களிளும் மேய்ச்சல் நிலை வாழ்விற்கான தடயங்கள் கிடைக்கின்றன. பெரும்பாலான சமூகங்களில் இன்று காணப்படும் பண்பாடு என்பது மேய்ச்சல் நிலத்திலேயே பல்லாயிரம் ஆண்டுகளாக முயங்கி வந்துள்ளது. மேய்ச்சல் நிலங்கள் ஒவ்வொன்றும் தனித்தப் பல்லுயிர்த் தன்மையை தன்னகத்தே கொண்டு இன்றளவும் தலைமுறைகள் தோறும் அவை தொடர்கின்றன. இன்று மனிதர்களால் பயிரிடப்படும் தாவரங்கள் மற்றும் பழக்கபடுத்திய கால்நடைகள் அனைத்தும் மேய்ச்சல் நிலப்பகுதி நமக்குக் கொடுத்த கொடையாகும்.

பூமியெங்கும் வரையறுக்கபட்ட பல்வேறு பல்லுயிரிய பாதுகாப்பு மண்டலங்களுக்குள் மேய்ச்சல் நிலங்களும் இன்று பெரும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதன் முக்கிய காரணமவாது மேய்ச்சல் நிலங்களில் உள்ள பலவகைப்பட்ட தாவரங்களும் அதைச் சார்ந்த காட்டுயிர்களும், அந்நிலத்தில் வாழும் மனிதர்களும் அவர்கள் வளர்க்கின்ற கால்நடைகளும் ஆகும்.

புல்வெளிகள் / மேய்ச்சல் நிலங்களின் தோற்றம் மற்றும் வகைகள்

பூமியானது இன்றுள்ள உயிர் சூழலுக்கு மாறி வருவதற்குப் பல்லாண்டு காலம் எடுத்துக்கொண்டதோடு பல்வேறு வகைப்பட்ட காலநிலைகளை கடந்து வந்துள்ளது . அந்தக் காலநிலைகளில் மிக முக்கியமான ஒரு காலகட்டம் என்பது பனியுகக் காலமாகும். பூமி தோன்றி 450 கோடி ஆண்டுகளில் 5 பனியுகங்களைக் கடந்து வந்திருப்பதாக ஆய்வாளர்கள் கணிக்கிறார்கள். கடைசி பனியுகம் ஏறக்குறைய 25 லட்சம் ஆண்டுகள் முன் தொடங்கி சுமார் 12000 ஆண்டிற்கு முன் முடிவிற்கு வந்த காலத்தைத் தான் ஆய்வாளர்கள் பிளைஸ்டோசீன் காலப் பனியுகம் (Pliestocene Ice age) என்று வரையறுக்கிறார்கள். பிளைஸ்டோசீன் பனி யுகத்தைத் தொடர்ந்து உலக வெப்பநிலையானது படிப்படியாக அதிகரித்து வறண்ட பருவநிலை உருவாக தொடங்கியதால் துருவ பகுதிகளில் இருக்கும் கண்டங்களான அமெரிக்க, ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆஸ்திரேலியா பகுதிகளில் பசுமை மாறா காடுகள் மறைந்து பெரும் புல்வெளி பரப்புகளாக விரிவடைந்தன.பூமியின் மொத்த நிலப்பரப்பில் ஆர்டிக் மற்றும் அண்டார்டிகாவைத் தவிர்த்து 20 முதல் 40 சதவீதம் புல்வெளிகளாக உள்ளன.

மண்ணின் தன்மைகள், நில அமைவு, மழைப்பொழிவின் அளவு மற்றும் காலநிலை கூறுகளால் புல்வெளிகளை இரு பெரும் பிரிவுகளாக வகைபடுத்தி, மிதவெப்பப்

புல்வெளிகள் (temperate grasslands) என்றும் வெப்பமண்டலப் புல்வெளிகள் (Tropical grasslands) என்றும் ஆய்வாளர்கள் வரையறுக்கிறார்கள்.

இடபகுதிக்கு ஏற்றவாறு புல்வெளிகளை ஆய்வாளர்கள் வெவ்வேறு விதமான பெயர்களைக் கொண்டு அழைக்கிறார்கள். வட அமெரிக்க புல்வெளிகளை Praries என்றும் தென் அமெரிக்கப் பகுதியை Pampas என்றும் மத்திய ஐரோப்பா மற்றும் ஆசியா புல்வெளிகளை steppe என்றும் அழைகிறார்கள். இந்த வகையான புல்வெளிகள் அனைத்தும் மிதவெப்பப் புல்வெளிகள் வகையைச் சார்ந்தவையாகும்.

நிலநடுக்கோட்டிற்கு அருகில் உள்ள புல்வெளிகளை வெப்பமண்டலப் புல்வெளிகள் என்று அழைக்கலாம். ஆப்பிரிக்க பகுதிகளில் உள்ள பெரும் வறண்ட புல்வெளிகளை savanaa என்று அழைகிறார்கள். இம்மாதிரியான புல்வெளிகள் மனிதர்களின் மேய்ச்சல் நடவடிக்கையால் பல்லாயிரம் காலமாகச் செறிந்த பல்லுயிர்த்தன்மையோடும் தனித்துவச் சூழலியல் அடையாளதோடும் காணபடுகின்றன.

இந்தியாவில் புல்வெளிகளும் மற்றும் அவற்றின் தவறான மதிப்பீடுகளும்

ஐரோப்பிய ஸ்டெப்பி புல்வெளி பகுதியிலிருந்து வந்த வெள்ளையர்கள் பாசனத்தில் இல்லாத அல்லது பயிரிடப்படாத நிலங்களை (அவர்களால் வருவாய் ஈட்ட முடியாத நிலங்களை) தரிசு நிலமாக அறிவித்தார்கள். மிதவெப்பப் புல்வெளி பகுதியில் இருந்து வந்திருந்தாலும் இங்கே உள்ள வறல் புல்வெளி பகுதிகளை அவர்கள் புல்வெளிகளாகக் கருதவில்லை. அதற்கு மிக முக்கியக் காரணம் ஸ்டெப்பி புல்வெளி போன்ற மரங்களற்ற விரிந்த புல்வெளிகள் இந்தியாவில் எங்குமே இல்லாததால் இங்கு உள்ள வறல் புல்வெளிகளைத் (savannah grassland) தரிசு நிலம் (waste lands) என்று அறிவித்து அதைக் களேபரம் செய்தார்கள்.

இந்திய நிலவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் வரலாறுகளை ஆராய்ந்த பெரும்பாலான சூழலியல் ஆய்வளார்கள் கருத்தின்படி இந்தியாவானது பலவகைப்பட்ட காடுகளின் தொகுப்பிடம் ஆகும்.

இந்திய காடுகளானது அவற்றின் நில அமைப்பின் படி வெப்பமண்டல பசுமை மாறா மழைக்காடுகள், இலையுதிர் அல்லது பருவமழைக் காடுகள், வறண்ட இலையுதிர் காடுகள் மற்றும் இமயமலை ஈரப்பதமான மிதவெப்பக் காடுகள் என்று முதன்மையாக வகைபடுத்துகிறார்கள்.

தாவரங்கள் முற்று நிலை (climax vegetation) மூலம் புல்வெளிகள் உருவாகும் தட்பவெப்பச்சூழல் இந்தியா போன்ற வெப்ப மண்டலப்பகுதிக்கு உரித்தானது இல்லை. அதனால் இந்தியாவை பொறுத்த மட்டில் இயற்கையாய் புல்வெளிகள் எங்கும் தோன்றியதற்கான சாத்தியகூறுகள் இல்லை எனலாம். மத்திய மற்றும் தென்பகுதி தக்காண பீடபூமி பகுதிகளும் வறண்ட புல் பரப்புகளாகக் காணப்பட்டலும் அதனினுடாக மரங்களும் சிதறி காணபடுகின்றன. பல்லூழி காலமாக மேய்ச்சலோடு இணைந்து வேளாண்மையும் செய்த இந்திய இனக்குழு சமூகங்கள் சமவெளி பகுதிகளில் உள்ள வெப்பமண்டல வறண்ட இலையுதிர் காடுகளை அழித்து வேளாண்மைக்காகவும் மேய்ச்சல்காகவும் ஏற்படுத்திய பகுதிகளே இன்றைய வறல்புல்வெளிகளாக (Indian Savanaah) இந்தியாவெங்கும் காணப்படுகின்றன.

மத்திய மற்றும் மேற்கு இந்தியாவில் சிதறிய வறள் புல்வெளிகள், ராஜஸ்தான் மற்றும் குஜராத், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகம் பகுதிகளில் காணப்படுகின்றன.. பாதிவறள் புல்வெளிகள் (semi-arid grassland) 30 சதவீதம் ராஜஸ்தானில் காணப்படுகிறது. இமயமலைப் பகுதிகளில் ஈரசதுப்புப் புல்வெளிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக்

காணப்படுகின்றன. தென்னிந்தியாவுக்கே உரித்தான வறள் புல்வெளிப் பகுதிகள் சமவெளி பகுதிகளில் காணப்படுகின்றன

தென்னிந்திய மேய்ச்சல் நில தாவர வளம்

தீபகற்ப இந்திய சமவெளி பகுதிகளில் வறல் புல்வெளிகள் தொடர்ச்சியாக காணப்படுவதால் இந்திய சவானா புல்வெளிகளுக்கு இப்பகுதியானது ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. ஆஷிஷ் நெர்லேகர் என்பவரின் சமீபத்திய ஆய்வின்படி தென்னிந்திய வறல் புல்வெளி பகுதிகளில் தாவரப் பெருக்கம் என்பது இந்திய காடுகளில் உள்ளதைப் போன்று செறிந்து காணப்படுகிறது. அவற்றில் மிக முக்கியமாக ஓரிடவாழ்த் தாவரங்களின் எண்ணிக்கையானது அதிகமாகக் காணப்படுகிறது. அவர்கள் மேற்கொண்ட கள ஆய்வின் படி 46 தாவரக் குடும்பங்களில் இருந்து 206 வகையான சிற்றினங்கள் ஓரிடவாழ் தாவரங்கள் இந்த மேய்ச்சல் நிலங்களில் உள்ளன. வறல் புல்வெளிகளான இந்தப் பகுதிகளில் புற்களே பெருபான்மையாக (31 சிற்றினங்கள்) காணப்படுகிறது. கொழுக்கட்டைப்புல் (Cenchrus ciliaris), படர்புல் (Dichanthium) போன்ற புற்களின் வகைகள் அதிகமாகக் காணபப்டுகின்றன.

தமிழகத்தின் மேய்ச்சல் நிலங்கள்

தொல்பழங்காலம் தொட்டுத் தமிழக நில அமைப்பானது வெப்பமண்டல காடுகளின் அடர்நிலமாகத் தான் சங்க காலம் முதல் தற்போது வரை காணப்படுகிறது. அதனால் மேய்ச்சலுக்கு என்று வரையறுக்கப்பட்ட நிலம் (சமவெளி பகுதி போன்று) என்பது தனியாக எப்போதும் தமிழக நிலச் சூழலில் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை எனலாம்.

தொல்தமிழ் இலக்கியம் தமிழக நிலச்சூழல் அமைப்பைப் பகுத்து அதை ஐந்து திணைத் தொகுதி மண்டலங்களாகப் பிரிக்கிறது. அவற்றில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் கோடையில் குறிஞ்சி, முல்லை நிலம் நீரற்று வறண்டு போகும் போது அப்பகுதிகளைப் பாலை என்றும் வரையறுத்தனர்.

திணை மண்டலத்தின் முக்கியமான நிலப்பகுதியான முல்லை நிலமானது காடும் காடு சார்ந்த இடமாகக் கருதபடுகிறது. இம்முல்லை நிலத்தில் தான் ஆதி சமூகம் மேய்ச்சலோடு கூடிய வேளாண்மையை முதன்மையான தொழிலாகக் கொண்டிருந்ததைச் சங்க இலக்கியம் பல இடங்களில் பதிவு செய்கிறது. சங்க காலப் பதிவுகளில் இருந்து ஆயர்களான மேய்ச்சல் சமூகம் எவ்வாறு ஆநிரைகளை மேய்ச்சலுக்கு ஈடுபடுத்தியிருக்கலாம், என்பதை ஒருவாறு ஊகிக்கலாம். அதன்படி முல்லை நிலத்தில் பயிரிடாமல் விடப்பட்ட தரிசு நிலம் கொல்லை என்றும், மரங்கள் அடர்ந்த பகுதி புறவு, கானம் என்றும் அழைக்கப்பட்டன.

முல்லை நிலத்தில் வேளாண்மை தொடங்கிய காலத்தில் மரங்களை அழித்து விளைநிலமாக்கப்பட்ட பகுதி புனம் என்றும் வன்புலம் என்றெல்லாம் அழைக்கப்பட்டன. புனம் என்ற சொல் புன் நிலம், புல் நிலம் என்றெல்லாம் பொருள் விளக்கம் கொண்டுள்ளது. இதன்படியான நிலத்தையே புன்செய் எனலாம். முல்லை நிலத்து மக்கள் வன்புலம் என்ற வானம்பாரி தொடக்க கால வேளாண்மையில் ஈடுபட்டிருந்ததாக தெரிகிறது. மேய்ச்சல் நிலமே வேளாண் நிலமாகப் பருவ காலத்திற்கு ஏற்ப சிறு தவசங்களைப் பயிரிட்டிருப்பார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

தனித்த புற்கள் மட்டும் பரவிய பரந்த சமவெளிகள் தமிழக நிலப்பகுதிகளில் எங்கும் கிடையாது. பரந்த வெளிகளில் மரங்களோடு கூடிய புல் நிறைந்த பகுதியை நாம் மேய்ச்சல் நிலமாக வரையறுக்கலாம். அப்பகுதிகள் இடத்திற்கு இடம்

மாறுபட்டவையாகவும் அவற்றில் சிறு குன்றுகளும், மலைகளும், முட் மரங்கள் நிறைந்த காடுகளும், வன்புனம்களும் (கொல்லைகளும்) கால்நடைகளின் பெருவழிப் பாதைகளை உள்ளடக்கியதாகும். இன்றும் மேய்ச்சல் சமூகத்தினர் அப்படியான பகுதிகளிலே மேய்ச்சலைத் தொடர்கிறார்கள்.

தொல் தமிழ் இலக்கியங்களிருந்தும் சமீப கள ஆய்வின் படியும் தமிழக மேய்ச்சல் நிலப் பகுதிகளை நான்காகப் பகுக்கலாம்.
அவை,

1. மலை சார்ந்த மேய்ச்சல் பகுதி
2. காடு சார்ந்த மேய்ச்சல் பகுதி
3. நீர்நிலைகள் ஒட்டிய மேய்ச்சல் பகுதி
4. பெருவழி சார்ந்த மேய்ச்சல் நிலம்

மலை சார்ந்த மேய்ச்சல் பகுதி

கடல் மட்டத்திலிருந்து குறைந்த உயரத்தில் உள்ள மலைப்பகுதிகள் முல்லை நிலத்தில் பெரும்பாலும் காணப்படுகின்றன. அவற்றில் பெருபான்மையாக உள்ளவை மேற்குமலைத் தொடர்ச்சியான மழைக்காடுகளை ஒட்டி காணப்படும் மலைகளோடு கூடிய மேய்ச்சல் நில பகுதிகள் ஆகும். இப்பகுதிகளுக்கேற்ற தனித்த காட்டு புற்களும், செடி வகைகளும் உள்ளன. இப்பகுதில் உள்ள தனித்த மேய்ச்சல் நிலத்திற்கு அடையாளமாகத் தேனிமலை மாடுகளை நாம் கூறலாம்.

வருடத்தில் பாதி காலங்களை மலை பகுதிகளில் மேய்ந்து திரிந்து கார்காலங்களில் நிலப்பகுதிகளை அடையும் இம்மாடுகள் மலைப்பகுதிக்கும் தரைப்பகுதிக்கும் இடைப்பட்ட தாவரப் பரவலாக்கத்திற்குப் பெரும் பங்காற்றி இம்மாதிரியான மேய்ச்சல் நிலத்திற்குச் சூழலியல் காப்பாளர்களாகத் தொல்காலம் தொட்டு விளங்குகின்றன.

காடு சார்ந்த மேய்ச்சல் பகுதி

சிறு சிறு குன்றுகளும், கரடுகளும் அமைந்த மேய்ச்சல் பகுதிகள் காடு சார்ந்த மேய்ச்சல் பகுதிகளாக வரையறுக்கலாம். இப்பகுதிகள் பெரும்பாலும் தொடர்ச்சியற்ற மலை தொடர்களைக் கொண்ட கிழக்கு மலைத் தொடர்ச்சி சார்ந்து காணப்படுகின்றன. இது போன்ற மேய்ச்சல் பகுதிகள் சிறு மலைகளையும் குன்றுகளையும் உள்ளடக்கியது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திருவண்ணாமலை போன்ற வட தமிழகப் பகுதிகளில் காணப்படுகின்றன. இம்மாதிரியான மேய்ச்சல் பகுதிகள் தாவரப் பெருக்கத்தில் தனித்துவமானவைகளாக உள்ளன. இவ்வகையான மேய்ச்சல் பகுதியில் உம்பளச்சேரி போன்ற மாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். தமிழக மேய்ச்சல் நிலமானது இந்த பகுதியிலே அதிகமாகக் காணபடுகிறது.

நீர்நிலைகள் ஒட்டிய மேய்ச்சல் பகுதி

தமிழக மேய்ச்சல் நிலத்தில் பெருபான்மையாக உள்ள பகுதிகள் வறண்ட பகுதிகள் என்பதால் ஆநிரைகள் நீரருந்த ஏற்படுத்திய குளங்களே இன்று வேளாண்மைக்காகப் பாசன நீரை தேக்கும் குளங்களாக மாற்றமடைந்திருகின்றன. இந்தப் பகுதிகளை ஒட்டிய மேய்ச்சல் நிலம் என்பது பசுமையாகயும் வளம் நிறைந்த புல்வெளிகளாக காணப்படுகின்றன. இதனைச் சங்கப் பாடலான அகநானுறும் பதிவு செய்துள்ளது.

"சேண்பால் வியன்சுரைப்
படுமணி இனநிரை உணீ இய கோவலர்
விடுநிலம் உடைத்த கலுழ்மண் கூவல்" (அகம் 321: 6 - 8)

வறண்ட கொல்லைப் பகுதியில் உள்ள பாறைகளை உடைத்து நீர் கசிகின்ற ஊற்றுகண்களை உண்டாக்கி, கால்நடைகளுக்கு ஆயர்கள் அருந்த தருவர் என்பதை இப்பாடலின் மூலம் நாம் அறியலாம்.

இன்று இருக்கும் பெருவாரியான குளங்களும், ஏரிகளும் முன்புபொரு காலத்தில் ஆநிரைகளுக்கு நாம் முன்னோர்கள் ஏற்படுத்தியதைக் கொண்டு தான் நாம் இன்று விளைநிலங்களில் வேளாண்மையைச் செய்து கொண்டிருக்கிறோம்.

தொல் காலம் தொட்டு இன்று வரை மேய்ச்சல் குழுக்கள் இது போன்ற பகுதிகளிலே மேய்ச்சலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆடுகள் மேய்க்கும் கீதாரீகள் வறண்ட காலங்களில் எரிக்கரைகளிலும், குளத்தோரங்களிலும் தங்களது கால்நடைகளை இன்றளவும் மேய்க்கிறார்கள்.

பெருவழி சார்ந்த மேய்ச்சல் நிலம்

மேய்ச்சல் அலைகுடிகள் தங்களின் கால்நடைகளின் தேவைக்காக இடம் விட்டு இடம் ஒட்டிச் செல்வதற்காக ஏற்படுத்திய வழிகளே உலகம் முழுக்கப் பெருவழிகளாகக் காணப்படுகின்றன. சங்க கால ஆயர்களின் மேய்ச்சல் நில வழித்தடங்களே பெருவழிகளாய் மாறி இருப்பதாய் அகநானூற்று பாடல் 14 கூறுகிறது.

"அரக்கத்து அன்ன செம் நிலப் பெரு வழி"

மேய்ச்சலை நோக்கிப் பிரிந்து சென்ற தலைவன் வினை முடித்துத் திரும்பி வரும் பெருவழியை எதிர்நோக்கித் தலைவி காத்திருப்பதாக அமையும் இப்பாடல் அக்கால பெருவழி (Highways) எங்கும் மேய்ச்சல் நிலமாக இருப்பதாய் நாம் அறியலாம்.

இன்றும் தமிழ் நாடு முழுவதும் உள்ள பெருவழிகள் ஒட்டிய மேய்ச்சல் நிலங்கள் பரந்து விரிந்து காணப்படுகிறது. எடுத்துக்காட்டாகத் திருநெல்வேலியிலிருந்து மதுரை செல்லும் சாலை எங்கும் நாம் காணலாம். மதுரை முதல் சிவகங்கை பெருவழிச் சாலை எங்கும் புலிகுளம் வகையான மாடுகள் மேய்வதும் அதனோடு மேய்ச்சல்காரர்களும் இருப்பதைக் கண்டு உணரலாம்.

மேய்ச்சலின் சூழலியல் முக்கியத்துவம்

மேய்ச்சல் முறையானது நேரடியாகப் பார்க்கும்பொழுது மனிதனுக்கான பொருளாதாரத் தேவையாகத் தோன்றினாலும் அதனினுடாகச் சூழலியல் செயல்பாடுகளும் அடங்கியுள்ளன. பல்லுயிரிய தன்மையைப் பேணுவதற்கும் நிலையான வளர்ச்சிக்கும் மேய்ச்சல் நடைமுறையானது இன்றியமையாத பண்பாகும். அவற்றில் முதன்மையாக

வாழிடப் பாதுகாப்பு மற்றும் பல்லுயிரிய மையங்கள்

தமிழக மேய்ச்சல் பகுதிகள் என்பது தட்டையான வறண்ட நிலத்தைப் பாதுகாப்பது அல்ல, மாறாக மேற்கு மலைத் தொடர் சார்ந்த மேய்ச்சல் பகுதிகள், கிழக்குத் தொடர்ச்சி மலைக் குன்றுகள், ஒவ்வொரு பகுதியில் இருக்கும் சிறு சிறு மலைகள், அனைத்துக்குமான இன்றியமையாத நீர்நிலைகள் மற்றும் பெருவழி சாலைகளோடு கூடிய மேய்ச்சல் பகுதிகளைக் காப்பது ஆகும். இந்த ஒவ்வொரு மேய்ச்சல் நிலப் பகுதிகளும் பெரும்பாலான மேய்ச்சல் நிலங்களில் உள்ள தாவரங்கள் வேறுபட்டவையாகவும் தனித்த

தாவரங்களும், புற்கள் வகையினங்களும் அதைச் சார்ந்த காட்டுயிர்களுக்கும் உள்ள சங்கிலித் தொடர்ச்சி பலபடித்தானைவைகளாகக் காணப்படுகின்றான.

உயிரிய பல்வகைமை

பூமியில் உள்ள பல்வேறு உயிரக தொகுதிகளில் வீரியமான செழுமைமிக்க உயிர்கள் செறிந்து காணபடுவதைப் போல மேய்ச்சல் நிலங்களிலும் பலதரப்பட்ட உயிர்கள் வீரியமிக்கதாகக் காணப்படுகின்றன. அதற்கு மிக முக்கியக் காரணம் பலவகைப்பட்ட மண்ணின் தன்மையாலும், வேறுபட்ட பருவ நிலைகளில் அவ்வுயிரிகள் தங்களைத் தகவமைத்துக் கொள்வதாகும். மேய்ச்சல் நிலங்களில் உள்ள கால்நடைகளைச் சூழலுக்கு ஏற்ற விலங்குகளாக மனிதர்களால் தரப்படுத்தபடுகின்றன. இதன்மூலம் அனைத்து விதமான சூழலுக்கு ஏற்ற வீரியமான விலங்குகள் ஒவ்வொரு தலைமுறைகளாகப் பேணப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றன. குறிப்பாக நாட்டு மாட்டு இனங்களான காங்கேயம், உம்பளச்சேரி, புலிகுளம் மற்றும் பர்கூர் இன மாடுகளைச் சொல்லலாம். மாடுகள் மட்டுமல்லாது தமிழ்நாட்டிற்கே உரித்தான ஆடுகளும் இந்த மேய்ச்சல் நிலத்தால் பாதுகாக்கப்படுகிறது. தேசிய அளவில் தமிழ்நாட்டின், உள்நாட்டு மாட்டினங்களின் எண்ணிக்கையானது 2012 இல் 2.46 மில்லியனிலிருந்து 2019 இல் 1.8 மில்லியனாகக் குறைந்துள்ளது. இதற்கு முக்கியமான காரணம் என்பது தமிழக மேய்ச்சல் நிலத்தின் தன்மை வெகுவாகக் குறைந்து இருப்பதாகும்.

பாரம்பரிய அறிவும் பண்பாடும்

தமிழக மேய்ச்சல் சமூகம் ஒவ்வொன்றுக்கும் இயற்கையோடு கூடிய சூழலியல் அறிவும் அதன் தொடர்ச்சியும் இன்றளவும் பேணப்படுகிறது. குறிப்பாக, தேனி மலை மாட்டுகாரர்களும், தென்பகுதி கீதாரிகளும் தங்களது கால்நடைகளுக்கு வரும் நோய்களைப் பாரம்பரிய மருத்துவ அறிவோடுதான் குணப்படுத்துகிறார்கள். அந்தப் பாரம்பரிய அறிவை எதிர்வரும் தலைமுறைக்கும் கடத்துகிறார்கள். சூழலியல் சார்ந்த மரபறிவு மற்றும் விழுமியங்களோடு மேய்ச்சலைத் தொடர்கிறார்கள்.

மேய்ச்சல் நிலங்களும் பருவநிலை மாறுபாடுகளும்

உலகளவில் இன்று அனைத்து நாடுகளிலும் பெரும் பேசு பொருளாக இருப்பது பருவநிலை மாற்றமாகும். இதன் முக்கியச் செயல்பாடு என்பது வளியில் உள்ள கரிம அளவை குறைப்பது ஆகும். இந்திய மேய்ச்சல் நிலங்கள் பருவநிலை மாற்றத்தில் பெரும் பங்காற்றுகின்றன. சமகால ஆய்வின் படி மேய்ச்சல் நிலங்களில் முறையான பாதுகாப்பும், கட்டுப்படுத்தபட்ட மேய்ச்சல் நடவடிக்கையும் இருந்தால் அந்த மேய்ச்சல் நிலமானது ஆண்டுக்கு சுமார் 3 டன் கரிமங்களைத் தன்வயப்படுத்தி மண்ணில் சேர்த்து மண்ணின் வளம் மீட்டுருவாக்கம் செய்யப் பயன்படும். இதன் மூலம் வளிமண்டலத்தில் உள்ள கரிமத்தின் அளவை வெகுவாகக் குறைக்கலாம்.

மேய்ச்சல் நிலத்தினைப் பாதிக்கும் காரணிகள்

தலைமுறை, தலைமுறைகளாக மக்களிடம் மற்றும் வனஉயிர்களிடம் இருந்த மேய்ச்சல் நிலமானது அரசாங்கத்தின் பொறுப்புகளில் சென்றபோதே அதன் அழிவுகளும் தொடங்கியது.

உலகமயம், தாராளமயப் போக்குகளால் ஏராளமான வளர்ச்சித் திட்டங்கள் நலிந்த மக்களுக்கு என்று அறிவித்துவிட்டு , பெரும்முதாளிகளுக்கும் பெரும் நிறுவனங்களுக்கும் தாரை வார்ப்பது தான் இன்றைய வளர்சிக்கான வரைமுறையாக உள்ளது. அப்படி

வளர்ச்சி நோக்கில் முதலில் மக்களிடமிருந்து பிடுங்கும் நிலங்களே இந்த மேய்ச்சல் பகுதிகளாக உள்ளது.

வேளாண்மைக்கு முந்தைய வடிவமான மேய்ச்சல் நிலங்களின் அழிவிற்கு இன்று மேற்கொள்ளப்படும் நவீன விவசாய சாகுபடி முறைகள் மற்றும் சாகுபடி நிலங்களைப் பசுமைப் புரட்சிக்ககாக அதிகப்படுத்தியதும் முதற் காரணமாகும். நிலத்திற்கு ஏற்ற பயிர்த் தன்மைகள் மாற்றி நீரற்ற வறண்ட பகுதிகளையும் நெல் சாகுபடி நிலங்களாக மாற்றி மேய்ச்சல் நில அழிவிற்குப் பெரும் அச்சுறுத்தலை உருவாக்கியுள்ளனர்.

தமிழகம் நிலவமைப்பில் வறண்ட பகுதியாகக் காணப்பட்டாலும், நமது முன்னோர்கள் நீர்மேலாண்மையில் சிறந்து விளங்கியதற்குக் காரணம் இங்குள்ள ஏரிகளின் சங்கிலித் தொடர்ச்சியே ஆகும். அறைவடிவ ஏரி, குளங்கள் ஒவ்வொன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புக் கொண்டு நீரைச் சேமித்து, உபரி நீரைக் கடலில் கலக்க ஏதுவாக அமைத்தனர்.

சமகால மேய்ச்சல் நிலமென்பது ஏரிகளும், குளங்களும், குட்டைகளும் உள்ளடக்கியது. இந்த நீர்த்தேக்கும் பகுதி ஒவ்வொன்றும் பசும்புல்வெளிக்கான ஏற்ற இடமாகத் தொடக்கத்திலிருந்தே காணப்படுகிறது. இந்த நீர்தேக்க அமைப்புகள் எல்லாம் தூர்ந்து, கால்வாய்கள் உடைந்து, பல்வேறு ஆக்கிரமிப்புகளுடன் காணப்படுவதும் இன்றைய மேய்ச்சல் நிலத்தின் பற்றாக்குறையை மேலும் அதிகமாக்குகிறது.

பண்பாட்டுச் சூழலியல் வீழ்ச்சி

ஆதிகால மனிதர்களின் அன்றைய தேவைகளைச் சார்ந்து ஏற்படுத்திய ஒவ்வொரு செயல்பாடுகளும் இன்றைய வாழ்வின் தொல் எச்சங்களாகவும், பண்பாடுகளாகவும் இன்றுவரை தொடர்கின்றன. அப்படியொரு தமிழக மேய்ச்சல் நிலப் பண்பாட்டின் தொடர்ச்சி இன்றைய ஏருதழுவல் எனும் நிகழ்வு.

கால்நடைகளைத் தரப்படுத்துதல் எனும் முறையால் ஏற்பட்ட இந்த ஏறுதழுவல் நிகழ்வானது பண்பாட்டுத் தொட்டிலாக உள்ள இந்த மேய்ச்சல் நிலத்தின் அடையளமாகும். இந்த மேய்ச்சல் நிலங்களின் வளங்களாக இருப்பவை இயல்புற்களும் இயல் தாவரங்களும் ஆகும். இந்த மேய்ச்சல் நிலத்தின் வளங்கள் அழிந்ததால் மேய்ச்சல் கால்நடைகளுக்கான தீவனம் அற்று போய்விட்டது. அதனால் கால்நடைகளுக்கான தீவன தேவைக்குப் பெருநிறுவனங்களால் உருவாக்கப்பட்டு வரும் தீவனங்களைச் சார்ந்து நமது கால்நடைகளை வளர்ப்பது என்பது முன்னேற்றமான வளர்ச்சி ஆகாது.

ஏறுதழுவல் பண்பாட்டிற்கு ஓர் ஆபத்து என்று வந்தபோது அந்தப் பண்பாட்டு நிகழ்வை போராடி மீட்ட, தமிழ்ச் சமூகம் இந்தப் பண்பாட்டு நிகழ்வைச் சார்ந்துள்ள மேய்ச்சல் நிலங்களின் அழிவை மௌனமாக வேடிக்கை பார்ப்பது என்பது நமது பண்பாட்டின் சூழலியல் வீழ்ச்சியே ஆகும்.

ஏறுதழுவும் பண்பாடு பற்றிய சங்க கால இலக்கியமான கலித்தொகையில் வரும் பாடல்,

> **“தகை வகை மிசை மிசைப் பாயியர் ஆர்த்து, உடன்**
> **எதிர் எதிர் சென்றார் பலர்.**
> **கொலை மலி சிலை செறி செயிர் அயர் சினஞ் சிறந்து,**
> **உருத்து எழுந்து ஓடின்று மேல்”**

காளையின் மேல் பாய்ந்து பிடிப்பதற்காக, காளை மேல் பாய்வோர் பலர் ஆரவாரத்துடன் காளைக்கு எதிர் எதிர் சென்றனர், கொல்லும் வில்லைப் போல

வளைந்து காளைகள் சினத்துடன் மேல் எழுந்து ஓடிப் பாய்ந்தன என்று காளைகளின் சினத்தைப் பதிவு செய்துள்ளது.

இன்றும் ஏறுதழுவலில் சினந்து ஓடி வரும் காளைகளின் கண்களில் தெரியும் ஆதி கால மேய்ச்சல் நில வாழிடப் பகுதிகளை வளர்ச்சி எனும் பெயரில் முற்றாகச் சிதைத்த மனிதர்களை நோக்கியதாக இருக்கக் கூடும்.

முடிவுரை

மேய்ச்சல் நில வாழ்வியல் என்பது அங்கு வாழும் அனைத்து உயிர்களும் தற்சார்போடும் ஒன்றுடன் ஒன்று சார்ந்து பல்லுயிர்த்தன்மையை வளமாக்கும் ஓர் சுழற்சி முறை ஆகும். அந்தச் சுழற்சி என்பது பன்னெடுங்காலமாக இந்த மண்ணில் நிலைத்து ஒவ்வொரு தலைமுறைகளுக்கும் சென்று சேரும் பன்மயத்துவ நிலப் பண்பாடாகும்.

இந்தியா முழுவதும் மேய்ச்சல் நிலங்களுக்கான முழு தரவுகளும் எப்படி அரசிடம் இல்லையோ அதைப்போல மேய்ச்சல் நில மக்களைப் பற்றிய தரவுகளும் சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை எனலாம். தோராயமாக முப்பத்தினான்கு மில்லியன் மக்கள் திரள் மேய்ச்சலையும், மேய்ச்சல் நிலத்தை நம்பி வாழுகின்ற சூழலில் அவர்களின் வாழ்நிலை என்பது பரிதாபகரமான சூழலே உள்ளது.
உதாரணமாக ஓர் நிகழ்ச்சி மட்டும் இங்க நினையூட்டலுக்காக,

ஜம்மு-காஷ்மீர் பகுதியில் இருக்கும் அலைகுடி மேய்ச்சல் சமூகமான குஜ்ஜர் எனும் பழங்குடி சமூகம் ஒவ்வொரு பருவகாலமும் தங்களது கால்நடைகளை மேற்கு இமயமலைப் பகுதிகளுக்கு மேய்ச்சலுக்காக ஓட்டிச் செல்வார்கள் இது அவர்களின் மேய்ச்சல் வாழ்வின் நடைமுறையாகும்.

ஏப்ரல் 22, 2017 ஆம் ஆண்டு குஜ்ஜர் இன மக்கள் வழக்கம் போல் தங்களது கால்நடைகளை ஓட்டி செல்லும் போது எங்கிருந்தோ வந்த கோ ரட்சாஸ் (Gau Rakshak) எனும் குண்டர்களால் குஜ்ஜர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர். குஜ்ஜர்களைத் தாக்கும் போது அவர்கள் சொன்ன காரணம் நாங்கள் பசுவைப் பாதுகாப்பவர்கள் என்றும் இந்த மேய்ச்சல் பழங்குடி மக்கள் இந்த மாடுகளை இறைச்சிக்காக வேறுபகுதிகளுக்கு ஓட்டி செல்கிறார்கள் என்று குற்றம்சாட்டியுள்ளனர்

சூழலியல் புரிதலற்ற இந்த மடையர்களால் (Gau Rakshak) ஒவ்வொவொரு வருடம் ஏப்ரல் மாதங்களிலும் நடக்கும் இந்தப் பருவகால மேய்ச்சலுக்காக குஜ்ஜர் இன மக்கள் செல்லும் பொது அவர்களுக்குக் காவல் துறைப் பாதுகாப்பு வழங்கும் அளவிற்கு இன்றைய மேய்ச்சல் சூழலானது இந்தியாவெங்கும் மோசமாக மற்றும் புரிதலற்றும் காணப்படுகிறது.

இந்தியா போன்ற மேய்ச்சல் பன்மைத்துவ இடங்களில் வாழும் மனிதர்களும் பன்மையானதாகவே இருப்பார்கள். அதுவே சூழலியல் நமக்களிதிருக்கும் தலையாய பண்பு அதைத் தவிர்த்து விட்டு எல்லாம் ஒற்றைக் தன்மையாக மாற்றும் நோக்கம் என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல சுற்றுச்சூழலுக்கும் எதிரானதாகும்.

புற்கள் நிறைந்த மேய்ச்சல் நிலமானது நமக்குக் கற்றுக்கொடுப்பதென்பது தற்சார்பு வாழ்நிலையும், வளங்களில் சமத்துவத்தையும் எல்லாவற்றிக்கும் மேலாகச் சகிப்புதன்மையையும். இந்த மேய்ச்சல் நிலத்தைப் பாதுகாப்பது என்பது ஒட்டுமொத்த இந்தியாவையும் காப்பாற்றுவதுதான்.

உசாத்துணை நூல்கள்

1. பாமயன். 2019. உணவு என்பது நிலத்தோடு நீரே. சென்னை, தமிழினி.
2. கிருஷ்ணமூர்த்தி கு.வி. 2007. தமிழரும் தாவரமும். திருச்சிராப்பள்ளி: பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
3. பக்தவச்சல பாரதி. 2021. சங்ககாலத் தமிழர் உணவு. நாகர்கோயில், காலச்சுவடு.
4. கருணாகரன், சா. 2022 ஆயர்கள் - வரலாற்றுப் பார்வை, தடாகம் வெளியீடு.
5. David Arnold and Ramchandra Guha, 1995, Nature, Culture, Imperialism: Essays on the Environmental History of South Asia. Delhi: Oxford University Press
6. Madhav Gadgil and Ramachandra Guha, 1992 The fissured land: An ecological history of India, Oxford University Press, Delhi.

தற்சார்பை நோக்கிய ஊரக உள்ளாட்சிகள்

முனைவர் க.பழனித்துரை
gpalanithurai@gmail.com

இந்திய நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் 3360 சமூகமாக தனித்தனி அடையாளங்களுடன் இயற்கையுடன் இயைந்து ஒற்றுமையாக வாழ்ந்து வந்தனர் என்பதுதான் மானுடவியலாளர்கள் இந்திய சமூகத்தைப் பற்றிக் கூறும் கருத்து. இந்தியாவில் மன்னர்கள் காலத்தில்கூட சமூகங்கள் தான் தங்களை ஆளுகை செய்து கொண்டிருந்தன என்பதையும் மானுடவியலாளர்கள் கூறுகின்றனர். எனவே தான் இந்தியாவின் முகமாக இருப்பது கிராமம். கிராமம் சார்ந்த வாழ்வியல். இந்த வாழ்வியல் முறையில் மிக உயர்ந்த வாழ்க்கைக்கான விழுமியங்கள் இருந்துள்ளன என்பதும் வரலாறு கூறும் செய்தி. காலப்போக்கில் அடிமைப்பட்டுப்போன சமூகங்கள் தன் சுயத்தை இழந்து திரிபு பட்டு வாழ்வியல் அடிமைத்தனத்தில் அதன் அடிப்படையை இழந்த நிலையில்தான் நாடு சுதந்திரம் அடைந்தது.

சுதந்திரம் அடைந்த நாடு எப்படிக் கட்டமைக்கப்படல் வேண்டும் என்று சமூகத்திற்கு வழிகாட்டிய நம் முன்னோர்கள் கனவு கண்டனர். அதில் ஒன்று இந்திய நிலப்பரப்பில் உயர்ந்த நாகரீக அடையாளங்களுடன் வாழ்ந்த மக்களின் நாகரீகத்தை, கலாச்சாரத்தை, அறிவியலை, பொருளாதாரத்தை, விவசாயத்தை, ஆன்மீகத்தை, தொழில் நுட்பத்தை, இலக்கியத்தை, இசையை என ஒட்டு மொத்த வாழ்வியலை மீட்டெடுத்து, நவீனப்படுத்தி, ஒரு உன்னத வாழ்வியலைக் கட்டமைக்க கனவு கண்டனர். அந்தக் கனவை நனவாக்க பலர் செயல்த் திட்டங்களைத் தீட்டினார்கள். அதில் ஒன்றுதான் காந்தியின் கிராமிய மேம்பாடு. அந்த கிராமிய மேம்பாடு என்பது ஒரு சித்தாந்தம் அல்ல. அது ஒரு வாழ்வியல் நெறி. அதுதான் இயற்கையோடு வாழ்வது, தேவைக்கு வாழ்வது, உயர்குலம் காக்க வாழ்வது, சிக்கனமாய் வாழ்வது, கருணையும் அன்பையும் கொண்டு அனைவருக்குமான வாழ்வைக் கட்டமைப்பது என பல விழுமியங்களை வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு வாழ்வது.

அந்த வாழ்வியல் நெறியைக் கடைப்பிடித்து மக்கள் உருவாக்கும் கிராமங்களே கிராமியமாகும். இதுவும் ஒரு கனவுதான். இதற்கு மக்களைத் தயார் செய்ய வேண்டும். எப்படி சுதந்திரத்திற்கு மக்களைத் தயார் செய்தார்களோ அப்படி புதிய வாழ்வை சுதந்திர இந்தியாவில் கட்டமைக்க மக்களைத் தயார் செய்யும் பணி பிரதானப் பணியாகப் பார்க்கப்பட்டது. இதற்கான ஒரு செயல் திட்டம்தான் பஞ்சாயத்து ராஜ் என்று காந்தி முழங்கியது. ஒவ்வொரு கிராமத்தையும் குட்டிக் குடியரசாக உருவாக்கி அவைகளின்மேல் இந்திய நாட்டை கட்டுதலாகும். அதாவது 2,50,000 குடியரசுகளை இந்தியாவில் உருவாக்கி இந்திய நாடு இயங்குவது. ஆனால் அதை பலமாக எதிர்த்த டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் கிராமங்கள் மூடப்பழக்க வழக்கத்தில் தோய்ந்துபோய் சாதியத்தில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இந்தச் சூழலில் இப்படி ஒரு அதிகார அமைப்புக்களை அடித்தளத்தில் வலுவாகக் கட்டினால், தாழ்த்தப்பட்ட பட்டியலின மக்கள் இன்னும் தாழ்நிலைக்குச் சென்று விடுவார்கள். எனவே ஒரு தேசிய அரசாங்கம் வலுவாகக் கட்டமைக்கப்பட்டு அரசாங்கத்தின் மூலம் சமத்துவத்தையும் சமூக நீதியையும் நிலைநாட்டி மக்களை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என கடுமையாக வாதிட்டு,

வலுவான அரசாங்க கட்டமைப்பை உருவாக்க நேருவை தன் வயப்படுத்தி, வெள்ளைய அரசாங்கம் உருவாக்கி வைத்திருந்த ஆளுகைக் கட்டமைப்பை, அரசுக் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தி விட்டனர் இந்திய அரசமைப்புச் சாசனத்தின் மூலம்.

இதன் விளைவு அரசாங்கம் பெரிதானது. பொறுப்புமிக்க குடிமக்களை உருவாக்கி தங்கள் வாழ்வின் மேம்பாட்டுக்கு பொறுப்பேற்க வைக்க வேண்டியவர்களை அரசைச் சார்ந்து வாழும் பயனாளியாகவும், மனுதாரராகவும் தயாரித்து விட்டன அரசு நிறுவனங்கள். அரசாங்கம் மக்களின் வாழ்வுக்கு பொறுப்பேற்பதாக அறிவித்து அளவில்லாத் திட்டங்களை தலைநகரங்களிலிருந்து மக்களை மேம்படுத்த முயன்றது. இதன் விளைவினை ஆராய்ந்து பார்க்கும்போது எந்த நோக்கத்திற்காகச் சட்டங்களும் திட்டங்களும் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டனவோ, அந்த நோக்கங்கள் நிறைவேறாது, கட்டமைப்புக்கள் மட்டுமே சாதனையாக பார்க்க முடிந்ததே தவிர, கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை தரமும் உயரவில்லை, பொருளாதாரமும் மேம்படவில்லை, அவர்களின் உயர்ந்த வாழ்வியலும் மீட்டெடுக்கப்படவில்லை, சமூக நீதியும் நிலைநாட்டப்படவில்லை, மானுட வாழ்வுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் செய்து கொடுக்கவும் இயலவில்லை. ஒட்டு மொத்தத்தில் காந்தி கண்ட கிராம ராஜ்யத்தை நோக்கியும் கிராமங்கள் பயணிக்கவில்லை, டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார் கண்ட கனவாகிய அரசாங்கத்தின் மூலம் சமூக நீதியை கிராமங்களில் நிலைநாட்டி அறிவியல் பூர்வமாக ஒரு வாழ்க்கை முறையை மேற்கத்திய முறையில் கிராம மக்களிடம் கட்டமைக்க வழிவகை செய்ய வேண்டும் என்ற திட்டமும் நடைபெறவில்லை. கிராம மேம்பாடு என்பதை சாலைகள் போடுவதையும், குடிநீர் தருவதையும், தெருவிளக்குப் போடுவதையும், சிறு பாலங்கள் கட்டுவதையும், கழிவுநீர்க் கால்வாய் கட்டுவதையும் பிரதானப்படுத்தி அரசு செயல்பட்டதேயன்றி, கிராமப் பொருளாதாரத்தை கட்டமைக்க, கிராமத் தற்சார்பு வாழ்வை கட்டமைக்கத் தேவையான திட்டங்களையோ, கருத்தியலையோ உருவாக்கி, மக்களை அதில் பங்குபெற வைக்க எந்த பெரும் நடவடிக்கையும் அரசால் முன்னெடுக்கப்படவில்லை. இதன் விளைவுதான் விவசாய உற்பத்தி வளர்ந்து விவசாயி வீழ்ந்தார்கள், கிராமப் பொருளாதாரம் சிதிலமடைந்தது. வாழ்வியல் என்பது கிராமிய வாழ்வியலாக இல்லாமல் நகர, நவீன, மேற்கத்திய வாழ்க்கைமுறையை கிராமத்தில் கிராம மக்களே வாழத் தொடங்கி, கிராமியத்தின் அடிப்படை அடையாளங்களை தொலைத்து விட்டனர் கிராம மக்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்து முப்பத்து ஐந்தாண்டை கடந்த நிலையில் கிராமங்களின் நிலை என்ன என்று ஆய்ந்தபோது கிராமங்கள் அரசுத்துறைகளின் கையில் இருந்தன. மக்கள் அரசுத்துறைகளின் திட்டங்களுக்கு கனவுகளுக்கு செயல்பட தயாரிக்கப்பட்டனரேயன்றி கிராம மக்களின் தேவைகளுக்கோ, உணர்வுகளுக்கோ, கனவுகளுக்கோ எந்தவித முக்கியத்துவமும் இல்லாது, ஒரு பயனாளிக் கூட்டமாக மக்கள் வைக்கப்பட்டிருந்தனர். கிராமங்களில் மக்கள் மேய்க்கப்பட்டனரேயன்றி, மதிப்புமிக்க மாண்புமிக்க குடிமக்களாக வாழ வைக்கவில்லை அரசாங்கம். கிராமத்து மக்களின் கருத்துக்களுக்கு எந்த இடத்திலும் மதிப்போ, மரியாதையையோ எதிர்பார்க்க இயலவில்லை.

அந்தச் சூழலை மாற்றியமைக்க ஒரு புதிய கருத்தாடலை உருவாக்கினார் ராஜிவ்காந்தி. எந்த ஒரு நாட்டிலும், சமூகத்திலும் சமூகமும் மக்களின் பங்கேற்பு இல்லாமல் மேம்பாடு நடைபெறாது. மேம்பாடு என்ற பெயரில் கட்டுமானங்கள் நடைபேறுமேயொழிய வாழ்வியல் மாற்றங்கள் நடைபெறாது. மக்களின் பங்கேற்பு என்பது மக்கள் கூடுவது அல்ல மக்கள் பொறுப்பேற்பது. இந்தியாவில் சுதந்திரம்

அடைந்ததிலிருந்து சமூக மேம்பாட்டுப் பணிகளில் பங்கேற்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், மக்களை அதிகாரமற்றவர்களாக வைத்துக்கொண்டு, "நாங்கள் ஆளுவோம் நீங்கள் பங்கேற்க வேண்டும்" என்றால் மக்கள் எப்படி வருவார்கள் என்ற கேள்விக்கு விடை தரும் விதமாக, மக்களே தங்களுக்கான ஒரு அரசாங்கத்தைக் கட்டமைத்துக் கொண்டு, மக்களை அதிகாரப்படுத்தி ஒரு குட்டிக் குடியரசை ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்திலும் உருவாக்கிக் கொள்ளட்டும் என அரசமைப்புச் சாசனத்தையே திருத்திட முனைந்தார். ஆனால் அது தோல்வியில் முடிந்தது. அதன் பிறகு அமைந்த சிறுபான்மை அரசு அரசமைப்புச் சாசனத்தைத் திருத்தி பகுதி 9 மற்றம் 9யு யில் ஒரு உள்ளாட்சி அரசாங்கத்தை உருவாக்கியது. இதன்பின் உள்ளாட்சி என்பது அரசாங்கமானது, நிலைத்த நீடித்த தன்மையை மத்திய மாநில அரசுகள்போல் பெற்றுவிட்டது. இருந்தும் இந்தக் கருத்தாடல் இன்றுவரை மக்களைச் சென்று அடையவில்லை.

இந்த புதிய உள்ளாட்சி அரசாங்கம் மத்திய அரசுகளுக்கு ஏவல் செய்யும் ஒரு முகமை அல்ல. இது ஒரு அரசமைப்புச் சாசனத்தை உள்வாங்கிய மாநிலச் சட்டத்தின் மூலம் அதிகாரம் படைத்த அரசாக உருவானது. இந்த அரசாங்கம் பொருளாதார மேம்பாட்டிற்கும், சமூக நீதிக்கும், சமத்துவத்திற்கும், சமூக மேம்பாட்டிற்கும், மக்கள் பங்கேற்போடு ஒரு திட்டத்தை சட்டபூர்வமாக உருவாக்கி ஒரு தற்சார்புக் கிராமத்தையும் ஒரு குட்டிக் குடியரசை உருவாக்கும் வல்லமை கொண்டது. இதை அரசமைப்புச் சாசனம் உறுதி செய்துள்ளது. கிராமப் பொருளாதாரம் அடிப்படையில் விவசாயம், விவசாயம் சார்ந்த தொழில்கள், குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், ஆடுமாடு வளர்த்தல் போன்றவற்றை மையப்படுத்தி உருவாகும். ஒரு கிராமம் தன்னை முற்றிலுமாக மாற்றிக்கொள்ள வேண்டும் என நினைத்தால் அதை மாற்றிக்கொள்ளத் தேவையான அனைத்து வாய்ப்புக்களும் இந்த புதிய சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயம், ஆடுமாடு வளர்ப்பு, பசுமை காத்தல், இயற்கை வளம் காத்தல், பொதுமை பேணுதல் என அனைத்தையும் செய்திட வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு கிராமக் குடியரசையும், தற்சார்பு வாழ்க்கையையும் உருவாக்கிட முடியும் இன்றுள்ள சட்டங்களைப் பயன்படுத்தி. சட்டம் தருகின்ற அதிகாரங்களை கைக்கொள்ளத் திறன்தான் நம் தலைவர்களுக்கும், மக்களுக்கும் வேண்டும்.

கிராமங்களில் உள்ள பொதுச்சொத்துக்கள், புறம்போக்கு நிலங்கள் அனைத்தையும் எப்படி பாதுகாக்க வேண்டும், எப்படி மேம்படுத்தி அவைகளிலிருந்து உள்ளாட்சிக்கு வருமானம் ஈட்ட முடியும் என்பதற்கெல்லாம் வழிவகை காண விதிகளையும், அரசு ஆணைகளையும் தமிழக அரசு பிறப்பித்துள்ளது. தமிழக அரசின் ஊரக உள்ளாட்சிச் சட்டம் 1994ஐ நடைமுறைப்படுத்த தமிழக அரசு விதிகள் மூலமும், அரசு ஆணைகள் மூலமும் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் அடிப்படையில் அரசாணை எண் 317 ஊரக வளர்ச்சி (4) துறை நாள் 6.12.2000 விதி எண் 67 மூலம் ரயத்வாரி பகுதிகளில் புறம்போக்கு நிலங்களை உபயோகப்படுத்துவதை கட்டுப்படுத்துதல், பராமரித்தல், பார்வையிடுதல் இவைகளுக்கான அதிகாரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் முதலில் புறம்போக்கு நிலங்களை கண்டுபிடிக்க வேண்டும். அடுத்து அவைகளின் வகைகளைக் கண்டறிய வேண்டும்.

அவைகளை எப்படியெல்லாம் பயன்படுத்த முடியும் பொதுமக்கள் மேம்பாட்டிற்காக, அதில் உள்ள ஆக்கிரமிப்புக்களை எப்படி அகற்ற வேண்டும், அந்த நிலங்களை வேறு பயன்பாட்டிறகு பயன்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எப்படி அனுமதி பெற வேண்டும் என்கின்ற வழிகாட்டு நெறிமுறைகளைப் புரிந்து கொண்டு உள்ளாட்சிகள்

செயல்பட்டால், கிராமத்தில் உள்ள புறம்போக்கு நிலத்தை மிகவும் பயனுள்ளதாகவும், உள்ளாட்சிக்கு வருமானம் உள்ளதாகவும் மாற்றிவிடலாம். மேய்ச்சல் நிலமாக உருவாக்கலாம், வனங்களாக உருவாக்கலாம், பொது மாட்டுத் தொழுவங்களை உருவாக்கலாம், காய்கறித் தோட்டம் போட சுய உதவிக்குழுப் பெண்களுக்குக் கொடுக்கலாம். அதற்கு முதலில் சட்டப்பிரிவு 134 உட்பிரிவு (2)ல் குறிப்பிட்ட புறம்போக்கு நிலம் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அந்த நிலங்கள் அதற்காக பயன்படவில்லை என்றால், அதை எதற்காக பயன்படுத்த முடியும் என்பதை அறிந்து மக்களின் கருத்தறிந்து மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி பெற்று மாற்றி அமைத்துக் கொள்ளலாம். இதற்கான விளக்கத்தை கிராம ஊராட்சிச் சட்டம் 134 உட்பிரிவு 4ல் தரப்பட்டுள்ளது. இதைப்பற்றிய புரிதல் நம் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வேண்டும்.

இந்தப் பகுதியை படித்து புரிந்து கொண்டு கால்நடைத் தொழுவங்கள் அமைக்கலாம், களங்கள் சுடுகாடு, இடுகாடு, பசுமைத் தோட்டம், காய்கறித் தோட்டம், குருங்காடுகள், குறிப்பிட்ட மரம் வளர்க்கும் தோட்டங்கள் அமைக்க வழிவகை செய்து கொள்ளலாம். இதிலிருந்து வருமானத்தையும் உள்ளாட்சிக்குப் பெருக்கலாம். சட்டப்பிரிவு 242 உட்பிரிவு (2) கூறு (ஔஔஔ)ன் படி அந்தப் புறம்போக்கு நிலங்களில் மரம் வளர்த்து, குத்தகைக்குக் கொடுக்கலாம், மரங்களை வெட்டி விற்கலாம், மரங்களை உள்ளாட்சிகள் நட்டு வளர்க்கலாம். புறம்போக்கில் உள்ள ஆக்கிரமிப்புக்களையும் அகற்றலாம்.

இதேபோல் ஜமீன் பகுதிகளில் உள்ள சமூக நிலங்களை ஊராட்சிகள் எப்படி முறைப்படுத்தி பயன்படுத்த முடியும் என்பதை விதி எண் 68 அரசாணை (நிலை) எண் 273 ஊரக வளர்ச்சித் துறை நாள் 28.12.99ல் விளக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு சமூகச் சொத்துக்கள் பெரும்பான்மை ஆக்கிரமிப்பில்தான் உள்ளன. அவைகளை உள்ளாட்சிகள் எப்படி பொதுமக்களுக்காக பயன்படுத்த முடியும் என்பதையும் குறிப்பாக கால்நடைப் பட்டிகளுக்கு எப்படி பயன்படுத்த முடியும் என்பதையும் விளக்கியுள்ளது. இந்தச் சட்டங்கள் விதிகள் பற்றி எந்தப்புரிதலும் இல்லாத காரணத்தால் இதில் எவரும் கவனம் செலுத்துவதில்லை.

அடுத்து ஊராட்சிகள் சட்டம் 1994ல் பிரிவு 134(2) கிராம ஊராட்சி நிர்ணயிக்கும் கட்டுப்பாடுகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு மேச்சல் தரை புறம்போக்கை பயன்படுத்த அனுமதி அளிக்கிறது. கால்நடைத் தொழுவங்கள் அமைத்து பராமரிக்கவும் அதிகாரம் அளித்துள்ளது. இவைகள் போக இதர பொது நிலங்களும் ஊராட்சிக்குள் இருக்கின்றன. அவைகளையும் ஊராட்சிகள் கண்டுபிடித்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து அவைகளை பஞ்சாயத்துப் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும். இதற்கு கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து கிராமப் பஞ்சாயத்து வரைபடம் வாங்கி, அவரிடமிருந்து நிலங்களின் வகைப்பாடுகளைத் தெரிந்து கொண்டு ஒவ்வொரு பஞ்சாயத்தும் பட்டியல் தயாரிக்க வேண்டும். அவைகளை பராமரிக்க வேண்டும். சில தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்கள் அதுவாகவே கிராம ஊராட்சிக்கு வந்தடையாது. பல நிலங்கள் பல அரசுத் துறைகள் பெயரில் அவர்கள் பொறுப்பில் இருக்கும். அவற்றை பஞ்சாயத்துத் தலைவர்கள் கண்டுபிடித்து அவைகளை பஞ்சாயத்தின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திட வேண்டும். இந்த நிலங்களை பொதுப் பயன்பாட்டிற்கு, அதாவது பொதுத் தொழுவங்கள் அமைக்க, மேச்சல் பகுதியாக பராமரிக்க பஞ்சாயத்து நடவடிக்கைகளை எடுக்கலாம். அதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வளவு அதிகாரங்கள் இருந்தும் நம் பஞ்சாயத்துத் தலைவர்கள் பெரும்பான்மையோர் இவைகளைப் பயன்படுத்தி கிராமத்தை பசுமையாக்குவதில்லை. பொதுச் சொத்துக்களை மீட்பதில்லை. ஆனால் சிலர் மட்டும் மிகப்பெரிய



போராட்டத்திற்குப்பின் பல கோடிக்கணக்கான சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி பஞ்சாயத்தின் சொத்துக்களை கூட்டியுள்ளனர்.

புறம்போக்கு நிலம், பொதுச் சொத்துக்கள் என்றாலே வருவாய்த்துறைதான் அதன் ஆணிவேர். பெரும்பான்மையான பஞ்சாயத்துத் தலைவர்கள் அதைத் தொட துணிவதில்லை. அந்த நிர்வாகம் என்பது புரிதலுடன் செயல்பட்டால்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். இதற்கான துணிவு, புரிதல் உள்ளாட்சித் தலைவர்களிடம் இல்லை என்பதைத்தான் களத்தில் காணமுடிகிறது. இந்தச் சூழலை சரிசெய்ய கிராமத்தில் உள்ள பொதுக்கருத்தாளர்கள், விவசாயிகள் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இதற்கான ஊக்கத்தையும் புரிதலையும் அளித்து செயல்பட வைப்பதன் மூலம்தான் தற்சார்பு வாழ்க்கைக்கான செயல்பாடுகளுக்குத் தேவையான பொதுச் சொத்துக்களை மீட்டெடுக்க முடியும்.

மேய்ச்சல் நிலச் சிக்கலின் தோற்றுவாய்

எழுத்தாளர் ஆர்.முத்துநாகு
rmnagu@gmail.com

ஆடு மாடு மேய்தல், அவைகளைக் கவர்தல் குறித்துச் சங்க இலக்கியத்தில் ‘திருபோர்’ என்று குறிப்பிடுகிறது. இந்திய ஒன்றிய காவியமான மகாபாரதத்தில் மாடு கவர்தல் குறித்துப் போர் வடிவமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பக்தி இலக்கியமான கோதை நாச்சியார் பாசுரத்தில் அழமாகப் பதிவுகள் உள்ளன. நாயக்கர் ஆட்சிக் காலத்தில் ‘சிந்து’ வடிவிலான பாடல்கள், பள்ளுப்பாடல்களில் மாடுகளின் குணம்-குறி, சுழி-சுத்தம் குறித்த வாகட நூல்கள் அதிகம் வெளி வந்தன. இதில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தொகுத்து வெளியிட்ட காட்டமராசன் கதைப்பாடல் முக்கியமானது. பிரிட்டீஷ் ஆட்சியாளர்கள் ஆடு, மாடு, விலங்குகளின் குணம்-வகைப்பாடு, வாழ்விடம் குறித்த கோட்டோவிய நூல் ஆங்கில நூல்களில் முன்னோடி நூலாகக் கருத்தப்படுகிறது. தொழு (உரம்) மாடு, பொதி மாடு, வண்டி மாடு, உழவு மாடு, பொலிகாளை, மஞ்சுவிரட்டு (ஜல்லி) மாடு, கறவை மாடு வாழ்வியலோடு கலந்தவை எனக் குறிப்பிடும் வகையில் வகைப்படுத்தியுள்ளார்கள்.

தமிழர் உணவில் நீராகாரத்தை விட, நீர்மோர் மக்களோடு கலந்த உணவாக இருந்தது. பசும்பால், அதன் கழிவான கோமியம், சாணம், கோரோசனை, தோல், கொம்பு இவைகள் தமிழரின் அறிவான சித்தமருத்துவத்தில் மிக முக்கியப் பங்கு வகிக்கிறது. இதில் எருவாட்டி என்ற தொழில் நுட்பத்தை ஆசிய கண்டம் தாண்டி வேறு எங்கும் இல்லை எப்பதே குறிப்பிடப்படும்படியான செய்தி. எந்திரமயமானதால், கறவை மாடுகள் மட்டுமே மாடுகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டன.

நீக்கமற நிறைந்திருந்த மாடுகள் அதன் பயன்பாட்டைப் பிரித்தவர்கள் இந்தியாவை ஆண்ட பிரிட்டீஷார். பாம்பு சாகாமல் கம்பும் உடையாது போல் பிரிட்டீஷ் அரசு மக்களின் அன்றாட தேவைக்காக இருந்த வனத்தை மக்களிடமிருந்து பிரித்து வனச்சட்டம் கொண்டு வந்தனர். இது குறித்த விவாததை ஒன்னரை நூற்றாண்டு காலமாக மேலோட்டமாக பேசுகிறார்களே தவிர அதன் மூல வேரைத் தேடி யாரும் பொது வெளியில் பேசவில்லை என்பது பெருங்கேள்வியாக உள்ளது.

பிரிட்டீஷார் ஏன்? வனச்சட்டம் கொண்டு வந்தார்கள்

பிரிட்டீஷ் ஆட்சிக்கு முன்பு வரை ஆட்சியாளர்களாக இருந்த பாளையப்பட்டு ஆட்சியில் கோயில்கள், மடம், சத்திரம், தருமம், அரண்மனை, அரசு நிர்வாகிகள், வணிகர்கள் வணிகப் பொருள்களைச் சேமிக்க மட்டுமே காரை வீடுகள் இருந்தன. மருத்துவத்திற்காகவும் தோல் பதனிடவும் பயன்படும் கடுக்காய், மரங்கள் வனத்திலிருந்து கொண்டுவரப்பட்டு வீடுகள் கட்டப்பட்டன. காரை வீடு கட்ட குடிமக்களுக்கு அனுமதி தேவை என்பதால் மண் சுவர், கூரை வீடுகளே. இவர்கள் தோட்டம் காடுகளில் கட்டாப்புகளில் வளர்த்துள்ள மரங்களை நிலை, கதவுகளுக்கும், வேளாண்மைக் கருவிகளைச் செய்திடவும் பயன்படுத்திக்கொண்டனர். 1854 பிரிட்டீஷ் அரசு கணக்குப்படி ‘மெட்ராஸ் பிரஸிடென்ஜியில், கடல் வணிக நகரங்கள் தவிர்த்துச் சுமார் நாற்பதாயிரம் காரைவீடுகளும், சிறிய பெரிய அரண்மனைகள் சுமார் எட்டாயிரம் இருந்ததாகக்

குறிப்பிடுகிறது. அன்றைய காலத்தில் உணவு சமைக்க, நெல், சிறு தானியம் அவிக்க வேளாண்மை செய்து முடிந்த பருத்தி கட்டைகள் சோள தட்டைகளையும், குப்பை கூளங்களையும், காய்ந்த கட்டாப்பில் இருந்த சுள்ளிகளை விறகுகளைப் பயன்படுத்தினார்கள். வனத்தில் மிளகு, ஏலம், கிராம்பு, இஞ்சி இவைகளே பிரதான வேளாண்மை விளைபொருள்களாக இருந்தன. இது தவிர தேன் சேகரிப்பு, விளக்கமார், அவ்வப்போது உணவிற்காக வேட்டையாடுதல் மட்டுமே நடைபெற்றது. ஆனால் பாளையப்பட்டுப் படைவீரர்கள் விலங்குகளுடன் போரிட்டு அவைகளை வேட்டையாடி கொரில்லாப் பயிற்சி எடுக்கிறார்கள். இவர்கள் கம்பெனி படைகளைத் தாக்கி விட்டு வனத்திற்குள் மறைந்து கொள்கிறார்கள். இவர்களை நமது படைகள் எதிர்கொள்ள முடியாமல் உயிர் இழப்பையும் மனபலத்தையும் இழக்கிறார்கள். வணிகர்களை கொள்ளையிடுகிறார்கள் இதனால் பெருத்த உயிர்ச் சேதமும் அரசிற்கு வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. பாளையப்பட்டுகள் நமது கட்டுப்பாட்டுக்குள் வந்தாலும் அவர்கள் படையில் இருந்தவர்கள் தனிப்படைப்படையாகச் செயல்படுகிறார்கள். இப்படைகளுக்குப் பிரெஞ்ச் கிழக்கிந்திய கம்பெனி மறைமுகமாக உதவுகிறது’ என, பிரிட்டீஷார் அதிகாரிகள் அறிக்கை தயாரித்து இங்கிலாந்திற்கு அனுப்பினார்கள். கிழக்கு இந்தியன் பிரிட்டீஷ் கம்பெனி இங்கிலாந்து அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 1857ல் பிரிட்டீஷ் அரசு இந்தியாவில் உருவானது. வனப்பகுதியில் மறைந்துள்ள படைகளை ஒடுக்கிடப் பாளையப்பட்டுகள் கட்டுப்பாட்டிலிருந்த வனத்தைப் பிரிட்டீஷ் அரசுக்குக் கீழ் கொண்டு வந்தது. 1858-ல் வனச்சட்டம் கொண்டு வந்தார்கள். இதனால் மக்கள் சொத்தாக இருந்த வனம் அரசுக்கு மட்டுமே என்ற நிலை உருவானது.

நிலக் கணக்கெடுப்பு (state land record) நடத்தினார்கள். இதில் நீர் நிலை, ஆறு வனம் வனத்தை ஒட்டிய புறம்போக்கு மேய்ச்சல் தரிசு, வருவாய்த்துறை நிலம், வனம் நிலம் எவை, எவை எனப் பாகுபாடு செய்து வன நிலம் தனித்துப் பதிவு செய்யப்பட்டு வருவாய் அதிகமாக உள்ள வனங்களைப் பிரிட்டீஷார் நேரடி கட்டுப்பாட்டிலும், மற்றவை ஜமீன்தார்களாகக்கப்பட்ட பாளையப்பட்டுத் தலைவர்கள் கட்டுப்பாட்டிலும் விட்டனர். பிரிட்டீஷாருடன் போரிட்டு அழிந்த பாளைப்பட்டு வனம் நிலம் தரைப்பகுதியில் இருந்தால், அவைகளை வேளாண்மை நிலங்களாக மாற்றிட இரயத்வாரி நிலங்களாக மாற்றப்பட்டது. ஆண்டாண்டு காலமாகப் பாளையப்பட்டுகளுக்கு வாரம், கீழ்வாரம், மேல்வாரம், வருட குத்தகை என உழுத உழுகுடிகளுக்கு இரயத்வாரி மூலம் நேரடியாக நிலம் கிடைத்தது. இங்கிருந்து தான் கால்நடைகள் மேய்ச்சல் சிக்கல் துவங்கியது.

தொழு மாடு

எருக்காகவே இந்த மாடுகள் மேய்த்திடப் பாளையப்பட்டுச் சட்டங்கள் அனுமதித்தது. இந்தத் தொழு மாடுகள் குறைந்தது ஆறு முதல் எட்டு மாத காலம் வனத்தில் தொழு அமைத்து மேய்ப்பார்கள். இம்மாடுகள் மேய்ச்சல் நிலங்கள் தொழு அமைத்திட மாடுகளை உண்ணும் விலங்குகள் நடமாட்டம் குறைவாக இருக்கும் இடங்களைத் தேர்வு அங்குள்ள பாறைகளில் மாடு குழம்பு தடம், மனிதர்கள் தடம் பதித்து வைத்திருப்பார்கள். தொழுவம் அமைந்த இடங்களில் குவிந்திடும் சாணியை வண்டியில் அள்ளித் தேவையான பகுதியிக்கு அனுப்பி வைத்து வேளாண்மையைப் பெருக்கிறார்கள். தரைப்பகுதி அதிகமாக உள்ள பகுதியில் தொழு மாடுகள் தரையில் அமைந்த வனத்தில் மேய்ச்சாலும் வேளாண்மை நிலத்தில் கிடை அமர்த்திடுவார்கள். புரட்டாசி முதல் மார்கழி வரை வேளாண்மை நீக்கமற நடக்கும் காலங்களில் வனத்தினை ஒட்டியுள்ள பகுதியில் கிடைமாடுகள் மேய்ச்சலுக்குக் கொண்டு செல்வார்கள். இதற்காக பாளையப்பட்டுத்

தலைவர்கள் இடங்களைத் தேர்வு செய்து காவல்காரர்களை நியமித்தனர். கிடைத்தொழு மாடுகளிலிருந்து நல்ல சாதி கன்றுகளைத் தேர்வு செய்து அவைகளை வேளாண்மை குடிகளுக்கும், வியாபாரிகளுக்கு வண்டி, பொதி மாடுகளுக்கு விற்பனை செய்வார்கள். விற்பனை செய்ததில் ஐந்தில் ஒரு பங்கினைப் பாளையபட்டு நிர்வாகத்திற்கு செலுத்தினார்கள். வனச்சட்டம் கொண்டு வந்ததால் வனத்திற்குள் மேய்ச்சலுக்கு கட்டுப்பாடு விதித்து, மேய்ச்சலுக்குச் செல்லும் ஒரு மாட்டு இவ்வளவு பணம் என வசூல் செய்ததுடன் 'வனத்திற்குள் அரசுக்கு எதிரான படைவீர்கள் இருந்தால் தகவல் சொல்ல வேண்டும்' எனக் கடுமை காட்டினார்கள். இதனால் 'யார் பொல்லாப்புக்கு' ஆளாவது எனத்தெரியாததால் வனத்துள் தொழு அமைப்பை தவிர்க்க துவங்கியதாக அரவக்குறிச்சி, உடுமலைப்பேட்டை-தளி பகுதி தொழு மாடு வைத்திருக்கும் கம்பளத்து நாயக்கர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தங்களது முன்னோர் சொன்ன தகவலைக் கதையாகப் பாடல்களாகத் தங்களது சமூக விழாக்களில் பாடி வருகிறார்கள்.

சிவகங்கை, அரியலூர், உடையார்பாளையம் பாளையப்பட்டு, வேதாரணயம், திருநெல்வேலி, சேலம், வங்கனூர் (திருத்தனி) எல்லையில் உப்பு வியாபாரிகளாக குறவர், பறையர் குலத்தினருக்குப் பொதிமாடுகளை விற்பனை செய்யக்கூடாது எனப் பிரிட்டிஷார் போட்ட வாய்மொழி உத்தரவினை மீறியதாக கசயடியும், ஜமீன்தார்கள் முன்னிலையில் ஊர்மந்தையில் நிற்கவைக்கும் தண்டனையுடன் கோயிலுக்கு விளக்கு எரிக்க நெய் வழங்கும் தண்டனையும் கொடுக்கப்பட்டதை வைத்துப்பார்க்கும் போது குற்றப்பரம்பரைச் சட்ட கொடுமையை நேரடியாக அனுபவித்த குலங்களை விடப் பெரும்பாதிப்பிற்கு உள்ளானவர்கள் மேய்ச்சல் சமூக மக்களாக இருப்பார்கள் என எண்ணத்தோன்றுகிறது.

வனத்திற்குள் இருக்கும் மேய்ச்சல் தரிசுவும் மேய்சல் சிக்கலும்

வன உயிரின சட்டத்தை 1883-ல் பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்தது. இந்தச் சட்டம் சில பகுதி மலைகளாக இருந்தாலும் சட்டத்தை வைத்து பிரிட்டிஷார் ஆடித்தீர்த்தனர் என்றே சொல்ல வேண்டும். தற்போதைய தேனி மாவட்ட வனத்தில் மேய்ச்சல் தரிசுகள் அரசு கோப்புகளில் உள்ளன. ஆனால் அந்த இடத்திற்கு மாட்டுகளை ஓட்டிச்செல்ல பாதையில்லை. இருப்பினும் வனத்திற்குள் சென்று அங்கு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பது இன்றைய செய்தி அல்லை 85 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே வனத்துறை தடுத்துள்ளது. 101 வயதைத் தொட்ட வருசநாடு அருகே உள்ள குமணந்தொழு இருளப்பன் கூறுகிறார். 'யானை, மான் செத்தால் நீங்கள் தான் இதற்குக் காரணம் என விசாரணை என்ற பெயரில் தொல்லைக் கொடுத்ததால் தொழு மாடுகளை அடிமாட்டுக்கு விற்று விட்டு, அந்தக் காசை பேங்கில் போட்டு விட்டு, ஒரு தோட்டத்தில் பண்ணைக்குப் போய்விட்டேன்' என்கிறார் அனுமந்தப்பட்டியைச் சேர்ந்த கிட்டு என்ற மாயகிருஷ்ணனும், இதே போல் கன்னிவாடி, விருப்பாச்சி, ஆயக்குடி, நெய்க்காரன்பட்டி, வேட்டைக்காரன்புதூர் போன்ற ஜமீன் எல்லையில் உள்ளதைத் தொழுமாடு மேய்ப்பவர்களின் வாக்குமூலமாக உள்ளது.

தரைப்பகுதி மேய்ச்சல் நிலமும் அரசு படை களமும்

பெரும்பான்மை மேய்ச்சல் நிலங்கள் வனத்திற்குள் இருப்பதால் வன உயிரினத்தை மாடுகள் அச்சுருத்துவதாகச் சொல்லி பல்லாண்டுகளாக அனுமதி மறுக்கப்பட்டதால் மேய்ச்சல் நிலத்தை மேய்சல்காரர்களோ, வருவாய்த்துறையோ, வனத்துறையோ கண்டறியாத நிலை உருவாகி தடமழிந்து விட்டது. இது மலைசார்ந்த பகுதியில் உள்ள

பிரச்சனை என்றால் தரைப்பகுதியில் உள்ள மேய்ச்சல் தரிசுகளைப் பிரிட்டீஷ் ஆட்சிக்காலத்தில் படைப்பிரிவினரின் பயிற்சித்தளமாகவும், வெடிபொருள்கள் சேமிப்புக் கிடங்காகவும் மாற்றப்பட்டதால் பாதுக்காக்கப்பட்ட பகுதியாக மாற்றினார்கள். சென்னை அருகே ஆவடி, திரிசூலம், இராமநாதரபுரம் கலெக்டர் அலுவலகம் அமைந்த பகுதி, இராசபாளையம், பழனி காவல்துறை பட்டாளியன் பயிற்சி மையம் இவைகள் பிரிட்டீஷ் ஆட்சியிலும், சிவகங்கை இடையபட்டி தற்போதும் ஆயுதப்படை காவலர் பயிற்சித்தளமாக மாற்றப்பட்டது. சேலம், வேலூர் பகுதியில் வெடிமருந்து கிட்டங்கியாக பிரிட்டீஷ் ஆட்சி முதல் இன்று வரை தொடர்கிறது. திருநெல்வேலி, துத்துக்குடி மாவட்ட எல்லையில் உள்ள மலையின் அடிவாரத்தில் ஏவுகணை ஆய்வு மையமும், தரைப்பகுதியில் பூச்சிக்கொள்ளி மருந்து நிறுவனத்திற்கும், ஆன்மிக கல்வி நிறுவனங்களுக்கு 99 ஆண்டு குத்தகையாகப் பிரிட்டீஷ் ஆட்சியிலே விடப்பட்டுள்ளதை வருவாய்த்துறை ‘அ’ பதிவேடுகளில் மேய்ச்சல் நிலங்கள் கோப்புகளாக உள்ளன.

தீர்வு தான் என்ன?

தரைப்பகுதியில் 99 வருட குத்தகைக்கு விடப்பட்ட குத்தகைதாரர்களான பூச்சிகொள்ளி & உர நிறுவனத்தார் வேலி அந்த நிலத்தை எப்பயன்பாடும் செய்திடாமல் வைத்துள்ளனர். இந்த இடத்தில் மாடு ஆடு மேய்க்க அனுமதிக்க அரசு முன்வரவேண்டும். காவல், இராணுவம், வான் ஆய்வுத் துறைக்கு விடப்பட்ட நிலங்களை எதுவும் செய்திட இயலாது என்பதால் அதைப்பற்றி விவாதிக்க இயலாது. ஆனால் வனத்திற்குள் மாடு தொழுவம் அமைப்பதால் என்ன சிக்கல், கேடு உள்ளது என்பதை இதுவரை பாரளுமன்றத்திலோ சட்டசபையிலோ அறிவுப்பூர்வமான பதில் இல்லை. ஆனால் நீதி மன்றம் மட்டும் எதன் அடிப்படையில் மேகமலை வனப்பகுதியில் மாடு மேய்க்கக்கூடாது என ‘வரலாற்று’த் தீர்ப்பு எழுதியது என்பது புரியாத புதிராக உள்ளது. மீண்டும் வனத்தில் தொழு அமைக்க அனுமதிக்க வேண்டும்

வனத்தில் ஓரத்தில் உள்ள ஓரக்காடுகளைப் பயன்பாட்டுகாடுகள் (buffer zone) என வனச் சட்டம் உள்ளதன் அடிப்படையில் இப்பகுதியில் தொழுவம் அமைத்து மேய்ச்சல் அனுமதித்தால் எக்கேடும் இல்லை. மாடுகளால் மலையில் உற்பத்தியாகும் தண்ணீர் கெட்டு விடும் என்ற நீதிமன்ற வாதத்தை நீதி துறைக்கு எடுத்துச்சொல்ல முடியாத ஒன்றல்லை. அதைப்போலவே தொழு மாடுகளால் வன உயிரினங்களுக்கு நோய் தாக்குதல் ஏற்படும் என்ற அச்சமும், பயமும் மனித குல அறிவினை இழிவு செய்வதுடன் உர நிறுவனங்களுக்கான வாதமே. இயற்கை வேளாண்மை எனப் பேசிவிட்டு மாடு இல்லாத தொழு உரம் எப்படி வரும் என்ற சாமானியனின் கேள்விக்குக் கோட்-சூட் போட்ட எந்த அறிவுலகப் பூசாரிகளிடமும் பதிலில்லை. ஆக….., வனத்தில் மாடு மேய்க்க அனுமதிக்க பாரளுமன்றத்தில் விவாதித்து நல்ல முடிவெடுக்க வேண்டிய காலத்தின் தேவை இதுவே.

மரம் வெட்டிகடத்தலும் வேட்டையும்

விறகு பயன்பாடு சீமைத்தண்ணீர் வந்த காலத்திலே மறையத்துவங்கி இன்று அடுப்பு சாம்பல் அறிய தலைமுறைக்குப் பிறந்து வளர்ந்து வருகிறது. அதே போல் மரங்களை வெட்டி சுமந்து கடத்திய தலைமுறை இன்று நடக்க முடியாமல் வீட்டோடு முடங்கி விட்டது. பாதிப்பேர் காலஓட்டத்தில் கரைந்து விட்டனர். கட்டுமான துறைக்கான உச்ச காலமான இந்தக் காலத்தில் மரங்கள் வைத்து வீடு கட்டுபவர்கள் எங்கே மரம் வாங்குகிறார்கள் என்பதைக் கணக்கிட வனத்துறை பலப்பட்டுள்ளது. ஆக மரம் கடத்தல்

என்பது துறையை மீறி நடப்பது என்பது வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் தவிற்க முடியாதது. அவையும் காலஓட்டத்தில் மட்டுப்படும் என்பது இயற்பியல் விதி.

வேட்டை

வன உயிரின தடுப்பு சட்டம் கொண்டு வந்து 141 ஆண்டுகளாகி விட்டன. வேட்டைத் தடுப்பினைப் படிப்படியாக வனத்துறை, காவல்துறை மூலம் நடைமுறைப்படுத்தியதால் வேட்டையாடும் கலையைக் கடந்த தலைமுறையிலே இழக்க துவங்கி தற்போது எந்த விலங்கினை எப்படி வேட்டையாட வேண்டும் என்ற அறிவு மக்களிடமிருந்து அகன்று விட்டது. தரைப்பகுதியில் உணவிற்காக முயல், காடை, கௌதாரி, குருவி, ஔவால் போன்றவையைக் கண்ணி வைத்து வேட்டையாடிய மக்கள் நடக்க இயலாத நிலையிலே உள்ளனர். வகாரியா என்ற நரிக்குறவர் சமூகத்தினர் கூட வேட்டையாடுவதை நிறுத்தி விட்டனர். மாசிக்களரிக்குப் பாரிவேட்டை மக்களின் வாழ்வியலோடு கலந்த விழாவாக இருந்ததும் அற்றுப்போய்விட்டது. தொழில் முறை வேட்டைக்காரர்களான யானை தந்தம் வேட்டையாடுபவர்களும் மிகக்குறைந்து விட்டார்கள் என்றே அரசு புள்ளி விபரம் சொல்லுகிறது. வனத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் உணவிற்காக வேட்டையாடுவது எப்போதாவது நடக்கிறது. அதுவும் கால ஓட்டத்தில் தானாக நின்று விடும் என்பதில் ஐயமில்லை. ஆக எப்படிக் கூட்டிக்கழித்துப்பார்த்தாலும் வனம் என்பது மக்களுக்கான சொத்தாக இருந்ததை மக்களிடமிருந்து அன்னிப்படுத்தி வனம் என்பது தனி நாடு என்று பிரிட்டிஷார் செய்த கோமாளித்தனமான நடவடிக்கைக்கைகள் வரலாற்றில் மட்டும் இனி இடம் பெறட்டும்.

கட்டுரைக்கு உதவிய நூல்கள்

1. வாகடம்
2. நாச்சியார் பாசுரம்
3. மகாபாரதம்
4. Indian Forest act
5. South west cattel guide,
6. Madura country gazette manual
7. Social history of Madurai nayakar period
8. Political sociology of south india 1925 -1967
9. Court system in nayakar period
10. salvation army with criminal tribes in south india
11. Criminal Classes Of The Madras Presidency
12. Criminal Tribes Act XXVII of 1871
13. The “Criminal Tribe” in India before
14. கட்டுரையாரளர் களஆய்வு
15. game animals of india
16. Hunters, Herders and Hamburgers The Past and Future of Human-Animal Relationships
17. south india cences
18. forest and wild life crimes in india.

பன்னாட்டு நோக்கில் மேய்ச்சலியம்

செ.சுந்தரேசன்
csundaresan@outlook.com

புதிய கற்காலத்தில் மனிதர்கள் செம்மறி ஆடுகள், மாடுகள், எருமைகள் மற்றும் குதிரைகள் போன்ற விலங்குகளை வளர்க்கத் தொடங்கியபோது மேய்ச்சலியம் தோன்றியது. ஆரம்பகால நாகரிகங்களான பண்டைய கிரேக்க, ரோமானியா, மெசபடோமியா, எகிப்து மற்றும் சிந்து சமவெளி நாகரிகங்களின் வளர்ச்சியில் மேய்ச்சலியம் முக்கியப் பங்கு வகித்ததற்கான அகிழ்வாராய்ச்சிக் குறிப்புகள் கிடைக்கின்றன.

மனிதன் பண்பாட்டு வளர்ச்சியின், முதல் படிக்கட்டான விவசாய நாகரிகத்திற்குச் சென்று, நிலையாக ஓரிடத்தில் வாழத் துவங்கிய பொழுது உணவிற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் அடையாளமாக மாடு, காளை, எருமை, ஆடு போன்ற கால்நடைகளை வளர்க்கத் தொடங்கியதும் பின்னர் குழுக்களின், நாடுகளின் இடையே வெற்றியின் அடையாளச் சின்னமாக ஆநிரைகளைக் கவர்ந்து செல்லுதலையும் நடைமுறைப்படுத்தினான். அன்று தொட்டு இன்றுவரை மேய்ச்சலினக் கால்நடைகளின் பாலும் இறைச்சியும் உண்ணும் உணவுகளில் முன்னுரிமை பெற்று வருகின்றன. கால்நடைகளின் கழிவுகளான சாணம் போன்றவை தொன்று தொட்டு இம்மண்ணின் வளத்தைப் பாதுகாத்து வருகின்றன.

வேளாண்மை முதல் பல்லுயிர்ப் பெருக்கம் வரை மேய்ச்சலியத்தின் தாக்கம்

அன்று தொட்டு இன்றுவரை மேய்ச்சலினக் கிடை மாடுகளின் கழிவுகள் சாணம் போன்றவை தொன்று தொட்டு இம்மண்ணின் வளத்தைப் பாதுகாத்து மண்ணில் பயிரிட்ட வேளாண்மைக்கு உரமாக மாறிவருகின்றன. வயலில் விழுந்த சாணம் பூமியின் உள்ளே பதுங்கியிருந்த வேளாண் நண்பர்களான மண்புழுக்களை வசப்படுத்தி வயலின் மேலே வரவைக்கின்றன. அந்த மண்புழுக்களை உண்ணுவதற்காக வந்த பறவைக் கூட்டங்கள் தங்களின் கழிவுகளை வெளிபடுத்தி, கால்நடைகளின் கழிவு எச்சங்களையும், மண்புழுக்களையும், விதைகளையும் கவர்ந்து சென்று பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு வித்திட்டு வருகின்றன

மேய்ச்சல் கால்நடை முறை தாவரங்களின் வளம் (fertility) விநியோகம் (distribution) மற்றும் பன்முகத்தன்மையில் (diversity of plants) பெறும் பங்கு வகிக்கின்றது. கால்நடைகளோ தங்கள் குடலில் பறவைகள் மேய்ச்சல் நிலத்தில் விட்டுச்சென்ற பல்வேறு விதைகளைத் தம் உணவோடு விழுங்கி அவற்றை அதிக தூரத்திற்குக் கொண்டு சென்று தங்களின் கழிவுகளுடன் இடம்பெயர்ந்து மீண்டும் செடிகளாக உயிர்பிக்கின்றன. அதன் பயனாக உருவாகும் தாவரங்கள் மண்ணைப் பிடிக்கிறது, நில அரிப்பைக் குறைக்கிறது, மண்ணைப் பராமரிக்கிறது, நீர் வைத்திருக்கும் திறனை எளிதாக்குகிறது மற்றும் வனவிலங்குகளுக்கு வாழ்விடத்தை வழங்குகிறது இவை அனைத்திற்கும் மூல காரணி மேய்ச்சல் கால்நடைகளே.

கால்நடைகள் வழங்கும் பொருளாதாரம்

தமிழக மேய்ச்சலினத்தின் கால்நடைகள் இவ்வாறு உயிரியல் பன்முகத்தன்மையை மேம்படுத்துகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்த செய்தி. இந்தியா முழுவதும் ஆவினங்களின் பால், தயிர், நெய், பாலாடைக்கட்டி மற்றும் ஆடு, மாடுகளின் இறைச்சி மற்றும் தோல்கள், உணவுப் பொருட்களாகவும் தோலாடைகளின் மூலப் பொருளாகவும் தொன்று தொட்டு இன்றுவரை முன்கை கொடுத்து வருகின்றன. மேய்ச்சலின மூலப்பொருட்கள் பன்னாட்டுப் பொருளாதார வளம் வேண்டி புலால் உண்ணாதவர்களையும் உற்பத்தித் துறையில் முதலீடு செய்ய வைத்து மாட்டுத்தோல், செம்மறித் தோல் மற்றும் எருமை தோலாடைகளை உற்பத்தி செய்ய வைத்துக் கோடீஸ்வரர்களாக மாற்றியுள்ளன.

மேய்ச்சலின மக்கள் படும் துன்பங்கள்

ஆனால் இந்த ஆவினச் செல்வங்களை பாதுகாக்கும் கால்நடைகள் மேய்ச்சலின மக்கள் படும் துன்பங்கள் மந்தைப் புறம்போக்குகளை ஒழித்து வரும் நமது வருவாய் துறையோ, புலம் பெயரும் கால்நடைகள் தங்களுக்கெனப் பாதுகாப்பான வழித்தடம் இல்லாது தவிப்பதை நான்கு வழிச்சாலைகள் அமைத்து வரும் தேசிய நெடுஞ்சாலைத் துறையோ அறியுமா?

கால்நடைகள் மேய்ந்த நிலங்கள் வீடுகளாகவும் தொழிற்சாலைகளாகவும் மாறியதால் முல்லை, குறிஞ்சியை நோக்கி உணவிற்காகச் செல்லும்பொழுது வீரப்பன் போன்றோரையும், கஞ்சாகருப்புகளையும் கோட்டைவிடும் வனத்துறையினர் கீதாரி மக்களை அபராதம், சிறை என்று வஞ்சிப்பது வனத் துறையின் மேல்மட்டதிற்குத் தெரியாதா? என்ற கேள்வி பலமுறை ஒலித்துக்கொண்டே இருக்கிறது. விடைதான் கிடைக்கவில்லை. நாம் ஐந்து வகை நிலங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசுவோம் வடக்கே மேய்ப்பவரைப் பற்றிய இதிகாசக் கதைகள் கூறி மேடைப் பேச்சுக்களில் போற்றுவோம். ஆனால் மேய்ச்சலின மக்களின் தேவைகளை, இன்னல்களைச் செவிமடுத்தும் கேட்பதில்லை.

பன்னாட்டு நோக்கில் மேய்ச்சல் சமூகங்கள்

பண்ணைகளிலும் இல்லங்களிலும் கால்நடை வளர்ப்பு என்பது கால்நடை வளர்ப்பின் ஒரு வடிவம். மேய்ச்சல் மற்றும் மேய்ச்சல் நோக்கங்களுக்காக மேய்ப்பர்கள் தங்கள் மந்தைகளுடன் மற்ற பகுதிகளுக்கு நகர்ந்து செல்வது மற்றொரு வடிவம். உலகளவில் நாடோடி மேய்ச்சல் (Nomadic Pastoralist) மற்றும் பருவகால மேய்ச்சல் (Transhumance Pastoralist) என்று இரண்டு வகையான கால்நடை மேய்ச்சலின வளர்ப்பு முறைகள் உண்டு.

முதலில் நாடோடி மேய்ச்சல் (Nomadic pastoralism) என்பது தங்களின் மந்தை மேய்வதற்காகப் புதிய நிலங்களைத் தேடும் மேய்ப்பர்களின் ஒழுங்கற்ற இயக்கமாகும். அவர்கள் தங்கள் இயக்கத்தில் ஒரே மாதிரியைப் பின்பற்றுவதில்லை, எனவே நாடோடிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் கோடையில் உயரமான பீடபூமிகளையும், குளிர்காலத்தில் பாலைவன சமவெளிகளையும் விரும்புகிறார்கள். அவர்களின் கால்நடைகளில், யாக்ஸ், லாமாக்கள், செம்மறி ஆடுகள், குதிரைகள், கழுதைகள், ஒட்டகங்கள் போன்றவை அடங்கும். இந்த நாடோடி மேய்ப்பர்கள் பொதுவாக யூரேசியா, மத்திய ஆசியா மற்றும் மேற்கு மற்றும் வட ஆப்பிரிக்காவின் பகுதிகளில் காணப்படுகின்றனர்.

பருவகால மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் (Transhumance Pastoralist) என்பவர்கள் ஏறத்தாழ நமது கீதாரிகளைப் போன்றவர்கள். ஒவ்வொரு வசந்த காலத்திலும் இலையுதிர்காலத்திலும் மேய்ப்பர்கள் இடம்பெயர்வை மேற்கொள்கின்றனர், இது டிரான்ஸ்ஹுமன்ஸ் என்று அழைக்கப்படுகிறது - லத்தீன் மொழியில் டிரான்ஸ் என்றால் பூமியின் குறுக்கே என்று பொருள் மற்றும் தீவிர வெப்பநிலையைத் தவிர்க்கவும்

கால்நடை வளர்ப்பிற்காக இம் மேய்ப்பர்கள் சில முக்கிய நபர்களுடன் கிடை நிலங்களுக்காகப் பயணிக்கின்றனர். மீதமுள்ள மக்கள் தங்களின் இருப்பிடங்களில் தங்கியுள்ளனர்.

இவர்கள் கோடையில் உயரமான மேய்ச்சல் நிலங்களையும், குளிர்காலத்தில் தாழ்வான பள்ளத்தாக்குகளையும் விரும்புகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்தச் சுழற்சியை மீண்டும் மீண்டும் செய்கிறார்கள். அவர்களுக்குத் தெரிந்த பாதைகள் மற்றும் நிலங்களுக்கு மட்டுமே செல்கிறார்கள். தாங்கள் செல்லும் பகுதிகளில் தற்காலிகப் பயிர் சாகுபடியை மேற்கொள்கின்றனர். இது உலகம் முழுவதும், குறிப்பாக ஐரோப்பா மற்றும் மேற்கு ஆசியாவில் பாரம்பரியமாக நடைமுறையில் உள்ளது. நமது கீதரிகளின் நடைமுறையும் ஏறத்தாழ இவர்களைப் போன்றதே. ஆனால் பல்வேறு இடையூறுகளுடன் தமிழகத்தில் தம் வாழ்க்கையினைத் தொடருகின்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் மேய்ச்சலியத்திற்கான ஆதரவு

ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மேய்ச்சலினத்திற்கு வழங்கும் ஆதரவுகளைப் பார்ப்போம். பொருளாதாரத்திலும், தொழிற்துறையிலும் மிகப் பெரும் வெற்றிகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மேய்ச்சலினத்தின் அருமை அறிந்து (TRANSHUMANCE PASTROLIST) மேய்ச்சலிடம் தேடிச் செல்லும் (நமது கீதாரிகளைப் போன்றவர்களின்) கால்நடைகளை அரசு நிலங்களிலும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளிலும் தாராளமாக மேய்த்துக்கொள்ள சட்டமியற்றி அனுமதி கொடுத்துள்ளனர். (European Forum for Nature Conservation and Pastoralism. http://www.efncp.org) காண்க இயற்கைப் பாதுகாப்பு மற்றும் கால்நடை வளர்ப்புக்கான ஐரோப்பிய மன்றம்.

நமது நாட்டில் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகங்கள் மேய்ச்சலினக் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு எதிராக வெளிப்படையாக வேலை செய்கின்றன. பாரம்பரிய மேய்ச்சல் பகுதிகளில் இருந்து அவர்களை ஒதுக்கி வைக்கும் முயற்சிக்கு எதிராக, குறைந்த எண்ணிக்கையிலான தன்னார்வ தொண்டு நிறுவனங்களும், மேய்ச்சல் அமைப்புகளும் குரல் எழுப்பினாலும் அவ்வமைப்புக்களின் குரல்களை ஒருங்கிணைத்துத் தேசிய அளவில் மேய்ச்சலினப் பாடத்தை இன்னும் நன்றாக எழுப்ப முடியவில்லை என்று மேய்ச்சல் சமூகம் குறித்த ஆய்வாளர்கள் பலர் கட்டுரைகளில் எழுதியும் கூட்டங்களில் பேசியும் வருகிறார்கள்.

பதினேழு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பாளர்கள், ஐரோப்பாவில் கால்நடை வளர்ப்பை அங்கீகரிப்பதற்காக ஜெர்மனியின் கோப்லென்ஸ் என்னும் நகரில் சந்தித்தனர். ஐரோப்பிய ஷெப்பர்ட்ஸ் நெட்வொர்க் மற்றும் ஜெர்மன் மேய்ப்பர்கள் சங்கம் இணைந்து இந்த மாநாட்டை ஏற்பாடு செய்தன.

கால்நடைகள் உள்ளூர் மற்றும் தேசியப் பொருளாதாரத்திற்கு எவ்வாறு பயனளிக்கிறது என்பதை விளக்கினார்கள். ஸ்காட்டிஷ் தீவுகள் (Scottish islands), ஸ்பெயினில் உள்ள பைரனிஸ் (Pyrenees), ருமேனியா மற்றும் போலந்தில் உள்ள கார்பாத்தியன்கள் (Carpathians) பலர் தங்கள் விலங்குகளை சற்றும் பொருந்தாத நிலத்தில் மேய்க்கும் நிலைமையை விளக்கினார்கள். ஜெர்மனியைச் சேர்ந்த மேய்ப்பர்கள்

சுற்றுச்சூழல் பன்முகத்தன்மையையும் பாரம்பரிய நிலப்பரப்புகளையும் எவ்வாறு பாராமரிக்கிறோம் என்று விளக்கினர்.

வெவ்வேறு நாடுகளில் வாழ்ந்தாலும், வெவ்வேறு மொழிகளைப் பேசினாலும், மேய்ப்பாளர்கள் உலகம் முழுவதும் ஒரே மாதிரியான சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதை உணர முடிந்தது. அரசியல் முடிவுகள் எடுக்கப்படும்போது அரசு அவர்களை ஆலோசிப்பதில்லை, அவர்கள் தங்களின் மேய்ச்சல் நிலத்தை இழக்கிறார்கள் என்று நமது கீதாரிகள் படும் இன்னல்கள் போன்று அவர்களும் அனுபவிப்பதை நம்மால் உணரமுடிகிறது

ஸ்பெயின் நாட்டின் பார்வை

மேய்ச்சல் பராமரிப்பு மற்றும் மேய்ச்சலியல் வளர்ப்பில் அரசுகளின் உதவி அவ்வாறு கிடைக்கிறது என்பதற்கு ஸ்பெயின் சிறந்த எடுத்துக்காட்டுகளை வழங்குகிறது.

மந்தைகள் மற்றும் மந்தைகளின் நடமாட்டத்திற்காகச் சட்டப்பூர்வமாகப் பாதுகாக்கப்பட்ட (சுனுசு என்பது ராயல் டிரோவ் சாலை (Royal Drove Road, RDR) ஓட்டுச் சாலைகளின் வலையமைப்பைக் கொண்ட ஒரே நாடு ஸ்பெயின்.

1273-ஆம் ஆண்டில் கிங் அல்போன்சோ அரச ஆணை மூலம் ஸ்பெயினில் இப் பாதைகள் உருவாக்கப்பட்டன. ஸ்பெயின் உலகைத் தன் கட்டுப்பட்டிற்குள் கொண்டுவந்த நேரம். கால்நடைகளும் அவற்றின் தோலும், தோலாடைகளும் மாலுமிகளுக்கும் அந்நிய வாணிகத்திற்கும் தேவைப்பட்டன. அந்தப் பாரம்பரியம் இன்றும் தொடருகிறது.

Modern Spanish legislation (Act 3/1995 on Livestock Trails) decreed that the maximum width of the RDR is 75 m The RDR are the traditional paths of transhumance in Spain, which were regulated by the royal edict of King Alfonso X in 1273. யூ-ரோபியன் யூனியனின் நேச்சுரா 2000 திட்டத்தின் கீழ் டிரோவ் சாலைகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளை இணைக்கின்றன.

அதிர்ஷ்டவசமாக அந்நாட்டில், ஸ்பானிஷ் டிரான்ஸ்ஹமன்ட் (கீதாரிகள்) நடமாட்டத்தைப் பராமரிப்பதில் ஆர்வம் அதிகரித்துள்ளது, காரணம் இது மலை அமைப்புகளுக்கும் தாழ்நிலங்களுக்கும் இடையே ஒரு முக்கிய இணைப்பை வழங்குகிறதாம். மேலும் வரலாற்று முக்கியத்துவம் காரணமாகவும் பொழுதுபோக்கு மற்றும் சுற்றுலாவுக்காகவும் இப் பாதைகளை ஆதரிக்கின்றனராம்.

சமீபத்திய ஆண்டுகளில், ஸ்பெயினும் தனக்கு அருகிலுள்ள மத்தியதரைக் கடல் நாடுகளைப் போலவே காட்டுத்தீயால் கோடை காலங்களில் குறிப்பிடத்தக்க அழிவுகளைச் சந்தித்தது. எனவே கால்நடை மரபுகளில் “தீ மந்தைகள்” என்பது ஆடுகளின் மந்தைகள், தீ தடுப்புக்கான சிறப்புப் பணியை இவை வழங்குகின்றன. இந்த முறையினை ஸ்பெயின் ஆதரித்தது.

இந்த அமைப்பில், தீ பரவும் அபாயம் அதிகம் உள்ள பகுதிகளில் ஆடுகளை மேய்ப்பதே மேய்ப்பனின் பணியாகும். ஆடுகள் புற்கள் குறைந்த செடிகள் மற்றும் மரங்களைக் கடித்து உண்பதன் மூலம் அச்சூழல் பசுமைமயமாகி தீ பரவும் ஆபத்தைக் குறைக்க உதவுகின்றன, மேலும் அச்சூழலில் வாழும் பல்லுயிருக்குப் பாதுகாப்பளிக்கிறது.

நமது தொழுவம் போன்ற அமைப்புகளின் கருத்துக்களின்படி கால்நடைகள் வெற்று நிலப் புற்களை உண்ணும் போது அதிகமாகக் கரியமிலவாயுவைக் கார்பன் டை ஆக்சைடு (CO_2) உள்ளிழுத்து ஆக்ஸிஜன் (O_2) வெளியிடுகிறது. இவ்வாறு சுற்றுச் சூழலுக்கு உதவுவதுடன் மீண்டும் பசுமை நிலங்களை அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

மேய்ச்சல் முறை கால்நடைகள் ஒரு நாளைக்குக் காலை 9 முதல் மாலை 6 மணிவரை சுமார் 10 முதல் 15 கிமீ வரை மேய்ந்து இயற்கையான புல் மற்றும்

தாவரங்களை உண்பதால் அவை கொடுக்கும் பாலில் எந்தவித வேதியல் மூலப்பொருட்களும் கலப்பதில்லை என்றும், மாறாகக் கால்நடைப்பண்ணை பால்களில் அவை உண்ணும் தீவனங்களின் வாயிலாக வேதியல் கூறுகள் கலக்கும் சாத்தியமுள்ளது என்ற தொழுவத்தின் கருத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஸ்பெயினின் நாட்டின் ரெய் ஜுவான் கார்லோஸ் பல்கலைக்கழகத்தின் Rey Juan Carlos University (URJC) தலைமையில் சர்வதேச ஆய்வாளர்கள் குழு, சுற்றுச்சூழல் இயக்கவியலில் (Ecosystem) கால்நடை மேய்ச்சலின் பங்கைக் கண்டறியும் நோக்கத்துடன் ஓர் ஆய்வை மேற்கொண்டது. கால்நடை மேய்ச்சல் முறை, பல்லுயிர்ப் பெருக்கம் (Biodiversity) மற்றும் சுற்றுச்சூழலின் செயல்பாடுகளில் (Ecosystem functioning) எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் கண்டறிந்துள்ளனர்.

“DNA வரிசைமுறை நுட்பங்களைப் பயன்படுத்தி, மேய்ச்சல் கால்நடை இனங்களின் (பசுக்கள், செம்மறி ஆடுகள் முதலியன) பன்முகத்தன்மையை அதிகரிக்கும் போது, மேய்ச்சல், சுற்றுச்சூழல் அமைப்புகளுக்குள், தாவரங்கள் மற்றும் பூச்சிகளின் பல்லுயிர் பெருக்கத்தை மேம்படுத்துவது சாத்தியம் என்று பெறப்பட்ட முடிவுகள் வெளிப்படுத்தின என்கின்றனர். மேய்ச்சலின கால்நடைகள் மற்றும் வனவிலங்குகள் அனைத்தும் சமூகத்திற்குப் பயனளிக்கும் வகையில் உணவு மற்றும் பிற பொருட்களை உற்பத்தி செய்யும் ஊட்டச்சத்துச் சுழற்சியில் பங்கேற்கின்றன. எடுத்துக்காட்டாக, நுண்ணுயிரிகள் (microbes) தாவரங்களுக்கு ஊட்டச்சத்துக்களை வழங்குகின்றன” என்று ஆராய்ச்சி குறிப்புக்களை வெளியிட்டுள்ளனர்.

Transhumance – from the Latin trans for "across" and humus for "earth" – a form of pastoralism where animals typically move to and from summer highlands and winter lowlands to take advantage of seasonal peaks in pastures and avoid extreme temperatures

ஸ்பெயினில் 146 வகை நாட்டு மாடுகள், 51 வகை செம்மறி ஆடுகள், 22 வகை ஆடுகள், 21 வகை குதிரைகள் மற்றும் ஆறு வகை கழுதைகள் என்று இருந்தாலும் அங்கேயும் 80% உள்ளூர் இனங்கள் அழியும் அபாயத்தில் உள்ளன. கால்நடை வளர்ப்பின் வீழ்ச்சி மேய்ப்பர்களின் வாழ்வை அச்சுறுத்துகிறது இது ஸ்பெயினின் மற்றொரு முகம்.

ஆப்பிரிக்க மேய்ப்பர்களின் நிலை

ஆப்பிரிக்க மேய்ச்சல் அமைப்புகள் வறண்ட நிலங்களில் செயல்படுவதால், பல தனிநபர்கள் மற்றும் சமூகங்களுக்கு மந்தையின் நீர் அருந்தும் அளவை நிர்ணயிக்கும் பொழுது தண்ணீருக்கான போட்டி அதிகமாகி மனிதநேயம் துண்டாடப்படும் அபாயம் உள்ளது. வனவிலங்குகளின் கூடுதல் நீர் தேவைகளைக் கருத்தில் கொள்ளும்போது இது ஒரு கசப்பான உண்மை. கென்யாவின் சில வறட்சிப் பகுதிகளில், எடுத்துக்காட்டாக, 58% நீர் தேவை நிலத்தடி நீரிலிருந்து பூர்த்தி செய்யப்படுகிறது, இதில் 20% பகுதி மட்டுமே நல்ல நிலத்தடி நீர் திறனைக் கொண்டுள்ளது. எனவே, வறட்சிக் காலங்களில், தேவைக்கு ஏற்ப போதிய அளவு வரத்து இல்லாததால், நீர்நிலைகள் வறண்டு, இயற்கை நீர் ஓட்டம் தடைபடுகிறது, மற்றும் தொட்டிகளில் வண்டல் மண் படிகிறது.

சூடானில், மேய்ப்பர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையே நிலம் மற்றும் மேய்ச்சல் உரிமைகள் தொடர்பாக ஆயர் வழித்தடங்களில் வரலாற்று ரீதியாகப் பதட்டங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக வறட்சி காலங்களில், கால்நடைகளை மேய்ப்பவர்கள், தண்ணீர் மற்றும் மேய்ச்சல் நிலங்களைத் தேடி, சில சமயங்களில் விவசாயிகளின் நிலங்களில்

மேய்ந்து, அவற்றின் நீர்நிலைகளைப் பயன்படுத்தும் போது மோதல்கள் அதிகமாக இருக்கும். அதற்காக உள்ளூர் கால்நடை வளர்ப்போர் மற்றும் விவசாயிகள் சங்கங்கள் நிறுவப்பட்டன. வறண்ட நிலங்களில் நீர் அருந்தும் விவகாரத்தில் விவசாயம் மற்றும் வனத்துறை அமைச்சகத்துடன் சேர்ந்து ஒரு கூட்டு முயற்சியும் தொடங்கப்பட்டதாம்.

எத்தியோப்பியா ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய கால்நடை மக்கள்தொகைக்குத் தாயகமாக உள்ளது, இங்கே பெரும்பாலும் கால்நடை வளர்ப்புப் பல பகுதிகளில் குவிந்துள்ளது. கால்நடை வளர்ப்புக் குறித்த பாரம்பரிய அறிவைப் பயன்படுத்தி, கால்நடை வளர்ப்புச் சமூகங்கள், கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்களின் விற்பனையில் இருந்து பெருமளவில் வளம்பெற்று வாழ்கின்றனர். நான் பலமுறை அந்த நாட்டிற்குச் சென்ற பொழுது ஆட்டுக்கறி மற்றும் மாட்டுக்கறிகளைப் பச்சையாகச் சிறு துண்டுகளாக அறுத்து உப்பும் மிளகாய்த் தூளும் கலந்து உண்ணும் அங்காடிகளைக் கண்டுள்ளேன். இருப்பினும் அங்கே மேய்ப்பர்களின் வாழ்வாதாரங்கள் வறட்சி, விலங்கு நோய்கள் மற்றும் உள்நாட்டு யுத்தம் போன்ற இடையூறுகளால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

சீனாவில் பல்லுயிர் மேலாண்மைக்கு

சில ஆய்வுகளின் படி மேய்ப்பர்கள் பல்லுயிர் மேலாண்மைக்கு விலைமதிப்பற்ற அறிவைப் பங்களிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, லீக் ஃபார் பாஸ்டரல் பீப்பிள்ஸ் அண்ட் எண்டோஜெனஸ் டெவலப்மென்ட் (LPPED மற்றும் LPPS 2005) நடத்திய ஆய்வில், சீனாவில் உள்ள 52 வெவ்வேறு புல் இனங்கள் அவற்றின் இருப்பிடம், விநியோகம் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றின் அடிப்படைத் தகவல்களைக் கொடுத்தது மெய்ப்பர்களாம்.

மத்திய தென்அமெரிக்க நாடுகளில் மேய்ச்சல் தொழில்

வடக்கு மெக்சிகோவின் பெரும்பகுதி, கொலம்பியா மற்றும் வெனிசுலாவில் உள்ள குவாஜிரா தீபகற்பம், பிரேசிலிய செராடோ மற்றும்அர்ஜென்டினா, பொலிவியா, பராகுவே மற்றும் சிலி ஆகியவை முக்கியமான மேய்ச்சல் சமூக நாடுகளாகும்.

லத்தீன் அமெரிக்காவில் மேய்ப்பர்களின் பலவீனம் சுய அடையாளம் ஆகும். கால்நடை வளர்ப்பின் எதிர்மறையான கருத்துக் காரணமாக, பல கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் மேய்ப்பவர்கள் தம்மை விவசாயிகளாக அடையாளம் காணவே விரும்புகிறார்கள்.

சில நாடுகளில் பழங்குடியினருக்கும் மேய்ப்பவர்களுக்கு இடையே மோதல்கள் நடந்த வண்ணம் உள்ளன. சுரங்கம் மற்றும் வணிகப் பயிர் விவசாயத்திற்காகப் பெரிய அளவில் நிலம் கையகப்படுத்துவதால் மேய்ச்சல் நிலம் தனியார்மயமாக்கப்பட்டு நமது கீதாரிகள் போன்று இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் மேய்ச்சல் நடவடிக்கைகள் பெரும்பாலும் கம்பளி சந்தையுடன் இணைக்கப்பட்டுள்ளன. விகுனா ஃபைபர் ஆண்டியன் சமவெளியில் மிகவும் மதிப்புமிக்கக் கம்பளித் தொழில் மூலப் பொருளாகும் (that comes from the wool of the vicuña, a wild animal native to the Andes mountains). அப்படியிருந்தும், செம்மறியாடுகளின் ஆட்டிறைச்சி மற்றும் கம்பளி சந்தையாக இருப்பதால், மத்திய ஆண்டிஸ் மலைப்பகுதிகளில் சுமார் 20 மில்லியன் செம்மறி மற்றும் 7 மில்லியன் ஒட்டகங்களுடன் அதிக எண்ணிக்கையிலான கால்நடைகளாக வளர்க்கப்படுகின்றன. அர்ஜென்டினாவில், செம்மறி ஆடுகள் முக்கியமாகக் கம்பளிக்காகப் பயன்படுத்தப்படுகின்றன, அதில் 50% ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சுழற்சிப் பொருளாதாரத்தில் மேய்ச்சலியம்

உலகம் இன்று தன் வளங்களைச் சுழற்சி முறையில் மீட்டெடுத்துப் பயன்படுத்தும் வழி வகைகளுக்கு முன்னுரிமை வழங்கத் துவங்கிவிட்டது. சுழற்சிப் பொருளாதரம் (Circle Economy) அதில் ஒரு வகை. இயற்கை வளத்தினைப் பாதுகாத்தல் (Preserve) கழிவுகளில் பயன்பெறுதல் (Reuse) கழிவு சார்ந்த தொழில்களைப் பெருக்குதல் (Employment) மற்றும் வறுமையினை போக்குதல் (Eradicate Poverty) இந்த நான்கு நிலைகளிலும் மேய்ச்சலும் மேய்ச்சலின மக்களும் பெரும் பங்காற்றுகிறார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் ஸ்பெயின் போன்று நமது அரசாங்கங்களும் பாரம்பரியத்தைப் பாதுகாத்து மேய்ச்சலின மக்களின் பல்முனைப் பங்களிப்பினைப் போற்றி ஆதரவளிக்க வேண்டும். மேய்ச்சல் கால்நடைகளுக்கு வழிதடங்களையும் நீர்நிலைகளில் உரிமைகளையும் வழங்கி அரசாங்கச் சட்டமியற்றவேண்டும்.

தென்னமெரிக்க நாடுகள் போன்று ஆடு மாடுகளின் மூலப்பொருள்களை வாங்கும் பொழுது நல்ல குறைந்த பட்ச விலையினை நிறுவவேண்டும்.

நமது மண்ணின் இயற்கை வளத்தினைப் பாதுகாத்து, கால்நடைகளின் முதன்மை பங்களிப்பான பாலில் துவங்கி சாணக் கழிவுகளில் உரமளித்து, வறுமையினை எதிர்த்துப் போராடி (Eradicate Poverty) பல்வேறு இடையூறுகளின் இடையே தனித்துப் போராடும் மேய்ச்சலின மக்களின் அடுத்த தலைமுறை மேன்மை பெற கல்வி அரசு நிறுவனங்களில் சிறப்பு இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். அதற்கான முயற்சிகளில் நாமும் பங்காற்றுவோம்.

பட்டி மாடும் பாறு கழுகும்

சூழலியாளர் சு.பாரதிதாசன்
arulagamgreen@gmail.com

குறிஞ்சி நிலத்தில் வேட்டைச் சமூகமாக இருந்த மக்கள் முல்லை நிலத்தில் ஆநிரை மேய்த்தலை முதன்மைத் தொழிலாகக் கொண்டனர். முல்லை நில மேய்சல் நிலச் சிற்றூரும் கால்நடைகள் அடைப்பிடமும் 'பட்டி' என்ற சொல்லால் அழைக்கப்பட்டது. ஆற்றோரத்திலோ மலையின் சமதளத்திலோ பட்டியானது அமையப்பெற்றிருக்கும். முதுமலை புலிகள் சரணாலயத்தில் ஓடைக்கரைப் பட்டி, துலுக்கம்பட்டி, ஆறேக்கடவுப் பட்டி, பால தட்டிப் பட்டிக், கெத்தைப் பட்டி (தெங்குமரகடா என்று தற்போது குறிப்பிடப்படுகிறது), உள்ளிட்ட சுமார் 18-க்கும் மேற்பட்டப் பட்டிகள் இருந்தன. சத்தியமங்களம் புலிகள் சரணாலயத்தில் குழித்துறைப் பட்டி, மங்களப்பட்டி, மூலக்கரைப் பட்டி, உள்ளிட்ட சுமார் இருபதுக்கும் மேற்பட்ட பட்டிகள் இருந்தன.

வெண்மைப் புரட்சி மற்றும் பசுமைப் புரட்சிக்கு முன்னர் மாடுகள் பாலுக்காக மட்டுமின்றி எருவிற்காகவும் வயல் வேலை செய்வதற்காகவும் இழுவைக்காகவும் வளர்க்கப்பட்டன. பட்டியில் மாடோ, எருமையோ இயற்கையாக இறக்கும் போது அதை அப்படியே இழுத்துக் கொண்டு போய் காற்றடிக்கும் திசைக்கு எதிர்ப் புறத்திலோ பள்ளத்திலோ போட்டுவிடுவது வழக்கமாய் இருந்தது. சைவ உணவுப் பழக்கமும் அசைவம் உண்பவர்கள்கூட மாட்டுக் கறியை உண்ணாததாலும் இந்தப் வழக்கம் இருந்தது. வட இந்தியாவில் இவ்வழக்கம் இன்றும் தொடர்கிறது.

அப்படிப் போடப்பட்ட மாடுகளை மாட்டுத்தோல் சேகரிப்பாளர்கள் தோலைக் கீறி எடுத்துத் தோல் பதனிடும் தொழிற்சாலைக்குத் விற்றுவிடுவர். உடலத்தை அப்படியே விட்டு விடுவார்கள். வாழைப்பழத்தை உரித்துக் கொடுப்பது போன்ற இச்செய்கையால் இறந்த விலங்குகளை மட்டுமே உண்ணும் பாறு (கழுகு) களுக்கும் கொண்டாட்டம்தான். சதையைத் தின்று விட்டு எலும்பை மட்டுமே மிச்சம் வைக்கும். அதன்பின்னர் எலும்பு சேகரிப்போர் அதைக் கோழித்தீவனத்திற்கு மூலப்பொருளாக விற்றுவிடுவர். இதனால் கால்நடை வளர்ப்பவர்கட்கும் மாட்டைப் புதைக்க ஆகும் செலவும் மிச்சம். இப்படி ஒரு கூட்டுப் பலன் இருந்து வந்தது. உலகிலேயே கால்நடைகளின் எண்ணிக்கை அதிகம் உடைய நாடாக இந்தியா இருந்ததாலும் இறந்த மாட்டின் உடலம் உணவாகக் கிடைத்ததாலும் உலகிலேயே பாறு கழுகுகளின் எண்ணிக்கையும் வழக்கத்திற்கு மாறாக இந்தியாவில் கூடுதலாக இருந்தது.

இந்த எண்ணிக்கையில் முதல் சறுக்கல் ஏற்பட்டது. மாட்டைப் புதைக்கச் சொல்லி நலவாழ்வுத் துறையும் பஞ்சாயத்து நிர்வாகமும் அழுத்தம் கொடுத்தது. இதனால் அவற்றுக்கு இரை கிடைப்பது பெருமளவு குறைய நேரிட்டது. இத்துடன் ஆட்டுக்கறியின் விலை உயர்வாலும் அண்டை மாநிலமான கேரளாவில் மாட்டுக் கறியின் தேவை அதிகமாக இருந்ததாலும் வாகனப் போக்குவரத்து எளிமையாக இருந்ததாலும் இறந்த மாடுகளின் உடலங்கள் கசாப்புக் கடைக்கு அனுப்பப்பட்டது. தவிர, இந்தியக் காட்டுயிர் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வளர்ப்பு விலங்குகள் மேய்ச்சலால் காட்டுயிர்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டியது. குறிப்பாகக் காட்டு வாழ் தாவர உண்ணிகளான மான், காட்டு எருது, போன்றவை ஆடு மாடுகளுடன் தீவனத்துக்குப் போட்டி போடுவதால் தீவனப் பற்றாக்குறை ஏற்படும் என்ற நோக்கிலும் வளர்ப்பு

மாடுகளிலிருந்து நோய்கள் பரவுவதைத் தடுக்கும் நோக்கிலும் சரணாலயங்களிலும் புலிகள் காப்பகங்களிலும் பட்டி போட்டு மாடு மேய்த்தல் தடைசெய்யப்பட்டது.

1990களின் பிற்பகுதியில் முதுமலைப் பகுதியில் பணிபுரிந்த கால்நடை மருத்துவர் சுகுமார் என்னிடம் உரையாடியபோது, பட்டி மாடுகள் சாலையில் ஓட்டிச்சென்றால் நாங்கள் சுமார் 10 நிமிடம் ஒதுங்கி நிற்க வேண்டும். அதன்பின்னர் தான் எங்களது வாகனம் செல்ல முடியும். அந்தளவுக்கு மாடுகளின் எண்ணிக்கை இருந்தன. சாலை முழுக்கச் சாணி போட்டு மெழுகியது போல இருக்கும்.

1960களில் ஏற்பட்ட ஆந்த்ராக்சு பெரும் தொற்று நிறையக் காட்டு எருதுகளைக் காவு வாங்கின. அத்துடன் வளர்ப்புக் கால்நடைகளும் மடிய நேரிட்டன. மாடுகள் கூட்டம் கூட்டமாக மடிந்ததால் தொற்று நோய்க்குப் பயந்து பட்டி மாடுகளை அப்படியே விட்டுவிட்டு உயிருக்குப் பயந்து ஊருக்கு வந்ததாகவும் சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

நீலகிரியிலுள்ள தோடர்களுக்கும் அவர்களது எருமைக்கும் பாறு கழுகுகளுக்கும் உள்ள தொடர்பு போற்றத்தக்கது. மேலும் தோடர்கள் எருமை வெள்ளிக்கிழமை அன்று கன்று ஈன்றால் அதனைக் கோயிலுக்கு நேர்ந்து விட்டுவிடுவார்கள். அப்படி விடப்பட்ட தோடர் எருமைகளும் காட்டில் சுற்றித்திரிகின்றன. இந்த எருமைகளால் புலிகள் உள்ளிட்ட ஊனுண்ணிகளும் பாறு கழுகுகளும் பயன்பெற்றன.

ஆனால் இந்த எருமைகளால் காட்டு வாழ்ப் பாலூட்டிகள் பாதிக்கப்படுவதாகக் கருதிச் சுட்டுக்கொல்ல வனத்துறை அனுமதித்ததாகவும் அதைக் கசாப்புக்கடை நடத்துபவர் வாராவாரம் வந்து சுட்டு ஒவ்வொரு மாடாகக் கறித்துண்டம் போட்டு எடுத்துச் சென்றதாகவும் தவறை உணர்ந்து இச்செய்கை நிறுத்தப்பட்டது என்றும் வாய்மொழித் தகவலாகச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.

மாடுகளை வளர்ப்போர் புலியிடமிருந்தும் செந்நாய்களிடமிருந்தும் மாடுகளைப் பாதுகாக்க விசம் வைத்துக் கொல்லப்பட்ட நிகழ்வுகளும் நடந்தன. இதனைக் கருத்தில் கொண்டு 1990 களின் பிற்பகுதியில் மாட்டுப் பட்டிகள் படிப்படியாக அகற்றப்பட்டன. இந்தக் கட்டுப்பாட்டால் மாடுகளை வளர்ப்போர் பட்டி போட்டுக் காட்டுக்குள் தங்க முடியாது. மாடுகளை ஒட்டிச் சென்றுவிட்டுத் திரும்பி வந்துவிட வேண்டும். அதே காலகட்டத்தில் பாறுக் கழுகுகளும் ஆங்காங்கே மறைந்து வரும் செய்திகளும் வெளிவந்தன. தமிழ்நாட்டிலும் பல ஊர்களிலும் பாறு கழுகுகள் தங்கி இனப்பெருக்கம் செய்துவந்ததை வாய்மொழித் தகவல்களும் 1920களின் பிற்பகுதியில் ஆங்கிலேயர்களால் மேற்கொள்ளப்பட்ட வெர்னாய் கணக்கெடுப்பும் ‘மதுரை மாவட்டத்தில் காணப்படும் பறவைகள்’ குறித்து நிக்கோல்ஸ் எட்வர்டு, டெர்ரி (Terry) மற்றும் ஹவார்டு கேம்பெல் ஆகியோர் மேற்கொண்ட கணக்கெடுப்பும் உறுதிப்படுத்துகின்றன.

மாடுகளுக்குச் செலுத்தப்பட்ட வலி மருந்துகள் (டைக்குளோபினாக்) தான் பாறு கழுகுகள் இறப்புக்குப் பெரிதும் காரணமாக விளங்கின என அசைக்க முடியாத ஆய்வுகள் உறுதிப்படுத்தின. 1990களில் பரவலாகக் கைகண்ட மருந்தாகப் பரிந்துரைக்கப்பட்ட ‘டைக்குளோபினாக்’ எனும் வலிபோக்கி மருந்து ‘பாறு’ கழுகுகளின் வாழ்வில் பேரிடியாக விழுந்தது. இந்த மருந்தின் வீரியம் சுமார் மூன்று வாரங்களுக்கு இருக்கும். அந்தக் காலகட்டத்தில் மாடுகள் இறக்க நேர்ந்தால் அவற்றை உண்ண வந்த பாறு கழுகுகளின் சிறு நீரகம் பாதிக்கப்பட்டுக் கூட்டம் கூட்டமாக மாண்டதை ஆய்வு முடிவுகள் தெரிவித்தன. 800 மாடுகளுக்கு ஒரு மாட்டில் டைக்குளோபினாக் வலி மருந்தின் வீரியம் இருந்திருந்தால் கூட அது பல கழுகுகளுக்கும் உயிரிழப்பை ஏற்படுத்தும் எனத்தெரிய வந்தது. இதனால் 99 விழுக்காடு பாறு கழுகுகள் வெறும்

பத்தாண்டுகளுக்குள் அழிய நேரிட்ட அவலம் நேர்ந்தது. அண்மைக்கால உயிரின வரலாற்றில் குறுகிய காலத்தில் இப்படி ஒரு பேரவலம் வேறு உயிரினத்திற்கு நேர்ந்ததில்லை.

பெரும்பாலும் வலி மருந்துகள் சீமை மாடுகளுக்கும் குறிப்பாகப் பால் கறக்கும் மாடுகளுக்கும் தரப்பட்டன. பட்டி மாடுகளுக்குப் பெரும்பாலும் இத்தகைய மருந்துகள் தரப்படுவதில்லை என்பதால் பாறு கழுகுகள் சில இடங்களில் உயிர் தப்பின. அப்படித் தப்பிய இடங்களில் ஒன்று தான் மாயாறுப் பள்ளதாக்கு. இந்த இடம் முதுமலையும் பந்திப்பூரும் சந்திக்கும் இடத்தில் இருக்கின்றது. பட்டி மாடுகள் இயல்பிலேயே நோய் எதிர்ப்புச் சக்தி மிக்கவையாக இருப்பதாலும் கால்நடை மேய்ப்பர்கள் மூலிகை மருந்துகளைப் பயன்படுத்திக் கால்நடைகளின் நோய்களைக் குணப்படுத்தியதாலும் கால்நடை மருந்துகள் வாங்க நகரத்திற்குச் செல்லவேண்டும் என்பதாலும் டைக்குளோபினாக் உள்ளிட்ட வலி மருந்துகளின் பயன்பாடு இல்லாமல் தப்பித்தது. மேலும் வீரப்பன் நடமாட்டம் இருந்ததும் கால்நடை மருத்துவர்கள் அப்பகுதிக்குச் செல்லாததும் வலி மருந்துகளின் தாக்கத்திலிருந்து மாயாறு சமவெளி தப்பியதற்குக் கூடுதல் காரணங்கள். இதனால் தற்போது அப்பகுதியில் அழிவபாயத்திலிருக்கும் நான்கு வகையான கழுகுகளும் வாழ்ந்து வருகின்றன. குறிப்பாக வெண்முதுகுப் பாறு கழுகு, கருங்கழுத்துப் பாறு கழுகு, செம்முகப் பாறு கழுகும் ஓரளவு எண்ணிக்கையில் வாழ்ந்து வருகின்றன. மஞ்சள்முகப் பாறு கழுகும் அவ்வப்போது தென்படுகின்றன.

ஆடு மாடு மேய்ப்பவர்களை நமது சமூகம் இழிவாகப் பார்த்ததன் அடையாளம் தான் ‘பட்டிக் காட்டான்’, ‘நீ மாடு மேய்க்கத்தான் இலாயக்கு’, ... போன்ற வசைச் சொற்கள். இப்பட்டிப்பட்ட மக்கள் தான் பாறு கழுகுகளைக் காக்க உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

அழிவபாயத்திலுள்ள இவ்வுயிரினத்தைப் பட்டி மாடு வளர்ப்போர் மற்றும் பழங்குடிகள் உதவியுடன் வனத்துறை வழிகாட்டுதலுடன் பாதுகாக்கும் வேலையில் நம்பிக்கையுடன் ஈடுபட்டு வருகிறோம். மேய்ச்சலிய மாநாட்டின் மூலம் அரசுக்குக் கீழ்க்காணும் வேண்டுகோளை வைக்க விரும்புகிறோம்.

பாறு கழுகுகளுக்குத் தீமை விளைவிக்கும் வலி மருந்துகளின் தாக்கம் அறவே இல்லாத பகுதியாக மாயாறு சமவெளிப் பகுதியை மாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசு கால்நடை மருந்தகங்களில் பாதுகாப்பான மாற்று மருந்தாக அறியப்பட்ட மெலாக்சிகம் மற்றும் டோல்பினமிக் ஆசிட் ஆகிய மருந்துகளை மட்டுமே வாங்க வேண்டும்.

இறந்த மாடுகளின் மீது விசம் தடவும் செயலும் இல்லாமல் இருக்க உறுதி செய்ய வேண்டும். ஊனுண்ணிகள் தாக்கி இறந்த கால்நடைகளுக்குரிய இழப்பீட்டைக் காலதாமதமின்றி உடனே வழங்க வேண்டும்.

இயற்கையாக இறந்த எந்த மருந்தும் பயன்படுத்தாமல் வளர்க்கும் பட்டி மாடுகளைப் புதைக்காமல் பாறு கழுகுகள் அனுகுவதற்கு அரசு வழிவகை செய்துதர வேண்டும்.

நாட்டுத் தீவனப் புற்களும் தமிழ்நாட்டின் மேய்ச்சல் நிலங்களும்

பேராசிரியர் பெ.இரவிச்சந்திரன்
grassravi@gmail.com

ஆய்வாளர் சு.விஜய் சர்மா
vijaysharmabdu@gmail.com

முன்னியம்பல்

மனித நாகரிக வளர்ச்சியில் ஒவ்வொரு இனக்குழுச் சமூகமும் வெவ்வேறு படிநிலைகளைக் கடந்து ஓர் நிலைத்த பண்பாட்டு மற்றும் பொருளாதார நிலைகளை எட்டியுள்ளமைக்கு அந்நிலத்தின் புவியமைவு சூழல், தட்பவெப்ப நிலை மற்றும் அப்பகுதியில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் சேர்ந்த உயிரிப்பன்மயமே (Bio diversity) அடிப்படைக் காரணமாகும்.

உயிரிப்பன்மயத்தில் தாவரங்களின் பங்கு முதன்மையாக இருப்பதற்குக் காரணம், இப்புவியில் வாழும் அனைத்து உயிரினங்களின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, மருந்து மற்றும் ஆற்றலை வழங்குவதன் மூலம் மானுட நாகரிகம் தழைத்தோங்க காரணமாய் அமைகிறது. மனித சமூக பரிணாம வளர்ச்சியில் தாவரங்களின் பங்கு தவிரக்க முடியாத அளவிற்குத் தாக்கம் செலுத்தி வந்துள்ளது. உலகெங்கிலும் தாவரங்கள் சார்ந்த பண்பாட்டு அடையாளங்கள் எல்லாப் பகுதிகளிலும் காணப்படுகிறது. அப்படியான பெரும் தாவரத் தொகுப்பின் ஓர் அங்கமாகப் புற்கள் என்ற பகுதி முக்கியத்துவம் வாய்ந்தாக கருதப்படுகிறது. பெரும்பான்மையான மனித குலத்தின் பிரதான உணவு புற்களிலிருந்தே வருகிறது, மேலும் அவை மேய்ச்சல் விலங்குகளுக்கு உணவை வழங்குகின்றன, அதிலிருந்து மனிதன் தனது புரதத்தின் பெரும்பகுதியைப் பெறுகிறான். புற்கள் பெரும்பான்மையாக உள்ள பகுதியை நாம் புல்வெளிகள் என்று அழைக்கிறோம். பூமியின் மிகப்பெரிய உயிரக (Biome) மண்டலங்களில் புல்வெளி உயிரகம் (Grassland biome) அதிமுக்கியமாகக் கருதப்படுகிறது. மனிதர்கள் முதன்முதலில் எழுந்து நடக்கக் கற்றுக்கொண்ட முதல் பகுதியாகவும் ஆய்வாளர்களால் முன் வைக்கபடுகிறது. அதுமட்டுமில்லாமல் வேட்டைச்சமூகம் தொடங்கி வேளாண்மைச் சமூகமான பரிணாம வளர்ச்சியில் புல்வெளிகளின் பங்கு இன்றியமையாதது . மனிதன் பல தாவர மற்றும் விலங்கு இனங்களை விரிவான பயன்பாடுகளின் அடிப்படையில் மேய்ச்சல் நிலங்களில் இருந்தே அவற்றைப் பழக்கப்படுத்திக் கொண்டான். இவ்வாறு பல் வகைப்பட்ட பயன்பாடுகள் கொண்ட புற்களையும் புல்வெளி பகுதிகளைப் பற்றியும் இங்கு விரிவாக காணலாம்.

புற்கள் வரையறை

புல் என்பதற்கு ஆங்கிலத்தில் grass என்பது அனைவரும் அறிந்ததே, grass என்பதன் வேர்ச் சொல் பழைய ஜெர்மன் மொழியில் உள்ளது அதன் பொருள் grow and green. பசுமையாக வளரும் ஓர் செடி எனப் பொருள் கொள்ளலாம். அதனோடு துளையுள்ள தண்டு உடைய தாவரங்களை நாம் புல்லாக இங்கு கருதலாம். (எ.கா: புல்லாங்குழல்)

தமிழ் இலக்கியத்தில் புற்கள்

நமது தமிழ் இலக்கியங்கள் புற்களைப் பல விதமான பொருள்களோடு குறிப்பிடுகிறது, அவற்றில் 1.பசு, ஆடு, போன்ற விலங்குகளின் உணவான சிறிய பச்சைத் தாவரம், 2.புல்லரிசி, பஞ்சகாலத்தில் ஏழைகள் உண்ணும் அரிசி போன்ற தானியம், 3. புறத்தே அமைந்தது, 4. சிறியது, 5. இழிவு, 6. அற்பம்.

அதில் மிக முக்கியமாகத் தமிழுக்கே உரித்தான தனித்துவ நடையில் புல் என்பதற்கு நிலத்தைப் புல்லிக் கிடப்பவை (தழுவிக் கிடப்பவை) புல்னென்று செவ்விலக்கியங்கள் வரையறுக்கின்றன. கிருத்துவர்களின் புனித நூலான பழைய ஏற்பாட்டிலும் புல்லைப் பற்றி ‘‘கல்லுக்குள் இருக்கும் தேரைக்கும் கருவுக்குள் இருக்கும் சிசுவுக்கும் புல்லே உணவாகும்’’ என்று உயர்வாகக் கூறப்படுகின்றது. நீரின்றி அமையாது உலகு என்பது போல புல்லின்றி இந்தப் புவியில் ஏதும் இல்லை என்றால் மிகையாகாது.

புற்கள் அறிவியல் வரையறை

புற்கள் மிகப்பெரிய ஒருவித்திலைத் தாவரக் குடும்பங்களில் ஒன்றாகும் -உலகளவில் 789 இனங்கள் (genus) மற்றும் 11, 783 சீரினம் (species) உள்ளன (தரவு - AWPC III 2022). இக்குடும்பம் இல்லாத இடமே உலகில் இல்லை. எங்கெல்லாம் தாவரங்கள் வளரக் கூடுமோ, அங்கெல்லாம் இக்குடும்பத் தாவரங்களைக் காணலாம். ஆர்டிக் பிரதேசத்திலிருந்து அண்டார்டிக் பிரதேசம் வரை உள்ள, புதர்காடுகள், புல்வெளிகள், கடலோரப் பகுதிகள், மலையுச்சிகள் திறந்த காடுகள், நிழலடர்ந்த காடுகள், வறண்ட பாலைவனங்கள், நீர் நிறைந்துள்ள இடங்கள், உவர் நீருள்ள கடலோரங்கள் நன்நீருள்ள ஏரிகரைகள் முதலிய எல்லா இடங்களிலும் புற்கள் நன்கு வளருகின்றன. ஒரு பருவ, அல்லது பல பருவச் செடிகள் வெகு அரிதாக, மரவகைகள் மூங்கிலில் (Bamboos) காணப்படுகின்றன. தாவரங்களின் வேர் குருத்தினின்று தோன்றிய வேர்கள் அழிபடுவதால் ‘‘வேற்றிடத்து வேர்கள் சல்லிவேர் தொகுப்பாக வளருகின்றன் தரைமட்டத் தண்டுகள் சில வற்றில் இருக்கலாம், அன்றி இல்லாமலும் இருக்கலாம். தண்டுகள் (கணுக்களுள்ள புற்களின்-Culms) பொதுவாக உருட்டாயும், கணுவிடைப் பகுதிகளில் பருத்தும் காணப்படும்.

இந்தியாவில் புற்கள், புல்வெளிகள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள்

இந்தியாவில் மிகக் குறைவாகப் புரிந்து கொள்ளப்பட்ட மற்றும் மிகவும் குறைவாக மதிப்பிடப்பட்ட இயற்கைச் சூழல்கள் புல்வெளிகள் ஆகும். 266 இனங்கள் (genus) மற்றும் 1506 சீரினம் (species) உள்ளன, அவற்றில் சுமார் 450க்கு மேற்பட்ட சீரினங்கள் ஓரிடவாழ் (Endemic) பண்புக்கொண்டவை இந்தியாவைத் தவிர்த்து வேறு எங்கும் காணப்படுவதில்லை. இந்தியாவைப் பொறுத்த மட்டில் இயற்கையாய் புல்வெளிகள் எங்கும் தோன்றியதற்கான தரவுகள் இல்லை. தாவரங்கள் முற்று நிலை (climax vegetation) மூலம் புல்வெளிகள் உருவாகும் தட்பவெப்பச்சூழல் இந்தியா போன்ற வெப்ப மண்டலப்பகுதிக்கு உரித்தானது இல்லை. அப்படியென்றால் இன்று இருக்கும் புல்வெளிகள் அனைத்தும் மனிதன் வேளாண்மைக்காகக் காடழித்ததனாலும் மற்றும் அன்று இருந்த காலநிலைக்கு ஏற்றவாறு உருவாகி இருக்கலாம். இந்தியப் புல்வெளிகளை ஒவ்வொரு நிலத்திற்கு ஏற்றார் போல் உருவாகியுள்ளது, அவற்றில் உயரமான மலைப்பகுதியில் இருந்து தரைச்சமவெளி பகுதிகள் வரை எங்கும் பரவி காணப்படுகிறது. இந்த புல்வெளிகள் ஒவ்வொன்றும் ஒன்றையொன்று தனித்து நிற்கும் தனித்துவமான குணங்களைக் கொண்டுள்ளன.

மேலைநாடுகளைப் போல் இந்திய நிலப்பரப்பில் மேய்ச்சலுக்கான நிரந்திரமான இடம் என்பது தெளிவாக இல்லை. மத்திய மற்றும் மேற்கு இந்தியாவில் சிதறிய வறள் புல்வெளிகள், ராஜஸ்தான் மற்றும் குஜராத், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா, கர்நாடகம் பகுதிகளில் காணப்படுகின்றன. பாதி வறள் புல்வெளிகள் (semi-arid grassland) 30% ராஜஸ்தானில் காணப்படுகிறது இமயமலைப் பகுதிகளில் ஈரச் சதுப்பு நில புல்வெளிகள் அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்படுகின்றன. அதைத் தொடர்ந்து மிதக்கும் புல்வெளிகள் மணிப்பூர் பகுதிகளிலும் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டுக்கே உரித்தான வறள் புல்வெளிப் பகுதிகள் காணப்படுகின்றன.

பெரும்பாலான இந்திய புற்கள் மூன்று வகை பிரிவைச் (Tribe) சேர்ந்தவை

- ஆண்ட்ரோபோகோனே (30%)
- பானிசியே (15%)
- எராக்ரோஸ்டியே (9%)

மிகவும் அழிந்து வரும் சில விலங்கினங்கள் மற்றும் நாட்டு விலங்கினங்கள் இந்தியாவின் புல்வெளிப் பகுதிகளில் காணப்படுகின்றன. மேலும் குறிப்பாகச் சில தாவர இனங்கள் புல்வெளிகளில் மட்டுமே காணப்படுகின்றன

இந்தியாவின் கால்நடை வளம்

இந்தியப் புற்களில் மூன்றில் ஒரு பங்கு தீவன மதிப்புடையதாகக் கருதப்படுகிறது. இதேபோல், லெகுமினோசேயின் 60 வகைகளில் சுமார் 400 இனங்களில், 21 இனங்கள் தீவனப் பயனுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய கால்நடைச் சந்தைப் பொருளாதாரம் இந்தியாவில் இயங்குகிறது. கால்நடைகள் சுமார் 20.5 மில்லியன் மக்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குகின்றன. சிறுகுறு விவசாயிகளின் குடும்ப வருமானம் 16% என்ற விகிதத்தில் கால்நடைகள் மூலமாக வருகிறது. கிராமப்புறச் சமூகங்களில் மூன்றில் இரண்டு பங்கு கால்நடைகளை நம்பி வாழ்கின்றனர். கூடுதலாக, இந்திய மக்கள் தொகையில் 8.8% மக்கள் இதன் மூலமாகவே வேலைவாய்ப்பைப் பெறுகிறார்கள்.

இந்தியாவில், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு, கிராமப்புற வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாகும். மேலும் இந்த நடைமுறைகள் கலாச்சார, மத மற்றும் பொருளாதார வழிகளில் சிக்கலான சமூக கட்டமைப்போடு பின்னிப் பிணைந்துள்ளன. இந்தியப் பொருளாதாரத்தில் அதன் பங்களிப்புத் தொடர்ந்து குறைந்து வருகிறது. (1982-1983 இல் 36.4% இலிருந்து 2006-07 இல் 18.5% ஆக கால்நடைத் தொழில் விவசாய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25.6% மற்றும் ஒட்டுமொத்த மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.11% பங்களிக்கிறது (2019). இருந்த போதிலும், 52% தொழிலாளர்கள் விவசாயம் மற்றும் கால்நடைத் தொழிலில் வேலை செய்கின்றனர். கால்நடைகள், கிராமப்புறப் போக்குவரத்து, உரம், எரிபொருள், பால் மற்றும் இறைச்சியை வழங்குகிறது. பல சந்தர்ப்பங்களில், கால்நடைகள் ஒரு வாழ்வாதார மையமாகச் செயல்படுகிறது.

தமிழ்நாட்டில் மேய்ச்சல் நிலங்கள்

முல்லை நிலப்பகுதியும் மேய்ச்சல் வெளிகளும்

தமிழ்நிலத்தைச் சூழலுக்கு ஏற்ப திணை மண்டலங்களாகப் பகுத்து அதற்கான தாவரங்கள் மற்றும் விலங்குகளை வகைப்படுத்தி அவற்றைக் கருப்பொருள் உரிப்பொருள் என்று நெறிகளை வகுத்தது ஏனைய சமூகத்திடம் இருந்து தமிழ்ச்சமுகத்தை தனித்துவமாகக் காட்டுகிறது.

திணை மண்டலத்தின் பகுப்பில் முல்லை நிலப்பகுதி அதற்குரிய சிறப்பியல்புகளோடு அமைந்துள்ளது. முல்லை என்றால் காடும் காடு சார்ந்த இடம், அதில் சிறு குன்றுகள் முதல் சமவெளி பகுதிகள் அனைத்தும் முல்லைத் திணை மண்டலங்களாக கருதலாம்.

முல்லை திணைக்கென உரித்தான பல்லுயிரிய வளத்தைச் சங்க இலக்கியம் பதிவு செய்கிறது. முல்லைத் திணையில் காடுகளை ஒட்டியமைந்த மேய்ச்சல் நிலம் விடுநிலம் எனப்பட்டது. அவற்றோடு பயிரிடாமல் விடப்பட்ட நிலம் தரிசு அல்லது கொல்லை என்றும் அழைக்கப்பட்டன. முல்லைத் திணை பகுதியில் மேய்ச்சல் மட்டும் முழுவதுமாக நடைபெறாமல் வேளாண்மையும் சேர்ந்தே நடைபெற்றதாக அறிய முடிகிறது.

முல்லைத் திணை வயல்களை புனம் என்றும் வன்புலம் என்றெல்லாம் அழைக்கப்பட்டன. புனம் என்ற சொல் புண் நிலம் (புல் நிலம்?...) என்றெல்லாம் பொருள் விளக்கம் கொண்டுள்ளது. இதன்படியான நிலத்தையே புன்செய் எனக் கொள்ளலாம். முல்லை நிலத்து மக்கள் வன்புலம் (மா)வானம்பாரி) என்ற தொடக்க கால வேளாண்மையில் ஈடுபட்டிறிந்தாகத் தெரிய வருகிறது. மேய்ச்சல் நிலமே வேளாண் நிலமாகப் பருவ காலத்திற்கு ஏற்ப பயிரிடப்பட்டதாக நாம் ஊகிக்கலாம். அதன்படி முல்லை நில மக்களான ஆயர்கள் மேய்ச்சல் தொழிலையும் வேளாண் தொழிலையும் ஒருங்கே இணைந்து ஈடுபட்டிருக்கலாம். (தரவு - கா.சிவத்தம்பி) முல்லை நிலத்து மக்களில் முதன்மையானவர்கள் ஆயர்களே. ஆயர்களில் கோவினத்தாயர், கோட்டினத்தயார் புல்லினத்தயார் வகையினராகப் பிரிக்கப்பட்டிருப்பதாக முல்லைத் திணை பாடல்கள் காட்டுகின்றன.

தமிழ்நாட்டின் புற்கள் பற்றிய தற்போதைய விரிவான ஆய்வுகளின்படி, மாநிலத்தில் 144 இனங்கள் (genus) மற்றும் 491 சீரினம் (species) உள்ளன, அவற்றில் சுமார் 100க்கும் மேற்பட்ட சீரினங்கள் ஓரிடவாழ்வியாக (Endemic) இனம் கண்டறியப்பட்டுள்ளது.

வறள் புல்வெளிகள் மற்றும் பாதி வறள் புல்வெளிகள் பற்றிய வரலாற்று மற்றும் அறிவியல் ரீதியான தரவுகள் குறைவாகவே உள்ளன. அதனால் தமிழ்நாட்டில் வறள் சமவெளிகள் மற்றும் புல்வெளி நிலங்களை மதிப்பீடு செய்வதில் சிக்கல்கள் உள்ளது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டு அரசு தகவல் மற்றும் புள்ளிவிவரங்களின்படி வறள் புல்வெளிகள் அனைத்தும் தரிசு நிலங்களாகப் பதிவு செய்யப்படுகின்றன. அவற்றில் தனியார்க்கு சொந்தமான மேய்ச்சல் நிலங்களும் இருப்பதாகத் திரு.மதிவாணன் போன்ற சமூகவியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

அண்மையில் வந்த புவியியல் சஞ்சிகை பற்றிய ஆய்வொன்றில் தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் 5% குறைவான நிலப்பகுதிகள் வறள் புல்வெளிகள் இருப்பதாக குறிப்பிடுகின்றது. அந்த ஆய்வறிக்கையில் குறிப்பாகத் தமிழகத்தின் நிலப்பரப்பில் வடக்கு, மத்தியகிழக்கு மற்றும் தென் மாவட்டங்களில் சிதறிய வறள் புல்வெளிகளாக காணப்படுகின்றது. சேலம் தொடங்கி மதுரை மற்றும் விருதுநகர், தூத்துக்குடி வரையிலும் சிதறிய வறள் புல்வெளிகள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றது

தமிழ்நாட்டில் கால்நடை வளம்

20வது கால்நடைக் கணக்கெடுப்பின்படி தேசிய அளவில் தமிழ்நாடு, பசுவின எண்ணிக்கையில் 13-வது இடத்திலும் எருமையின எண்ணிக்கையில் 14-வது இடத்திலும் செம்மறியாட்டின எண்ணிக்கையில் 4-வது இடத்திலும் வெள்ளாட்டின எண்ணிக்கையில் 7வது இடத்திலும் கோழியின எண்ணிக்கையில் 2-வது இடத்திலும் உள்ளன.

தமிழ்நாட்டில் பழங்காலம் தொட்டே கால்நடைகள் மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக இருந்து வருகின்றன. கால்நடைகளை நடமாடும் சொத்தாகவும் மனிதர்களுக்கு உற்ற துணையாகவும் கருதி வருகின்றனர். கால்நடைகள் மூலம் கிடைக்கும் உற்பத்திப்

பொருட்கள் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகின்றன.

தமிழ்நாட்டில் மேய்ச்சல் நிலங்களின் தற்போதைய நிலை

தமிழ்நாட்டில் கால்நடை மேய்ச்சலுக்கும் வேளாண்மைக்கும் நெருக்கமான தொடர்பு பல ஆண்டு காலமாக இருந்து வருகிறது. அரசின் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் தரவுகளின் படி மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 45% நிலப்பரப்பு (59.42 இலட்சம் ஹெக்டேர்) பயிரிடும் பரப்பாக உள்ளது. ஆனால் கால்நடைகளுக்கான நிரந்தர மேய்ச்சல் நிலங்களின் பரப்பு மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில் 0.83% (1.08 இலட்சம் ஹெக்டேர்) மட்டுமே உள்ளது. இந்த வேளாண் பரப்பிற்கும் மேய்ச்சல் நிலப்பரப்பிற்குமுள்ள வித்தியாசமே தமிழ்நாட்டில் மேய்ச்சல் நிலங்களை அதிகப்படுத்துவது மற்றும் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்டெடுத்துப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. (தரவு பூவுலகின் நண்பர்கள்).

தீவனப் புற்கள் (fodder grasses)

கால்நடைகள் மேயும் திறன்களை வைத்தே புற்கள் தீவனப் புற்களாக வகைப்படுத்தப்படுகிறது. முற்றிலும் மேய்ச்சல் விலங்குகளின் தேர்வைச் சார்ந்த உண்ணத்தகுந்த புற்கள் மற்றும் உண்ணத்தகாத புற்கள் என்று வகைபடுத்தலாம். (பொதுவான சில இயற்புற்களைப் பின்வரும் பட்டியலில் காணலாம்) கால்நடைகள் பெரும்பான்மையாக இயற் புற்களையே உண்பதாகக் கள ஆய்வுகள் நிரூபிக்கின்றன. புற்கள் தளிராக இருக்கும்போதே மிகவும் சுவையாக இருக்கும், ஏனெனில் அவை முதிர்ச்சியடையும் போது, அவற்றின் புரத உள்ளடக்கம் குறைகிறது மற்றும் நார்ச்சத்து, லிக்னின், செல்லுலோஸ் மற்றும் பிற பொருட்களின் அளவுகள் உயரும். கால்நடைகள் புற்களை மேய்வதற்கு, அதில் 7% கச்சா புரதம் இருக்க வேண்டும். சில நேரங்களில் சில புற்களைக் கால்நடைகள் தெரிந்தே தவிர்க்கின்றன. அதற்கு மிக முக்கியமான காரணம் புற்களின் உடல் அமைப்புகளில் உள்ள முள் போன்ற ரோமங்களே பிரதானமாக உள்ளது. படிமலர்சியால் (evolution) ஏற்பட்ட உருவவியல் மாற்றங்களே காரணமாகும். அப் புற்களை மேய்ச்சல் விலங்குகளின் வாய்வழி அன்னப் பகுதிகளுக்குச் சேதத்தை ஏற்படுத்துகின்றன மற்றும் கால்நடைகள் அதன் விளைவாகச் சில புற்களைத் தவிர்க்கின்றன. மற்ற கால்நடைத் தீவனங்களை விட ஒரு ஏக்கரில் அதிகப் புரதம் மற்றும் ஸ்டார்ச் சமமான இயற்ப்புற்களால் உற்பத்தி செய்யப்படுகிறது. மேய்ச்சல் நிலத்தில் அதன் இயல்புத் தன்மை மாறாமல் இருந்தால் அவற்றில் இருந்து கால்நடைகளுக்கு 15% புரதச் சத்தும், 66% மாவுச்சத்தும் சமமாக இருக்கும்.

பின்னுரை

தமிழ்ச் செவ்விலக்கிய நூலான நெடுநல்வாடையில் வரும் பாடல் பின்வருமாறு,

“பணை நிலை முனைஇய பல் உளை புரவி
புல் உணா தெவிட்டும் புலம்பு விடு குரலொடு” - (நெடு. 93,94)

(கொட்டிலில் நிற்பதை வெறுத்த நிறைந்த பிடரிமயிரையுடைய குதிரைகள் புல்லாகிய உணவை வாய் நிறைய மெல்லும்போது ஏற்படும் தனிமை அமைதியைக் கெடுக்கும் ஓசையோடு).

வளர்ப்புக் கால்நடைகளும் மேய்ச்சலை அதிகம் விரும்புவை அதற்கு இப்பாடல் பொருத்தமானதாக அமைகிறது.

புற்கள் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் கால்நடைகளுக்கு ஒரு உணவின் ஆதாரமாக மாறிவிட்டது. தமிழ்நாட்டில் கால்நடை வளம் பெருகும் அதே வேளையில் புல்வெளி நிலங்கள் குறைந்துவருவது கவலை அளிப்பதாக உள்ளது. அரசு நிறுவனங்கள் பெரும்பாலும் வளர்ச்சி திட்டங்களுக்காகக் கையகப்படுத்துவது முதலில் இது போன்ற வறள் புல்வெளிகளைத்தான். மாடுகள் வளர்ப்பு முறைகள் பெரும்பாலும் கொட்டிலில் சார்ந்தே வருவது மாடுகளுக்கும் உகந்தாக அமையாது, ஏனெனில் பல வகையான புற்களை உண்டு வரும் தொடர்ச்சி காலம் காலமாகத் தொடர்ந்து வரும் ஒரு நீடித்த செயல்பாடு ஆகும். ஆனால் இன்று கால்நடைகளுக்கு நாம் கொடுக்கும் தீவனம் அதிகபட்சமாக இரண்டு அல்லது மூன்று புற்களை (co4, napier and P. maximum) மட்டுமே சார்ந்ததாக இருக்கிறது. இதனை ஈடு செய்வதற்காக நாம் உலர் தீவனங்களை மட்டும் நம்பி இருப்பது என்பது பன்னெடுங்காலமாகத் தற்சார்புப் பொருளாதாரமாக இருந்த கால்நடை வளர்ப்பு வருங்காலங்களில் பெரும் உலர் தீவன நிறுவனங்களைச் சார்ந்த நிலைக்குத் தள்ளப்படுவது அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தி மக்களை வேளாண்மை நிலையிலிருந்து அப்புறபடுத்திவிடும்.

தற்சார்பியம் தான் மாந்த குலத்தின் அடிப்படையான பொருளாதார மற்றும் நீடித்த வளர்ச்சிக்கு இட்டுச் செல்லும் அவையே உயிர்மநேயத்திற்கும் வழிவகுக்கும். அதற்கு புற்களையும் புல்வெளிகளையும் பாதுகாப்பது நாம் ஒவ்வொருவரின் அடிப்படைக் கடமையாகும்.

அட்டவணை எண் 1:
இயற் தீவனப் புற்கள் (Native fodder grasses)

வ. எண்	தாவரவியல் பெயர்	வழக்குப் பெயர்	வாழ்விடம்	நிகழ்வியல்	இயற்/அயல் புற்கள்
1	Acrachne racemosa (Heyne ex Roth) Ohwi	கடுகப்பை	புதர்க்காடு, மேய்ச்சல் நிலங்கள்	மார்ச் – டிசம்பர்	இயற்புற்கள்
2	Andropogon pumilus Roxb.	காவட்டம்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஏப்ரல் – மே	இயற்புற்கள்
3	Apluda mutica L.	பொசுகுப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
4	Aristida setacea Retz.	துடைபம்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
5	Arundo donax L.	கொறுக்கைப்புல்	நீர்நிலைகள்	ஜூலை – மார்ச்	இயற்புற்கள்
6	Bothriochloa pertusa (L.) A. Camus	சின்னக் -காரைப் புல்	மேய்ச்சல் சமவெளிகள்	செப்டம்பர் – ஜூன்	இயற்புற்கள்
7	Brachiaria ramosa (L.) Stapf.	அரிசிப் புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஏப்ரல் – மே	இயற்புற்கள்
8	Brachiaria reptans (L.) Gard. & Hubbard	கம்பம்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஜூலை – மார்ச்	இயல்பாக்கப் பட்டது
9	Cenchrus ciliaris L.	கொழுக்கட்டைப் புல்	மேய்ச்சல் நிலங்கள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்

10	Cenchrus setigerus Vahl.	கொழுக்கட்டைப் புல்	மணல் பகுதிகள்	ஜூன் – ஜனவரி	இயற்புறக்கள்
11	Chloris barbata Sw.	குடைப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
12	Chrysopogon fulvus (Spreng) Choiv.	மஞ்சம்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆகஸ்ட் – மே	இயற்புறக்கள்
13	Cynodon barberi Rang & Tad.	ஆண்கட்டைப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஜூன் – பிப்ரவரி	இயற்புறக்கள்
14	Cynodon dactylon (L.) Pers.	அருகம்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
15	Dactyloctenium aegyptium (L.) Willd.	மதங்கைப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
16	Dichanthium annulatum (Forssk.) Stapf	கணு ரோமப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	மே – பிப்ரவரி	இயற்புறக்கள்
17	Digitaria ciliaris (Retz.) Koeler	அரிசிப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
18	Echinochloa crus - galli (L.) P. Beauv var. crus - galli	ஊத்துப்புல்	விளை நிலங்கள், மேய்ச்சல் நிலங்கள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
19	Echinochloa frumentacea Link	குதிரைவால் புல்	தரிசு நிலங்கள்	ஜூன் - ஜனவரி	இயற்புறக்கள்
20	Echinochloa oryzoides (Ard.) Fritsch	நெல்லுக்குச் சக்களத்தி புல்	விளை நிலங்கள்	ஜூன் - மார்ச்	இயற்புறக்கள்
21	Echinochloa colona (L.) Link	வர்சனம்புல் (அல்லது) சாணிப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
22	Eleusine coracana (L.) Gaertn.	ராகி, கேப்பை	மேய்ச்சல் சமவெளிகள்	ஜூலை - நவம்பர்	இயற்புறக்கள்
23	Eleusine indica (L.) Gaertn	திப்பை ராகி	வயல் வரப்புகள், மேய்ச்சல் நிலங்கள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
24	Enteropogon monostachyos (Vahl) Schum ex Engler	கண்ணைப் புல்	மலைப் பகுதிகள்	ஜூன் – மார்ச்	இயற்புறக்கள்
25	Eragrostiella bifaria (Vahl) Bor	ஊத்துப் புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆகஸ்ட் - மே	இயற்புறக்கள்



26	Eragrostis japonica (Thunb.) Trin.	குளத்துப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	நுழைக்கப் பட்டது
27	Eragrostis gangetica (Roxb.) Steud.	கங்கை புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
28	Eragrostis maderaspatana Bor	உவர்ப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆகஸ்ட் – மே	இயற்புற்கள்
29	Eragrostis tenella (L.) P. Beauv ex Roem. &Schultes var. tenella	பூம்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
30	Eragrostis viscosa (Retz.) Trin.	ஒட்டுப்புல்	மேய்ச்சல் சமவெளிகள் சமவெளிகள்	மே – மார்ச்	இயற புற்கள்
31	Eriochloa procera (Retz.) Hubbard	செங்கழுத்துப் புல்	மேய்ச்சல் சமவெளிகள் புல்வெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
32	Iseilema anthephoroides Hack.	அடர் தேங்காய் நார் புல்	ஆறுகள், ஓடைகள்	நவம்பர் – மார்ச்	இயற்புற்கள்
33	Iseilema prostratum (L.) Andersson	படர் தேங்காய் நார் புல்	ஈரமான பகுதிகள்	ஜூலை – மே	இயற்புற்கள்
34	Manisuris myuros L.	மனிப்புல்	மேய்ச்சல் சமவெளிகள் விளை நிலங்கள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
35	Ophiuros exaltatus (L.) Kuntze	களிமண் கிழங்கு புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
36	Oropetium thomaeum (L.f.) Trin.	குட்டைப்புல்	மணல் பகுதிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
37	Panicum psilopodium Trin.	கருஞ்சாமை புல், கோடைகனை	மேய்ச்சல் சமவெளிகள்	ஜூலை – மார்ச்	இயற்புற்கள்
38	Panicum trypheron Schultes	அடர் ரோமப்புல்	மேய்ச்சல் சமவெளிகள் ஈர நிலங்கள்	அக்டோபர்-ஜனவரி	இயற்புற்கள்
39	Paspalidium flavidum (Retz.) A. Camus	நிலழ்மணிப் புல்	ஆறுகள், குளங்கள்	மே-மார்ச்	இயற்புற்கள்
40	Paspalum scrobiculatum L.	வரகு	விளை நிலங்கள் மற்றும் தரிசு நிலங்கள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்
41	Perotis indica (L.) Kuntze var. indica	நரிவால் புல்	வயல்வெளிகள், மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புற்கள்

42	Saccharum arundinaceum Retz.	பேய்க்கரும்பு	ஆறுகள் மற்றும் ஓடைகள்	ஜனவரி – பிப்ரவரி	இயற்புறக்கள்
43	Saccharum spontaneum L.	நாணல்	ஆறுகள் மற்றும் ஓடைகள்	ஜூலை – ஏப்ரல்	இயற்புறக்கள்
44	Sehima nervosum (Rottl.) Stapf	குறவன் ஈட்டி புல்	பாறை மற்றும் மலைப் பகுதிகள்	ஜூலை – மார்ச்	இயற்புறக்கள்
45	Setaria italica (L.) P. Beauv	தினை	மேய்ச்சல் சமவெளிகள்	அக்டோபர்-ஜூன்	இயற்புறக்கள்
46	Setaria pumila (Poir.) Roem. & Schultes	கோரைப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
47	Setaria verticillata (L.) P. Beauv	ஒட்டுப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்
48	Sorghum bicolor (L.) Moench. Meth.	சோளம்	வயல் வெளிகள்	நவம்பர் - மார்ச்	இயற்புறக்கள்
49	Sporobolus coromandelianus (Retz.) Kunth	காணிகல் விதைப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஜூன் – மார்ச்	இயற்புறக்கள்
50	Trachys muricata (L.) Pers ex Trin.	வெண்ணைத் திரட்டிப்புல்	மேய்ச்சல் சமவெளிகள்	ஆண்டு முழுவதும்	இயற்புறக்கள்

நெறிதுணை நூல்கள்

1. Bor, N. L. 1960. The Grasses of Burma, Ceylon, India and Pakistan. Pergamon Press, London, 767 pp.
2. Kabeer, K. A. A. & Nair, V.J. 2009. Flora of Tamil Nadu - Grasses. Botanical Survey of India, Kolkata, 525 pp.
3. பாமயன். 2019. உணவு என்பது நிலத்தோடு நீரே. சென்னை, தமிழினி.
4. சிவத்தம்பி, கா. 2017 பண்டையத் தமிழ்ச் சமூகம், சென்னை என்.சி.பி.எச்.
5. கிருஷ்ணமூர்த்தி கு.வி. 2007. தமிழரும் தாவரமும். திருச்சிராப்பள்ளி: பாரதிதாசன் பல்கலைக்கழகம்.
6. பக்தவச்சல பாரதி. 2021. சங்ககாலத் தமிழர் உணவு. நாகர்கோயில், காலச்சுவடு.

உள்ளூர் மாட்டினங்களின் இருப்பை உறுதி செய்வது எப்படி? – சில உயிர்ப்பான வழிமுறைகள்

முனைவர் கி. ஜெகதீசன்
jagadeesankrishnan2@gmail.com

இந்தியாவில் காணும் மாட்டினங்களை உள்ளூர் மாட்டினங்கள், சீமை மாட்டினங்கள் மற்றும் கலப்பின மாட்டினங்களென முப்பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். நாம் கவலைப்பட வேண்டியது உள்ளூர் மாட்டினங்களை அழிவிலிருந்து பாதுகாப்பது எப்படி என்பதைப் பற்றித் தான். கலப்பின மாடுகள் மக்கள் பயன்பாட்டில் உள்ளதால் அவைகளைப்பற்றி அதிகமாகக் கவலைக் கொள்ள வேண்டாம். உள்ளூர் மாட்டினங்கள் வேளாண்மை, போக்குவரத்து மற்றும் கலாச்சாரம் சார்ந்து பிரசித்தி பெற்றிருந்தாலும் அவைகளின் பயன்பாடுகளை இன்றைய இயந்திரமயமாக்கல் வெகுவாகப் பறித்துக் கொண்டுவிட்டன. மனித வாழ்க்கையே வர்த்தகமாகிப் போன இன்றைய சூழலில் வேலையிழந்த உள்ளூர் மாட்டினங்களை வளர்ப்பதென்பது பொருளாதார அடிப்படையில் கையைக் கடிக்கும் ஒரு சிக்கலாகிவிட்டது. ஒரு பக்கம் கலப்பினச்சேர்க்கை, அதிக பால் உற்பத்தி, வருமானம், வாழ்க்கை என்ற ஒரு நிலை… மறுபக்கம் இயந்திரமயமாக்கல், தொழில்நுட்பம் மிகுந்த பண்ணை முறைகள், சுருங்கிவரும் மேய்ச்சல் நிலங்கள், குறைந்து வரும் உள்ளூர் மாடுகள் என்ற மற்றொரு நிலை… இந்த இரண்டிற்குமிடையே ஒரு சமநிலையை உறுதி செய்யும் பொருட்டுச் சிக்கித்தவிப்பது வேளாண்குடிகள் மட்டுமல்ல துறைசார் அறிஞர்களும் தான். இந்த பின்புலத்தில் உள்ளூர் மாட்டினங்களை அழிவிலிருந்து மீட்டெடுக்கும் வழிமுறைகளைப் பற்றி அலசுவது அவசியமாகிறது.

மாட்டினங்களின் பூர்வீகத்தில் பண்ணைகளமைத்துப் பாதுகாத்தல்

ஒவ்வொரு உள்ளூர் மாட்டினத்தின் பூர்வீக இடத்திலும் உள்ளூர் மாட்டின பண்ணைகளை அமைத்து இனவிருத்தி செய்து அவைகளின் இருப்பை உறுதி செய்வது ஒரு வழிமுறை. பண்ணை அமைக்கவும், பராமரிக்கவும் அதிகம் செலவிட வேண்டியிருக்கும். வணிக அடிப்படையில் உள்ளூர் மட்டினங்களைப் பயன்படுத்தாத வரையில் இவைகளிலிருந்து இலாபத்தைப் பார்க்க முடியாது. ஆகவே தான் இவ்வழி முறையை அரசாங்கத்தால் மட்டுமே கைக்கொள்ள முடியும். தமிழக அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள சத்தியமங்கலத்திலுள்ள காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், அந்தியூரிலுள்ள பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம், மானாமதுரையிலுள்ள புலிக்குளம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், கொருக்கையிலுள்ள உம்பளச்சேரி மாட்டினப் பண்ணை போன்றவை இவ்வழி முறைக்குச் சில எடுத்துக்காட்டுகள் ஆகும். தனிமனிதர்களோ, வேளாண்குடிகளோ இவ்வழிமுறையை மேற்கொள்ளும் போது நஷ்டத்திற்கு உள்ளாவது உறுதி. அரசு சாராத அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சில இடங்களில் கைக்கடிக்கு உள்ளாகாமல் உள்ளூர் மாட்டின பண்ணைகளை நடததிவருவதையும் பார்க்க முடிகிறது.

அரசாங்கத்திற்கு இலாபத்தை விட சேவையே பிரதானமாக இருக்க வேண்டும் என்பது ஏட்டளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் களத்தில் அவ்வாறு இருப்பதில்லை. ஆகவே துறைசார் வல்லுநர்களுக்கு உள்ளூர் மாட்டினங்களை அழிவிலிருந்து மீட்டெடுப்பதில்

நிரந்தர சவால் இருந்துக்கொண்டே தான் இருக்கிறது. எந்தப் பிரச்சினை உள்ளூர் மாடுகளை வணிக அடிப்படையில் வெற்றி பெறுவதைத் தடுக்கிறது? என்பதை வேர்வரை ஆய்ந்தறிந்து களையெடுப்பது அவசியமாகிறது. அப்படிப் பார்க்கும் போது குறைந்த பால் உற்பத்தி மரபணுத்திறன், மாடுகளை பால் எனும் ஒற்றைப் பயன்பாட்டுக்காக மட்டுமே பார்க்கும் மனபோக்கு, மாட்டினங்களை வகைப்படுத்தி விட்டு அவைகளிலிருந்து கிடைக்கப்பெறும் பாலை வகைப்படுத்திச் சந்தைப்படுத்தாமல் இருக்கும் நிலை, சுருங்கிக் கொண்டே வரும் பிரத்தியோக மேய்ச்சல் நிலம், உள்ளூர் மாட்டின வளர்ப்போர் சங்கம் இல்லாத நிலை, கிடைமாடு வளர்ப்போர்களுக்கான பிரத்தியோக நலத்திட்டங்கள் இல்லாத நிலை போன்ற சில பிரச்சினைகள் களையப்பட வேண்டியவையாகும்.

உள்ளூர் மாட்டினங்களின் பால் உற்பத்திக்கான மரபணுத் திறனை மேம்படுத்தல்

இது மிக நீண்ட காலம் தேவைப்படும் ஒரு திட்டமாகும். ஏனென்றால் இது மாட்டினங்களின் மரபணுக்களை மாற்ற எத்தனிக்கும் ஒன்றாகும். இதற்குச் சில நூறு எண்ணிக்கையில் பசுக்களைக் கொண்ட பண்ணைகளும், பல எண்ணிக்கையிலான பொலிக் காளைகளும் தேவைப்படும். இத்திட்டம் வெற்றிகரமாக அமைவதென்பது இப்பண்ணைகளில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் தரத்தைப் பொருத்து அமைகிறது. பண்ணையில் தினசரி, வார மற்றும் மாதந்தோறும் செயல்படுத்த வேண்டிய செயல்திட்டங்களைத் தீட்டிச் செவ்வனே நிறைவேற்றுவதை உறுதி செய்ய வேண்டும். செயல்படுத்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் பதிவேடுகளில் முறையாகப் பதிய வேண்டும். பதிவேடுகள் முறையான ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு ஒவ்வொரு பசு மற்றும் காளையின் பால் உற்பத்திக்கான மரபணுத்திறனை கணக்கீடு செய்ய வேண்டும். இப்படி உற்பத்திக்கான மரபணுத் திறன் கணக்கீட்டின் அடிப்படையில் பசுக்களும், காளைகளும் தேர்வு செய்யப்பட்டு இனவிருத்தி முறைகளுக்கு உட்படுத்தப்பட்டு அடுத்தடுத்த சந்ததிகளை உற்பத்தி செய்ய அனுமதிக்கும் போது சந்ததிகளின் உற்பத்தித் திறன் படிப்படியாக மேம்படுத்தப்படுகிறது. இன்றைய நிலையில் தமிழக மாட்டினங்களின் சராசரி பால் உற்பத்தி நாளொன்றுக்கு 2.5 முதல் 3.5 லிட்டர் ஆகும். இதை இத்திட்டத்தின் மூலம் இரட்டிப்பாக்க குறைந்தது ஆறேழு தலைமுறைகள் தேவைப்படும். மாட்டைப் பொருத்தவரை ஒரு தலைமுறை என்பது நாலரை முதல் ஐந்தாண்டுகள் ஆகும். அப்படிப் பார்த்தால் இத்திட்டத்திற்கு 30 முதல் 35 ஆண்டுகள் வரை தேவைப்படும். 35 ஆண்டுகள் ஒரு திட்டதை ஒரே குறிக்கோளுடன் செவ்வனே செயல்படுத்துவதிலுள்ள களப்பிரச்சினைகளை உங்கள் பார்வைக்கே விட்டுவிடுகிறேன். போதுமான உள்கட்டமைப்பு வசதி, போதிய ஆள் வசதி, நிதி ஆதாரம், தெளிவான கொள்கை போன்ற சில விடயங்களை உறுதி செய்வதில் தான் இத்திட்டத்தின் வெற்றி அடங்கியுள்ளது.

உழவு மாட்டினங்களை இறைச்சி மாட்டினங்களாக வகைப்படுத்தப்பட வேண்டும்

அடிப்படையில் பால் என்பது மாட்டிலிருந்து கிடைக்கப்பெறும் ஓர் உபப்பொருளேயாகும். காட்டு மாட்டை வேட்டையாடி கட்டிப்போட்டு வீட்டு மாடாக மனிதன் மாற்றியதற்கான முதன்மையான காரணம் பால் கறப்பதற்காக அல்ல… மாறாக காளைக்கன்றுகளைப் பழக்கப்படுத்தி நிலத்தை உழுது வேளாண்மை செய்வதேயாகும். பசுக்களுக்குக் கன்றுகளை ஈனுவதும், காளைகளுக்கு நிலத்தை உழுவதுமே தலையாய பயன்பாடுகளாய் இருந்தன. பால் உற்பத்தி என்பது கன்றுக்குட்டி குடித்தது போக எஞ்சியிருந்ததே ஆகும். சாணமும், மூத்திரமும் புற்களையும், தண்ணீரையும் தந்த நிலத்திற்கு மாடுகளால் திருப்பிச்செலுத்தப்படும் ஒரு பிரதிபலனே ஆகும். ஆதியில்

மனிதகுலம் புரதத் தேவைக்காக விலங்குகளை வேட்டையாடியதை மறுப்பதற்கில்லை. மதங்கள் இம்மண்ணில் தோற்றுவிக்கும் வரையில் மாடுகள் இறைச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததை வரலாறெங்கிலும் காணலாம். உணவுக்காக ஒரு உயிரினம் மற்றொன்றைக் கொல்லும் போது அது கொல்லப்படும் உயிரினத்தை முற்றாக அழித்துவிடாது என்ற பேருண்மையை ‘உணவுச்சங்கிலி’ அறிவியலைக் கற்றறிந்தோர்கள் அறிவார்கள். மாறாக உணவுச்சங்கிலியில் உயிரினம் மற்றொன்றைக் கொல்லுவதும், மற்றொன்றால் கொல்லப்படுவதும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உயிரினங்களுக்கிடையே ஒருவித சமநிலையைத் தான் உறுதி செய்யும். அப்படித்தான் பல்லுயிர் இனங்கள் தங்களின் இருப்பை இப்பூமியில் உறுதி செய்து கொள்கின்றன.

இந்த உண்மையைப் பின்புலமாக அமைத்துக் கொண்டு தற்போது வேலையிழந்து பரிதவிக்கும் உழவு மாட்டினங்களை இறைச்சிக்காக ஏன் பயன்படுத்தக் கூடாது? புரதப்பற்றாக்குறை மிகுதியாக உள்ள நம் மக்களுக்காக இந்த ஓர் அரிய வாய்ப்பை நாம் ஏன் முழுமையாகப் பயன்படுத்தக் கூடாது? மாடுகளை பால் சார்ந்தும், உழவு சார்ந்தும் வகைப்படுத்த தெரிந்த நமக்கு அவைகளை இறைச்சி சார்ந்து வகைப்படுத்த தவறியது ஏன்? இன்றளவும் அவைகளை உழவு மாடுகளென்றும், உதவாக்கரை மாடென்றும் கற்பிக்கப்படுவதன் உள்நோக்கம் தான் என்ன? உலகத்திலேயே ஆகச்சிறந்த உழவு மாடுகள் தென்னிந்தியாவில் தான் காணக்கிடக்கிறது எனப் பெருமைக்கொள்ளும் நமக்கு உழவு இயந்திரம் வாங்குவதற்கு வங்கிகளில் எளிதாக மானியமும், கடனும் கிடைக்கிறதே? ஏன்? எப்படி? தானிய உற்பத்திக்காகப் பசுமைப்புரட்சியில் இயந்திரங்களையும், பால் உற்பத்திக்காக வெண்மைப்புரட்சியில் கலப்பினச் சேர்க்கையையும் கைக்கொண்ட நாம் இறைச்சி உற்பத்திக்கான இளஞ்சிவப்பு புரட்சியில் உழவு மாடுகளைப் பயன்படுத்தாமல் விட்டது ஏன்? (பிரேசில் நாட்டின் மாட்டிறைச்சி உற்பத்தியில் ஆந்திராவின் நெல்லூர் மாட்டினத்தின் பங்கை நம்மைத் தவிர உலகமே அறியும்). உள்ளூர் மாட்டினங்களை ஆட்டினங்களைப் போல இறைச்சிக்காகப் பயன்படுத்துவதை ஊக்குவித்தால் ஆட்டினங்களைப் போல மாட்டினங்களும் அழியாமல் இருக்கும் தானே? இதைச் செய்வதற்குப் பெரிதாக என்ன தேவைப்படுகிறது? அறிவியல் அடிப்படையிலான விழிப்புணர்வும், அரசியலமைப்பு அடிப்படையிலான கொள்கை மாற்றங்களும் தானே? உள்ளூர் உழவு மாட்டினங்களை இறைச்சிக்காக பயன்படுத்தப்படும் போது அவைகள் தங்களைத் தாங்களே வணிக ரீதியாக நிலைநிறுத்திக்கொள்ளும். அவைகளின் குறைந்த பால் உற்பத்தி மரபணுத் திறனைக் குற்றம் சொல்லி அவைகளை கலப்பினப்பசுக்களாக மாற்றப்பட வேண்டிய கட்டாயமும் ஏற்படாது. உள்ளூர் மாட்டின வளர்ப்போர்களுக்கும் வருமானம் கிடைக்கும். பொதுமக்களுக்கும் விலங்கினப் புரதம் குறைந்த விலையில் கிடைக்கும். ஒற்றைக் கல்லில் இரட்டை மாங்காயல்லவா தரும் இந்தத் திட்டம். இங்கு மாற்றப்பட வேண்டியது மாட்டின் இனத்தையல்ல... மனிதனின் மனதைத் தான்... சிந்திப்போம்.

உள்ளூர் மாட்டினங்களின் பெயரிலேயே அவைகளின் பாலும் சந்தைப்படுத்தப்பட வேண்டும்

வண்ணமயமான உள்ளூர் மாட்டினங்கள்... ஒவ்வொரு மாட்டினத்திற்கும் பலப்பல வரலாறு... ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெருமை... இவையனைத்தும் கொண்டாடப்பட வேண்டியதே... ஆனால் இவைகளிடமிருந்து பெறப்படும் பாலில் மட்டும் வித்தியாசம் பாராமல் அனைத்தும் ஒன்றெனக் கருதி பொத்தாம் பொதுவாகப் “பால்” என வணிகம் செய்வது எப்படிச் சரியாகும்? சேலத்து மாம்பழமும், அல்போன்சா மாம்பழமும் ஒன்றா? சீரக சம்பா அரிசியும், பாசுமதி அரிசியும் ஒன்றா? நாட்டினப் பசும்பாலும், கலப்பினப் பசும்பாலும் ஒன்றா? நுகர்வோர்களுக்குக் காங்கேயம் மாட்டினத்தின் பாலையும், புலிக்குளம் மாட்டினத்தின் பாலையும், உம்பளச்சேரி மாட்டினத்தின் பாலையும் தனித்தனியாக விற்பனை செய்யும் போது அந்தந்த மாட்டினத்தின் ஆதரவாளர்கள் கூடுதல் பணம் கொடுத்தாவது சுவைப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படும் தானே? இன்று சந்தையில் கிடைக்கும் பாலை பசுமாட்டுப்பால் எருமைப்பசு மாட்டுப்பால் எனக் கூட பிரிக்க முடியவில்லை. இது நுகர்வோரின் உரிமைக்கு எதிரானதல்லவா? இந்த பிரச்சினையை எப்படிக் களைவது? கிராமங்களில் பாலை கொள்முதல் செய்வதில் தொடங்கி குளிர்வித்தல், கொழுப்பு தரநிர்ணயம் செய்தல், பைகளில் அடைத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பது வரை அனைத்தும் அந்தந்த உள்ளூர் மாட்டினத்தின் பூர்வீகப்பகுதிகளில் பிரத்தியோகமாக நடைபெற வேண்டும். உள்ளூர் மாட்டினத்திலிருந்து பெறப்பட்ட பாலிலிருந்து தயாரிக்கப்படும் பால் பொருட்களுக்குச் சில தனித்தன்மைகள் இருப்பது உறுதி செய்யப்படும் பட்சத்தில் புவிசார் குறியீடுகள் கிடைக்கவும் வாய்ப்புள்ளது. இப்படி எதிர்காலச் சாதகங்களும், வாய்ப்புகளும் ஏராளம். இத்திட்டத்தை அமல்படுத்த ஆரம்பத்தில் கணிசமான அளவில் முதலீடுகள் தேவை. ஆரம்பத்தில் இலாபத்தின் அளவு மிகக் குறைவாக இருக்கலாம். ஆனால் உள்ளூர் மாட்டினங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் பாலின் அளவு கால ஓட்டத்தில் அதிகமாகும் போது உள்ளீட்டுச் செலவினங்களைக் கணிசமாகக் கட்டுக்குள் கொண்டுவரலாம். மேலும் பெருநகர மக்களிடையே நாட்டுமாட்டுப் பாலுக்கு ஒருவித கிராக்கி உள்ளது. அவர்கள் சற்று கூடுதலானப் பணத்தைச் செலவு செய்ய தயாராகவே உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உள்ளூர் மாட்டினங்களின் பெயரையே அவைகள் உற்பத்தி செய்யும் பாலுக்கும் விற்பனை பெயராக கொள்ளுதல்

(Making Breed’s Name Itself as Brand Name For Its Respective Milk)

இப்படி நாட்டுமாட்டுப்பாலைப் பிரத்தியோகமாகக் கொள்முதல் செய்து சந்தைபடுத்துவதன் மூலம் கிடைக்கும் லாபத்தை உள்ளூர் மாட்டின வளர்ப்போர்களுக்கு மீண்டும் பகிர்ந்தளிப்பதன் மூலம் அவர்கள் நாட்டின மாடுகள் வளர்ப்பதை

ஊக்குவிக்கலாம். அரசாங்கம் இத்திட்டத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினால் போதும்... மீதியை உள்ளூர் சந்தை தீர்மானித்துக் கொள்ளும். உழவு மாட்டினங்களை இறைச்சிக்காகப் பயன்படுத்த முடியாத சூழலில் இந்த வாய்ப்பையாவது நாம் கைக்கொள்வது தான் புத்திசாலித்தனம்.

கிடைமாடு வளர்ப்போர்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தல்

நாட்டின மாடுகள் எண்ணிக்கையில் குறைந்து வருகிறது. இவைகளில் பெரும்பாலானவை கிடைமாடுகளாய் உள்ளன. கிடைமாடுகள் ஊர் ஊராய்த் திரிந்து மேய்பவை. நாடோடிகளாய் பிழைப்பது. அவைகளை மேய்ப்பதையும், பராமரிப்பதையும் மேற்கொள்பவர்கள் யாரென்றால் குலத்தொழிலாக நாட்டின மாடு வளர்ப்பை கடைபிடித்துவரும் ஒரு சில சமூகத்தைச் சார்ந்தவர்களே ஆவர். அவர்களின் தியாகத்தின் விளைவே இன்றளவும் நாம் காணும் நாட்டின மாடுகள். புறம்போக்கு நிலமும், அறுவடைக்குப் பிந்தைய விளைநிலமும், ஆற்றுப் படுகைகளும், குளம் குட்டை உள்ளிட்ட பொது நீர் நிலைகளுமே அவர்களின் வாழ்வாதாரம். வறட்சி காலங்களில் அவர்களின் பாடு திண்டாட்டம் தான். பெரும்பாலான நேரங்களில் அரசாங்கத் திட்டங்களிலிருந்து அவர்கள் விடுபட்டே இருக்கிறார்கள் என்பதே வருத்தத்திற்குரிய களநிலவரம். அவர்களைப் பொருத்தவரை மந்தை என்பது மட்டுமே அவர்களின் சொத்து. மாடுகளை அவர்கள் வணிகத்திற்கான ஒன்றாகப் பார்ப்பதில்லை. அதற்காக அவர்கள் மாடுகளை விற்கமாட்டார்கள் என்பது பொருளல்ல. தேவையேற்படும் போது மட்டுமே அரிதாக விற்பார்கள். கூடுமான வரை தங்களின் மாடுகளை மற்றொரு மந்தையாளரிடம் தற்காலிகமாக விற்று மீண்டும் பணத்தைச் செலுத்தி மீட்டுக்கொள்வார்கள்.

கிடை மாடுகளாய் திரியும் உள்ளூர் மாட்டின மந்தைகள்
(Indigenous Breeds as Nomadic Herds)

மாட்டை வணிகத்திற்காக வளர்க்காமல் வாழ்வாதாரத்திற்காக மட்டுமே வளர்க்கும் உன்னத கலாச்சாரத்திற்கு உரியவர்கள் அவர்கள். போற்றுதலுக்கு உரியவர்கள். அவர்கள் ஒரு போதும் வணிகத்திற்காகப் பாலைக் கறப்பதிலை. அவர்கள் காளையையும் பசுக்களையும் கன்றுகளையும் ஒரு போதும் பிரித்து வைத்துத் தனிக்குடித்தனம் நடத்த வற்புறுத்துவதில்லை. பசு பருவத்திற்கு வந்துள்ளதா? கோழை வடிந்துள்ளதா? என்றெல்லாம் அவர்கள் கவலைக் கொள்வதில்லை. அவர்களுக்குத் தெரியும் அந்த சங்கதிகளெல்லாம் அவர்களின் வேலையில்லை... அது காளையின் வேலையென்று. பசுவின் குதத்தில் கையை விட்டுச் சினைபார்ப்பது... கன்றுக்குட்டி பிறக்கும் போது கோளாறு வந்தால் கையை விட்டுக் கருப்பையிலிருந்து கன்றை இழுத்து வீசுவது... இப்படி எதுவுமே அவர்கள் பின்பற்றுவதில்லை... அவர்கள் அறிவார்கள்

“வலியது மட்டுமே நிலைத்திருக்கும்” எனும் உயிரியல் கோட்பாட்டை! இப்படி தொழில்நுட்ப வாடையே இல்லாமல் தங்களது மந்தையில் வருடத்திற்கொரு கன்றை உறுதி செய்வார்கள் அந்த உத்தமர்கள். அவர்களை அழைத்து அவர்கள் கோரும் சில அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தாலே அவர்களிடமிருக்கும் உள்ளூர் மாட்டினங்களைப் பாதுகாக்க முடியும். மந்தைகள் மேய பிரத்தியோக மேய்ச்சல் நிலம் மற்றும் நீர் நிலை அமைப்புகளை ஏற்படுத்தி தருதல், மேய்ச்சல் சார்ந்து அருகிலிருக்கும் வனங்களைப் பயன்படுத்த முறையான அனுமதி பெற்றுதருதல், அவர்களை முறையாக கணக்கெடுத்து அவர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்குதல், மந்தைகளுக்கும் அதைப் பராமரிப்பவர்களுக்கும் இலவச காப்பீடுச் சேவை வழங்குதல் போன்ற சிலவற்றைச் செவ்வனே செய்வதன் மூலம் உள்ளூர் மாட்டினங்களின் இருப்பை உறுதி செய்ய முடியும்.

உள்ளூர் மாட்டினங்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட வனங்களை உருவாக்குதல்

மேற்சொன்ன எந்தவொரு வழிமுறைகளையும் செயல்படுத்த முடியாவிட்டால் குறைந்தபட்சம் இந்த ஒன்றையாவது செய்ய வேண்டும். அதாவது காட்டிலிருந்து கொண்டுவந்த மாட்டினங்களை மீண்டும் காட்டுக்கே கொண்டு சென்று விட்டு விடுவது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் சிங்கம், புலிக்குத் தற்போது உள்ளது போன்ற தனிமைப் படுத்தப்பட்ட பிரத்தியோக வனப்பகுதியை உள்ளூர் மாட்டினங்களுக்கும் பிரத்தியோகமாக உருவாக்குவதே ஆகும். அங்கு குறிப்பிட்ட உள்ளூர் மாட்டினத்தின் சில நூறு எண்ணிக்கையில் பசுக்களையும், சில பத்து எண்ணிக்கையில் காளைகளையும் ஒன்றாக விட்டு விட வேண்டும். வனத்தில் நீர் நிலைகள் இருப்பதை உறுதி செய்து கொள்வது அவசியம். மாடுகள் மழையிலிருந்தும் குளிரிலிருந்தும் தங்களைக் காத்துக்கொள்ள ஆங்காங்கே சில கொட்டகை அமைப்புகளை நிறுவ வேண்டும். வனத்தில் வேறு எந்த ஆபத்தான விலங்கினங்களும் இருக்கக் கூடாது என்பது மிக முக்கியமான ஒன்று. ஒரு முறை இதனைச் செய்து விட்டால் போதும். அதன் பின்னர் வருடம் தோறும் அவைகளின் எண்ணிக்கையைக் கண்காணித்து ஆய்விற்கு உட்படுத்தவது மட்டுமே நாம் மேற்கொள்ள வேண்டிய கடமை. வனத்தில் மாடுகளின் அடர்த்தி அதிகமாகும் போது அங்கிருந்து தேவையான எண்ணிக்கையில் வெளியேற்றி தேவைப்படும் ஆர்வலர்களுக்கு விற்கலாம். வனத்தில் பசுமை குறையும் போது பசுமையை மீட்டெடுக்கும் வகையில் தீவன மரங்களையும், பசு புற்களையும் அவ்வப்போது விதைக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் அன்றாடம் நாட்டின மாடுகளுக்குத் தீவனம் சார்ந்தும், பராமரிப்புச் சார்ந்தும் நாம் அதிகம் செலவு செய்யத் தேவையில்லை. மனிதன் மாட்டிலிருந்து விலகியிருக்கும் போதுப் பெரிதாக


உள்ளூர் மாட்டினங்களுக்கான தனிமைப்படுத்தப்பட்ட வனப்பகுதி
(Reserved Forest for Indigenous Cattle Breeds)

பிரச்சினைகளுக்கு உள்ளாகாது. ஆகையால் மருத்துவமும் பெரியதாக தேவைப்படாது. வனங்களில் சுதந்திரமாக உருப்பெருவதால் வலிமையான சந்ததிகள் உருவாகப் போவது உறுதி. இத்திட்டத்தில் ஒரே ஒரு குறை என்னவென்றால் அவைகளின் பால் உற்பத்தியோ அல்லது இறைச்சிப் பண்புகளோ மேம்படப்போவதில்லை என்பதே. நாட்டுப்புறத்தில் அவைகளின் இருப்பு கேள்விக்குறியாவதை விடக் காடுகளில் அவைகளின் இருப்பு உறுதியாவது நல்ல செய்தி தானே!



தமிழர் வாழ்வில் வளம் சேர்க்கும் மேய்ச்சல் நிலங்களும், மேய்ச்சல்காரர்களும்

டாக்டர் எம்.எஸ்.சரவணன் பி.வி.எஸ்ஸி.,எம்.ஏ,பிஜிடிசியம்.,எல்.எம்.இ.,
mssaravanan5@gmail.com

வளர்ப்பவருக்கு எந்தச் செலவும் வைக்காமல் தீவனத்தைத் தானே தேடி மேய்ந்து வளர்வது நாட்டு மாடுகள், நாட்டின ஆடுகளின் தனிச்சிறப்பு.பொதுவாக நாட்டு மாடுகள், ஆடுகள் தங்களுக்கான தீவனத்தேவையை மேய்ச்சல் நிலங்கள் மூலம் பெறுகின்றன. இவை மேய்ச்சலுக்கு செல்லும் போது மேய்ச்சல் நிலங்களில் காணப்படும் மருத்துவ குணமுள்ள பத்து முதல் பதினைந்து வகையான இயற்கைத் தாவரங்கள் இனம் கண்டு மேயும் தன்மை கொண்டவை. நாட்டின ஆடு மாடுகளுக்குத் தீவனம் தட்டுப்பாடின்றிக் கிடைப்பதை மேய்ச்சல் நிலங்கள் வளமாக இருப்பதை வைத்துத் தான் உறுதி செய்ய முடியும். எனவே மிஞ்சி இருக்கும் நாட்டு மாடுகளுக்கு, தீவனம் தரும் மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாத்துப் பராமரிப்பது முக்கியமானதாகும். சுற்று சூழலை பாதுகாக்கும் நாட்டின ஆடு,மாடுகளின் தேவையை உணர்ந்து கொண்டு,அவற்றுக்கான புதிய மேய்ச்சல் நிலங்களை உருவாக்க வேண்டும்.

மேய்ச்சல் நிலம் உருவான விதம்

பூமியில் மண் தோன்றிய காலம் தொட்டுப் பல்லாயிரக்கணக்கான செடிகள், கொடிகள், மரங்கள் தோன்றி பல்கி பெருகியுள்ளன. எத்தனை ஆயிரம் தாவரங்கள் இருந்தாலும் கால்நடைகள் அவற்றில் தங்களுக்குப் பொருத்தமான தீவனத்தை தேடி மேய்ந்து உண்கின்றன. இப்படி உண்ணப்பட்ட தாவரங்களின் விதைகள் கால்நடைகளின் வயிற்றில் பதபடுத்தப்பட்டுச் சாணம் வழியாக வெளியேறி வந்து நிலத்தில் விழுந்து மீண்டும் முளைத்துப் பயிராக மீண்டும் கால்நடைகளுக்கு உணவாகின்றன. இயற்கையான முறையில் மண், தாவரம், விலங்கினத் தொடர்பு உணவு சங்கிலியானது இயங்கி வருகிறது.

பொதுவாக, ஒரு நிலமானது அங்கு மேய வரும் கால்நடைகளின் சாணம்,கோமியம் மற்றும் மேய்ச்சலின் போது கால்நடைகளின் குளம்படியால் வளமாகிறது. இது தவிர மேய்ச்சல் கால்நடைகளின் வயிற்றில் உற்பத்தியாகும் கோடிக்கணக்கான நுண்ணுயிர்கள் சாணம் வழியாக வெளியேறி, மேய்ச்சல் நிலத்திற்கு வந்து பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கும் செயலில் ஈடுபடுகின்றன. இவ்வாறு பல நீண்ட காலங்களாக நாட்டின கால்நடைகளால் வளம் கூட்டப்பட்டு நிலங்கள், மிகப் பெரிய பயிர் பரப்பளவை கொண்ட மேய்ச்சல் நிலங்களாக உருவெடுத்துள்ளன. ஆடு, மாடு குதிரை மற்றும் பிற மேய்ச்சல் நில விலங்குகளை மனிதன் தன் தேவைக்காகப் பராமரிக்கத் தொடங்கிய போது மேய்ச்சல் கால்நடைகளுக்கு உணவளித்த மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாத்துப் பராமரிக்க ஆரம்பித்தனர்.

பாரம்பரிய தீவனப்பயிர்கள்

ஒரு மேய்ச்சல் நிலத்தில் மூலிகைகள், புற்கள், குறுஞ்செடிகள், மரங்கள் என்று பல்வேறு வகையான பயிர்கள் காணப்படுவதுண்டு. கால்நடைகள் விரும்பி உண்ணும் இந்தத் தீவனப்பயிர்கள் அந்த நிலத்தில் திடீரென்று முளைத்தது அல்ல. அவை பல

ஆயிரம் காலமாக அதே நிலத்தில் தங்களை நிலை நிறுத்திக் கொண்டிருப்பவை. இவற்றுக்கு உரங்களும் தேவையில்லை. இந்தப் பயிர்கள் பெரும்பாலும் பல்லாண்டு பயிராக இருந்து இவற்றின் விதைகள் அந்த மண்ணில் விழுந்து தொடர்ச்சியாக மீண்டும் மீண்டும் வளரும் இயல்பைப் பெற்றவையாக உள்ளன. இவை ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 டன் அளவுக்கு விளைச்சலை தருபவையாகவும் இருக்கின்றன. இந்தப் பயிர்களில் அனைத்து தாதுஉப்புக்களும்,வைட்டமீன்கள் உள்ளதால், இந்த மேய்ச்சல் நிலங்களில் வாழும் நாட்டின கால்நடைகள் உடல் ஆரோக்கியமாகவும் வலிமையானதுவாகவும் திகழ்கிறது.

அழியும் நிலையில் மேய்ச்சல் நிலங்கள்

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மேய்ச்சல் நிலங்களில் முக்கியத்துவத்தை அனைவரும் உணர வேண்டும்.பொதுவான மேய்ச்சல் நிலங்களைத் தனிநபர்கள் ஆக்கிரமித்து விளைநிலங்களாக மாற்றப்படுகின்றன. மேய்ச்சல் நிலங்களில் பல்லாண்டுகளாக இயற்கையாக வளரும் தாவரங்களைக் களைக்கொல்லி இரசாயன மருந்துகள் தெளித்து அழிக்கப்படுகின்றன. இதனால் மேய்ச்சல் நிலங்களில் உற்பத்தியாகும் பராம்பரிய தீவனப்பயிர்கள் பலவும் அழியும் நிலையில் உள்ளன. இதனால் மனிதர்களுக்குப் பலன் தரும் பல்வேறு தாவரங்கள் அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

பராம்பரிய தீவனத் தாவரங்கள்

மேய்ச்சல் நிலங்களில் காணப்படும் பல்வேறு பராம்பரிய தாவரங்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் திறன் பெற்றவை. உணவுப் பயிர்களை அழிக்கும் பூச்சிகளைக் கட்டுபடுத்தும் திறன் பெற்றவை. எனவே விவசாயின் தோழனாகத் திகழ்பவை. மருத்துவ குணம் வாய்ந்த தாவரங்கள் பல மேய்ச்சல் நிலங்களில் இயற்கையாக வளர்கின்றன. இத்தகைய அறிய தாவரங்கள் மேய்ச்சல் நிலத்தில் வளர மேய்ச்சல் நில நாட்டின கால்நடைகள் மிக அவசியமாகும்.

மேய்ச்சல் நில கால்நடைகள் மேய்ச்சல் நிலத்தின் மண் வளம் மற்றும் பராம்பரிய பயிர்கள் வளத்தைப் பாதுகாக்கின்றன. வளமான மேய்ச்சல் நிலங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்றன. மழை வளம் வேண்டுமெனில் மரங்களை வளர்ப்பது முக்கியம் என்பதை போல் மேய்ச்சல் நில பாதுகாப்பும் மிக முக்கியமாகும்.

நீராதாரங்கள் பாதுகாப்பு

கண்மாய், குளம், ஏரி, ஆறு போன்ற நீராதாரங்களைச் சுற்றிக் காணப்படும் இடங்கள் யாவும் மேய்ச்சல் நிலங்கள். இந்த மேய்ச்சல் நிலங்களில் ஆயிரக்கணக்கான சிறிய புல் வகை முதல் சிறிதும் பெரிதுமான தாவரங்கள் காணப்படுகின்றன. இந்த வகை மேய்ச்சல் நிலங்கள், நிலத்தின் மண் அரிப்பைக் கட்டுபடுத்தி நீராதாரங்களைப் பாதுகாக்கும் மகத்தான பணியைச் செய்கின்றன.

இந்த மேய்ச்சல் நிலங்களுக்கு மேயப்போகும் நாட்டின கால்நடைகள் அங்கிருக்கும் தண்ணீர் வற்றிய நீர்நிலைகளில் இறங்கி மேய்வது இயல்பானது. இவ்வாறு கால்நடைகள் மேய்ச்சலுக்குச் செல்லும் போது அந்த நீர்நிலைகளின் அடிப்பகுதி மண் கால்நடைகளின் குளம்படியால் பண்படுத்தப்பட்டு ஆழப்படுத்தப்படுகிறது. எனவே மேய்ச்சல் நில கால்நடைகளைக் காத்தால் நீராதாரங்கள் வளம் பெறும். நாட்டின கால்நடைகளைக் காக்க நீராதாரங்களையும், அவற்றைச் சுற்றி இருக்கும் மேய்ச்சல் நிலங்களையும் காப்பது முக்கியமானதாகும்.

வனங்கள் மற்றும் மலை மேய்ச்சல் நிலங்கள்

தமிழகத்தில் காணப்படும் வனங்கள், வனத்தை ஒட்டிய மேய்ச்சல் நிலங்கள், மலைகளைச் சுற்றி உள்ள மேய்ச்சல் நிலங்கள் மிகவும் செழுமையான தாவர வளரிடங்கள் என்று சொல்லலாம். பல்வேறு அரிய மூலிகைத் தாவரங்கள், மரங்களின் இருப்பிடமாக இந்த மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. இது போன்ற மூலிகை தாவரங்களை உண்பதால் தான் இப்பகுதியில் வாழும் நாட்டின மாடுகளில் சிறுநீர் சேகரிக்கப்பட்டு ஆயுர்வேத மருந்து உற்பத்தியில் பயன்படுத்தப்படுகிறது. வனங்கள் மற்றும் மலைகளுக்கு அருகில் உள்ள மேய்ச்சல் நிலங்கள் மற்றும் அங்குள்ள அரிய மூலிகைத் தாவரங்கள், மரங்கள் செழித்து வளர மேய்ச்சலுக்கு வரும் கால்நடைகளின் சாணம் மற்றும் சிறுநீர் உரமாகப் பயன்படுகிறது. பசுமை இல்ல வாயுக்களின் உற்பத்தியைக் குறைத்திட இந்த மேய்ச்சல் நிலங்கள் சிறந்த பங்காற்றுகின்றன. சுற்றுசூழல் மாசுபாட்டைக் குறைப்பதில் பெரும் பங்கு ஆற்றும் இத்தகைய மேய்ச்சல் நிலங்களையும் மேய்ச்சல் நம்பி வாழும் நாட்டின கால்நடைகளை காப்பது நமது அனைவரின் கடமையாகும்.

மேய்ச்சல் நில மக்கள்

மேய்ச்சல் நிலங்களில் நாட்டின ஆடு,மாடு,குதிரை,கழுதை வாத்து வளர்க்கும் தொழில் செய்பவர்களை மேய்ச்சல் நில மக்கள் அல்லது மேய்ச்சல்காரர்கள் என அழைக்கப்படுகிறார்கள். தமிழகத்தில் சங்க காலம் தொட்டு மேய்ச்சல் நில மக்கள் பல்வேறு கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களில் பராம்பரிய முறைப்படி வளர்த்து வருகின்றனர். கால்நடைகளை வாங்குவதற்கு, விற்பதற்கு, வளர்ப்பதற்கு மற்றும் இனப்பெருக்கம் செய்ய பராம்பரிய முறைகளைக் கடைபிடித்து வருகின்றனர். இதனால் பல்வேறு சுத்த வர்க்க நாட்டின கால்நடைகள் இவர்களால் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. மேய்ச்சலின கால்நடைகளை வளர்ப்பதில் நிபுணத்துவம் வாய்ந்த இவர்கள் கால்நடைகள் இனப்பெருக்கத்தில் பல்வேறு சட்ட திட்டங்களைப் பின்பற்றி வருகின்றனர். மேய்ச்சல் நில கால்நடைகளுக்கு வரும் பல்வேறு நோய்கள் மற்றும் பராம்பரிய சிகிச்சை முறைகளில் மேய்ச்சல் காரர்கள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களாக உள்ளனர்.

தற்போது இவர்களின் பராம்பரிய சிகிச்சை முறைகள் ஆவணப்படுத்தப்பட்டு, விஞ்ஞான முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு, பல்வேறு சிகிச்சை முறைகள் அனைத்துக் கால்நடை வளர்ப்போராலும் பின்பற்றப்படுகிறது. மேய்ச்சல் நிலங்களுக்குக் கால்நடைகளை கொண்டு செல்லும் இவர்கள், விளை நிலங்களில் கிடை அமைத்து விளை நிலத்தின் மண்ணுக்கு சாணம், சிறுநீர் போன்ற இயற்கை உரத்தைத் தந்து, குளம்புகளால் மண்ணைக் கிளறி, மண்வளத்தைப் பெருக்கும் முக்கிய பணியை மேய்ச்சல் நில கால்நடைகளைச் செய்ய வைக்கின்றனர். இதைக் கிடை அமைத்தல் என அழைக்கின்றனர்.

கிடை அமைத்தல் தொழில் மூலம் மேய்ச்சல்காரர்கள் விவசாய நிலங்களின் மண் வளத்தைப் பெருக்கி, மகசூலை அதிகரிக்கச் செய்து விவசாயிகள் அதிக லாபம் ஈட்டிட வழிவகை செய்து வருகின்றனர். மேய்ச்சல்காரர் கால்நடைகளின் சாணம் நல்ல இயற்கை உரம் என்பதால் மலர் தோட்டங்கள்,பழத் தோட்ட பண்ணையாளர்கள் விரும்பி வாங்கும் இயற்கை உரமாக உள்ளது. இன்றும் தமிழக பல்வேறு திருவிழாக்களில் அசைவ விருந்து நிகழ்ச்சிகளுக்கு மேய்ச்சல்காரர்களின் ஆடுகளே விரும்பி வாங்கப்படுகின்றன.

கிராமிய மண் மணம் மாற மேய்ச்சல் நில மக்கள் ஆடுகளுக்கு உருவாக்கப்பட்ட பனை ஓலையால் ஆன எளிய குடில்களில் வாழ்கின்றனர். மண் வளம் காக்கும், சுற்றுச்சூழலைக் காக்கும், பொதுமக்கள் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பூர்வகுடி மேய்ச்சல் நில மக்களைப் பாதுகாப்பது, அவர்களின் பண்பாடு கலாச்சாரத்தைப் போற்றி பாதுகாப்பது நமது நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும்.

தமிழ்நாடு அரசு திட்டங்கள்

மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் 25 - 50 ஏக்கர் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு, தரமான மேய்ச்சல் நிலங்களாக மாற்றும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேய்ச்சல் நில மக்கள் வளர்க்கும் நாட்டின மாடுகள், ஆடுகள் தொடர்பான அனைத்து விவரங்களும் ஆவணப்படுத்தப்பட்டு மத்திய அரசின் விலங்கு மரபணு வளங்களின் தேசிய பணியகத்தில் பதியப்பட்டு வருகின்றன. நாட்டின மாடு, ஆடுகளுக்கான ஆராய்ச்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் துவங்கப்பட்டு, நாட்டின கால்நடைகளின் வளம் பாதுகாக்க உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருகின்றன. 21வது கால்நடை கணக்கெடுப்புப் பணியில் மேய்ச்சல்காரர்கள் விபரம், வளர்க்கும் நாட்டின கால்நடைகளின் விபரங்கள் பதிவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது. இதன் மூலம் நாட்டின கால்நடைகள் வளர்க்கும் மேய்ச்சல்காரர்கள் விபரங்கள் முதன்முதலில் பதிவு செய்யப்பட உள்ளது. மேய்ச்சல்காரர்களுக்கான அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க இந்தக் கணக்கெடுப்பு உதவும்.

தேவையான எதிர்காலத் திட்டங்கள்

- **பாடத்திட்டங்களில் மேய்ச்சலிம்**
  இளைய தலைமுறையினர் எண்ணங்களில் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல்காரர்களின் முக்கியத்துவத்தை, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பத்தில் இவர்களின் முக்கியத்துவத்தைப் பதியவைக்க, பள்ளி பாடத்திட்டங்களில் மேய்ச்சலிம் குறித்து பாடங்களைச் சேர்க்க வேண்டும். மேய்ச்சலிசம் பற்றிய பட்டப்படிப்புகள் கலை கல்லூரிகளில், மற்றும் கால்நடை மருத்துவ கல்லூரிகளில் துவங்க வேண்டும்.
- **மேய்ச்சல் வழித்தடப் பாதுகாப்பு**
  இராமநாதபுரம் வெள்ளை செம்மறியாடு வழித்தடம் இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் பட்டுக்கோட்டை வரை பரந்து விரிந்து உள்ளது. இதே போல் புலிக்குளம் கிடை மாடு வழித்தடம் சிவகங்கை, மதுரை, விருதுநகர், தேனி என வழித்தட மேய்ச்சல் நிலம் பரந்து விரிந்து உள்ளது. உம்பளாச்சேரி, பர்கூர் மாடுகள் மேய்ச்சல் வழிதடங்கள் என இத்தகைய மேய்ச்சலின வழித்தட மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாக்க அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் இணைந்த கூட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். வழித்தட ஆக்கிரமிப்புகள் தடுக்கப்பட வேண்டும். இதனால் சுற்றுச்சூழல் மாசுபாடு பலமடங்கு குறையும். பல்லுயிர் பாதுகாப்பு மேம்படும். விவசாய உற்பத்தி மேம்படும். நீர்நிலைகள் அழிவில் இருந்து மீட்கப்படும்.
- **மேய்ச்சலிச வாரியம்**
  தமிழகம் முழுவதும் உள்ள மேய்ச்சல்நிலங்களைப் பாதுகாக்க, அவற்றை மேம்படுத்த மாநில அளவில் வாரியம் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தபடுவதன் மூலம் இயற்கை சார் உற்பத்தி பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட மேய்ச்சலிச உணவு பொருட்கள், மருந்து பொருட்கள் அனைவருக்கும் கிடைக்கும் நிலை உருவாகும். பராம்பரிய மேய்ச்சலின கால்நடைகளுக்கான சந்தைகள் புதுப்பிக்கப்பட்டு இணைய வழி விற்பனை தளம் துவங்க வாய்ப்புகள் உருவாகும். வெளிநாடுகளுக்கு மேய்ச்சல் நில கால்நடைகளின் உணவு பொருட்கள், மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி வாய்ப்புகள் உருவாகும்.

- **மேய்ச்சலிச சுற்றுலா**
  பராம்பரிய மேய்ச்சல் நிலங்கள், பராம்பரிய கால்நடைகளான ஆடு, மாடு, குதிரை, வாத்து, ஒட்டகம், கோழிகளைக் காணவும், அவற்றின் பயன்களை அறியவும் மேய்ச்சலின சுற்றுலா உதவும். மேய்ச்சல்காரர்களின் வாழ்வியல் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டிய எளிய பண்பாட்டு வாழ்க்கை முறை. அனைவருக்கும் நல்ல வாழ்வியல் சிந்தனைகளை, ஒழுக்க நெறிகளைக் கற்றுத்தர மேய்ச்சலிச சுற்றுலா முக்கியப் பங்காற்றும். பராம்பரிய மேய்ச்சலின கால்நடை சந்தைகளை சுற்றுலாவில் இணைப்பதன் மூலம் சந்தைகளின் விற்பனை அதிகரிக்கும். மேய்ச்சல்காரர்களின் வருமானம் அதிகரிக்கும்.
- **மேய்ச்சலிச தொழில் நிறுவனங்கள்**
  மேய்ச்சல்காரர்களை ஒருங்கிணைத்துக் கூட்டுறவு தொழில் நிறுவனங்கள் உருவாக்கபட்டு வருகின்றன. இத்தகைய தொழில் நிறுவனங்கள் மேய்ச்சல்காரர்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் அதிகம் உள்ள கிராமங்களில் துவங்கப்பட வேண்டும். இதன் மூலம் மேய்ச்சலிசம் தலைத்தோங்கும். இயற்கை மருந்து பொருட்கள் உற்பத்தி,கால்நடைகள் விற்பனை இதன் மூலம் வளர்ச்சியடையும். மேய்ச்சலிசம் இல்லாமல் ஒரு சமூகம் நீடித்த நிலையான வளர்ச்சியை எட்ட இயலாது. வளர்ந்த நாடுகளில் தொழில்துறை வளர்ச்சி முக்கியம் என்பதைப் போல மேய்ச்சலிசமும் முக்கியத் தொழிலாக அங்கிகரிக்கப்பட்டு, போதிய நிதி ஆதாரமும் பாதுகாப்பும் அளிக்கப்பட்டுள்ளதை நாமும் உணர்ந்து மேய்ச்சலிசத்தை வளர்ப்போம். பாதுகாப்போம். நீடித்த நிலையான சமுக வளர்ச்சிக்குத் துணை நிற்போம்.
- **நாளைய மேய்ச்சல் நிலப் பொருளாதாரம்**
  உலக வணிகமானது கார்பன் புட் பிரிண்ட் என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் கார்பன் தடம் அடிப்படையில் மேய்ச்சல் நிலப் பொருளாதார முறையில் இயங்க உள்ளது. கார்பன் தடம் பசுமை இல்ல வாயுக்கள் உற்பத்தி அடிப்படையில் கணக்கிடப்படுவதால், சுற்றுச்சூழலை மாசுபடுத்தி உற்பத்தியாகும் பொருட்கள் உலகமெங்கும் நிராகரிக்கப்பட்டு, விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்படும். மேய்ச்சல் நிலக் கால்நடைகள் பசுமை இல்ல வாயுக்கள் உற்பத்தியை கட்டுபடுத்துவதால், இந்த முறை கால்நடை வளர்ப்பு அதிக முக்கியத்துவம் பெரும். மேய்ச்சல் நிலக் கால்நடைகள் மூலம் உற்பத்தியாகும் பால், பால் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள், இறைச்சி மற்றும் இறைச்சி மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களுக்கு அதிகத் தேவை ஏற்படும்.

பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் மேய்ச்சல்காரர்களிடம் ஒப்பந்தம் செய்து உற்பத்தி பொருட்களை வாங்கும் நிலை உருவாகும். மேய்ச்சல் நிலம் அதிகமுள்ள மாநிலங்கள் பொருளாதார வளர்ச்சியில் பல மடங்கு உயரும். தொழிற்சாலை துவங்க அரசு வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்யும் நிலைமாறி, இயற்கை விவசாயம் செய்ய நமது நாட்டுடன் பிற நாடுகள் ஒப்பந்தம் செய்யும் நிலை ஏற்படும்.

“கொரங்காடு” மேய்ச்சல் நிலம்

பி.விவேகானந்தன்
vivekseva@gmail.com

தமிழ்நாட்டில் திருப்பூர், கரூர், திண்டுக்கல், கோயம்புத்தூர் மாவட்டங்களில் குறிப்பாக சின்னதாராபுரம், வெள்ளக்கோயில், காங்கேயம், திருப்பூர், மூலனூர் பகுதிகளில் வறண்ட பூமியில் வெள்வேலா மரங்களுக்கிடையில் கொழுக்கட்டை புல் சாகுபடி செய்யப்பட்டு மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தப்படுகின்றது. இதை “கொரங்காடு” என்றழைப்பர்.

கொரங்காட்டிற்கு பெயர் காரணம்

பொதுவாக உழவர்கள் நிலத்தை உழவு செய்யாமல் வேறு எந்த வேளாண்மையும் செய்யாமல் அப்படியே புற்கள் முளைக்க விட்டு விட்டால் அதனை “கொறை” என்று கூறுவார்கள். அந்த முறையில் கொரங்காடுகளில் காணப்படும் கொழுக்கட்டைப் புல் தானாக முளைத்திருக்கக் கூடும். அதை கால்நடைகள் விரும்பி உண்பதால் அதனை வேலி அடைத்து பாதுகாத்து வந்திருக்கின்றனர். இம்முறை மூலம் இதற்கு கொரங்காடு என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கொரங்காடு நிலம் கோயம்புத்தூர், திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 3841 சதுர கிலோமீட்டர் விஸ்திரணத்தில் (3,84,100 ஹெக்டேர்) உள்ளது என அனில்குமார் குழு (2011) கூறுகிறது. இது மழைமறைவு பகுதியில் மழைப்பொழிவு 650 மி.லி. அளவுக்குக் குறைவாக பெய்யும் இடங்களாக உள்ளது. 1855-1887 வருடங்களில் பயிரிடப்படாத, உபயோகமற்ற நிலங்களில் விவசாயிகள் மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்துவதற்கு குத்தகை நிலமாக, வழங்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அப்பொழுது ஆட்சியில் இருந்த பிரிட்டிஷ்காரர்கள் நிலத்தீர்வை மூலம் வருமானம் பெறுவதற்கு விவசாயிகளுக்கு கொடுத்திருக்கின்றார்கள். இதற்கு பின்னர் விவசாயிகள் வேலி அமைத்து கிணறுகள் வெட்டி சீர்படுத்தியுள்ளார்கள். சுமார் 6 தலைமுறைகளுக்கு முன்னர் (150 வருடங்கள்) இது நிகழ்ந்திருக்கலாம்.

மண் வகை

இப்பகுதியில் செம்மண் கலந்த சரளை பூமியாகும். இந்நிலத்தில் தோண்டினால் சரளைக் கற்கள் ஏராளமாக உள்ளதைக் காணலாம்.

கொரங்காட்டில் கொழுக்கட்டைப்புல், நரிப்பயறு, கொள்ளு கலப்பு விதைப்பு செய்யப்படுகிறது.

கொரங்காட்டில் வெள்வேல் மரங்களுக்கிடையில் கொழுக்கட்டைப்புல் பல்லாண்டுகளாகவே தொடர்ந்து வளர்ந்து வருகின்றது. இது மழையை நம்பியே உள்ளது. ஆடி மாதத்தில் ஓர் உழவு செய்யப்படுகின்றது. பின்னர் ஆவணியில் நரிப்பயறு விதைக்கப்படுகின்றது. கொரங்காட்டில் கால்நடைகள் தன்னிச்சையாக மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. அவரவர் காட்டைச் சுற்றி கிலுவை முள்வேலி இடப்பட்டு கட்டாப்பு அல்லது உயிர்வேலி உண்டாக்கப்பட்டுள்ளது.

கொரங்காட்டில் காணப்படும் தாவரங்கள்

கொரங்காட்டில் கொலுக்கட்டைப்புல் தவிர கரட்டுப்புல், அரிசிப்புல், தாதரப்புல், ஒட்டனபுல், நத்தைச்சூரி, மூங்கில்புல், சீகம்புல், அருகம்புல் போன்றவையும் மற்றும் பிற தாவரங்களான செப்பு நெருஞ்சி, சவரிக்கொடி, பூனைப்புடுக்கொடி, கொள்ளு, நரிப்பயிறு, மிஷ்டத்தழையும் வேலியில் முள்ளுக்கிலுவை, மின்னமரம், கள்ளி, ரயில் கற்றாழை போன்றவையும் காணப்படும்.

கொள்ளும் நரிப்பயிறும் ஒவ்வொரு வருடமும் விதைக்கப்பட்டு தீவனமாக பயன்படுத்துகின்றனர். இவை தவிர வெள்வேலாமரம், உசிலைமரம், வேப்பமரங்கள் போன்றன பரவலாகக் காணப்படும். ஓர் ஏக்கரில் சுமார் 20-60 மரங்கள் பராமரிக்கப்படுகின்றன. வயதான மரங்களை வெட்டி வருமானம் எடுக்கின்றனர். வெல்வேலம் மரத்திலிருந்து கிடைக்கும் நெற்றுகள் கோடை காலத்தில் தீவனமாக பயன்படுகிறது.

கொரங்காட்டிலிருந்து கிடைக்கும் வருமானம்

ஒவ்வொரு விவசாயிக்கும் சராசரியாக 2-15 ஏக்கர் வரை கொரங்காடு மேய்ச்சல் நிலம் இருக்கும். இதில் ஒரு விவசாயிக்கு 5 ஏக்கர் மேய்ச்சல் நிலம் இருப்பதாக எடுத்துக் கொண்டால் அதில் விவசாயிகள் அடையும் பயன்கள் மற்றும் வருமானங்கள் கீழ்க்கண்டவாறு கிடைக்கும்.

இந்த 5 ஏக்கர் நிலத்தில் செம்மறி ஆடுகள் 20, பசுமாடு 2 மாடுகள், எருமை 1 வளர்ப்பர். இதில் ஆடுகள் மூலம் வருடத்திற்கு ரூபாய் 40,000 வருமானம் கிடைக்கும். பசுமாடு மூலம் 10,000 ரூபாயும், எருமை மூலம் ரூபாய் 10,000மும் வருமானம் கிடைக்கிறது. மரங்கள் விற்பதன் மூலம் பத்து வருடங்களுக்குப் பின் ரூபாய் 10,000 - 20,000 வரை கிடைக்கும். ஆக கிடைக்கும் மொத்த வருமானம் 10 வருடங்களில் ரூபாய் 6,20,000 வருமானம் கிடைக்கும். ஆண்டிற்கு ரூபாய் 60,000 வருமானம் கிடைக்கும்.

கொரங்காடு பராமரிக்க ஆகும் செலவு

சுமார் 5 ஏக்கருக்கு உழவு செட்ட ஒரு வருடத்திற்கு மட்டும் ஒருமுறை ஒரு உழவு செய்ய ரூ.2000, கொழுக்கட்டைப் புல் நிலத்தில் கொள்ளு மற்றும் நரிபயறு விதைக்க ரூ.2000, பராமரிக்க களை எடுப்பதற்கு ரூ.2000, பாதுகாப்பு வேலி அமைக்க முள் வெட்ட ரூ.3000, உயிர்வேலி அமைக்க ரூ.6000, வெல்வேலா மரத்தினை பராமரிக்க ரூ.1000. ஒரு வருடத்தில் ஆகும் மொத்த செலவு ரூ.16,000. பத்து வருடங்களில் ஆகும் செலவு ரூ.1,60,000. 10 வருடங்களில் நிகர வருமானம் சுமார் ரூ.4-5 லட்சம் கிடைக்கும். வருடத்திற்கு சுமார் ரூ.50,000 நிகர வருமானம் கிடைக்கும்.

கால்நடை வளர்ப்பு

இப்பகுதியில் முன்பு காங்கேயம் மாடுகள் அதிகமாக வளர்க்கப்பட்டன. பின்னர் விவசாயம் இயந்திர மயமானதால் காங்கேயம் உழவு மாடுகளின் தேவை குறைந்து விட்டது. இதனால் கலப்பின பசுக்களை கொரங்காட்டில் மேய்த்து விவசாயிகள் வருமானம் பார்க்கின்றனர். தற்சமயம் செம்மறி ஆடு வளர்ப்பு குறிப்பாக மேச்சேரி இன செம்மறி ஆடுகள் கொரங்காட்டில் வளர்க்கப்பட்டு வருமானம் பார்க்கின்றனர். கொரங்காட்டில் வெள்ளாடு பராமரிக்கப்படுவது மிகவும் குறைவு. கொரங்காடு நிலம் ஆகஸ்டு மாதத்திலிருந்து பிப்ரவரி மாதம் வரை மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படும். மேய்ச்சலுக்கு இக்காலங்களில் தென் மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழையினால் புற்கள் நன்றாக வளர்ந்திருக்கும். மார்ச்சு மாதத்திலிருந்து ஜீலை வரை புற்கள் காய்ந்து விடும்.

இச்சமயத்தில் சோளம், கம்பு, தட்டைகள், கடலைக்கொடி போன்ற உலர் தீவனங்களை ஆடு மாடுகளுக்குக் கொடுத்து வருவார்கள்.

வடகிழக்கு பருவமழை சமயம் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை மாதங்கள் வரை 4 மாதங்களுக்கு மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்தலாம். 10 ஏக்கர் கொரங்காட்டில் 10 வெள்ளாடுகள் அல்லது 2 பால் மாடுகள் + 4 கன்று குட்டிகள் அல்லது 3 எருமை மாடுகள் அல்லது 20 செம்மறியாடுகள் வளர்க்கலாம்.

கொரங்காட்டு வேலி

கொரங்காட்டில் வேலியாக முள்கிலுவை ஊன்றப்படுகிறது. தற்சமயம் சில வயதான விவசாயிகளே வேலியை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை காய்ந்த கிலுவையை அகற்றிவிட்டு புதிதாக முள்ளு கிலுவையை நட்டி வேலியை சீரமைப்பார்கள். இயற்கை வேலிக்கு பதிலாக தற்சமயம் கம்பிவேலி அமைத்தலை பல விவசாயிகள் கடைபிடித்து வருகின்றனர். கம்பிவேலி சுமார் 10 வருடங்களுக்கு தாக்கு பிடிக்கும். ஆனால் செலவு அதிகம்.

கொரங்காடு பராமரிப்பு

கொரங்காடு 3-4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உழவு செய்யப்படும். வறட்சியால் புற்கள் காய்ந்து விட்டால் தேவைப்பட்டால் கொழுக்கட்டை விதை மறுவிதைப்பு விதைப்பர். கொரங்காட்டில் 1-2 வருடங்களுக்கு ஒருமுறை நரிப்பயறு மற்றும் கொள்ளு விதைத்துத் தீவனப்பயிறாகப் பராமரிப்பர். உயிர் வேலியானது 2-3 ஆண்டுகளுக்கு ஒருமுறை காய்ந்தக்குச்சிகளை அகற்றி புதுக்குச்சிகள் சுமார் 2 அடி உயரமுள்ளதை ஆடி மாதத்தில் நடவு செய்வர். மழைக்காலத்திற்கு முன்பாக நட வேண்டும்.

கொரங்காட்டில் வெள்வேலா மரங்கள் ஒரு ஏக்கருக்கு 20-60 மரங்கள் வரை பராமரிப்பர். சுமார் 10 வருடங்களில் மரம் வளர்ந்ததும் வெட்டி விற்பனை செய்வர். பின்னர் முறைத்து வரும் சிறிய மரங்களை வளர்ச்சி அடைய விட்டு விடுவர். மரத்தின் நெற்றுக்கள் கோடை காலத்தில் தீவனமாகப் பயன்படும். கால்நடைகளுக்குப் போதுமான நிழலும் கொடுக்கும்.

கொரங்காட்டு மேய்ச்சலினால் “காங்கேயம்” என்ற நாட்டு ரகப் பசுவின் பால் சுவையுடனும், கொழுப்புச் சத்து கூடியும் உள்ளது. இந்த மேய்ச்சல் தரை உள்ளதால் இங்குள்ள மாடுகளுக்கு சினைக்கு வராமற் போகும் கோளாறுகள் வருவதில்லை. இந்த புல்தரை மண்ணின் ஈரத்தையும், வளத்தையும் காக்கின்றது. வெள்வேலாம் மரத்தின் நெற்றுக்கள் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுகின்றது. இந்த நெற்றின் வாசனையினால் கால்நடைகள் சுவைத்து தின்னும்.

இறவையில் 1 அல்லது 2 முறை நீர்ப்பாய்ச்சினால் காட்டு கம்பு, வெள்ளைமுட்டிசி சோளம், வெள்ளாமை செய்வதற்கு போதுமானதாகும். இதனைத் தீவனத்தட்டைக்காக கோடை காலத்தில் பயன்படுத்தலாம்.

குத்தகைக்கு அல்லது ஒத்திக்கு விடும் முறை

கொரங்காடு நிலச் சொந்தக்காரர்கள் சிலர் கொரங்காடுகளை ஒத்திக்கு அல்லது குத்தகைக்கு விட்டு விட்டு வேறு பணிகளுக்குச் சென்று விடுவதும் உண்டு. அவர்கள் கால்நடைகளை பராமரிக்க முடியாததால் மற்ற கால்நடை வளர்ப்பவர்களுக்கு நிலத்தை குத்தகைக்கோ அல்லது ஒத்திக்கோ விட்டு விடுவர். குத்தகைக்கு விடுதல் என்பது ஒவ்வொரு வருடமும் அந்த நிலத்திற்கு உரிய தொகையாக காடுகளில் வளரும்

புற்களுக்கு ஏற்ப ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தி விடுதல் ஆகும். ஒத்திக்கு என்பது ஒரு முழுத்தொகையையும் நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுத்து விடுவர். நிலச்சொந்தக்காரர் அந்தத் தொகையை திருப்பிக் கொடுக்கும் வரை பணத்தைக் கொடுத்தவர் அந்தக் கொரங்காட்டில் கால்நடைகளை மேய்த்து வருவர்.

குத்தகைக்கு விடும் முறை 5 ஏக்கருக்கு நிலச் சொந்தக்காரர்களுக்கு ரூபாய் 15000 வருடத்திற்கு கிடைக்கும். ஒத்திக்கு விடும் முறை மூலம் 5 ஏக்கருக்கு ஒத்தித் தொகையாக ரூபாய் 50000 கொடுக்கப்படுகிறது.

மேய்ச்சல் நிலத்தில் ஆர்வமில்லாததற்கு காரணங்கள்

முன்பு காங்கயம் மாடுகள் உழவிற்கும், வண்டியிழுவைக்கும் பயன்பாடு இருந்ததால் கொரங்காடு மூலம் காளை பராமரிப்பு செய்து வந்தனர். மாடுகளுக்கும் நல்ல கிராக்கி இருந்து வந்தது. தற்சமயம் இம்மாடுகள் குறைந்த பாலை மட்டும் தருவதால் விவசாயிகள் லாபம் தரும் செம்மறி ஆட்டு வளர்ப்பிற்குச் சென்று விட்டனர். பெரும்பாலான குடும்பங்களில் பிள்ளைகளைப் படிக்க வைத்து ஐ.டி. நிறுவனங்களில் சென்று விட்டமையால் அடுத்த தலைமுறையினர் இதில் அக்கறை காட்டாமல் உள்ளனர். எனவே இந்நிலங்களை உள்ளூர் விவசாயத் தொழிலாளர்கள் பராமரித்து போக்கியம் அல்லது குத்தகைப்பணம் செலுத்தி வருகின்றனர்.

தற்பொழுது கூலி ஆட்கள் சம்பளம் மிகவும் அதிகமாக உள்ளதால் கலப்பின பசுக்கன்று குட்டிகளை பால் மறந்ததும் சந்தையில் விற்கப்படும் கிடாரிகளை வாங்கி வந்து சுமார் 1-2 வருடங்கள் வளர்த்து சினைப்பருவத்தில் விற்றுவிடுவார்கள். கிடரி கன்றுகளை ரூ.15000 கொடுத்து வாங்குவர். வளர்ந்த கிடாரிகளை ரூ.70,000 வரை விற்று விடுவர். இதில் பராமரிப்பு செலவு குறைவு. 1 ஏக்கருக்கு 1கன்று வீதம் பராமரிப்பர். 5 ஏக்கர் கொரங்காட்டில் 5-6 கன்றுகள் வளர்த்து பின் விற்றுவிடுவர்.

கொரங்காடு மேய்ச்சலை ஊக்குவிக்க

இது திராவிட நாகரீகத்தின் வளர்ச்சியில் விளைந்த உன்னதக்காடு என்று கூறலாம். கொரங்காடு தற்பொழுது அழிந்து கொண்டு வருகின்றது. இதை குறைந்தவிலைக்கு தனியார் கம்பெனிகளுக்கு விவசாயிகள் விற்று விடுகின்றனர். பல்லாயிரக்கணக்கான நிலத்தை தனியார் நிறுவனங்கள் ஒன்றாகச் சேர்த்து, வேலி போட்டு தங்களது பராமரிப்பில் பாதாள மற்றும் ராட்சத் ஆழ்குழாய் கிணறுகள் போட்டு நீர்வளத்தை இழக்கச் செய்து வருகின்றனர். காற்றாலை பண்ணையாகவும் மாற்றுகின்றனர். விவசாயிகள் இனிமேலாவது ஒன்று சேர்ந்து நிலத்தை கம்பெனிகளுக்குக் கொடுக்காமலிக்க வேண்டும்.

இதற்கு சில திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும்.

1. நூறு நாட்கள் வேலை வாய்ப்பு திட்டத்தில் கம்பிவேலி போடுதல், ஆட்டு கொட்டகை அமைத்தல், கால்நடைகளுக்கு குடிநீர் வழங்க, பிவிசி குழாய் பதித்தல், இலவச கொளுக்கட்டை புல், நரிப்பயிறு, கொள்ளு விதைகள் வழங்குதல் போன்றவற்றை செய்து தர வேண்டும்.
2. இப்பகுதி முழுவதும் பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவித்து காற்றாலை, மின்சாரம் தயாரித்தல் போன்றவற்றை தடை செய்ய வேண்டும்.
3. இராட்சத ஆழ்குழாய் கிணறுகளை தோண்ட தடை விதித்தல்
4. விவசாயிகளுக்கு கொரங்காடு சீரமைக்க, குத்தகையில் பராமரிக்க, ஆடு வாங்க, கொட்டகை போட, கடன் வசதிகளை சிரமமின்றி கிடைக் வழிவகை செய்தல்.

கொரங்காடு பரவலாக்க

தமிழ்நாட்டில் எங்கெங்கு செஞ்சரளி, செம்மண் நிலங்கள் தரிசாக உள்ளனவே அங்கெல்லாம் கொரங்காடு முறை விவசாயிகளால் அனுசரிக்கப்பட்டு வந்தால் கால்நடைகளில் பண்டம் பார்க்கலாம். காட்டுக்கம்பு, நரிப்பயறு, கொழுக்ட்டைப்புல் விதைகள் காங்கேயத்தில் கடைகளில் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு

திரு. நல்லசேனாபதி, நல்லாம்பாளையம், தாராபுரம் தாலுகா, திருப்பூர் மாவட்டம். செல்: 8144109846

திருமதி. சௌந்திரம், காத்தசாமிபாளையம், சின்னதாராபுரம், திருப்பூர் மாவட்டம் (கொரங்காட்டில் காங்கேயம் காளைகளை பராமரித்து விவசாயிகளின் பசுக்களுக்கு இயற்கை முறையில் இனப்பெருக்கம் செய்து வருகிறார்) செல்: 7010867787

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் பெருவெள்ளத்தால் மேய்ச்சல் சமூகம் சந்தித்த சிக்கல்கள்

மு.மதிவாணன்
mathi@atree.org

கடந்த 2023ம் வருடம் டிசம்பர் மாதம் 17, 18 தேதிகளிள் திருநெல்வேி, தூத்துக்குடி மாவட்டங்களில் நிகழ்ந்த பெருவெள்ளத்தை யாரும் மறந்திருக்க முடியாது. தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 17ம் தேதி மட்டும் 24 மணி நேரத்தில் 950 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. இரண்டு வருடங்களின் மழை அளவு 24 மணி நேரத்தில் கொட்டித் தீர்த்தது. அனைத்து நீர்த் தேக்கங்களும் மள மளவென நிரம்பின, குளங்கள், குட்டைகள், ஏரிகள், கண்மாய்கள் என அனைத்தும் நிரம்பி வழிந்தன. தாமிரபரணி ஆற்றிலிருந்து 40,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது, ஆனால் ஸ்ரீவைகுண்டம் அனைப் பகுதியில் சென்ற தண்ணீரின் அளவைக் கணக்கிட்ட போது 1,65,000 கன அடியாக இருந்தது என்று நீர்வளத்துறை தகவல் கொடுத்தள்ளார்கள். காரணம் மலைப் பகுதிகளைக் காட்டிலும் ஊர்ப்புறங்களில் அதிக மழை. பெரும்பாலான குளங்கள் உடைந்து தாமிரபரணியின் வெள்ளப் பெருக்கை நான்கு மடங்காக கூட்டியது. தாமிரபரணியில் மட்டும்தான் வெள்ளப் பெருக்கா என்று பார்த்தால் தாமிரபரணி செல்லாத விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், கயத்தாறு போன்ற பகுதிகளில் கூட வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இப்பகுதிகளில் காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. திருநெல்வேலி மாவட்டத்தைக் காட்டிலும் தூத்துக்குடி மாவட்டத்தில் அதிகமான பாதிப்பு. இந்த பேரிடரில் அதிகப் பாதிப்பைச் சந்தித்தோர் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்போர். இந்த பேரிடரால் சுமார் 2,24,000 ஏக்கர் விளை நிலங்கள் நீரில் மூழ்கியது, சுமார் 1,00,000 கால் நடைகள் இறப்பைச் சந்தித்தது, 10,000க்கும் அதிகமான வீடுகள் படு சேதமடைந்தன. இந்த வெள்ளம் மேய்ச்சல் சமூக மக்களின் வாழ்க்கையைப் பெரும் கேள்விக்குள்ளாக்கியது.

தென் மாவட்டங்களுக்கு வெள்ளம் என்பது புதிதல்ல

கடந்த காலங்களில் தாமிரபரணி ஆற்றுப்படுகையில் தொடர் வெள்ளப் பெருக்கை நிகழ்ந்துள்ளதை ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஒருங்கிணைந்த திருநெல்வேலி (திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி) மாவட்ட ஆட்சியராக இருந்த ர்.சு. பேட் தனது திருநெல்வேலி விவரத் தொகுப்பு அகராதியில் குறிப்பிட்டுள்ளார். 19ம் நூற்றாண்டில் 1810, 1827, 1847, 1867, 1869, 1874, 1877, 1880 ஆகிய ஆண்டுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது என்று ர்.சு. பேட் விவரத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் 20ம் நூற்றாண்டில் 1923, 1925, 1931, 1992 ஆகிய ஆண்டுகளில் வெள்ளப் பெருக்கு நிகழ்ந்துள்ளது. 1847ம் ஆண்டு மட்டும் கோடைக் காலத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மற்ற ஆண்டுகளில் வடகிழக்குப் பருவமழை காலமான அக்டோபர் – டிசம்பர் காலங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

எப்போதெல்லாம் வடகிழக்கு பருவமழை 700 மி.மீ.க்கு மேல் திருநெல்வேலி மாவட்டத்திலும், 500 மி.மீ.க்கு மேல் தூத்துக்குடி மாவட்டத்திலும் பொழிகிறதோ அப்போது வெள்ளப்பெருக்கு ஏற்படுவதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் காட்சன் பதிவு

செய்துள்ளார். இதிலிருந்து வெள்ளம் என்பது திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களுக்குப் புதிதல்ல என்பது தெரியவருகிறது.

பேரிடரும் மேய்ச்சல் சமூகமும்

ஆடு, மாடுகளை மந்தையாக வளர்க்கும் மேய்ச்சல் சமூகம் பேரிடரால் அதிகம் பாதிப்பைச் சந்திக்கும் மக்களாக அறியப்படுகின்றனர். அவ்வப்போது நிகழும் இயற்கைச் சீற்றங்களான இடி, மின்னல் தொடங்கி பெரு வெள்ளம், பெரு வறட்சி போன்றவற்றால் தங்கள் உடைமைகளை இழப்பதுடன் சில சமயங்களில் தங்கள் உயிரையும் இழக்கும் சூழலுக்குத் தள்ளப்படுகின்றனர். இது போன்ற பேரிடர் காலங்களில் இவர்களுக்கு நிகழும் பொருளாதார ரீதியான இழப்பு என்பது இவர்களது வாழ்க்கையைக் கேள்விக்குள்ளாக்குகிறது. போதுமான நிவாரணமோ அல்லது கால்நடைகளுக்கான முறையான காப்பீடுத் திட்டமோ இல்லாதது துரதிஷ்டவசமானது. சுற்றுச் சூழலுக்கும் மனித நலனுக்கும் இவர்கள் வழங்கும் சேவை அளப்பரியது. ஆனால் இதுவரைக்கும் இவர்களது சேவை அங்கீகரிக்கப்படவில்லை. மேய்ச்சல் சமூக மக்களுக்கு பேரிடரால் நிகழும் பாதிப்புகள் குறித்துப் போதுமான தகவல்கள் இல்லை, இது குறித்த ஆய்வுகள் அவசியமாகிறது.

2023ம் ஆண்டு பெருவெள்ளப் பாதிப்புகள்

2023ம் ஆண்டு வெள்ளத்தினால் மேய்ச்சல் சமூகம் சந்தித்த பிரச்சினைகளை கண்டறியும் நோக்கில் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி, பாளையங்கோட்டை, மானூர் ஆகிய தாலுகாக்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் எட்டையாபுரம், விளாத்திகுளம், ஓட்டப்பிடாரம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய தாலுகாக்களின் உள்ள சுமார் 25 செம்மறி ஆடுகளை மேய்க்கும் மேய்ச்ச்ல் காரர்களைத் தனியாகவும், குழுவாகவும் மேற்கொண்ட சந்திப்புகளின் தரவுகளை இதில் கொடுத்துள்ளேன். பொருளாதார ரீதியாகவும், மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும் இவர்களுக்குப் பாதிப்புகள் நேர்ந்துள்ளது.

மேய்ச்சல்காரர்களின் பார்வையில் வெள்ளத்திற்கான காரணங்கள்

2023ம் ஆண்டு நிகழ்ந்த வெள்ளத்திற்குப் பெருமழைதான் அடிப்படைக் காரணம் என்றாலும் கூட நிலப் பயன்பாடுகளில் மனித நடவடிக்கைளால் நிகழ்ந்துள்ள மாற்றங்கள் இந்த வெள்ளத்தை இன்னும் வீரியப்படுத்தி உள்ளது. திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் பகுதியில் நிகழ்ந்த வெள்ளத்தில் 100-க்கும் அதிகமான ஆடுகள் அடித்துச் செல்லப்பட்டன என்கிறார் ராஜபதியைச் சார்ந்த பேச்சி. இவருக்கு 54 வயதாகிறது, இவர் சந்தித்த பெரும் வெள்ளம் இதுதான் என்று கூறுகிறார். இந்த வெள்ளத்திற்கு இவர் முன் வைக்கும் காரணம் கங்கைகொண்டான் பகுதியில் சிப்காட் தொழில் வளாகத்திற்காக கிட்டத்தட்ட 3500 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு முன்னர் இவ்விடங்களில் மேய்ச்சல் மற்றும் விவசாயம் நடைபெற்றதாகச் சொல்கிறார். இவ்விடங்களில் முக்கியமான குளங்களும், நீர் ஓடைகளும், கங்கை கொண்டான் தாழையூத்து பகுதியை இணைக்கக் கூடிய மங்கம்மாள் சாலையும் இருந்ததாகச் சொல்கிறார். தற்போது இவைகள் அனைத்தும் வேலியிட்டு அடைக்கப்பட்டுள்ளது. சிப்காட் வளாகத்தில் கட்டப்பட்டுள்ள சில கட்டிடங்கள் நீர் வழிப்பாதையின் குறுக்கே கட்டப்பட்டுள்ளதாகச் சொல்கிறார். மேலும் சுண்டங்குளம் போன்ற முக்கியமான ஓடைகளை கான்களாக மாற்றிவிட்டார்கள். இதனால் தண்ணீர் செல்வதற்கு வழியில்லாமல் நாங்கள் ஆடுகளை மேய்க்கின்ற பகுதியில் வெள்ளம்

வந்ததாகச் சொல்கிறார். இந்தப் பகுதியில் நண்பகல் 1 மணி அளவில் வெள்ளம் வந்துள்ளது. அந்த நேரத்தில் சுமார் 40 ஆடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகச் சொன்னார். மீதமுள்ள ஆடுகளைத் தேசிய நெடுஞ்சாலைக்கு ஓட்டி வந்து அங்கு மறித்து வைத்து வெள்ளம் குறையும் வரை பாதுகாத்து வைத்ததாகச் சொன்னார். இந்த வெள்ளப் பாதிப்புக்கு இவர் சொல்லும் முக்கியக் காரணம் சிப்காட் தொழில் வளாகத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள முறையற்ற கட்டுமானங்கள்.

அது போல் திருநெல்வேலி மாவட்டம் பருத்திப்பாடு கிராமம் மற்றும் தூத்துக்குடி மாவட்டம் சேரைக்குளம் ஆகியப் பகுதிகளில் நடந்த வெள்ளப் பாதிப்பிற்குத் தாமிரபரணி நம்பியார் கருமேனியார் இணைப்புத் திட்டம் ஒரு முக்கியக் காரணம் என்று சொல்கின்றனர் அப்பகுதியைச் சார்ந்த மேய்ச்சல் காரர்கள். 2009ம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் மூலம் மழைக் காலங்களில் கிடைக்கும் தாமிரபரணியின் உபரி நீரை வறட்சி பகுதிகளுக்குக் கொண்டு செல்வது. இத்திட்டத்திற்கு தோண்டப்பட்டுள்ள கால்வாயை உள்ளூர்வாசிகள் வெள்ளநீா கால்வாய் என்றழைக்கின்றனர். இத்திட்டம் இன்னும் முழுமையாக முடிவடையவில்லை, இருந்தாலும் இந்தப் பெருமழையின் போது சோதனை முயற்சியில் திறக்கப்பட்டதாகத் தெரிகிறது. பெரும்பாலான இடங்களில் மதகுகளைச் சரிவர அடைத்து வைக்கவில்லை என்று குற்றச்சாட்டினைப் பதிவு செய்கின்றனர். அது போல் மதகுகளில் இருந்து வெளியேறும் நீரின் அளவுக்கு ஏற்றபடிதான் உப கால்வாய்கள் மற்றும் பாலங்களை அமைத்துள்ளதாகச் சொல்கின்றனர், வெளியே பெய்யும் மழைநீர் மற்றும் காடுகளில் இருந்து வரும் வெள்ளத்தை இந்தப் பாலங்கள் மற்றும் கால்வாய்கள் தாங்குவதில்லை. மேலும் பிராதான கால்வாய்க்கு மேலே அமைக்கப்பட்டுள்ள தொட்டிப்பாலங்களும் அங்கே பெய்கின்ற மழை தண்ணீரைத் தாங்கும் அளவுக்கு அமைக்கப்படவில்லை என்கின்றனர். இதோடு கூட அங்குள்ள குளங்கள் சரிவர தூர்வாரப்படதாதல் வேகமாக நிரம்பி உடைகின்றச் சூழலுக்குத் தள்ளப்பட்டுள்ளது. பெரும்பாலான குளங்கள் உடைவதற்கு முன்பே ஊருக்குள் வெள்ளம் வருவதைத் தடுக்கின்ற நோக்கில் கிராம மக்களே குளத்தைக் காட்டுப் பாதையில் செல்லும் பொருட்டு உடைத்து விட்டுள்ளனர். இதனால் காட்டுப் பாதைகளில் மேய்ச்சலில் ஈடுபட்ட மக்கள் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளனர். சேரகுளத்தைச் சார்ந்த 53 வயதாகும் இசக்கி என்பவர் வெள்ளநீர் கால்வாயில் அபரிமிதமான நீரும் நான் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த பெருமாநேரி காட்டைச் சுற்றியுள்ள கீழ சிரியந்தூர், மேல சிரியந்தூர், செம்பலபேரி, சேரகுளம் மற்றும் நாகல்குளம் ஆகிய குளங்கள் உடைந்து மதியம் 1.30 மணி அளவில் பெருவெள்ளம் ஏற்பட்டது. என் கண் முன்னே 35 ஆடுகளை வெள்ளம் இழுத்துச் சென்றது, என்னால் இயன்ற அளவு சில குட்டிகளைக் காப்பாற்றினேன், என்னுடைய செல்போனும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது, இதைக் கண்ட சிலர் ஊருக்குள் தகவலைச் சொல்ல ஜே.சி.பி. இயந்திரத்தைக் கொண்டு வந்த இளைஞர்கள் என்னையும் ஆடுகளையும் மீட்டெடுத்தனர். சற்றுத் தாமதத்திருந்தால் இந்த வெள்ளம் என்னையே அடித்துச் சென்றிருக்கும் என்று கண்ணீர் மல்க கூறினார். இந்தப் பகுதிகளில் பகல் நேரத்தில் வெள்ளம் வந்ததால் ஓரளவு மீட்க முடிந்துள்ளது. ஆனால் ஓட்டப்பிடாரம், விளாத்திகுளம் பகுதிகளில் நள்ளிரவு வெள்ளம் வந்ததால் அங்கு நிகழ்ந்துள்ள பாதிப்பு அதிகம். ஓட்டப்பிடாரம் தாலுகா தூத்துக்குடி – மதுரை தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள குறுக்குச் சாலைப் பகுதியில் விளாத்திகுளம், வில்வமரத்துப்பட்டியைச் சார்ந்த 34 வயதான நாகராஜ் மேய்ச்சல் முடிந்து ஆடுகளை இரவு நேரத்தில் அடைத்து வைத்திருந்தார். நள்ளிரவில் திடீரெனப் பெருக்கெடுத்து வந்த வெள்ளத்தைத் தனியாக இருந்த இவரால் சமாளிக்க இயலவில்லை, சுமார் 45 ஆடுகளை வெள்ளம் அடித்துச்

சென்று விட்டது என்றார். தீயணைப்புப் படைக்கு போன் செய்தும் உதவி கிடைக்கவில்லை என்றார். குளங்கள் உடைந்தது மட்டுமல்லாமல் காட்டாற்று வெள்ளத்தினாலும் இப்பகுதியில் முறையில்லாமல் நிகழ்ந்து வரும் வளர்ச்சித் திட்டங்களாலும் இவ்வெள்ளப் பாதிப்பை அதிகரித்துள்ளதாகச் சொல்கிறார்.

விளாத்திக்குளம் தாலுகாவைச் சார்ந்த கூத்தலூரணி கிராமத்தைச் சார்ந்த மூக்கையா, பரமராஜ், சுந்தர், சண்முகராஜ் ஆகியோர் அண்டை கிராமமான ஜமீன் செங்கல்படையில் உள்ள காட்டில் சுமார் 1000 ஆடுகளை இரவு நேரத்தில் அமர்த்தி வைத்திருந்தனர். கடந்த பல ஆண்டுகளாக இந்தப் பகுதியில்தான் ஆடுகளை அடைத்து வைப்பதாக சொல்கின்றனர். பன்னைக் காட்டு ஓடைக் கரையில் இவர்கள் தார்ப்பாயினால் ஆன கொட்டகையை அமைத்து ஆடுகளை அடைத்து வருகின்றனர். 17ம் தேதி பெய்த பெருமழையால் அன்று நள்ளிரவில் ஓடையில் வெள்ளம் பீறிட்டு வந்துள்ளது. அபரிமிதமான வெள்ளத்தைப் பார்த்தவுடன் செய்வதறியாது ஆடுகளை விட்டு விட்டு வீட்டுக்கு வந்து விட்டதாகச் சொல்கின்றனர். விடிந்தவுடன் சென்று பார்த்த போது நூற்றுக் கணக்கான ஆடுகள் செத்து மிதந்ததைப் பார்த்துக் கண்கலங்கி உள்ளனர். மீதமிருந்த ஆடுகளை டிராக்டர்களில் ஏற்றி வேறு இடத்திற்கு மாற்றி உள்ளனர்.

ஓட்டப்பிடாரம் தாலுகா மிளகு நத்தத்தைச் சார்ந்த பாலசுப்பிரமணியன் (58), உலக நாதன் (55) மேலும் 2 நபர்கள் ஆதனூரில் தனியாருக்குச் சொந்தமான காட்டில் சுமார் 1000 ஆடுகளைப் பட்டிக்குள் அடைத்து வைத்திருந்துள்ளனர். எப்போதும் வென்றான் கண்மாயிலிருந்து திறக்கப்பட்ட நீரினால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதாகச் சொல்கிறார்கள். கிட்டத்தட்ட 750 ஆடுகள் இவர்களது பட்டியிலிருந்து அடித்துச் செல்லப்பட்டுள்ளது. இந்த நட்டத்திலிருந்து மீண்டு வருவது அவ்வளவு எளிதான காரியமல்ல என்கின்றனர் இவர்கள். இரவு 12 மணி அளவில்தான் எப்போதும் வென்றான் கண்மாயில் தண்ணீர் திறப்பதாக செய்தி தெரிய வந்தது, இரவு நேரத்தில் என்ன செய்வது என்று தெரியவில்லை சோகமுடன் தகவலைப் பகிர்ந்தனர். இவர்களுக்கு நிகழ்ந்த பொருளாதார இழப்பு என்பது கிட்டத்தட்ட 7,50,000 லட்சம் என்று சொன்னார்கள். இந்த வெள்ளத்தால் ஒவ்வொருவருக்குமே 50,000ம் தொடங்கி பல லட்சங்கள் வரை பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

பெருவெள்ளத்திற்குப் பின் மேய்ச்சல் தொழில்

வெள்ளத்திற்குப் பின் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு மேலாக தொடர்ச்சியாக ஆடுகள் இறந்து வருவதாக வேதனை தெரிவித்தனர் மேய்ச்சல் காரர்கள். செம்மறி ஆடுகள் தண்ணீர் தேங்கிய இடத்தில் நீண்ட நேரம் நின்றால் அவைகள் நோய் தாக்கம் ஏற்பட்டு இறப்பைச் சந்திக்கும் என்கின்றனர். அதோடு மட்டுமல்லாமல் சரியான மேய்ச்சல் இல்லாத காரணத்தினால் ஈனுகின்ற குட்டிகளில் பெரும்பாலும் குறைக் குட்டிகளாக இறந்து பிறந்துள்ளது. மேலும் ஆடுகளுக்குப் போதுமான மேய்ச்சல் இல்லாத காரணத்தினால் பிறக்கின்ற குட்டிகளுக்குப் பால் கொடுக்க மறுப்பதாகச் சொன்னார்கள். மேலும் சில இடங்களில் குட்டிகளை அடைத்து வைத்திருந்த இடத்திற்கு ஆடுகளை ஓட்டிச் செல்ல இயலாதக் காரணத்தினால் கிட்டத்தட்ட 3 நாட்கள் குட்டிகளுக்கு பால் கொடுக்காமல் நிறைய குட்டிகள் சேதமடைந்தாகச் சொல்கின்றனர். சில மேய்ச்சல் காரர்கள் மேய்ச்சலுக்கான இடங்கள் மற்றும் ஆடுகளைப் பட்டி அடைக்கும் இடங்களை வேறு இடத்திற்கு மாற்றி உள்ளனர். கூத்தலூரணி கிராமத்தைச் சார்ந்த பரமராஜின் மூத்த மகன் அவருடைய பங்கில் மீதமிருந்த 75 ஆடுகளை எட்டையபுரம் சந்தையில் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு வெளியூறுக்கு வேலைக்குச் சென்றதாகப் பரமராஜ் தெரிவித்தார். பெரு வெள்ளத்திற்குப் பின் கால்நடைத் துறையால் நடத்தப்பட்ட சிறப்பு முகாம்களில்



இவர்கள் யாருமே பயனடையவில்லை என்பது தெரிய வந்தது. முகாம் ஊருக்குள் நடைபெறுகிறது, இவர்கள் ஆடுகள் காட்டுக்குள் இருப்பதால் இவர்களால் பங்கு கொள்ள இயலவில்லை என்பது தெரிய வருகிறது.

பெருகிவரும் சவால்கள்

முன்னர் மேய்ச்சல் தொழிலில் குடும்ப உறுப்பினர்களில் ஆண்கள் அனைவரும் மேய்ச்சல் தொழிலில் கூட்டாக ஈடுபட்டுள்ளனர். அல்லது மேய்ச்சல் காரர்கள் குழுவாக மேய்ச்சலில் ஈடுபட்டு வந்தனர், தற்போது அது குறைந்து வருகிறது. நாங்குநேரி தாலுாக மருதகுளத்தைச் சார்ந்த 48 வயதாகும் பிச்சையா என்பவர் வெள்ளம் வந்த நாளன்று குடும்பத்துடன் கோவிலுக்குச் சென்றுள்ளார், ஆடுகளை மேய்ப்பதற்குச் சம்பளத்திற்கு ஆள் வைத்துவிட்டுச் சென்றுள்ளார், ஆனால் அன்று பெய்த மழையால் சம்பள ஆள் ஆடுகளைத் திறக்கவே இல்லை, சாயங்காலம் அவர் வந்து பார்த்த வேளையில் 8 ஆடுகள் செத்து மிதந்துள்ளது. ஆடுகளை திறந்து வேறு இடத்திற்கு மாற்றியிருந்தால் இது நடந்திருக்காது என்கிறார். அது போல் சேரகுளம் இசக்கி என்பவரும் ஆடுகளை தனியாகத் மேய்த்துள்ளார், அதனால் வெள்ளத்தின் போது செய்வதறியாது திகைத்துள்ளார். குழுவாக ஆடுகளை மேய்ப்பதும் அடைப்பதும் அவசியமாகிறது என்பதை இது உணர்த்துகிறது. பெரும்பாலான மேய்ச்சல் காரர்கள் வெள்ளக் காலத்தில் தங்கள் ஊர்களிலேயே இருந்துள்ளனர், ஆனாலும் வெள்ளப் பாதிப்புகளை அவர்களால் சரிவர சமாளிக்க இயலவில்லை, அதற்கு அவர்கள் முன்வைக்கும் காரணங்கள் ஆடுகளை அடைத்து வைப்பதற்கு மந்தை, புறம்போக்கு நிலங்கள் இல்லை, இந்த மந்தை புறம்போக்கு நிலங்கள் ஊருக்குள்ளேயோ அல்லது ஊருக்கு அருகிலோ இருக்கும், தற்போது இவைகள் அனைத்தும் மாற்றுப் பயன்பாட்டுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது அல்லது தனி நபர்களின் ஆக்கிரமிப்பில் உள்ளது. இந்தக் காரணத்தினால் ஊருக்குத் தொலைவில் உள்ள இடங்களில் ஆடுகளை அடைத்து வைக்கத் தள்ளப்படுகிறார்கள், இதனால்தான் மிளகு நத்தம் மற்றும் கூத்தலூரனி பகுதியில் இந்த அளவு பாதிப்பு நேர்ந்துள்ளது. ஊருக்கருகில் உள்ள மேய்ச்சல் காடுகளும் பெருமளவில் குறைந்து வருகின்றன, அதனால் தனியார் நிலங்களில் மேய்த்து கிடைக்கின்ற இடங்களில் ஆடுகளை அடைக்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். வளர்ச்சித் திட்டங்களுக்காக வகை தொகை இல்லாமல் மேய்ச்சல் நிலங்கள் கையகப்படுத்தப்படுகிறது. இவ்விடங்களில் முறையற்று நடைபெறும் கட்டுமானங்களால் வெள்ளப் பாதிப்புகள் பெருகி உள்ளதற்குக் கங்கை கொண்டான் பகுதி ஒரு உதாரணம். கண்மாய்கள், குளங்கள், ஏரிகள் முறையாகத் தூர்வாரப் படாததும், கரைகள் பலமற்று இருப்பதும், நீர்வழிப் பாதைகளை முறையாகச் சீரமைக்காததும் மற்றும் புதிய நீர்த் திட்டங்களும் வெள்ள அபாயத்தை அதிகரிக்கின்றன.

சில பரிந்துரைகள்

- மந்தை மற்றும் மேய்ச்சல் புறம்போக்கு நிலங்கள் மீட்கப்பட வேண்டும்.
- மேய்ச்சலுக்காகப் பயன்படுத்தப்பட்ட பாதைகளை மீட்டெடுக்க வேண்டும்.
- குளங்கள், ஏரிகள், கண்மாய்கள் முறையாகத் தூர்வாரப்பட வேண்டும்.
- இடம் பெயர்ந்து செல்லக் கூடிய விதத்தில் கால்நடை சிறப்பு முகாம்கள் நடைபெற்று பட்டிகளுக்கு நேரடியாகச் சென்று மருந்துகள் கொடுக்க வேண்டும்.
- சரியான நேரத்தில் வானிலை முன்னறிவிப்பு அவசியம். சந்தித்த நபரில் ஒருவர் மட்டுமே தனியார் வானிலை முன்னறிவிப்பைக் கேட்டு இரவு நேரத்தில் ஊரில்

இருந்து சில நபர்களைத் துணைக்கு வைத்து ஆடுகளைக் காப்பாற்றியதாகச் சொன்னார். மற்ற அனைவருமே அறிவிப்புச் சரிவரக் கிடைக்கவில்லை என்றே சொன்னார்கள். அன்றாடம் மீனவர்களுக்கு கொடுக்கப்படும் முன்னறிவிப்பு போன்று மேய்ச்சல் காரார்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும்.

- பெரும்பாலான மேய்ச்சல் ஆடுகள் கால்நடைக் கணக்கெடுப்பில் பதிவு செய்யப்படவில்லை என்று மேய்ச்சல் காரார்கள் தெரிவித்தனர், எனவே இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- ஆட்டிற்கு ரூபாய் 4000ம் வீதம் அதிக பட்சமாக நபருக்கு 20 ஆடுகளுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. கூடுதலாக இழப்பீடு வழங்க பரிசீலிக்க வேண்டும்.
- மேய்ச்சல் ஆடுகளுக்குச் சரியான காப்பீடு திட்டம் இல்லை, முறையான காப்பீடு அவசியம்.
- பேரிடர் காலங்களில் கால்நடைகளை மீட்டெடுக்கச் சரியான மீட்புக் குழு அவசியம்.
- மேய்ச்சல் காரார்களுக்கும் பேரிடர் மீட்பு பயிற்சி வழங்குவதைப் பரிசீலிக்க வேண்டும். தேவையான உபகரணங்களும் வழங்கப்பட வேண்டும்.
- பெரு வெள்ளம் முடிந்த அடுத்தடுத்த நாட்களில் ஆடுகள் இறந்துள்ளதை கணக்கில் ஏற்றப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த ஆடுகளும் பெருவெள்ளம் தாக்கத்தால்தான் இறந்தது என்பது மேய்ச்சல் காரார்களின் கருத்து, இக்கருத்தை பரிசீலிக்க வேண்டும்.
- பெரும்பாலான மேய்ச்சல் காரார்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினராக இருக்கிறார்கள், சிலர் சேர்க்கப்பட வில்லை. அனைவரையும் கூட்டுறவு கடன் சங்கத்தில் இணைத்து வட்டியில்லாக் கடன் கொடுப்பது அவர்களின் அன்றாட வாழ்க்கையை மீட்டெடுக்க உதவும். அதிகமாகப் பாதிக்கப்பட்ட நபர்களின் கடன்களைத் தள்ளுபடி செய்வதையும் பரிசீலனை செய்ய வேண்டும்.

தற்போது நிகழ்ந்து வரும் காலநிலை மாற்றங்களால் அடிக்கொரு முறை பெருவெள்ளம் மற்றும் பெரும் வறட்சி நிலவ வாய்ப்புள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எனவே விளிம்பு நிலை மக்களாகிய மேய்ச்சல் சமூகம் இதிலிருந்து தற்காத்துக் கொள்வதற்கான முறையான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகிறது. டிசம்பர் 2023ம் ஆண்டு தென் மாவட்டங்களில் மேய்ச்சல் சமூகம் சந்தித்த சிக்கல்கள் குறித்த கூடுதல் ஆராய்ச்சியும் அவசியமாகிறது. பல தன்னார்வ அமைப்புகளின் தொடர் முயற்சியால் வருகின்ற 2026ம் ஆண்டினை சர்வதேச மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் மக்களின் ஆண்டாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது. விரைவில் இந்தியா முழுவதும் நடைபெறும் கால்நடைகள் கணக்கெடுப்பில் மேய்ச்சலில் ஈடுபடும் மக்கள் மற்றும் அவர்களின் கால்நடைகளும் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. மேய்ச்சல் கால்நடைகள் மற்றும் மேய்ச்சல் சமூக மக்களின் இருப்பை உறுதி செய்வது அவசியமாகிறது.

தொண்டை மண்டல மேய்ச்சலியம்

முனைவர் சா. கருணாகரன்
shanthi.arulalan@gmail.com

தமிழ்நாட்டின் தொண்டை நாடு அல்லது தொண்டை மண்டலம் என்று அழைக்கப்பெறும் நிலப்பரப்பு, வடக்கே வேங்கடம் முதல் தெற்கே தென் பெண்ணையாறு வரை உள்ள நிலப்பரப்பு முழுவதையும் குறிப்பதாகும். தமிழகத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள வேலூர், இராணிப்பேட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, கடலூர், திருவள்ளூர், திருப்பத்தூர், சென்னை, ஆந்திரமாநிலத்தின் நெல்லூர், சித்தூர், (திருப்பதி) மாவட்டங்களின் சில பகுதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இப்பகுதி, காளத்தி, திருப்பதி, திருத்தணிகை, வேலூர், செங்கற்பட்டு முதலிய பகுதிகளில் உள்ள குன்றுகளையும், பொன் முகலி, பாலாறு, தென் பெண்ணை முதலிய ஆறுகளையும், அதிகளவிலான ஏரிகளையும், சில காடுகளையும், ஒன்றுமே விளையாத பாலை நிலங்களையும் உள்ளடக்கியதாகும்.

இப்பகுதியில் தொன்றுதொட்டு வாழ்ந்து வந்தவர்கள் வேடர்கள் ஆவர். இவர்களுக்குப் பின் குறும்பர்கள் கால்நடைகளோடு பரவி, இப்பகுதியில் அவற்றைப் பேணி வந்தனர் என்றும், அவர்கள் இந்நாட்டை இருபத்து நான்கு கோட்டங்களாகப் பிரித்து ஆண்டு வந்தனர் என்றும், ஆ தொண்ட சக்கரவர்த்தி என்பவன் அவர்களை வென்று இந்நாட்டைக் கைக்கொண்டான் எனவும், அது முதல் இந்த நாடு அவன் பெயரால் தொண்டை நாடு எனப்பட்டது என்றும் தொண்டை மண்டல வரலாறு என்னும் நூல் இயம்புகிறது. இப்பகுதியை ஆண்டவர்கள் தொண்டைமான்கள் என்றும் அழைக்கப்பெற்று வந்துள்ளனர். தொண்டை என்பது ஒரு வகைக் கொடி. சோழ அரசனுக்குத் தனித்தீவு ஒன்றில் இருந்த நாகர் பெண் மனைவியாக இருந்தாள். அவள் தான் பெற்ற ஆண் குழந்தையைத் தொண்டைக் கொடியால் சுற்றிக் கப்பல் மூலமாகச் சோழனுக்கு அனுப்பினாள். தொண்டைக் கொடியால் சுற்றப்பட்ட அம் மகன் தொண்டைமான் எனப் பெயர் பெற்றான். அவன் சோழப் பிரதிநிதியாக இருந்து இந்த நாட்டை ஆண்டான். அதனால் இந்த நாடு தொண்டை நாடு எனப்பட்டது என்றும் ஒரு கதை வழங்கப்பெற்று வருகிறது.

சங்க காலத்தில் இப்பகுதி அருவாள்நாடு (அருவாநாடு), அருவா-வடதலை என்று இரு பகுதிகளாகப் பிரிந்திருந்தது என்றும், அருவா-வடதலை நாட்டைப் “பவத்திரி” என்னும் ஊரைத் தலைநகராகக் கொண்டு “திரையன்” என்னும் மன்னனும், தொண்டை நாட்டைக் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு “இளந்திரையன்” என்னும் மன்னன் ஆண்டுவந்தான் என்றும் வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே இந்நிலம் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருந்து வருகிறது. நாகரிக மனிதர்களின் வருகைக்கு முன்னேயே இங்கு நாகரிகமடையாத மனிதர்கள் வாழ்ந்துவந்தமைக்கான தடங்கள் கிடைத்துள்ளன. வேட்டைக்குடிகளும், மேய்ச்சல் குடிகளும் தொடர்ந்து வாழ்ந்துவந்த பகுதியாக இப்பகுதி விளங்கியுள்ளது. தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு இடங்களும் இப்பகுதியில் உள்ளன.

சங்க காலத் தொண்டை மண்டலம்

தமிழகத்தின் வடபகுதியைத் தொண்டையர் என்னும் மன்னர்கள் ஆண்டுவந்ததை அகநானூறு 213ஆம் பாடல் குறிப்பிடுகிறது. வேங்கடமலைக்கு வடக்கே வாழ்ந்தவர்கள் மொழிபெயர் தேயத்தினராகக் குறிக்கப்பெற்றுள்ளனர். இப்பகுதியில் புல்லி உள்ளிட்ட குறுநில மன்னர்களும் ஆண்டு வந்துள்ளனர். கால்நடைகளுக்கான போர்கள் இப்பகுதில் தொடர்ச்சியாக நிகழ்ந்துள்ளன.

சங்க காலத் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த சங்கப் புலவர்களின் பாடல்களின்வழி, இப்பகுதியை ஓரளவு உய்த்துணர முடிகிறது. இப்பகுதியில் வாழ்ந்த ஆயர்கள் பற்றிய குறிப்புகளைப் பத்துப்பாட்டு நூல்களான சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மலைபடுகடாம் ஆகியவற்றிலும், தொகை நூல்களான நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு ஆகியவற்றிலுள்ள சில பாடல்களும் குறிப்பிடுகின்றன. அவற்றின்வழிச் சங்க காலத் தொண்டை மண்டல ஆயர்களின் வாழ்வியலை அறியமுடிகிறது.

ஆயர் ஊர்கள்

சங்க கால ஆயர்கள் கோவித்தாயர்கள், கோட்டினத்தாயர்கள், புல்லினத்தாயர்கள் என்ற மூன்று பிரிவுகளை உடையவர்களாக இருந்தனர். தொண்டை மண்டலத்திலுள்ள முல்லை நில ஊர்கள், பல்வண்ண மலர்களுடன் பசுமை நிறைந்து காணப்பட்டன. அங்கு அவரைக் கொடி, காயா மலர், முசுண்டை மலர், காந்தள் மலர் உள்ளிட்ட பல்வேறு வகையான மலர்கள் மலர்ந்திருக்கும். வழிகளில் இந்திரகோபப்பூச்சி பரவும். முல்லைக்கொடிகள் படர்ந்திருக்கும். (சிறுபா. 164-173). இத்தகைய செழிப்புடைய முல்லை நில ஊர்களில் அமைந்துள்ள புல்லினத்தாயர்களின் குடியிருப்பைப் பெரும்பாணாற்றுப்படை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் பின்வருமாறு காட்சிப்படுத்துகிறார்.

ஆயர் குடியிருப்பில் குறிய கால்களையுடைய குடில் அமைக்கப்பெற்றிருந்தது. அதன் கால்களில் ஆடுகள் நின்றுகொண்டே தின்பதற்குத் தழைகள் கட்டப்பெற்றிருந்தன. வரகுக் கற்றையால் வேயப்பெற்ற அக்குடிலில் சிறு வாயிலும், செறிக்கப்பெற்ற கழிகளையுடைய கதவும் இருந்தது. குடிலினுள் ஆட்டுத்தோலாலான படுக்கையில் இடையன் உறங்கிக் கொண்டிருந்தான். குடிலின் முற்றத்தில் ஆட்டுக்கிடாய்களை நீண்ட கயிறுகளில் கட்டிய குறிய முளைகள் இருந்தன. அவற்றில் அவை பிணைக்கப் பெற்றிருந்தன. அங்கு வளைந்த முகத்தையுடைய செம்மறி ஆடுகளும், வெள்ளாடுகளும் இருந்தன. அங்கு ஆட்டின் உரக்கழிவுகள் சிதறிக்கிடந்தன. குடியிருப்பைச் சுற்றி முள்வேலி இடப்பெற்றிருந்தது. (பெரும்பா. 147-154). புல்லினத்தாயர் ஊர்களில் பலநிறமுடைய கிடாய்கள் கலந்துள்ள செம்மறித்திரள் வெள்ளாட்டுடன் கலந்து கல் என ஒலியையுடைய முல்லைக்காட்டில், கடலைப் போல் ஒலிக்கும் பல ஆட்டுக் கூட்டத்துடன் குடியிருப்புகள் அமைந்திருக்கும் (மலைபடு. 314-316) என இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் குறிப்பிடுகிறார்.

மற்றொரு காட்சியில், புல் மேயும் ஆநிரைகள் நிறைந்துள்ள முல்லைக்காடு, வில்லேந்திர வீரர்களால் பாதுகாக்கப்பெற்றிருப்பதைக் கோவூர் கிழார் காட்டுகிறார் (புறம். 386:12-13). முல்லை நிலத்தில் உள்ள ஊர்கள் உயிர் வேலியால் சூழப்பெற்றிருந்தன. கால்நடைகள் மேயாமல் தடைசெய்யப்பெற்ற பகுதியாக இருந்ததால் புற்கள் ஓங்கி வளர்ந்திருந்தன. அங்கிருந்த குடியிருப்புகளில் பெண் யானைக் கூட்டம் போன்ற வரகுக் குதிர்கள் நிறைந்திருந்தன. யானையின் கால் போன்ற வரகு திரிகை நட்டு நிற்கும் பந்தல்களும், நெடிய சுவர்களில் வண்டிச் சக்கரங்களும் கலப்பைகளும் சார்த்தி வைக்கப்பெற்றிருந்தன. குடில்கள் வரகு வைக்கோல்களால் வேயப்பெற்றிருந்தன.

அதிலிருந்த சமையற் கூடங்கள் புகைசூழ்ந்த கொட்டில்களாக விளங்கின. (பெரும்பா. 184-191).

ஆயர் வணிகம்

ஆயர் குடியிருப்பில், இருள் புலரும் விடியற்காலையில் பறவைகளின் ஓசைகளைக் கேட்டு ஆயமகளிர் எழுவர். விடிற்காலையிலேயே அவர்களுக்கான பணிகள் துவங்கிவிடும். தயிரிலிருந்து வெண்ணெய் எடுக்கும் பொருட்டு, பானையில் மத்தினை இட்டு, அது புலிபோல் ஆரவாரிக்குமாறு இழுத்து வலிப்பாள். மோரைப் பானையில் இட்டு, மெல்லிய சுமட்டினைத் தலையில் வைத்து அதன்மீது அம் மோர் பானையை வைத்து விற்கச் செல்வாள். மாமை நிறமுடைய அவள், தாளுருவி என்ற காதணியை அணிந்திருப்பாள். மூங்கில் போன்ற தோளையும், கருமணல் போன்ற கூந்தலையும் கொண்டிருப்பாள் (பெரும்பா. 155 - 162).

ஆய்ச்சி மோர் விற்று கிடைத்த பொருளைக் கொண்டு தன் சுற்றத்தவரை உண்ணச்செய்வாள். நெய் விற்ற விலைக்குக் கட்டிப் பொன்னை வாங்காமல், எருமை, பசு, கன்று ஆகியவற்றையே வாங்குவாள் என்பதை,

"அளைவிலை உணவின் கிளை உடன் அருந்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்ஆண் கரு நாகு பெறூஉம்" (பெரும்பா. 163 - 165)

என்று கடியலூர் உருத்திரங்கண்ணனார் குறிப்பிடுகின்றார்.

விருந்தோம்பல்

ஆயர்களின் விருந்தோம்பல் மிகச் சிறப்பானதாகும். பல சங்கப் பாடல்கள் ஆயர்களின் விருந்தோம்பலை விதந்தோதுகின்றன.

- ஆயர்களுடைய குடியிருப்புக்குச் சென்றால், நண்டின் சிறிய பார்ப்பைப் போன்ற பசிய தினை அரிசியால் ஆக்கிய சிலிர்த்த சோற்றைப் பாலுடன் பெறலாம் (பெரும்பா. 167-168) என்று பெரும்பாணாற்றுப்படையும்
- பொன்துகளைப் போன்ற ஒரே விதமான அரிசியை வெள்ளாட்டுக் கறியை இட்டு ஆக்கிய கரிய சோற்றுக் கட்டியைத் தண் என்ற நுண்ணிய நெய் விழுதை உள்ளே இட்டு உண்ணுமாறு, நுண்ணிய தினை மாவோடு பெறலாம் (மலை. 440-443) என்று இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனாரும்
- ஆய்ச்சியர் சமைத்த இனிய புளியங்கறி இட்ட சோற்றை ஆமானின் இறைச்சியோடு பெறலாம் என்று இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரும்
- குறிய தாளையுடைய வரகின் சிறிய பருக்கையாகிய சோற்றை, வேங்கை மலர் போன்ற அவரை விதையின் பருப்போடு செய்த உணவையும், மூரலையும் பெறலாம் (பெரும்பா. 192-196) என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும் குறிப்பிடுகின்றனர்.
- வேங்கைப் பூப்போன்ற மூங்கில் அரிசியால் ஆன சோற்றில், மேட்டு நிலத்தில் விளைந்த நெல்லரிசியைக் கலந்து அவரை விதையால் சமைத்த புளியங்கூழை இரவு உணவாகப் பெறலாம் (மலைபடு. 434-439) என்றும், வேற்றுப்புலத்தில் மேய்ந்த ஏற்றையுடைய நிரையில் வெண்மையான பசுவின் இனிய பாலை இடையர் மகள் மனம் மகிழ்ந்து கொடுப்பாள் (மலைபடு. 308-312) என்றும், ஆயர் குடியிருப்புக்கு இரவில் சென்றால் பாலும் பாற்சோறும் கிடைக்கும் (மலைபடு. 314-317) என்றும் மலைபடுகடாம் குறிப்பிடுகிறது.

மேய்புலக் காட்சிகள்

ஆயர்கள் பசுக்களை நீண்ட தொலைவு சென்று மலைகளிலும், குன்றுகளிலும், சமவெளிகளிலும், காடுகளிலும் மேய்ப்பர். மலைகளில் மேய்க்கும்போது, மந்தையிலிருந்து பிரிந்து சென்ற எருதுகள், மலைகளில் மேயும் மரை ஆனேறாகிய நல்லேறுகளுடன் சண்டையிடுவது உண்டு. இத்தகைய இரு ஏறுகளும் தம்முள் புறங்கொடாத வலிமையுடன் நவிரமலையில் மோதிக்கொண்டன. இதனைக் கண்ட கோவலரும் குறவரும் தம்முள் ஆரவாரித்தனர் (மலைபடு. 330-335). அருவி ஒலிக்கின்ற பெரிய மலைக்கருகே உள்ள குடியிருப்பில் இருந்த பொது மன்றத்தில் சிறு கன்றுகள் கட்டப்பெற்றிருந்தன. மன்றத்தினருகே பலா மரத்தின் வேருக்கு அருகே காய்த்துத் தொங்கிக்கொண்டிருந்த பெரிய பலாப் பழத்தைச் சிவந்த பசு தின்று, அருகில் உள்ள மூங்கில் நிறைந்த சிறிய மலையில் உள்ள நீரைப் பருகி இளைப்பாறும் (நற். 213:1-5) காட்சியைக் கச்சிப்பேட்டு பெருந்தச்சனார் குறிப்பிடுகிறார். மலைப்பகுதிகளில் வளர்ந்திருக்கும் ஓமை மரங்கள் பசுக்களுக்கு நிழல்தந்து ஆதரவளிப்பதைக் கல்லாடனார் (குறு. 260: 7-8) குறிப்பிடுகிறார். பலா மரங்கள் தந்த பழங்களின் மிச்சத்தைக்கொண்டு, அவற்றின் விதைகளுக்காகச் சிறுவர்கள் இளங்கன்றுகளைப் பிணைத்து, காந்தளின் துடுப்பைப் போன்ற மணம் கமழும் மடலைக் கோலாகக் கொண்டு ஓச்சி, கடாவிட்டனர் (மலைபடு. 337-339).

மூங்கில் நிறைந்த புதர்கள் உள்ள குறுங்காட்டில் ஆநிரைகளை மேய்ப்போர், அவற்றின் இருப்பினை அறிந்துகொள்வதற்கு நீண்ட தெளிவான மணிகளைக் கட்டியிருப்பர் (நற். 264:7-9). மேய்புலத்தில் ஆங்காங்குப் பூத்திருக்கும் மலர்களைப் பறித்து ஆயர்கள் சூடிக்கொள்வர். கொல்லைக் கோவலர்களுடைய புனத்தில் சிறிய குறுகிய காம்பினையுடைய குராமரத்தின் குவிந்த கொத்திலுள்ள வெள்ளிய பூக்களைப் பறித்து ஆயர்கள் அணிந்துகொள்வர் (நற். 266:1-4).

இரவில் கிடை அமர்த்தும் போது, மென்மையான தலைமயிர் அடக்கிய சேணம் இட்ட படுக்கையைப் போன்றதும், ஆட்டின் தோலால் தைக்கப்பட்டு வார் இறுக்கி மிதிக்கப்பட்டதுமான தோற்படுக்கையை ஆயர்கள் பயன்படுத்தினர். அங்குக் கொடிய விலங்குகள் வராதிருப்பதற்காகத் தீக்கடைக் கோலால் தீ மூட்டி அமர்ந்திருந்தனர் (மலைபடு. 418-420).

பல்விதமான பூக்களைச் சேர்த்துக்கட்டிய மாலையை அணிந்திருக்கும் ஆயர்கள், இடையில் மட்டும் ஒற்றை ஆடையை உடுத்தியிருந்தனர். பசுக்கூட்டங்களுடன் காட்டில் தங்கும் அவர்கள், தீக்கடைக் கோலினைக்கொண்டு கையால் கடைந்து உண்டாக்கிய கொள்ளியால் துளையிட்டுக் குழல் அமைத்து, அதில் பாலைப்பண்ணை இசைத்தனர். அதனை வெறுத்தபோது குமிழமரத்தின் கொம்பை வளைத்து நரம்போடு கட்டப்பெற்ற வில்யாழால் குறிஞ்சிப்பண்ணை மீட்டி மகிழ்ந்தனர் (பெரும்பா. 174-184). காலில் செருப்பு அணிந்திருந்ததால் வடுவுண்டாகியிருந்தது பசுக்களுக்கு வருத்தம் செய்யும் கோலை ஊன்றியிருந்தனர். தோலில் எப்போதும் கோடரி வைத்திருப்பதால் அதன் தழும்புடன் காணப்பட்டனர். பசும்பால் தடவப்பெற்ற மயிரினையுடையவர்களாக இருந்தனர் (பெரும்பா. 169-173).

ஆயர்கள் மேய்புலத்திலிருந்து (அகம். 9:20), சிறிய செம்மையான நாக்கையுடைய குளிர்ந்த மணியோசை ஊருக்கு அருகே ஒலிக்க, பல பசுக்களை ஓட்டிக்கொண்டு மாலையில் ஊர் திரும்புவர். மேய்ப்பதைத் தவிர வேறு ஒன்றையும் கல்லாத அவர்கள், கொன்றைப் பழத்தாலான அழகிய சிறிய குழலினை இசைத்தபடி வீடுதிரும்புவர் (நற். 364: 7-10).

ஆநிரைப் போர்கள்

தமிழகத்தின் வடபகுதியில் தொடர்ச்சியாகக் கால்நடைகளுக்கான போர்கள் நடைபெற்றன. ஒவ்வொரு சிற்றூர்களிலும் பெரும் எண்ணிக்கையில் கால்நடைகள் இருந்ததைச் சங்கப்பாக்கள் காட்டுகின்றன. கல்லாடனார் என்னும் புலவர் அம்பர்கிழான் என்னும் குறுநில மன்னனின் கால்நடைச் செல்வங்களை வாழ்த்துகிறார் (புறம்.385:1-2). கால்நடைகளைக் கொண்டே சங்க காலத்தில் செல்வம் மதிப்பிடப்பெற்றதை இதன்வழி அறியமுடிகிறது. இதன்பொருட்டே வடபகுதியில் பல போர்களும் நடந்தேறின.

வடிக்கப்பெற்ற அம்புகளையும், வளைந்த வில்லையும் உடைய வெட்சி வீரர்கள், மாற்றார்க்கு வருத்தத்தை உண்டாக்கும் வில்லை வளைத்துப் பல பசுக்கூட்டங்களை அவை வருந்தாதபடி கவர்ந்து வந்தனர். அவற்றை மீட்க வரும் கரந்தை வீரர்கள் கல் என்ற ஓசையுடன் வந்து மோதினர். வெட்சி வீரர்கள் கரந்தை வீரர்களை வருத்தி ஓட்டிய பெருவெற்றியைக் கொண்டாடினர் (அகம். 159:2-4) என்று ஆமூர் கௌதமன் சாதேவனார் என்னும் புலவர் அகநானூற்றில் குறிப்பிடுகிறார். பாணர்கள் ஆக்களைக் கவர்ந்து வரும் காட்சிகளை அகநானூறு காட்டுகிறது.

> **“இடம் பார்த்துப் பகைவர்**
> **ஓம்பினர் உறையும் கூழ்கெழு குறும்பில்**
> **குவை இமில் விடைய வேற்று ஆ ஒய்யும்**
> **கணை இருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்”** (அகம்:113:12-15)

என்று கல்லாடனார் சுட்டுகிறார். தன் நாட்டு எல்லையைக் கடந்து தொலைவில் உள்ள பகைவர் ஆக்களைக் கவரும் சமயம் பார்த்து, உணவு மிகுந்த அரண்களில் போய், குவிந்த இமிலையுடைய காளைகளுடன் கூடிய பகைப்புலத்து ஆக்களைப் பாணர் கவர்ந்தனர். நீண்ட வேலையும், கொழுவிய பல உணவுகளையும் கொண்டவர்களாகப் பாணர்கள் திகழ்ந்தனர் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

மறவர்கள் அவர்தம் சொல்கேளாத பகை மன்னனின் காவல் அமைந்த நிலத்திற்குச் சென்று, விடியலில் அவர்தம் பசுக்களைக் கொணர்ந்து, அவற்றைக் கள்ளுக்கு விலையாகப் பேசி விற்று, கள்ளைப் பெற்று அருந்தினர் (பெரும்பா. 140-143). இவ்வாறு கள்ளுக்காகவும் கால்நடைகளைக் கவர்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மன்றத்தில் வலிமையுடைய ஏற்றை அறுத்துத் தின்று தோலை மடித்துப் போர்த்திய மத்தளத்தை ஒலித்து அவர்கள் மகிழ்ந்தனர். ஆநிரைப் போர்களில் வீரமரணம் அடைந்த வீரர்களுக்கான நடுகற்கள் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளதிலிருந்து தொண்டை மண்டல ஆநிரைப் போர்களின் தன்மையை அறிலாம்.

ஆக்கள் செய்யும் பிறதொழில்கள்

எருதுகளைப் பிற நிலத்து மக்களும் தம் தேவைகளுக்குப் பயன்படுத்திக்கொண்டனர். உழவர்கள் நிலத்தை உழ எருதுகளையே நம்பியிருந்தனர். புறநானூற்றில்,

> **“முகடு உற உயர்ந்த நெல்லின் மகிழ்வர**
> **பகடு தரு பெரு வளம் வாழ்த்தி”** (புறம். 391:3-4)

என்று வாழ்த்துகிறார் கல்லாடனார். ஆமூர் உழவர்கள் வலிய பல எருதுகளை உடையவர்களாகத் திகழ்ந்ததைச் சிறுபாணாற்றுப்படை குறிப்பிடுகிறது. உப்பு வாணிகர்கள் வளைந்த நுகத்தையுடைய வண்டிகளில் எருதுகளைப் பூட்டி, பலபகுதிகளுக்கும் சென்று உப்பு வணிகம் செய்தனர் (அகம். 159:2-4). ஊர் திரண்டது போல் இத்தகைய பல வண்டிகளுடன் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் சென்றனர். ஓமை மரங்கள் நிறைந்த வழியில் தளர்ச்சியற்ற வன்மையான கால்களையுடைய செவ்விய எருதுகள்,

கழுத்தில் மணியோசை ஒலிக்க, உப்புகளை ஏற்றிக்கொண்டு சென்றன (அகம். 191:4-10) என்று கந்தரத்தனார் குறிப்பிடுகிறார்.

இத்தகைய பல்வேறு பணிகளில் ஏறுகள் ஈடுபடுத்தப்பெற்றன.

தொண்டை மண்டல நாட்டுக்குட்டை இனம்

தொண்டை மண்டலத்தில் உள்ள நாட்டு மாட்டினங்களில் நாட்டுக்குட்டை இனம் குறிப்பிடத்தகுந்ததாகும். தொன்றுதொட்டு இந்நிலத்தில் இவ்வினம் வாழ்ந்துவருகின்றது. தமிழகத்தின் நாட்டு மாட்டினங்களாகக் காங்கேயம், புலிக்குளம், உம்பளச்சேரி, ஆலம்பாடி, பர்கூர் மாடுகள் திகழ்கின்றன. தொண்டை மண்டலத்தைப் பூர்விகமாகக் கொண்ட மாடுகள், காஞ்சிபுரம் குட்டை அல்லது நாட்டுக்குட்டை மாடுகள் என அழைப்படுகின்றன. தொண்டை மண்டல மாவட்டங்களைத் தவிர்த்துப் பிற மாவட்டங்களில் இம்மாடுகளைக் காணமுடிவதில்லை. தென் மாவட்டங்களில் காணப்படுவதைப் போன்று கிடை மாடுகளாக இம்மாடுகளும் பயன்படுகின்றன. ஆனால் அம்மாடுகள் அளவுக்கு இவை பேணப்படுவதில்லை. இம்மாடுகளோடும் அதன் பொருளாதாரத்தோடும் தொண்டை மண்டலச் சமூகங்கள் கொண்டுள்ள பிணைப்பு, பண்பாட்டு முக்கியத்துவம் கொண்டதாகும். இது குறித்து ர. பூங்குன்றன் அவர்கள்,

வாணியம்பாடி பக்கத்திலுள்ள கேதாண்டபட்டி ஊரில் நடுகல் இருக்குமிடத்துக்கு மாட்டுப் பொங்கல் அன்று அல்லது மறுநாள் ஏலகிரி மலைமீது உள்ள மக்கள் தங்களின் கால்நடைகளை ஓட்டி வந்து சடங்குகளைச் செய்வர். அவ்வாறு செய்வதால் வருகிற வருடத்தில் கால்நடைகள் நோய்வாய்ப் படாமல் பட்டிப் பருகும் என்பது அவர்கள் நம்பிக்கை. மாட்டுப்பொங்கல் என்பதே கால்நடை சமூகத்தின் பொருளாதாரப் பின்னணியை மையப்படுத்திய திருவிழாதான். தொண்டை மண்டலத்தில் எருதாட்டம், மாடு விடும் விழாக்கள், பொங்கல் நாட்களில் நடப்பவை. குறிப்பாக நடுகற்கள் இருக்கும் மந்தை வெளி (மண்டு) பகுதியிலுள்ள மைதானத்தில் இவ்விழா நடைபெறும். பொங்கல் நாட்களில் மற்ற விழாக்களுக்கு முக்கியத்துவம் குறைவு. மாட்டுத் திருவிழா அன்றுதான் பெரும்பான்மையான மக்கள் கூடுவர். கரடிகைப் போன்ற சில இடங்களில் நடுகல் கல்வெட்டைச் சுற்றியே மாடுகள் நிறுத்தப்படும். இது வளமைச்சடங்கின் வெளிப்பாடு. கொங்குப் பகுதியில் இதனைப் பட்டிப்பொங்கல் என்பர். அங்கு ஒவ்வொருவரின் வீட்டிலும் தனித்தனியாகப் பட்டிப்பொங்கல் வெகுசிறப்பாகச் சிறு விழாவாகவே நடைபெறும். வேளாண்மையோடு பெரிதும் தொடர்பில்லாத அங்குதான் மாடுகளைச் சேற்றில் நடக்கவிடும் முறையும் பின்பற்றப்படுகிறது. தொண்டை மண்டலத்தில் மண்டில் கூடும் விழா தனித்த மேய்ச்சல் சமூகப் பண்பாட்டின் எச்சம். கால்நடைப் பொருளாதாரத்தைச் சார்ந்து விளங்கும் கிராமங்களில் மற்ற விழாக்களுக்கு வருகிறார்களோ இல்லையோ மாட்டோடு தொடர்புடைய விழாக்களில் தவறாமல் கூடும் வழக்கத்தை இன்றளவும் தமிழகம் கொண்டுள்ளது என்று குறிப்பிடுகிறார். ர.பூங்குன்றனின் இத்தகைய புரிதல்களிலிருந்து, தொண்டை மண்டல வழக்காறுகளில் கால்நடைகளின் முக்கியத்துவத்தினை நன்கறியலாம்.

சங்க இலக்கியங்களில் தொண்டை மண்டலப் புலவர்களின் பாடல்களை மட்டுமே கொண்டு மேற்குறித்த தகவல்களைப் பெறுமுடிகின்றன. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து, தற்காலம் வரையிலும் தொண்டை மண்டலப் பகுதி, வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பகுதியாக விளங்கி வருகிறது. மனிதர்கள் வேட்டைச் சமூக நிலையிலிருந்து கால்நடை சமூகமாகப் பரிணமித்து, பிற்பாடு உழுகுடிகளாக மாற்றம் பெற்ற நிலைகளைத் தொண்டை மண்டலத்தின் சுவடுகளாக இன்றளவும் ஆய்தறிவதற்கான பல்வேறு காரணிகளை அது கொண்டுள்ளது.

வேகமாக மாறிவரும் தற்காலச் சூழலும், தனியார்மயம், தாராளமயவாதம், மக்கள்தொகைப் பெருக்கம், நகரமயமாக்கல், காடழிப்பு, மேய்ச்சல் வெளிகளைக’ குடியிருப்புகளாகவும் வணிகவளாகங்களாகவும் அரசு கட்டங்களாகவும் மாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தொண்டை மண்டல மேய்ச்சல் தொழில் சிதைந்துள்ளது. கால்நடைகள் பொருளாதாரத்துக்கானவை மட்டும் அல்ல. மண்ணோடும் இயற்கையோடும் மிகப் பிணைப்புடையவை. கால்நடைகளால் நிலமும், நில வளத்தினால் கால்நடைகளும் செழிப்படையக்கூடியவை. இந்தச் சங்கிலி உடையும்போது, அது சுற்றுச்சூழலை மிக ஆபத்தான நிலைக்கு இட்டுச்செல்கிறது. இதனால் மனிதர் உட்பட அனைத்து உயிரினங்களும் ஆபத்தின் விளிம்புக்குச் செல்கின்றன. காடுகளைப் பாதுகாப்பதும், புதிதாகக் காடுகளை உருவாக்குவதும், மேய்ச்சல் வெளிகளைப் பாதுகாத்துப் பேணுவதும் பேரிடர்கால நிகழ்வாகக் கருதி அரசும், தனியார் அமைப்புகளும் முன்னெச்சரிக்கை நடைவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவ்வுலகு மனிதர்களுக்கானது மட்டுமல்ல.

பச்சையாற்றங்கரை நாகரீகத்தில் மேய்ச்சலியத்தின் தொன்மைச் சிறப்பு

சு.வானமாமலை, எம்.ஏ, எம்.ஃபில், பி.எட்,
vanumamalairavi@gmail.com

மேய்ச்சலியத்தின் தொன்மைச் சிறப்பு

தமிழர்களின் வாழ்வியலில் மேய்ச்சலியம் என்பது தவிர்க்க முடியாத ஒரு அங்கமாக விளங்கி வருகிறது. கற்காலம் தொடங்கி நாகரிக மனிதனாக மாற்றம் பெற்ற தமிழ்க் குடிகளில் கால்நடைகளைத் தங்கள் வாழ்வில் ஏற்றுக் கொண்டு சிறப்பான பொருளாதார நிலையை அடைந்து கால ஓட்டத்தில் சுழன்று வந்ததையும் அதன் தொன்மையையும் நமக்கு வரலாறுகள் உணர்த்துகின்றன.

நெல்லை மாவட்டத்தில் பச்சையாற்றங்கரை நாகரிகம் என்பது ஒரு பழமையான ஆற்றங்கரை நாகரிகமாகும். பச்சையாற்றங்கரை இயல் காடுகளைச் சார்ந்து மனிதன் வாழும் நிலையில் அங்குள்ள நீர் நிலைகளும் பசுமை வளங்களும் மேய்ச்சலியத்திருக்கு உரமிட்டன. அத்தகைய பச்சையாற்று மேய்ச்சலியத்தின் தொன்மை குறித்து இங்கு காண்போம்..

பழமையான பச்சையாற்று போக்கு நாகரிகம்

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்தின் மேற்கு பகுதியில் உள்ள பொதிகை மலையின் ஒரு பகுதியான களக்காடு மேற்கு தொடர்ச்சி மலையில் தோன்றிய பச்சையாறு பல்லாயிரம் ஆண்டுகளாக நெல்லை மாவட்டத்தின் தென்பகுதியைப் பசுமை வளமிக்க பகுதியாக்கி மேய்ச்சலியத்தைப் பாதுகாத்து வருகிறது.

களக்காடு, பத்தை, கருவேலன்குளம், பத்மநேரி, தேவநல்லூர் காடுவெட்டி, சிங்கிகுளம், திடியூர், ஓமநல்லூர், தருவை, முன்னீர் பள்ளம், எனப் பல ஊர்களில் பச்சையாறு நேரடியாகவும், களக்காட்டை ஒட்டியுள்ள பகுதியான இடையன்குளம், சடையமன்குளம், சாலைப்புதூர், பூலம், கடம்போடுவாழ்வு, சூரங்குடி, மஞ்சங்குளம், நாங்குநேரி, காரங்காடு, சிங்கநேரி, உண்ணன்குளம், இளையார்குளம் இலங்குளம் உள்ளிட்ட பல்வேறு ஊர்களில் கால்வாய்ப் பாசனம் மூலம் பச்சையாற்று நீர் மேய்ச்சலியத்திற்காகப் பசுமையைப் பாதுகாத்துக் கொடுக்கிறது.

பச்சையாற்றின் மூலப்பணி வேளாண்மைக்குப் பாசனத்தையும் உயிர்களின் குடிநீர்த் தேவையையும் நிறைவு செய்வது என இருந்த போதிலும் விவசாயிகளின் வாழ்வியலில் ஒரு அங்கமாக விளங்கும் கால்நடைகளுக்குத் தேவையான புற்களையும் தண்ணீரையும் மேய்ச்சல் நிலங்களையும் இந்தப் பச்சையாறு பரம்பரை பரம்பரயாகப் பகிர்ந்து அளித்து வருகிறது.

பச்சையாற்றங்கரையின் பாரம்பரிய மேய்ச்சலியம்

'கன்று ஆற்றுப்படுத்த புன் தலை சிறா அர்' (குறிஞ்சிப்பாடல் 241)

எனும் குறிஞ்சி இலக்கியப்பாடல் தமிழர்களின் கால்நடை வளர்ப்பைக் குறிப்பிடுகிறது.

பச்சையாற்றங்கரை தமிழர்களின் பழங்கால நாகரிகத்துள் அடங்கிய சாதாரண வாழ்க்கை தொடங்கி வழிபாட்டு, கோவில்கள் மடாலயங்கள் தர்ம சத்திரங்கள்

ஆகியவற்றில் கால்நடைகள் தரும் வாழ்வியல் பொருள்களின் பயன்பாடு மிகவும் அவசியமாக இருந்ததால் கால்நடை வளர்ப்பில் விவசாயிகள் ஆர்வம் கொண்டனர். பிறந்த குழந்தை முதல் கோவில் வழிபாட்டு நீராட்டு வரைக்கும் பால் அதன் உப பொருட்களான தயிர், வெண்ணெய், சாணம், கோமியம் உள்ளிட்ட பொருள்களின் தேவை உணர்ந்த மக்கள் கால்நடை வளர்ப்பை முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். விவசாய நிலங்களில் ஏர் பூட்டி பண்படுத்தவும் விளைந்த வெள்ளாமையை வண்டியிலே ஏற்றி வீடு சேர்க்கவும் காளை மாடுகளையும் எருமைக் கிடாரிகளையும் பயன்படுத்திய வந்தனர். ஆடுகள் பச்சையாற்றங்கரையில் உள்ள நாட்டார் கோவில்களில் பலியிடவும், குடும்ப விழாக்களின் விருந்து நிகழ்ச்சிகள், மற்றும் சீர்வரிசை வழங்கவும் வளர்க்கப்படட்து. அவ்வாறு ஆடு மாடுகளோடு வாழ்ந்து அவற்றை வளர்த்துத் தொழில் செய்து வந்த மக்கள் சாதிய கட்டமைப்புகளின் படி இடையர்கள் அல்லது இடையர் சாதி என அழைக்கப்பட்டனர்.

“இருமருப்பு எருமை ஈன்றணிக்காரன்
உழவன் யாத்த குழவியின் அகலாது” – (மருதப்பாடல்-181)

மருத நிலங்களில் மேய்ச்சல் நிலச் செழிப்பால் எருமை மாடுகள் அதிகம் வளர்க்கப்பட்டதாக ஈராயிரம் ஆண்டு பழைய இலக்கியமான மருதப்பாடல் நமக்கு உணர்த்துகிறது. அதிலும் ஆடு வளர்த்தவர்கள் ஆட்டு இடையர்கள் என்றும் பசு எருமை மாடு வளர்த்தவர்கள் மாட்டு இடையர்கள் என்றும் பச்சையாற்று நாகரிகத்தில் அழைக்கப்பட்டனர். சாதுவான அந்த கால்நடைகளைப் போலவே மிகவும் சாதுவாக வாழ்ந்த இடையர் இன மக்களை அனைத்துத் தரப்பினரும் அன்போடு நேசித்தனர். இப்பகுதியில் இடையர்கள் வளர்த்த கால்நடைகளைத் தினமும் மேய்ச்சலுக்கு இட்டுச் சென்றனர். அதற்கு அவர்கள் தேர்ந்தெடுத்த பகுதி பச்சை ஆற்றங்கரையோரம் உள்ள மேய்ச்சல் நிலங்கள் ஆகும்.

ஆண்டின் பெரும்பாலான நாட்களில் நீரோடும் பச்சையாற்றில் ஒரு சில நாட்கள் மட்டுமே பெருவெள்ளம் பாய்ந்து ஓடும். ஆகவே களக்காடு மேற்குத் தொடர்ச்சி மலை தொடங்கி முன்னீர்பள்ளம் தாமிரபரணி ஆற்றில் பச்சையாறு கலக்கும் பகுதி வரைக்கும் உள்ள பச்சையாற்றங்கரை மேய்ச்சல் நிலத்தில் மேய்ச்சலுக்கு எப்போதும் பஞ்சமே இருக்காது. வானம் பொய்த்து விவசாயம் வீழ்ந்து போனாலும் பச்சை ஆற்றங்கரையின் பசுமையான மேய்ச்சல் நிலத்தால் கால்நடை வளம் எக்காலத்திலும் இங்கு வரண்டு போனது கிடையாது.

பாண்டிய மன்னர்களைக் களைக் கவர்ந்த பச்சையாற்றங்கரை மேய்ச்சலிய தொன்மை

பச்சையாற்றுப் போக்கில் உள்ள சிங்கிகுளம் கிராமம் மிகவும் பழமையானதாகும். இங்கு பாண்டிய மன்னர்களின் கல்வெட்டுகள் காணக் கிடைக்கின்றன. கி.பி. ஏழாம் நூற்றாண்டில் பாண்டிய மண்டலத்தை ஆட்சி செய்த சௌந்தர பாண்டியன் என்ற நெடுமாறன் மன்னன் சிங்கிகுளம் கைலாசநாதர் கோவிலைக் கட்டியதாக அங்குள்ள கல்வெட்டு ஒன்று விளக்குகிறது அதில் அந்தக் கோவிலுக்கு என நிலங்களை மானியமாக வழங்கியதையும் அந்த நிலங்களில் வேளாண்மை செழிக்க பாசனக்கால்வாய் வெட்டி வைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. அந்தக் கால்வாய்களின் வழியாக ஆற்று நீரை எடுத்துச் சென்று அப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட குளங்களில் சேமித்து வைத்து விவசாய பணிகளுக்குத் தொன்று தொட்டு இன்றும் அப்பகுதி மக்கள் பயன்படுத்தி வருகின்றன.

அந்தக் குளங்களில் ஒவ்வொரு ஆண்டும் 8 முதல் 10 மாதங்கள் வரை தண்ணீர் இருப்பு வைக்கப்படும். இதனால் குளத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் கரையை ஒட்டி உள்ள சமவெளி தரையில் பசுமம்புற்களும் தீவன தாவரங்களுடன் ஏராளமாகச் செழுத்து

வளர்வது உண்டு. அதனையும் கால்நடை வளர்ப்பு மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்துகின்றனர். அதே நேரம் குளத்தைச் சுற்றி மேயும் கால்நடைகள் வெளியேற்றும் கழிவுகள் குளத்து நீரில் கலப்பதால் விவசாயத்திற்குத் தேவையான தொழு உரம் இயற்கையிலேயே கிடைக்கிறது.

சிங்கிகுளம் சமண மலையில உள்ள சமணப் பள்ளிக்குக் கி.பி 1246ம் ஆண்டு பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் பள்ளி சந்தம் வழங்கிய பழமையான கல்வெட்டு உள்ளன. அதில் சமணர்களின் நலன் கருதி வழங்கிய பள்ளிச்சந்த செய்தியில் வேளாண் நிலமும் குளமும் வழங்கியதோடு, இப்பகுதியில் வசூலாகும் பல்வேறு வரிகளையும் வழங்குவதற்கு ஆணையிட்ட செய்தி அடங்கியுள்ளது. வேளாண்மை அல்லாத மற்றும் வேளாண் சார்ந்த மக்கள் அக்காலத்தில் செய்த தொழில்களான நெசவு, தச்சு, பொன்வேலை, கால்நடை வளர்ப்பு, எண்ணெய் எடுக்கும் செக்கு ஆட்டும் தொழில் எனப் பல்வேறு தொழில்களுக்கு அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் சமண மடத்திற்குச் செலுத்த ஆணையிட்டான் அதில் ஒன்று “ இடையர் வரி” என்பது குறிப்பிடத் தக்கது.

பச்சையாற்றங்கரை மேய்ச்சல் நிலத்தின் வளமையால் ஆடு மாடு போன்ற கால்நடைகளை வளர்த்துப் பொருளாதாரத்தில் மேம்பட்ட இடையர்களுக்கு அக்காலத்தில் வரி விதிக்கும் வழக்கம் இருந்ததை இக்கல்வெட்டுகள் நமக்கு உணர்த்துகிறது.

அக்காலத்தில் பச்சையாறு மேய்ச்சல் நிலங்கள் தந்த பசும் புற்களை உண்டு கொழுத்த மாடுகள் ஆடுகளும் அவை வழங்கிய பால் பொருட்களும் இடையர்களின் வாழ்வில் செல்வச் செழிப்பை உயர்த்தியதை கண்ட பாண்டிய மண்டல ஆட்சியாளர்கள் அந்த கால்நடைகளுக்கும் தனியாக வரி விதித்து வசூலித்துள்ளனர் என்பது பச்சையாறு மேய்ச்சல் நிலமான சிங்கிகுளம் கள ஆய்வுகள் தரும் செய்திகள் ஆகும்.

அதே மலையில் கி..பி. 1275ல் பாண்டிய மன்னன் குலசேகர பாண்டியன் சமண மலை நிர்வாகம் தொடர்பாகச் சில மாற்றங்களைக் கொண்டு வந்து செயல்படுத்த முனைந்த போது ஏற்படுத்திய கல்வெட்டிலும் இடையர்வரி இடம் பெற்றுள்ளது. இது மேய்ச்சல் நிலங்களை ஆதாரமாகக் கொண்டு கால்நடை வளர்க்கும் இடையர்களுக்கு அக்காலத் தமிழ் சமுதாயத்தில் இருந்த முக்கியத்துவத்தை நாம் அறிய முடிகிறது. தொன்மக் காலமுதல் பச்சையாற்றுப் போக்கில் உள்ள தேவநல்லூர் காடுவெட்டி சிங்கிகுளம் திடியூர் பூலம் ஆகிய ஊர்களில் கால்நடைகளுக்கான பறந்து விரிந்த பல வகை மேய்ச்சல் நிலங்கள் இன்றும் காணக் கிடைக்கின்றன.

பச்சையாற்றங்கரை நாகரிகத்தில் செவி வழிக் கதைகளில் மேய்ச்சலிய பண்பாடு

சிங்கிகுளம் ஊரில் ஒரு காலத்தில் பெரும் இடையர் ஒருவர் வாழ்ந்து வந்தாராம். ஏராளமான பசுக்களை வளர்த்து வந்த அவர் தினமும் அவற்றைப் பச்சை ஆறறங்கரையோரம் மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வாராம். தொழுவில் இருந்து சென்ற முதல் மாடு ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பூலம் மேய்ச்சல் நிலத்தை அடையும் போது கடைசி மாடு தொழுவை விட்டு வெளியேறுமாம். அவ்வளவு பெரும் கூட்டமான பசுக்களை அவர் வளர்த்து வந்துள்ளார். அந்தப் பசுக் கூட்டத்தில் ஒரு பசு மட்டும் மாலையில் காலதாமதமாக வீடு திரும்பவதை வழக்கமாக கொண்டிருந்ததாம்.

அதே நேரத்தில் அந்தப் பசுவின் மடியில் பால் கறந்ததற்கான அடையாளங்கள் இருப்பதையும் கண்டு அதிர்ச்சி அடைந்தார் அதனைத் தொடர்ந்து சில நாட்கள் அந்தப் பசுக்களை கவனித்து வந்தார். பச்சை ஆற்றங்கரையின் வலது ஓரத்தில் இருக்கும் புதருக்குள் அந்தப் பசு குறிப்பிட்ட நேரத்தில் சென்று வருவதை கவனித்தார். அப்போது உள்ளே சென்று பார்த்த போது அங்கு இருந்த ஒரு லிங்கத்திற்கு பசு தினமும் பால்

சொரிந்து வந்தது தெரிந்தது. புதரை நீக்கி அதனைச் சுத்தம் செய்து லிங்கத்தை முழுமையாக வெளியே எடுத்து அந்த இடத்தில் கைலாசநாதர் கோவில் கட்டி வழிபட்டதாக இவ்வூரில் செவிவழிச் செய்தி வாய்மொழிக் கதைகளாக இன்றும் உலவிக் கொண்டிருக்கின்றன.

பிற்காலத்தில் அக்கோவிலிலுள்ள கல் மண்டபத் தூணில் லிங்கத்திற்குப் பசு மாடு பால் சொரியும் காட்சியைச் சிற்பமாக வடித்து வைத்துள்ளனர். இதைப் போலவே தேவநல்லூர் கிராமத்திலும் மேச்சலிய வாழ்வியல் செய்திகளாக கறவை மாடு லிங்கத்திற்குப் பால் சுரந்த கதை நிலை பெற்று உளளது.

கள்ளிச் செடியின் கிளைகளில் இலைகள் இருப்பதில்லை. அதற்கு இடையர்களின் வாழ்வியல் வழியே ஒரு கிராமக் கற்பனை காரணக்கதை உண்டு. மேய்ச்சல் நிலங்களுக்கு ஊடே கள்ளிச்செடிகள் வளர்ந்து நிற்பதுண்டு. ஒரு ஊரில் மோர் விற்று பிழைக்கும் இடையர் குலப் பெண்ணொருத்தி தினமும் பக்கத்து ஊருக்கு மோர் விற்பனைக்குச் சென்று வந்தாளாம். அவ்வாறு செல்லும் வழியில் நின்ற கள்ளிச் செடியின் கிளையில் உள்ள முள்ளில் சிக்கி அந்தப் பெண் அவதிப்பட்டுள்ளார். சில நாட்கள் அந்த கள்ளிச்செடியால் மோர் பானை சேதமடைந்து மோர் வீணாகியதால் வருத்தமடைந்தாள். இதனால் தனக்குத் துன்பத்தை தந்த அந்தக் கள்ளிச்செடியைப் பார்த்து

“ஓ ஓ மரம... ஒசந்த மரமே...
ஒரு கொத்து இலைக்கு
விதியற்று போ மரமே...”

எனக்கூறி சாபம் இட்டாளாம் அந்தப் பெண். அது முதல் கள்ளிச்செடி இலைகளை இழந்தது எனக் கூறும் செவி வழிக் கதை அந்தக்கால மேய்ச்சலிய பண்பாட்டு பெருமைகளை உணர்த்துவதாக உள்ளது.

பச்சையாற்றுப் போக்கில் மேய்ச்சல் நிலங்களின் வகைப்பாடுகளும் இடர்பாடுகளும்

பச்சையாற்றங்கரை மேய்ச்சல் புல்வெளிகள் பச்சை ஆற்றின் நீரினை நம்பியே இருப்பினும் அவற்றின் தன்மைகள் பலவாறாக மாறுபடுகிறது. பச்சை ஆறு தொடங்கும் தொன்மையான களக்காடு மலைப்பகுதியில் அவை மலைக்காட்டு மேய்ச்சல் நிலங்களாக உள்ளன. அதனை அடுத்து மலை அடிவாரம் மேய்ச்சல் நிலங்களும் அதனைத் தொடர்ந்து வயல்வெளி மேய்ச்சல் நிலங்கள், சமவெளி மேய்ச்சல் நிலங்கள், பாசன கால்வாய் கழிமுக மேய்ச்சல் நிலங்கள், குளத்தங்கரை மேய்ச்சல் நிலங்கள், கோவில் நில மேய்ச்சல் நிலங்கள் எனப் பலவாறாக இப்பகுதியில் தொன்று தொட்டு இன்றும் மேய்ச்சல் நிலங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கடல் மட்டத்திலிருந்து 3 ஆயிரம் அடி உயரம் உள்ள களக்காடு மலைப்பகுதியில் காணப்படும் பசும்புற்கள் மற்றும் மேய்ச்சல் தீவனங்கள் மிகவும் செழுமையாகவும் வளமையாகவும் உள்ளது. ஆண்டு முழுவதும் மேய்ச்சல் நிலங்களில் தீவனத் தட்டுப்பாடு வருவதில்லை. மழைக் காலங்களில் பனி காலங்களிலும் மலையடிவாரங்களில் மேய்ச்சல் தீவனங்கள் செழிப்புற்றுக் கிடைக்கின்றன. கோடை காலத்தில் வாடல் புற்கள் மட்டும் கால்நடைகளுக்குக் கிட்டுகின்றன.

களக்காடு வட்டார மலையும் மலை சார்ந்த அடிவாரப் பகுதிகளில் கிடைமாடு மேய்ச்சல் முறை வழக்கத்தில் இருந்துள்ளது. இப்பகுதிகளில் வனவிலங்குகளின் தாக்குதலாலும் வனத்துறையின் கட்டுப்பாட்டில் காடுகள் இருப்பதாலும் தற்போது காப்புக்காடுகளாக அறிவிக்கப்பட்டுக் கால்நடை மேச்சலுக்கு நெருக்கடி அளிக்கப்படுகிறது. அல்லது தடுக்கப்படுகிறது. இதனால் மலை அடிவார மேய்ச்சல் நிலம் என்ற தனது

தன்மையைக் களக்காடு மலை சார்ந்த பகுதிகள் இழந்து வருகின்றன இது கால்நடை மேய்ச்சலிய வாழ்வியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

அதனைத் தொடர்ந்து வயல்வெளிகளில் பயிரிடுவதற்கு முன்பும் பயிரிட்டு அறுவடை செய்த பின்பும் தரிசு நில மேய்ச்சல் பணி நடக்கிறது. இதில் தரிசு நிலப் பொருட்களும் விவசாயக் கழிவுகளும் கால்நடைத் தீவனம் ஆகிறது. விளைநிலங்கள் கால்நடைகளுக்கு தீவனம் வரப்பிரசாதமாக அமைந்தாலும் நவீன வேளாண்மையில் பயன்படுத்தப்படும் அதிபயங்கர உரங்களும் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கால்நடைகளின் உணவு மண்டலத்தைப் பெரிதும் பாதிக்கின்றனர். இதனால் இதுவரை கண்டிராத பல புது வகையான நோய்கள் கால்நடைகளைத் தாக்கும் அபாயம் அதிகரித்து வருகிறது. அதோடு மட்டுமல்ல விஷம் கலந்த உணவை உண்ணும் கால்நடைகளில் இருந்து பெறப்படும் பால் பொருட்களிலும் மறைமுகமாக விஷம் கலப்பதுடன் பால்பொருட்கள் சார்ந்த உணவுகளும் விஷமாகும் விபரீதம் நடப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

பாசன வசதியின்றி விவசாயம் செய்ய முடியாமல் தரிசு நிலங்களாகக் கிடக்கும் புஞ்சை சமவெளி நிலங்களில் மழைக்காலத்தில் மட்டுமே புற்கள் கிடைபபதால் அங்கு மேய்ச்சல் பணி மேலோங்கி நிற்கிறது. அதிலும் தனியார் பட்டா புஞ்சை நிலங்கள் தற்போது வீட்டு அடி மனைகளாகவும் தொழிற்சாலை கட்டிடங்களாகவும் சமவெளி மேய்ச்சல் நிலங்களாக மாறிப்போனதால் மேய்ச்சலிய வாழ்வு சமவெளிகளில் அருகி வருகிறது. இதன் விளைவாகவே கால்நடை வளர்ப்புத் தற்போது தொழிற்சாலைகள் தரும் செயற்கை உணவுகளை நம்பி ஓடிக் கொண்டிருக்கிறது.

விவசாயப் பணிகளின் போது வெளியேற்றப்படும் உபரி பாசன நீர் கால்வாய்கள் வழியாக மீண்டும் கீழ்ப் பகுதியில் உள்ள ஆற்றின் ஓட்டத்தில் வந்து கலக்கின்றன. அந்த கழிமுகப்பகுதியில் கால்நடை மேய்ச்சலுக்குத் தேவையான பசுந்தீவனங்கள் ஏராளமாக மண்டி கிடைக்கும். வயல்களில் பயிர்த்தொழில் நடக்கும் போதும் ஆற்றில் பெருவெள்ளம் மற்றும் மழைக்காலங்கள் ஆகிய நேரங்களில் நெடுந்தொலைவு சென்று கால்நடைகள் மேய முடியாத நிலையில் இந்தக் கழிமுக புல்வெளிகள் கால்நடைகளுக்கு உணவளித்து உதவுகின்றன. இதுவும் பாரம்பரியமான மேய்ச்சல நிலங்கள் வகைகளுள் ஒன்று என பச்சை ஆற்றங்கரை பாரம்பரியப் பண்பாடு உணர்த்துகிறது.

பச்சை ஆற்றங்கரை ஒட்டியுள்ள நிலங்கள் பல்லாயிரக்கணக்கான ஏககர் நிலங்கள் கோவில்களுக்கும் ஆதீனங்களுக்கும் மடங்களுக்கும் சொந்தமானதாக இருக்கின்றன கோவில்களின் வருவாயைக் கருத்தில் கொண்டு பழங்கால மன்னர்களால் நிலமானியமாக வழங்கப்பட்ட இந்த நிலங்களிலும் மேய்ச்சல் பணி தொன்று தொட்டு நடந்து வருகிறது. அந்த நிலங்களில் தொடர்ந்து மேய்ச்சலுக்காகப் பயன்படுத்தி வரும் மேய்ப்பர்களிடம் கோவில் நிர்வாகமோ மடத்து நிர்வாகமோ அல்லது அதனைக் குத்தகைக்கு எடுத்தவர்களோ ஒரு சிறு தொகையைப் புல்வரி என்ற பெயரில் ஆண்டுக்கு ஒரு முறை வசூலிக்கு வழக்கம் உள்ளது கோவில் அல்லது மடத்தின் பணியாளர்களுக்கு இனமாக ஆடு மாடுகள் வழங்கும் போக்கு அந்த காலத்தில் ஆவணப்படுத்தப்படாத விதியாகவும் எழுதப்படாத சட்டமாகவும் இருந்ததுடன் கால்நடை வளர்ப்போரிடம் மறைமுக கையூட்டு பெரும் பழக்கமும் இருந்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த முடியாமலும் தவிர்க்க முடியாமலும் தவித்த மேய்ச்சலியலாளர்கள் சந்தித்த பல்வேறு தொழில் இடர்பாடுகளுள் இதுவும் ஒன்று எனக் கூறப்படுகிறது.

பச்சையாற்றங்கரை பாசனத்தில் வெள்ளக் காலங்களில் வரும் நீரை குளங்களில் சேர்த்து வைக்கும் வழக்கம் காலங்காலமாக இருந்து வருகிறது. பாசன குளங்களின் நீர் பிடிப்புப் பகுதிகளை ஒட்டி உள்ள மேய்ச்சல் நிலங்களில் செங்கல் சூளை மற்றும் கட்டிடப் பணிகளுக்கு ஏராளமான குளத்து மண் கனரக எந்திரங்கள் மூலம் எடுத்து அதி

கனரக வாகனங்கள் மூலம் வேறு இடங்களுக்குக் கடத்தப்படுவதால் மேய்ச்சலியல் நிலங்கள் அழிவுக்குள்ளாகின்றன.

பச்சையாற்றங்கரை மேய்ச்சலியத்தின் சந்தைப் பொருளாதாரம்

பச்சையாற்றங்கரை மேய்ச்சல் நில வளத்தில் மேயும் மாடுகள் தரும் பாலும் தயிரும் மோரும் வெண்ணையும் நெய்யும் சேகரிக்கப்பட்டு இடையர் வீட்டுப் பெண்கள் ஓலைப்பெட்டியில் வைத்துத் தெருத்தெருவாகச் சென்று விற்பது பழங்கால வழக்கம். இடையர் வீட்டுப் பெண்ணின் கைப்பக்குவத்தில் சமூக அக்கரையுடன் உருவான பால் பொருட்களுக்கு ஊரார் வழங்கிய ஆதரவு அளப்பரியது. பண்ட மாற்று முறையில் வழங்கப்படும் பால் பொருட்களுக்குப் பதிலாக விவசாய உற்பத்திப் பொருட்கள், மேய்ச்சல் பணிக்குத் தேவைப்படும் காலணி, மேய்ப்பரின் உடைகள், உணவுப் பாத்திரங்கள், தொழுவம் அமைக்க உதவும் தச்சர்கள், உள்ளிட்ட தொழிலாளர்களின் உழைப்பையும் பண்டங்களையும் பெறும் வழக்கம் அக்காலத்தில் இருந்துள்ளது.

கால மாற்றத்தில் கால்நடைகளின் பால்பொருட்கள் மற்றும் இறைச்சி உள்ளிட்டவை சந்தைப்படுத்தலிலும் பச்சையாற்றங்கரை மேய்ச்சலிய சமூகம் மாற்றத்தைக் கண்டது. ஊர் தோறும் பால் விற்பனைக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசால் உருவாக்கப்பட்டது. அங்கு பால் கொள்முதல் செய்யப்பட்டுப் பதப்படுத்தும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. கோழி மற்றும் ஆட்டு இறைச்சி, முட்டை உள்ளிட்ட அசைவ பொருட்கள் விற்க கடை வீதிகளில் தனிக்கடைகள் திறக்கப்பட்டு பொதுமக்களின் தேவை நிறைவேற்றப்படுகிறது. மேலும் கால்நடைகளின் தோல், சாணம் போன்ற எச்சக் கழிவுகள் உள்ளிட்டப் பொருட்களும் மேய்ச்சலிய பொருளாதரரத்தின் ஒரு பகுதியாகப் பழங்காலம் முதல் பச்சயாற்று நாகரிகத்தில் பயின்று வந்துள்ளது.

நவீன வளர்ச்சியில் அதிகரித்து வரும் தேவைகளால் வயல்வெளிகளில் பயன்படுத்தும் செயற்கை ரசாயன உரங்கள் குளத்து மண் ஆற்று மணல் எடுப்பு, சாலைகள் அமைப்பு வீட்டு மனைகள் தொழிற்சாலைகள் அமைப்பு எனப் பல்வேறு வழிகளில் கிராமப்புற மேய்ச்சல் நிலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் கால்நடைகளுக்குத் தீவனத் தட்டுப்பாடு உருவாகியுள்ளதால் தனியார் நிறுவனங்களின் தயாரிக்கும் கால்நடை உணவுகளை எதிர்நோக்கிக் காத்திருக்க வேண்டியுள்ளது. மேய்ச்சல் நிலங்கள் அழிப்பதால் கால்நடை வளர்ப்போருக்கான செலவுகள் அதிகரிக்கின்றன. இதனால் பால்பொருட்கள் விலையும் உயருகிறது. இயற்கையை அழிப்பதன் மூலம் மனிதகுலம் பல்வேறு இன்னல்களைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறது. பால் பொருட்களும் பிற கால்நடை பயன்பாட்டுப் பொருள்களும் இன்றி மனிதனால் வாழ முடியாது. கால்நடைகள் இல்லாமல் அவற்றைச் செயற்கையாக உற்பத்தி செய்ய முடியாது ஆகவே அந்தக் கால்நடைகளுக்கு தேவையான மேய்ச்சல் நிலங்களைப் பாதுகாப்பது மூலம் இவ்வுலகம் பல்வேறு நன்மைகளைப் பெறும் என்பது திண்ணம்.

மேய்ச்சல் சமூகப் பண்பாட்டு மரபும் நீட்சியும்

கோ.அசோகன்
ashokantamil22@gmail.com

மனிதச் சமூக வரலாற்றில் மேய்ச்சல் சமூக வாழ்வே நாகரிகத்திற்கு அடித்தளமாக விளங்குகிறது. உலக முழுவதும் காணப்படும் பண்பாட்டு விழுமியங்களில் ஆயர் வாழ்வியலின் தாக்கம் காணப்படுகிறது. உலகச் சமயங்கள் அனைத்திலும் மேய்ச்சல் சமூகத்தின் செல்வாக்கை அறியலாம். கால்நடைச் சமூகத்தில் தங்களுடைய கால்நடைகளுக்கு எவ்விதத் தீங்கும் நேரக்கூடாது என்பதற்காகவும், கால்நடைகள் பல்கிப் பெருக வேண்டும் என்ற எண்ணத்திலும் பல்வேறு சடங்குகள் செய்யப்பட்டுள்ளன. பின்னாளில் அச்சடங்கு முறைகள் பல சமயங்களால் கைக்கொள்ளப்பட்டு அவை சமயத் விழாக்களாக மாறின. தமிழ்நாட்டில் மேய்ச்சல் வாழ்க்கை முறை சிறந்து இருந்ததை தமிழ்ச் செவ்விலக்கிய மரபு நமக்குப் பகர்கிறது. ஆயர் வாழ்வியலில் நடைப்பெற்ற போர் பூசல்களையும் வழிபாட்டு முறைகளையும் இலக்கியங்கள் வழி நாம் அறிகிறோம்.

பாண்டிய, பல்லவ, சோழர் காலக் கல்வெட்டுகளில் மேய்ச்சல் சமூகப் பற்றி பதிவுகள் காணப்படுகிறது. அரச உருவாக்கத்திற்கு மேய்ச்சல் சமூக வாழ்வே அடிப்படையாக விளங்குகிறது. பழங்காலக் குகை ஓவியங்கள், நடுகல் வழிபாடு முதலானவை மேய்ச்சல் பண்பாட்டைப் பேசுகிறது. சோழர் காலத்தில் சாவா மூவா பேராடு என்ற பெயரில் மேய்ச்சல் பண்பாடு சிறந்து விளங்கியுள்ளது. மேய்ச்சல் சமூக வாழ்வு நீண்ட வரலாற்று மரபாகவும், தொடர் கண்ணியாகவும் இன்றுவரை உள்ளது. உலகில் பல்வேறு கால்நடைச் சமூக இனக்குழுக்கள் காணப்படுகின்றன. இந்தியாவில் அக்ரய்யா, அஹீர், ஊராவன், ஓராவன், கங்காஜாலி, கதரியா, கதி, காதர், குர்க், குவால், குவாலா, கோசி, தங்கர், நிக்கர், பகத், பகேல், பகேலா, பஞ்சாரா, பாக்க்ஷத்திரியா, பாரூத், பேத்வார், மர்ஹட்டா, மராட்டார, மேஷ்பால், யாதவ், ரபாரி, ராஜ்பால், ரேவாதி, வாகளே, ஸைலே, ஹட்கர், ஹல்தர், கொல்லா, குரும்பர்கள், குஜார் முதலான சமூகங்கள் மேய்ச்சல் சமூகங்களாக உள்ளன. தமிழ்நாட்டில் இடையர் சமூகம் மேய்ச்சல் சமூகமாக உள்ளது.

பழங்குடிகளில் நீலகிரி குறும்பர் மேய்ச்சல் தொழிலில் ஈடுபடுகின்றனர். தமிழ் இலக்கியங்கள் ஆயர், அண்டர், இடையர், பொதுவர், கொங்கர், கோவலர், குடவர் முதலான பெயர்களில் மேய்ச்சல் சமூகங்களை அடையாளப்படுத்துகிறது. தமிழ் செவ்விலக்கிய மரபு பழந்தமிழ்நாட்டைச் சுற்றுச்சூழல் தன்மையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்தாக வகைப்படுத்துகிறது. முல்லைத்திணையின் தொழிலாக மேய்ச்சல் தொழிலைக் கூறுகிறது. செவ்விலக்கிய பிரதியான கலித்தொகையின் 103 வது பாடல் நல்லினத்தாயர் (பசு), கோட்டினத்தாயர்(எருமை), புல்லினத்தாயர்(ஆடு) என மேய்ச்சல் சமூகங்களை மூன்றாக பாகுப்படுத்துகிறது. மேய்ச்சல் நில வாழ்வை பற்றிய செய்திகள் தமிழ் இலக்கியங்களில் பெருமளவில் காணப்படுகிறது. தனித்துவம் நிறைந்த தமிழ் மேய்ச்சல் முல்லை நிலப் பண்பாட்டு வாழ்வியலை இக்கட்டுரை பேசுகிறது.

பலுச்சிஸ்தானில் ஆயர்களை பலுசிகள் என்று அழைப்பர். பிராகூய் மொழியில் பலுசி என்றால் நாடோடி என்று பொருள். நாடோடிகளை ஆயர் வாழ்வு நாடோடிகள், ஆயர் வாழ்வு சாரா நாடோடிகள் என இருவகைப்படுத்துவர். உலகமெங்கும் ஆயர்வாழ்வு மேற்கொள்ளும் மேய்ச்சல் இனக்குழுக்கள் நாடோடி வாழ்க்கையை கொண்டுள்ளனர்

என்பது மானுடவியலாளர்களின் கருத்தாக உள்ளது. தமிழ்நாட்டு மேய்ச்சல் சமூக வாழ்வைப் பேசக்கூடிய முல்லைத்திணைப் பாடல்கள் நாடோடி வாழ்வைப் பற்றிப் பேசவில்லை. அதற்கு காரணம் தமிழ்நாட்டின் பூகோள அமைப்பு மேய்ச்சல் சமூக மக்களை நாடோடிகளாக்கும் இயல்புகளை கொண்டிருக்கவில்லை. தமிழ் நாட்டின் மேய்ச்சல் பண்பாடு தனித்துவமாகக் காணப்படுகிறது.

பெருவழி உருவாக்கம்

பலுச்சிஸ்தான் ஆயர்களான பலுசிகள் (பிராகூய் மொழியில் பலுசி என்றால் நாடோடி என்று பொருள்) கால்நடை மேய்ப்பதற்குப் பருவகாலத்திற்கேற்ப இடம்விட்டு இடம் மாறிக்கொண்டே இருப்பர். இவர்கள் இடம் பெயர்ந்து சென்ற வழிகள் தான் பின்னாளில் வணிகப் பெருவழிகளாக உருவாயின. தமிழின் சங்கப்பாடல்கள் மேய்ச்சல் சமூகத்தால் உருவான பெருவழிகளைப் பற்றிப் பேசுகின்றது. ”பெருவழி பற்றி அகநானூற்றுச் செய்யுள்கள் நான்கு (அகம் 14:1, 64:4, 74:5, 154:10) சுட்டுகின்றன, முல்லைத்திணைச் செய்யுள்கள் அவை. இப்பாடல்களின் மூலம் செந்நிலப் பெருவழி, தண்பதப் பெருவழி போன்ற பெருவழிகள் பற்றிய செய்திகள், பெருவழியின் இயல்புகள் ஆகியவை காணப்படுகின்றன. பெருவழிகள் முல்லை நிலத்தில் மட்டும் பயன்பாட்டில் இருந்தன என்பதை மேலே உள்ள பாடல்கள் வலியுறுத்துகின்றன. அப்பாடல்கள் முல்லைத் திணையில் தொகுக்கப் பெற்றிருப்பதோடு முல்லைக்குரிய கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைக் கொண்டுள்ளன, அதனால் முல்லைத் திணைக்கும் பெருவழி உருவாக்கத்திற்கும் இடையில் நிலை பெற்றிருந்த தொடர்பு தெளிவாகின்றது (ர.பூங்குன்றன் 2016 ப.106) . தமிழ்நாட்டில் இராஜகேசரி பெருவழி (கொங்குப் பெருவழி), காஞ்சிப்பெருவழி, மகதேசன் பெருவழி, அதியமான் பெருவழி, பாலைப் பெருவழி, மேலைப் பெருவழி, காரித்துறைப்பெருவழி முதலான பெருவழிகள் பற்றிய செய்திகளை கல்வெட்டு நமக்குக் காட்டுகிறது.

பள்ளி என்னும் சொல்

பள்ளி என்பதற்கு நச்சினார்க்கினியர் இடையர்சேரி என்று பொருள் கொள்கின்றார். பண்டை நாளில் கால்நடை மேய்ப்பர்களும் கால்நடையும் ஓரிடத்திலேயே தங்கியிருந்தனர். அதனால் இங்கு பள்ளி என்பதற்கு இடையர் சேரி என்பதுடன் கால்நடைகள் தங்கியிருந்த இடத்தையும் குறித்து வந்தது எனலாம் (ர.பூங்குன்றன் 2016 ப.57). மேற்சொன்ன கருத்திற்கு வலு சேர்க்கும் விதமாகத் தமிழ்நாட்டு மேய்ச்சல் சமூகமான இடையர்களிடம் பள்ளிக்கிடை என்னும் சொல் இன்றும் புழக்கத்தில் உள்ளது. கிடை போடும் இடையர்களின் காட்டு வாழ்வில் பள்ளிக்கிடை என்பது மிகவும் இன்றியமையாத சொல்லாடலாக இருக்கின்றது. இரவில் வயலில் கிடை அடையும் ஆடு மாடுகளைக் காப்பதைக் கிடை காத்தல் என்றும் காலையில் விடிந்ததிலிருந்து மேய்ச்சலுக்கு ஓட்டிச்செல்வதற்கு முன் வரை ஆடுகளைக் கிடை வயலில் காப்பதைப் பள்ளிக்கிடை என்று கூறுவர். பள்ளி என்னும் சொல் சமணர்களால் அளிக்கப்பட்ட சொல் அல்ல. மேய்ச்சல் சமூகத்திடம் இருந்து எடுத்துக் கையாளப்பட்டதே பள்ளி என்னும் சொல்.

கால்நடைச் சமூகமும் வேளாண்மையும்

மனிதன் வேட்டைத் தொழிலிலிருந்து விடுபட்டுக் கால்நடைத் தொழிலுக்குப் பரிணமித்த போதே வேளாண்மையும் கைவரப்பெற்றான். தமிழரின் ஐந்திணை மரபில் வேளாண்மைக்கான நிலப்பரப்பாக மருதத் திணை குறிக்கப்பெற்றுள்ளது. ஆனால்,

மேய்ச்சல் நிலப்பகுதியான முல்லைத்திணையிலேயே முதன் முதலில் கலப்பை குறிக்கப்படுகிறது. தமிழ்ச் சமூகத்தில் தொடக்க கால வேளாண்மை குறிஞ்சி திணையில் காட்டெரிப்பு வேளாண்மையாகவும், காட்டுப்பன்றிகள் மண்ணைக் கீறிவிட்டுப் போன இடங்களில் விதைகளை விதைத்தும் விவசாயம் செய்தனர். குறிஞ்சி நில மக்கள் ஏர் கொண்டு உழாமல் வேளாண்மை செய்தனர். இதை மலைபடுகடாம் என்ற கடைச்சங்க நூல், “தொய்யாது வித்திய துளர்படு துடவை” என்று குறிப்பிடுகிறது. அதாவது ‘உழாது விதைத்த நல்ல விளைநிலம்’ என்று பொருள் (கிடை, பாமயன் 2023 ப.14).

“குறவர், உழாது வித்திய பருஉக்குரற் சிறுதினை” (புறம். 168)

வளமான அந்தக் குறிஞ்சி நிலத்தில் உழ வேண்டிய தேவை இல்லை.

முல்லை நிலத்தில் தான் கலப்பையின் வருகை தொடங்குகிறது. அந்தக் கலப்பை கூட எளிய கலப்பை தான்.

“பிடிக்கணத்து அன்ன குதிருடை முன்றில்
களிற்றுத் தாள் புரையும் திரிமரப் பந்தர்
குறுஞ்சாட்டு உருளையோடு கலப்பை சார்த்தி” (196 – 199)

என்று தவசங்களைத் சேர்த்து வைக்கின்ற குதிர்களையும் கலப்பையும் குறிப்பிடுகிறது.

(அகநானூறு - 194,394, 274)

பேர் உறை தலைஇய பெரும்புலர் வைகறை
ஏர் இடம் படுத்த இரு மறுப் பூழிப்
புறம் மாறு பெற்ற பூவல் ஈரத்து
ஊன் கிழித்தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதை பல நாறி அகம் 194

புறநானூறு - 120, 215
நற்றிணை - 97, 121, 266, 289
குறுந்தொகை - 155, 279, 221

கலித்தொகை - 108, 116 முதலான செவ்விலக்கியப் பாடல்கள் மேய்ச்சல் நிலமான முல்லை நிலத்தில் உழவு வேளாண்மை நடைபெற்ற செய்திகளை நமக்குப் பகர்கிறது.

வழிபாடு

தொல்காப்பியர் முல்லைத்திணையின் தெய்வமாக மாயோனை குறிப்பிடுகிறார். ஆனால் அம்மக்களிடம் நடுகல் வழிபாடு சிறந்து இருந்ததை இலக்கியங்களின் வழி அறிகிறோம். கால்நடைகள் செல்வமாகக் கருதப்பட்ட அக்காலத்தில் ஆகோள் பூசல் பழந்தமிழர்களிடம் அன்றாட நிகழ்வாக இருந்துள்ளது. பூசலில் ஈடுபட்டு இறந்த வீரர்களுக்கு அவர்களின் நினைவாக நடுகல் எடுத்து வழிபடுவது மரபாக இருந்துள்ளது. நடுகல் தெய்வம் உருவானது கால்நடை வளர்ப்புப் பழங்குடி சமூகத்தில் தான் என்கிறார் கல்வெட்டு ஆய்வளார் ர. பூங்குன்றன் அவர்கள்.

“ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறேந்து மருப்பிற் களிறெறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவினல்லது
நெல்லுகுத்துப் பரவுங் கடவுளு மிலவே” (புறம்: 335)

என்ற பாடலில் களிறெறிந்து பட்ட வீரர்களுக்குக் கல்நடப்பட்டது என்று கூறிய போதிலும் நடுகல் வீரர்கள் மாடுபிடி சண்டையில் இறந்தவர்கள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. கோவலர்கள் நடுகல்லினை வழிபட்டனர் என்பது நடுகல்லுக்கும் முல்லைக்கும் இடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டும்.

தெய்வங்களின் வடிவமும் குணமும் அவை சார்ந்த சமூகத்தின் தேவைகளையொட்டி அமைந்தவைதாம். கால்நடை வளர்ப்போரின் தெய்வம் மாடுகள், கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழலுடன் தான் இருக்க முடியும். உழவர்களின் தெய்வம் மழை தருகின்ற இந்திரனாகவோ, கையில் கலப்பை ஏந்திய பலராமனாகவோ தான் இருக்க முடியும். சுருக்கமாகச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட இனக்குழு என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்திருக்கிறதோ அதைப் பொறுத்து அத்தெய்வங்களின் வடிவங்களும் குணங்களும் அத்தெய்வத்தைப் பற்றிய கதைகளும் அமையும் (தொ.பரமசிவன், 2019 ப.136). உலகப் பெருஞ்சமயங்கள் அனைத்திலும் கால்நடை சமூகத்தின் செல்வாக்குக் காணப்படுகிறது. கிறித்துவம் இயேசு நாதரை நல்ல ஆயன், நல்ல மேய்ப்பர் என்றும் பாதிரியார்களை ஆயர் என்று வழங்குவதைக் காணலாம். இசுலாமும் முகமது நபிகள் கால்நடைகளை நேசித்தவர் என்று கூறுகிறது. கிருஷ்ணன் மேய்ச்சல் சமூகத்தின் தலைவனாகப் புராண, இதிகாசங்களிலும், இலக்கியங்களிலும் காட்டப்பெறுகிறான்.

தொழில்கள்

மேய்ச்சல் சமூக மக்கள் வன்புல வேளாண்மையிலும் ஆநிரை மேய்த்தலிலும் அதனால் வரக்கூடிய பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலானவற்றை விற்பது முதலான தொழில்களில் ஈடுபட்டதை இலக்கியங்களின் வழி அறிகிறோம்.

சிலப்பதிகாரம்,

> **“ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்**
> **கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை”**

என்று மேய்ச்சல் சமூக மக்களின் வாழ்வியலை எடுத்தியம்புகிறது.

> **“புகர்வர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ**
> **நாள்மோர் மாறும் நல்மாமனி**
> **சிறுகுழை துயல்வரும் காதின் பணைத்தோள்**
> **குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்**
> **அளைவிலை உணவின் கிளைஉடன் அருத்தி**
> **நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளான்**
> **எருமை நல்ஆன் கருநாகு பெறூஉம்”** (பெரும் 159 – 165)

தயிர்ப் பானையைத் தலையின் சும்மாட்டின் மேல் வைத்து விற்கச் செல்லும் ஆயர்மகள், தயிர் விற்ற பணத்திற்குத் தான் விரும்பிய உணவுப்பொருட்களை வாங்கி வந்து தன் சுற்றத்தோடு உண்பாள். நெய் விற்றுக் கிடைத்த பணத்திற்குப் பொன் வாங்காமல் எருமைகளையும் கன்றுகளையும் வாங்கி வருவதைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்தியம்புகிறது.

புல்லினத்தாயர்

ஆநிரை கவர்தல் மீட்டலால் நடைப்பெற்ற ஆகோள் பூசல்களைச் செவ்விலக்கியங்கள் நமக்குக் காட்டுகிறது. நிரை மீட்டல்கள் எல்லாம் பசுக்களைக் குறித்தே பேசுகிறது. புல்லினத்தாயர்கள் குறித்த செய்திகள் அதிகம் பேசப்படாமாலே போய்விடுகின்றன. ஆடுகளைக் கொண்டு கிடை அமர்த்திய செய்தியை அகநானூறு 274 வது பாடல் வெளிப்படுத்துகிறது. கிடை-கீதாரி (கீலாரி) இச்சொல் சமூகப் பண்பாட்டு வரலாற்றைக் கொண்டது. இவ்வாழ்க்கை முறை தொன்று தொட்டு வருவதைத் தமிழகம் முழுவதும் காண்கிறோம். பிற்கால இலக்கியமான முக்கூடற் பள்ளு, கண்ணுடையம்மன் பள்ளு,

வையாப்புரி பள்ளு, எட்டையபுர பள்ளு முதலான இலக்கியங்கள் கிடை குறித்த பண்பாட்டை விரிவாகப் பதிவு செய்துள்ளன. கிடை என்கிற சொல் சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. மேய்ச்சல் சமூக மக்களின் வாழ்வியல் பண்பாடும் வலிகளும் வேதனைகளும் பேசப்படவேண்டியவை. சங்க காலம் முதல் தொன்று தொட்டுக் கிடை பண்பாடு தொடர்கிறது.

கிடை

தை மாதம் அறுவடை முடிந்த பிறகு வயல் வெளிகளில் கிடை அமைப்பது வழக்கம். இதை வட மாவட்டங்களில் மந்தை மடக்குதல் என்பர். வட மாவட்டங்களில் இப்பண்பாட்டைக் காண்பது அரிதினும் அரிது. தென் மாவட்டங்களில் மட்டுமே இன்னும் உயிர்ப்போடு திகழ்கிறது. கிடைக்கு உரியவரை அல்லது தலைவரைக் கீதாரி என்று அழைப்பர். வட மாவட்டங்களில் கீலாரி என்று குறிப்பர். இச்சொல் பயன்பாடு காண்பது இன்று அரிது. பசு மாடுகளையும், ஆடுகளையும் கொண்டு கிடை அமைப்பது வழக்கம். எருமைகளைக் கிடை அமர்த்தியது குறித்து எந்தப் பதிவும் இதுவரை கிடைக்கவில்லை. சங்க இலக்கியங்களில் அகநானூறு 274, 397, குறுந்தொகை 221, நற்றிணை 364, 266,142, நெடுநல்வாடை 5, பெரும்பாணாற்றுப்படை147, மலைப்படுகடாம் 418 முதலான பாடல்கள் புல்லினத்தாயர் பற்றிய தகவல்களை நமக்கு வழங்குகிறது. ஆட்டிடையர்கள் வயல்களில் கிடைகட்டி, கிடைக்குக் காவலாக அங்கேயே தங்குவது உண்டு. வயலில் கிடைகட்டுவது தொடர்பாக அகநானூறு 274- வது பாடல் சான்று பகர்கிறது. புன்செய் நிலத்தில் எருவுக்காக ஆட்டுக் கிடையை நிறுத்தி இடையர் காவலிருப்பர் என்பதையும் பாம்புகளை நடுங்குமளவு இடியிடிக்கும் நள்ளிரவிலும் இடையர் கருத்துடன் காவலிருப்பர் என்பதையும் அறிய முடிகிறது. இத்தொல்குடிகளின் தொடர்ச்சி இன்றும் அறுபடாமல் தொடர்வதை காணலாம்.

அரச உருவாக்கம்

மனித சமூகம் வேட்டுவ வாழ்க்கையில் இருந்து மாற்றமடைந்து மேய்ச்சல் சமூக வாழ்வை கைக்கொண்டது. இச்சமூக வாழ்வே அரசு உருவாக்கத்திற்கும் விவசாயத்திற்கும் அடிப்படை. அரசன் எனும் பொருள் தரக்கூடிய கோன் என்கிற சொல் முல்லை நில மக்களைக் குறிக்கப் பயன்படுத்துவதன் வாயிலாக நாம் அறியலாம். அதன் எச்சத்தைக் கீதாரிகளில் வாழ்வில் இன்றும் காணலாம். கால்நடைப் பொருளாதாரத்தை மையமிட்டே போரும் பூசலும் வரலாற்றில் நடைப்பெற்றுள்ளது. மேய்ச்சல் சமூக வாழ்வே அரச உருவாக்கத்திற்கு அடிப்படை என்பதைச் செவ்விலக்கியங்கள் வெளிக்காட்டியுள்ளது.

முடிவுரை

புதிய கற்காலத்தில் தோன்றிய மேய்ச்சல் பண்பாடு இன்றுவரை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டு நடைப்பெற்று வருகிறது. பல்லுயிர் வளத்திற்கு மேய்ச்சல் பண்பாடு தேவையான ஒன்றாக உள்ளது. கால்நடை சமூகத்தில் வளமை சடங்காக நடத்தப் பெற்ற சடங்குமுறைகளைப் பெருஞ்சமயங்கள் தங்களுடைய சமய நெறிக்குள் கரைத்துக்கொண்டன. உலக முழுவதும் பல்வேறு மேய்ச்சல் குழுக்கள் காணப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டின் மேய்ச்சல் வாழ்வு அதன் பூகோள அமைப்பால் தனித்த ஒன்றாகக் காணப்படுகிறது. சங்க காலம் தொட்டு இன்று வரை முல்லை நில மேய்ச்சல் வாழ்க்கை தொன்று தொட்டு விளங்குகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. தொ பரமசிவன்., 2019, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பப்ளிகேஷன் (பி) லிட்., 669 கே.பி. சாலை, நாகர்கோவில் 629001.
2. பக்தவத்சல பாரதி., 2017, தமிழகத்தில் நாடோடிகள், அடையாளம், புத்தாநந்தம், திருச்சி 621310.
3. அ. முத்துசாமி., 1993, சங்க இலக்கியத்தில் ஆயர், இராணி பதிப்பகம், சென்னை 600 014.
4. கார்த்திகேசு சிவத்தம்பி., 2019, பண்டைத் தமிழ்ச் சமூகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட், சென்னை.
5. கிடை மேய்ச்சல் சமூக பண்பாட்டு ஆய்வுக் காலாண்டிதழ் ஈத்து 1, 3., கால்நடை வளப்போர் நல நடுவம் – தமிழ்நாடு.
6. ர. பூங்குன்றன்., 2016, தொல்குடி- வேளிர் - அரசியல், Heritage Treasure Publisherrs
7. சா. கருணாகரன்., 2021, ஆயர்கள், தடாகம், சென்னை 41.

தமிழ்ப் பண்பாட்டில் புலிக்குளம் இனக் கிடைமாடுகளும் ஜல்லிக்கட்டும்

முனைவர் க.சி.பழனிக்குமார்
email: madurainilam@gmail.com

முன்னுரை

தமிழக வரலாற்றில் தொன்மைக் காலத்தில் ஏறுதழுவுதல் என்றும் தற்காலத்தில் மஞ்சுவிரட்டு, ஜல்லிக்கட்டு என்றும் வழக்கில் நிலவுகிற ஒரு பண்பாடு இன்று உலகளாவிய கவனம் பெற்றுள்ளது. தமிழ் வீரம் என்றாலே அதன் அடையாளம் ஜல்லிக்கட்டுதான் எனும் அளவிற்குப் பேசுபொருளாகியிருக்கிறது. ஏறுதழுவுதல் அல்லது ஜல்லிக்கட்டு எனும் இப்பண்பாடு ஆநிரைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான நெருக்கமான உறவினைப் பறைசாற்றுகிறது. அத்துடன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர் திணை மரபின் எச்சமாகவும் திகழ்கிறது. நீண்ட மரபுத்தொடர்ச்சியினைக் கொண்டுள்ள இப்பண்பாடு தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இன்றளவும் உயிர்ப்போடு நிலவுகிறது. இப்பண்பாட்டின் முதன்மை அங்கமாகத் திகழக்கூடிய “காளைகள்“ புலிக்குளம் வகையினத்தைச் சேர்ந்தவை. குறிப்பாக, புலிக்குளம் இனக் கிடைமாடுகளில் இருந்து தேர்வுசெய்யப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையானது புலிக்குளம் இனக் கிடைமாடுகளுக்கும் ஜல்லிக்கட்டிற்கும் இடையிலான நெருங்கிய உறவினை ஆராய்ந்து புலப்படுத்துகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களில் ஏறுதழுவுதல்

தமிழ் இலக்கிய வராற்றில் சங்க காலத்திலிருந்து இன்றுவரை ஆநிரைகளுக்கும் மனிதர்களுக்குமான நெருகிய உறவுகள் குறித்த பதிவுகள் இடம்பெறுகின்றன. தமிழ்த் திணைமரபில் மேய்ச்சல்தொழிலை முதன்மையாகக் கொண்ட முல்லைத் திணையும், ஆநிரை கவர்தல், மீட்டு வருதல் ஆகிய போர்ச் செயல்பாடுகளைக் கொண்ட வெட்சித் திணையும் ஆநிரைகளை மையமிட்டவை ஆகும். அகத்திணையான முல்லைத் திணையில் ‘ஏறுதழுவுதல்’ எனவும், புறத்திணையான வெட்சித் திணையில் ‘ஆகோள் பூசல்’ எனவும் இப் பண்பாடு வழஙகப்படுகிறது.

சிந்துவெளி அகழாய்வில் ஒரு வீரன் காளையின் கொம்பினைப் பிடித்ததைப் போன்ற முத்திரை கிடைத்துள்ளது. எருதுகள் பொறிக்கப்பட்ட முத்திரைகள் பல கிடைத்துள்ளன. “எருதுகளில் இருவகையின முத்திரைகளிற் காணப்படுகின்றன. ஒருவகையின திமில் பருத்த எருதுகள், மற்றொரு வகையின திமிலின்றித் தலையில் ஒற்றைக் கொம்புடையன” (மா.இராசமாணிக்கனார், ப.137). தற்போது நடைபெற்றுவரும் கீழடி அகழாய்வில் திமிலுள்ள காளைகள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன. தமிழர்களின் சங்ககால வாழ்வியலுக்கான சான்றுகள் கீழடி அகழாய்வில் கிடைத்துள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சங்க இலக்கியங்களில் ஏறுதழுவுதல் குறித்த பதிவுகள் இடம்பெறுகின்றன. “கொல்லேறு திரிதரு மன்றம்” (புறநானூறு, 309:4) எனும் புறநானூற்று அடி கொல்லும் தன்மையினை உடைய ஏறுகள் நிறைந்திருந்த தொழு குறித்துப் பதிவு செய்கிறது. கலித்தொகை மற்றும் சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்கள் முல்லை நில மக்களாகிய ஆயர்கள் (குறிப்பாக மதுரைப் பகுதியினைச் சேர்ந்தவர்கள்) வாழ்வில்

திருமணம் தொடர்பான முதன்மையான பண்பாடாக ஏறுதழுவதல் நிகழ்ந்தமை குறித்துப் பதிவுசெய்கின்றன.

"வளியா அறியா உயிர் காவல் கொண்டு
நளிவாய் மறுப்பு அஞ்சும் நெஞ்சினர் தோய்தற்கு
எளியவோ ஆய்மகள் தோள்?" (முல்லைக்கலி 68-70)

காற்றுப் போல் போய்விடுவது உயிர் என்று உணராமல் தங்கள் உயிரைக் காக்கும் பொருட்டுக் கூர்மையான கொம்புகளை உடைய காளையினைக் கண்டு அஞ்சும் நெஞ்சத்தினர் நெருங்கும்படி எளிமையானது அல்ல ஆய மகளிரின் தோள் எனவும்

"கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்" (முல்லைக்கலி 63-64)

காளையினை அடக்க அச்சப்படுபவனை மறுபிறவியிலும் கூட ஆயமகள் நினைத்துப் பார்க்க மாட்டாள் எனவும் கலித்தொகை குறிப்பிடுகிறது. ஏறுதழுவுதல் நிகழ்விற்காக வலிமையான காளைகளை ஆயமகளிர் வளர்த்து வந்துள்ளனர்,

"ஆங்கு,
தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்
எழுவர் இளங் கோதையர்" (சிலம்பு. ஆய்ச்சியர்., 39-41)

எனச் சிலப்பதிகாரம் பதிவுசெய்கிறது. இவ்வாறு ஆயர் குலத்துப் பெண்கள் தாங்கள் விரும்பும் ஆண்மகனின் வீரத்தினைச் சோதித்தறியும் ஒரு பண்பாட்டு நிகழ்வாக ஏறுதழுவுதல் நிகழ்ந்துள்ளமை குறித்து அறிய முடிகிறது. இந்நாளில் வீரம் மிக்க காளைகளை ஆயர்கள் தொழுவிற்கு அழைத்துச் செல்வர். பெருமழை பெய்யும் காலத்தில் மலைக்குகையில் சிங்கமும், குதிரையும், யானையும், முதலையும் ஒன்றாகக் கூடியிருந்தால் எப்படிப்பட்ட பேரிரைச்சல் நிலவுமோ அத்தகைய ஆராவாரம் சூழ்ந்திருந்தது தொழு,

"தொழுவில் புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின, ஏறு" (முல்லைக்கலி, 22-23)

தொழுவில் காளைகளைப் பிடிக்கப் பாய்ந்த பொதுவர்களைக் காளைகள் பாய்ந்து குத்தி குடல் சரித்தன. இக்காட்சியினைத் தொழுவிற்கு இருமருங்கிலும் அமைக்கப்பட்ட பரண்மீது அமர்ந்து ஆய மகளிர் மற்றும் பார்வையாளர்கள் கண்டு ரசித்தனர் என இன்றைய நாளில் நடைபெறுவதைப் போன்றே சங்ககாலத்தில் நிகழ்ந்த ஏறுதழுவல் நிகழ்வினைக் கண்முன் நிறுத்துகிறது கலித்தொகை. ஏறுதழுவுதல் நிகழ்வில் வெள்ளை, காரி, குரால், செவளை, நெற்றிச் செகிலை, மல்லல், நுண்பொறி வெள்ளை, பொன்பொறி வெள்ளை, வென்றி, தூநிற வெள்ளை எனப் பலவிதமான காளைகள் பங்கேற்றமை குறித்துக் கலித்தொகை மற்றும் சிலப்பதிகாரம் பதிவு செய்துள்ளன.

1. ஏறுதழுவுதல் என்னும் போட்டிப்பந்தையம் ஒரு வீரவிளையாட்டு.
2. இதனைப் பெண்வீட்டார் சிறுகுடியில் முறையாக அறிவித்தார்கள். போட்டியில் ஈடுபடுத்திய காளைகள் பெண் வீட்டாருடையவை.
3. காளையை அடக்கிய ஆயனுக்கு அக்காளைக்குரிய பெண்வீட்டார் குரவைக் கூத்தாடிய பின்னர் ஊருக்கு அறிவித்தார்கள்.
4. ஏறுதழுவுதல் என்ற வீரப்பந்தைய விளையாட்டுத் தெய்வத்தின் பொருட்டாக எடுக்கப்பட்ட சமய விழாவாக இல்லை. அது ஆயர் (மதுரை) சமூகத்தின் மணம்சார்ந்த போட்டிப் பந்தையமாக இருந்தது''. (ராஜ் கௌதமன், ப.115)

என ராஜ் கௌதமன் கலித்தொகையினை அடிப்படையாக வைத்துச் சங்ககாலத்தில் நிகழ்ந்த ஏறுதழுவுதலை முல்லை நிலத்தினைச் சேர்ந்த ஆயர் இனத்தாரின் திருமணம்

சார்ந்த பண்பாடாகக் காண்கிறார். சங்ககாலத்தில் நிலவிய ஏறுதழுவுதல் விஜயநகரப் பேரரசு காலத்தில் அதன் இனக்குழுத் தன்மை நீங்கி பல்வேறு மாற்றங்களுடன் தற்போது மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு, எருதுகட்டு எனப் பல பெயர்களில் நடைபெற்று வருகின்றன.

வெட்சித் திணை ஆநிரைகளை மையப்படுத்துகிறது எனினும், ஏறுதழுவுதலுக்கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. புறத்திணையில் அமைந்த சங்கப் பாடல்கள் எவற்றிலும் ஏறுதழுவுதல் குறித்துப் பதிவுகள் இல்லை. ''ஊர்ப் பூசல்'', 'ஆகோள் பூசல்' எனப் புலவர் மரபு காட்டுப்பகுதியில் நடக்கும் ஆநிரை கவர்தலைக் குறிப்பிடுகிறது. 'தழீஇ' என்ற சொல்லை ஆநிரையைச் சூழ்ந்து கவர்தலைச் சுட்டப் பயன்படுத்துகிறது. எ.டு: பல்ஆ தழீஇய கல்லா வில்லர்' (புற. 261). ஆநிரை கவர்ந்த வேடனை, வேடர்களைக் 'கல்லா இளையர்' (புற. 263) 'வல்வில் மறவர்' (புற. 259), 'நெடுநிரை தழீஇய மீளியாளர்'(புற. 210), 'புல் அணல்(தாடி) காளை' (புற. 258) என்ற தொடர்கள் குறிக்கின்றன. ஆநிரை கவர்ந்த இவர்கள் பெரிதும் வில்-அம்பு கொண்டு இரவு நேரத்தில் ஒளிந்து, பதுங்கி, கால்நடையாகச் சென்று வேற்றூரில் ஆநிரைகளைக் கவர்ந்து விடியற்காலையில் ஊர் வந்தார்கள். 'நாள் ஆ தந்து' என்று இதனைப் புலவர்கள் குறிப்பிட்டார்கள்'' (ராஜ் கௌதமன், பக்.,10-1).

ஆகோள் பூசலுக்கும் தற்போது நடைபெறும் மஞ்சுவிரட்டு எனப்படும் சல்லிக்கட்டிற்கும் சிறிதும் தொடர்பு கிடையாது. எனினும் இராமநாதபுரம் பகுதியில் நடைமுறையில் உள்ள எருதுகட்டு நிகழ்வானது ஆகோள் பூசலின் எச்சம் எனக் கருதத்தக்கக் கூறுகளைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

புலிக்குளம் இனக் கிடைமாடுகளும் ஏறுதழுவுதலும்

பழந்தமிழ் இலக்கியங்களில் சுட்டப்படும் ஏறுதழுவுதல் பாண்டிநாட்டு மதுரைப் பகுதியில் நடைபெற்று வந்திருக்கிறது. திருச்சியினைத் தாண்டிய தமிழ் நாட்டின் தென்பகுதியே பாண்டியநாடு. இன்றைய நிலையில் மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதிதான் பாண்டியநாடு. தமிழ்நாட்டில் சல்லிக்கட்டுப் பரவலாக நடைபெறும் பகுதிகள் இவைதான். சல்லிக்கட்டிற்காகத் தேர்வுசெய்து வளர்க்கப்படும் காளைகள் பெரும்பான்மையானவை புலிக்குளம் வகையினத்தைச் சார்ந்தவை. குறிப்பாக இவை கிடைமாடுகளில் இருந்து தேர்வுசெய்து வாங்கப்பெற்று வளர்க்கப்படுகின்றன. இவற்றிற்குப் பாய்ச்சல் காளைகள் என்ற சிறப்புப் பெயரும் உண்டு. தற்போது காங்கேயம் காளைகளும் சல்லிக்கட்டில் பங்கேற்கின்றன எனினும் வாடிக்கு, வடத்திற்கு என எல்லா வகையான மஞ்சுவிரட்டிற்கும் ஏற்றவை புலிக்குளம் இனக் காளைகள்தாம். காங்கேயம் காளைகள் சற்று விரைவாக வளர்ந்துவிடும். பார்வைக்குக் கவர்ச்சியாகத் தோன்றும். திமிலைப் பிடித்தவுடன் நின்றுவிடும். வேகம் இருக்காது. ஆனால் புலிக்குளம் இனக் காளைகள் துடிப்பும் வேகமும் கொண்டவை. நன்றாகப் பாயக்கூடியவை. வீரர்கள் திமிலைப் பிடித்தாலும் தாவித் தாவிச் சுழலக்கூடியவை என அனுபவம் வாய்ந்த மஞ்சுவிரட்டுக் காளைகள் வளர்ப்பவர்களும் மாடுபிடி வீரர்களும் கூறுகின்றனர். ''நாட்டு மாடு கிடமாடுதான் நல்லாப் பாயும். சுருசுருப்பா இருக்கும். காங்கேயம் மாடு நல்லா வாகா வரும். எடுபாத் தெரியும். வேகம் இருக்காது. குத்தத் தெரியாது. மூஞ்சிக்கிட்டயே அடிக்கும். நாட்டு மாடுதான் நல்லா குத்தும். ஓடினாலும் குத்தும். படுத்தாலும் குத்தும்'' (டொங்கான்).

“பிற வகை மாட்டினங்களை மஞ்சுவிரட்டிற்குப் பழக்கப்படுத்த வேண்டும். அவைகளுக்கு வாடி புதிதாகத் தோன்றும். புலிக்குளம் வகை மாட்டினத்திற்கு இத்தகைய பயிற்சிகள் ஏதும் தேவை இல்லை. முதல் முறை அவிழ்க்கும்போதே இயல்பாக வாடியினை விட்டு வெளியேறும்” (சீமான் அம்பலம்). புலிக்குளம் வகை இனத்தைச் சேர்ந்த காளைகளின் இத்தகைய பண்புநலன்கள் அவை ஏறுதழுவுதல் விளையாட்டிற்கான குணங்களை மரபுவழியாகப் பெற்றிருப்பதைப் புலப்படுத்துகின்றன.

1. புலியினைப் பாய்ந்து விரட்டிய மூதாதைத் தாய்ப்பசுவின் வழி வந்தவைதான் மூர்க்கக் குணம் கொண்ட புலிக்குளம் இனக் காளைகள்.
2. புலிக்குளம் என்கிற ஊர் சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது. புலிக்குளம் மாட்டினத்தை உருவாக்கி வளர்த்துத் தமிழகத்தின் பட்டிதொட்டி எங்கும் பரவச்செய்த ஆயர் இனத்தவர்களின் பூர்வீகம் இராமநாதபுரம் மாவட்டத்தச் சேர்ந்த புத்தூர்.
3. சங்ககாலத்தில் ஏறுதழுவுதல் மதுரையினைச் சுற்றித்தான் நடைபெற்று இருக்கிறது. தற்போதும் மதுரையினச் சுற்றி ஏராளமான சல்லிக்கட்டுகள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக உலகப்புகழ்பெற்ற அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் உளிட்ட ஜல்லிக்கட்டுகள் மதுரைக்கு மிக அருகாமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் மதுரையினைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல வகையான மஞ்சுவிரட்டுகள் நடைபெறுவதைக் காணமுடிகிறது.
4. பண்டைக் காலத்தில் பாண்டியநாடு என்று அழைக்கப்பட்ட தற்போதைய தென்மாவட்டங்கள் முழுக்கப் பரவலாகத் தென்படுகிற ஒரே வகை பாரம்பரிய நாட்டு மாட்டினம் புலிக்குளம் மட்டுமே.

இத்தகைய காரணிகள் ஏறுதழுவுதலுக்கும் புலிக்குளம் இனக் கிடைமாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான உறவினைப் புலப்படுத்துகின்றன.

பண்பாடு குறித்த அறிவுப்புலத்தில் மனித இனங்களின் வரலாற்றை ஆராய்வதற்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைப் போன்று தாவரங்கள், விலங்குகளின் வரலாறுகள் குறித்து ஆராய்வதற்கான முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை. கீழடியில் கிடைத்துள்ள கால்நடைகளின் எலும்புகளையும் புலிக்குளம் இனக் கிடைமாடுகளையும் மரபியல் ஆய்வுக்கு உட்படுத்தும் பட்சத்தில் புலிக்குளம் இனக் கிடைமாடுகளின் தொன்மை வரலாறு அறிவியல்பூர்வமாக நிறுவப்பட வாய்ப்புள்ளது.

ஏறுதழுவுதலின் வகைகள்

ஏறுதழுவுதல் எனும் பண்பாட்டு நிகழ்வு மஞ்சுவிரட்டு, சல்லிக்கட்டு, எருதுகட்டு உள்ளிட்ட பெயர்களில் வழங்கப்பட்டு வருகிறது. மஞ்சு என்பதற்குக் காளை, காளையின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள கோடித்(புதிய)துணி, கழுத்துச் சலங்கை என்றவாறு பலபொருள்கள் நாட்டார் வழக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே மஞ்சுவிரட்டு என்றால் காளைகளை விரட்டுதல், காளைகளை விரட்டிப்பிடித்து அவற்றின் கழுத்தில் கட்டப்பட்டுள்ள கோடித்துணி (வேட்டி/துண்டு) அல்லது சலங்கையினைக் கைப்பற்றுதல் என மக்கள் வழக்கிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

முன்னொரு காலத்தில் சல்லி என்றொரு ஆயர் குல வீரன் இருந்தான். அவனால் உருவாக்கப்பட்டதால் இவ்விளையாட்டுச் சல்லிக்கட்டு என்று அழைக்கப்படுகிறது என்றொரு தொன்மக்கதை உள்ளது. முந்தைய காலத்தில் புழக்கத்தில் இருந்த சல்லிக் காசுகளைத் துணியில் சுற்றிக் காளைகளின் கொம்புகளில் கட்டிவிட்டுவர். வீரர்கள் அதனை எடுக்க வேண்டும். இதனால்தான் சல்லிக்கட்டு என்று வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. எருது என்றால் காளை. அதேபோன்று ஏறு என்றாலும் காளைதான்.

எனவே காரண காரியத்தோடுதான் எருதுகட்டு, ஏறுதழுவுதல் என்ற பெயர்கள் வழக்கில் வந்துள்ளன எனக் கருத இடமுண்டு.

சங்ககால ஆயர் இனக்குழுவின் திருமணம் சார்ந்த பண்பாடாக நிலவிய ஏறுதழுவுதல் இன்று நம்பிக்கைகள் மற்றும் கொண்டாட்டம் சார்ந்த நிகழ்வாக மலர்ச்சியடைந்துள்ளது. இந்நிகழ்வானது தமிழ்நாடு முழுக்க அறுவடைத் திருநாளாகக் கொண்டாடப்படும் தைப்பொங்கல் திருநாளை ஒட்டி நடைபெறுகிறது. தைப்பொங்கல் தவிர நாட்டார் தெய்வ வழிபாட்டின் போதும் பல ஊர்களில் நடத்தப் படுகின்றன. இவ்வாறு தெய்வ வழிபாட்டின் போது மதுரை மாவட்டம் மேலூர், மேலூர் வட்டத்திலுள்ள முக்கம்பட்டி, அம்பலகாரன்பட்டி, வெள்ளலூர் உறங்கான்பட்டி முதலிய ஊர்களில் மஞ்சுவிரட்டுகள் நடத்தப்படுகின்றன. சிவகங்கை மாவட்டம் கண்டிப்பட்டியில் புனித அந்தோனியார் கோவிலுக்குப் பொங்கல் வைத்து மஞ்சுவிரட்டு நடத்தப்படுகிறது.

மஞ்சுவிரட்டில் நரபலி மற்றும் குருதிபலி சார்ந்த நம்பிக்கை அழுத்தமாகப் பதிவாகியுள்ளன. மனித உயிரையோ அல்லது மனித இரத்தத்தையோ தங்கள் தெய்வங்களுக்குப் பலியிடுவதற்காக ஊர் மக்கள் கூடி மஞ்சுவிரட்டு நடத்துகின்றனர். ‘‘எங்கள் மஞ்சமலை அய்யனார் சாமி ஒரு உயிரையேனும் பலி எடுக்காமல் விடாது’’ (ராஜபாண்டி) என்கின்றனர் பாலமேடு வாசிகள்.

தென் தமிழகத்தில் தற்போது நடைமுறையில் உள்ள ஏறுதழுவுதல் நிகழ்வினை,

1. வெளி மஞ்சுவிரட்டு
2. வாடி மஞ்சுவிரட்டு
3. எருதுகட்டு
4. வட மஞ்சுவிரட்டு

என வகைப்படுத்தலாம். இவற்றில் வெளி மஞ்சுவிரட்டு என்பது பரந்த திறந்த வயல்வெளியில் நடைபெறும் விளையாட்டு ஆகும். இதில் பங்கேற்கும் காளைகளை முதலில் தொழுவில் அடைத்துவிடுவார்கள். பிறகு திறந்த வயல்வெளியை நோக்கி அவிழ்த்துவிடுவார்கள். துணிவிருக்கும் வீரர்கள் காளையினை அடக்கிக் கொள்ளலாம். எல்லை வரையறை, கால வரையறை போன்ற கட்டுப்பாடுகள் எவையும் கிடையாது. பெரிய அளவில் பரிசுகளும் வழங்கப்படுவதில்லை. காளையினை அடக்கும் வீரர் அதன் கழுத்து மணியினையும் வேட்டியினையும் கைப்பற்றுவார். வேட்டியினைத் தான் வைத்துக்கொண்டு மணியினை மாட்டின் உரிமையாளரிடம் ஒப்படைத்துவிட்டு அவர் வழங்கும் பணத்தினைப் பெற்றுக்கொள்வார். இதற்கு மணிப்பணம் என்று பெயர். தன் வாழ்வில் முதன்முதலாக மதுரை மாவட்டம் மேலூர் வட்டம் திருவாதவூர் சேகரம் முக்கம்பட்டியில் முதல் காளையினைப் பிடித்துப் பால் சாயத் (வெள்ளை நிறம்) துண்டும் ஒன்னேகால் ரூபாய் மணிப்பணமும் பெற்றதாகத் தென் மாவட்டங்களில் புகழ்பெற்ற மாடுபிடி வீரரான டொங்கான் கூறுகிறார்.

இதனை வெளி விரட்டு என்றும் அழைக்கின்றனர். மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் மேலூர், உறங்கான்பட்டி, முக்கம்பட்டி, வல்லடிகாரர் கோவில், கொட்டகுடி பட்டத்தரசி அம்மன் கோவில் முதலிய இடங்களில் இம் மஞ்சுவிரட்டுப் பரவலாக நடைபெறுகிறது. அத்துடன் சிவகங்கை மாவட்டதில் சிறாவயல், பாகனேரி, கண்டிப்பட்டி முதலிய சில ஊர்களிலும் நடைபெறுகிறது. கிராம மக்கள் அனைவரும் ஒன்றுகூடி கிராமம் சார்பாகப் பொங்கல் திருநாளை ஒட்டியோ அல்லது குலதெய்வ வழிபாட்டின் போதோ வெளி மஞ்சுவிரட்டினை நடத்துகின்றனர்.

இன்று தமிழகம் முழுக்கப் பரவலாக அறியப்பட்டுள்ள ஜல்லிக்கட்டின் பெயர்தான் வாடி மஞ்சுவிரட்டு. நவீன தமிழ் இலக்கியத்தில் சி.சு. செல்லப்பாவின் ‘வாடிவாசல்’,

சு.வெங்கடேசனின் ‘காவல்கோட்டம்’ ஆகிய நாவல்கள் வாடி மஞ்சுவிரட்டு குறித்துப் பதிவுசெய்துள்ளன. மதுரையினைச் சுற்றி நடைபெற்றுவரும் உலகப்புகழ்பெற்றுள்ள அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் ஆகிய ஜல்லிக்கட்டுகள் யாவும் வாடி மஞ்சுவிரட்டுதான். இதற்கெனக் கறாராக வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் உள்ளன. காளைகள் ஒவ்வொன்றாக வாடிக்குள் கொண்டுவந்து அவிழ்த்துவிடப்படும். வாடியிலிருந்து வெளியேறும் காளை ஒரு குறிப்பிட்ட எல்லையினைத் தாண்டுவதற்குள் மாடுபிடி வீரர் அதன் திமிலைப் பற்றிக் குறிப்பிட்ட நேரம்வரைத் தாக்குப்பிடிக்க வேண்டும். ஒரு காளையினை ஒரு வீரர் மட்டுமே திமிலைப் பற்றிக் கட்ட வேண்டும். அப்படிக்கட்ட முடியவில்லை என்றால் காளை வென்றதாக அறிவிக்கப்படும். இவ்விளையாட்டில் பங்கேற்கும் காளைகள், பிடிகாரர்கள் அனைவருக்கும் சிறியதாகவேனும் பரிசுகள் வழங்கப்படுகின்றன. வெற்றியாளர்களுக்குத் தங்கக்காசுகள் தொடங்கி கார்(Car) எனத் திறமைக்கேற்ற சிறந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன. வாடி மஞ்சுவிரட்டிற்குப் புரவலர்கள் அதிகமும் கூட.

காளைகள் வெளியேறும் வாடிவாசல் மிகவும் புனிதத் தன்மை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. முந்தைய காலங்களில் வாடிவாசல் இருபுறமும் உயர்ந்த பனைமரத் தண்டுகளை வைத்து அமைக்கப்பட்டிருக்கும் அல்லது வேறு ஏதேனும் உயர்ந்த மரக்கட்டைகளை வைத்து அமைக்கப்பட்டிருக்கும். தற்போது பல இடங்களில் வாடிகள் நிரந்தரமாகக் கட்டப்பட்டுள்ளன. ஒருவகையில் வெளி மஞ்சுவிரட்டின் ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம்தான் வாடி மஞ்சுவிரட்டு எனக் கருத இடமுண்டு.

எருதுகட்டு எனும் காளை விளையாட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் பரவலாக நடைபெறுகின்றது. இது பெரும்பாலும் ஊர்க்காவல் தெய்வமான அய்யனார் வழிபாட்டினை ஒட்டி நடைபெறும் குதிரை எடுப்பின் போது நடத்தப்படுகிறது. வைக்கோல் பிரியினை முறுக்கிச் செய்யப்பட்ட ஒரு பெரிய வடத்தின் (நீண்ட கயிறு) ஒரு முனையில் காளை கட்டப்பட்டிருக்கும். மறு முனையினை ஆட்கள் பிடித்திருப்பர். ஒரு சாரார் காளையினை அடக்கிப் பிடிக்க முயல்வர். வடத்தினைக் கையில் பிடித்திருக்கும் மறு சாரார் பிடிக்க விடாமல் மீட்க முயல்வர். இந்த எருதுகட்டில் வெட்சித் திணையின் ‘ஆகோள் பூசல்’ நிகழ்வினை நினைவுறுத்தும் கூறுகளைக் காணமுடிகிறது. எனவே சங்க காலத்தில் நிலவிய ஆகோள்பூசலின் எச்சமாகக் கூட இந்நிகழ்வினைக் கருத இடமுள்ளது.

எருதுகட்டு நிகழ்வினை அடியொற்றி வடிவமைக்கப்பட்ட விளையாட்டு வட மஞ்சுவிரட்டு ஆகும். ஒருவகையில் இதனை எருதுகட்டின் செம்மைப்படுத்தப்பட்ட விளையாட்டாகக் கருதலாம். “வடமஞ்சுவிரட்டு நாங்க பார்த்து உருவாக்குனதுதான். நானும் வேந்தன்பட்டி வேலுவும்தான் முதன்முதலில் 2000 மாவது வருஷம் வேந்தன்பட்டியில முதல் வடத்தினை ஆரம்பித்தோம் என்கிறார் டொங்கான். இராமநாதபுரம் எருதுகட்டு நிகழ்வில் பங்கேற்ற அனுபவத்தின் அடிப்படையில் இவர்கள் இந்த மஞ்சுவிரட்டினை உருவாக்கியுள்ளார்கள். இன்று மதுரை, சிவகங்கை, இராம்நாடு, திருச்சி, புதுக்கோட்டை முதலிய மாவட்டங்களில் இது பரவலாக நடைபெற்று வருகிறது. இதற்கு நன்கு வரையறுக்கப்பட்ட தெளிவான விதிகள் உள்ளன.

ஒரு வட்ட அரங்கில் 27 முதல் 30 அடி நீளம் ஆரமுடைய வடம் எனப்படும் நன்கு தடிமனான கயிற்றின் ஒரு முனை அரங்கின் நடுப்பகுதியில் கல்லில் கட்டி மிக உறுதியாகப் புதைக்கப்பட்டிருக்கும். மற்றொரு முனையில் காளை கட்டப்பட்டிருக்கும். இந்தக் காளையினை அடக்க 9 நபர்களைக் கொண்ட குழு களமிறங்கும். யாரேனும் இவருக்குக் காயம்பட்டால் மாற்று மாடுபிடி வீரர் ஒருவர் மட்டும் களமிறங்கிக் கொள்ளலாம். காளையினை அடக்குவதற்கு 20 அல்லது 25 நிமிடங்கள்

வழங்கப்படுகின்றன. இதில் வெற்றியாளர்களுக்குக் குறைந்தபட்சம் ரூபாய் 10,000 அத்துடன் சிறப்புப் பரிசுகள் ஆகியவை வழங்கப்படுகின்றன.

இவ்வாறாக, தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டு நடைபெறுவதனையும், ஜல்லிக்கட்டிற்கு மட்டுமே உரித்தானவைகளாகப் புலிக்குளம் இனக் கிடைமாட்டுக் காளைகள் திகழ்வதனையும் அறிய முடிகிறது.

மஞ்சுவிரட்டுக் காளைகள்: தேர்வும் வளர்ப்பும்

மஞ்சுவிரட்டுக் காளைகள் வளர்க்க விரும்பும் நபர்கள் கிடைமாடுகள் அடைந்திருக்கும் தொழுவிற்கு வருகைதருகின்றனர். கிடைமாடுகள் மேய்ச்சலுக்குச் சென்றபிறகு தனியாக நிற்கும் கன்று கூட்டங்களில் தங்களுக்குத் தேவையான கன்றுகளைத் தேர்வு செய்கின்றனர். அப்படித் தேர்வு செய்யப்படும் கன்றுகள் அடையாளத்திற்காகக் கழுத்தில் கயிறு போட்டு விடப்படுகின்றன. “தேர்வுசெய்யப்படும் கன்றுகள் குறைந்தது மூன்று மாதங்கள் கழித்துத்தான் மாட்டிலிருந்து பிரித்துச் செல்லப்படுகின்றன. முந்தைய காலங்களில் இக்கால அளவு ஆறு மாதங்களாக இருந்தது’’ (மலைராசு கீதாரி) என்று கிடைமாட்டுக்காரர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் ‘கன்றுகள் பிறந்து எழுந்திருக்கும் சீரை வைத்து அது மஞ்சுவிரட்டிற்கு உகந்ததா அல்லது பந்தையத்திற்கு உகந்ததா, நின்று பாயக்கூடியதா என்று கண்டறிந்து விடுவோம்’ (மலைராசு கீதாரி) என்றும் கூறுகின்றனர்.

ஒரு காளை மஞ்சுவிரட்டிற்கு ஏற்ற வகையில் முழுமையான வளர்ச்சியினைப் பெற மூன்று வயதாகிறது. இந்தக் காலங்களில் காளைக்கு மேய்ச்சல், மற்றும் தீவனங்கள் நிறைவானதாகவும் கூடுதலாகவும் அமைதல் வேண்டும். மாட்டிற்கு வழங்கப்படும் உணவினைப் பொருத்து அதன் விரைவான வளர்ச்சி அமையும். காளை வளர்ப்போர் தங்கள் பொருளாதார நிலையினைப் பொருத்துக் காளைகளுக்குத் தீவனம் வைக்கின்றனர். இயல்பாக மாடுகளுக்கு வைக்கப்படும் தீவனங்கள் (பருத்திக்கொட்டை, கடலைப் புண்ணாக்கு, தவிடு, உளுந்தங்கஞ்சி முதலியவை) யாவும் காளைகளுக்கு வைக்கப்படுகின்றன. கடலை மிட்டாய், வாழைப்பழம் முதலியவைகளும் ஊட்டப்படுகின்றன. நாட்டுக்கோழியினை உரலில் வைத்து நன்கு இடித்துத் தவிட்டுடன் கலந்து காளைகளுக்கு வழங்குகின்றனர்.

இவையாவும் தனிப்பட்டோர் வளர்க்கும் காளைகளுக்குத்தான். மஞ்சுவிரட்டில் பங்கேற்கக் கூடிய கிடைமாட்டுக் காளைகளுக்கு எந்தவிதத் தனிச்சிறப்பு வாய்ந்த உணவோ பயிற்சியோ கிடையாது. புலிக்குளம் இனத்தைச் சேர்ந்த காளைகள் எவற்றிற்கும் மஞ்சுவிரட்டிற்கு என்று எந்தப் பயிற்சியும் வழங்கப்படுவதில்லை. வெளி மஞ்சுவிரட்டு மற்றும் வாடி மஞ்சுவிரட்டில் நன்றாக நின்று சுத்தி விளையாடும் காளைகளாகப் பார்த்துத் தேர்வு செய்து வடமஞ்சுவிரட்டிற்காகத் தயாரிக்கிறார்கள். வடமஞ்சுவிரட்டில் பங்கேற்கும் காளைகளுக்குத் தனிப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மஞ்சுவிரட்டில் பங்கேற்கும் பக்குவம் வந்தவுடன் மாதத்திற்கு இரண்டு மூன்று முறைகள் பிடிகாரர்களை அழைத்துக் காளையினை வடத்தில் கட்டிப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதற்காக வரும் பிடிகாரர்களின் ஒன்பதுபேர் கொண்ட குழுவிற்கு ரூபாய் 1500 முதல் 2000 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி காளைக்கும் பிடிகாரர்களுக்கும் என இருதரப்பினருக்கும் பயனுள்ளதாக அமைகிறது. வாரத்தில் சில நாட்கள் ஓட்டப் பயிற்சியும் வழங்கப்படுகிறது. இப்பயிற்சியின் போது காளையினை ஓடவிட்டு கயிற்றில் பிடித்தபடி ஒருவர் பின்தொடர்ந்து ஓடுவார். 5 கி.மீ முதல் 8 கி.மீ வரை இந்த ஓட்டப் பயிற்சி வழங்கப்படுகிறது. வட மஞ்சுவிரட்டில் காளை அயற்சி ஆகிவிடாமல் நன்கு விளையாடுவதற்காக இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

காளைகளைத் தேர்வு செய்வதில் சுழி குறித்த நம்பிக்கைகள் அழுத்தமாக நிலவுகின்றன. மஞ்சுவிரட்டு மாடுகளைச் சுழிகளின் அடிப்படையில் தேர்வுசெய்யும் முறையினை ‘சுழி சுத்தம் பார்த்தல்’ என்கிறார்கள். ‘அஞ்சு சுழி உள்ள மாடு கெஞ்சுனாலும் கிடைக்காது’ என்பது பழமொழி. ஐந்து சுழிகள் உள்ள மாடுகள் மஞ்சுவிரட்டில் நன்றாகப் பாயும் வலிமையுடையதாக இருக்கும் (மகாலிங்கம் கீதாரி) என்று கீதாரிகள் தெரிவிக்கின்றனர். மாட்டின் உடல் அங்கங்களில் இடம்பெறும் இடத்தைப் பொருத்து ஒவ்வொரு சுழிக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. இவற்றில் நன்மை பயக்கும் சுழிகளும் உண்டு, தீமை பயக்கும் சுழிகளும் உண்டு. ‘லட்சுமி சுழி, கோபுரச்சுழி, தாமனிச்சுழி, இரட்டைச்சுவர்ச்சுழி, பாசிங் சுழி, பூரான் சுழி, விபூதிச்சுழி, ஏறுநாகர் சுழி, நீர்ச்சுழி, கொம்புத்தானாச் சுழி முதலியவை நன்மை தரக்கூடிய சுழிகள் ஆகும். அக்கினிச்சுழி அல்லது முக்கண்சுழி, குடைமேல் குடைச்சுழி, விலங்குச்சுழி, பாடைச்சுழிகள், பெண்டிழந்தான் சுழி, நாகப்படச் சுழிகள், தட்டுச்சுழி, துடைப்பச் சுழி, விறிக்கட்டு அல்லது புரட்டானிச் சுழி, ஏழுக்கட்டு, படிக்கட்டு சுழிகள், வால் முடங்கிச் சுழி, கருநாகம், எச்சுப்புள்ளி, மென்னிப்பிடிச்சுழி, இறங்கு நாகச்சுழி, இறங்கு பூரான் சுழி முதலியவை தீமைகள் விளைவிக்கக்கூடிய சுழிகள் ஆகும்’ (கிருஷ்ணசாமி மாடிக் ராவ் சாகேப், பக்., 21-4). தீமைகள் விளைவிக்கக்கூடிய சுழிகளை உடைய காளைகளை வீட்டில் வளர்ப்பதற்கு யாரும் வாங்குவதில்லை. எனவே அவை பெரிதாக விலை போவதில்லை. அத்தகைய காளைகள் கிடைமாட்டில் வளர்வதால் கிடைக்கு எத்தகைய தீமையும் நேராது என்கிற நம்பிக்கை நிலவுகின்றது. அதேபோன்று கோயில்களுக்குக் கோயில் காளையாகவும் நேர்ந்துவிடப் படுகிறது.

மஞ்சுவிரட்டுக் காளைகள் வளர்ப்பதில் இளைஞர்கள் மட்டுமல்லாமல் இளம் பெண்களும், சிறுவர்களும் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். ‘நான் பத்து வருடத்துக்கு மேலாக மஞ்சுவிரட்டுக் காளைகள் வளர்த்து வருகிறேன். எனக்குத் தெரிந்து காளை வளர்க்க விரும்பும் எல்லோரும் கிடைமாடுகளில் இருந்துதான் காளைகளைத் தேர்வு செய்கின்றனர். ஒவ்வொரு கிடைமாடுகளில் வாங்கும் காளைகளுக்கும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. மலைராசு கீதாரியின் கிடையினைச் சார்ந்த காளை அதனை வளர்ப்பவருடன் மிகவும் பாசமாகப் பழகும். மஞ்சுவிரட்டுக் களத்திற்கு வந்தால் மட்டுமே உக்கிரமாகப் பாயும். மற்ற நேரங்களில் மிகச் சாதுவாக இருக்கும். அதேபோன்று ஒவ்வொரு மூதாதையின் வழிவந்த காளைகள் சில தனித்த குணங்களை மரபுவழியாகப் பெற்றிருக்கும்’ (பழனிக்குமார்) என்கிறார் அனுபவம் வாய்ந்த மஞ்சுவிரட்டு மாடு வளர்ப்பாளர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஜல்லிக்கட்டு தடை செய்யப்பட்டுவிட்டது. அந்த நேரத்தில் கிடைமாட்டுக்காரர்கள் பெரிய அளவிலான பாதிப்பினைச் சந்தித்தனர். கிடைமாட்டுப் பொருளாதாரத்தில் காளங்கன்றுகள் விற்பனைக்குப் பெரும்பங்கு உள்ளது. ஜல்லிக்கட்டு தடை காலத்தில் காளங்கன்றுகள் விலை பெரும் வீழ்ச்சியினைச் சந்தித்தது. காளங்கன்றுகள் விற்பனையும் பெரிய அளவில் இல்லை. பெரும்பாலான காளங்கன்றுகளை அடிமாட்டிற்குத்தான் (இறைச்சிக்கு) விற்றோம். ஜல்லிக்கட்டு தடை நீங்கிய இந்த மூன்றாண்டுகளில் காளங்கன்றுகள் நல்ல விலைக்கும் அதிக அளவிலும் விற்பனையாகின்றன என்று கிடைமாட்டுக்காரர்கள் தெரிவிக்கின்றனர். இதன்மூலம் மஞ்சுவிரட்டு எனும் பண்பாட்டு நிகழ்வும் புலிக்குளம் இனக் கிடைமாடு வளர்ப்பும் ஒன்றையொன்று சார்ந்திருப்பது புலனாகிறது.

பொதுவாக மஞ்சுவிரட்டுக்கு என்று தனியாகக் காளைகளை வாங்கி வளர்ப்பதில் பொருளாதாரம் சார்ந்த லாப நோக்கிலான காரணிகள் இருப்பதாகத் தெரியவில்லை. அதேபோன்று மாடுபிடி வீரர்களும் பொழுதுபோக்கிற்காகப் பிடிப்பதாகத் தெரியவில்லை.

ஏனென்றால் மஞ்சுவிரட்டில் பங்கேற்பது என்பது ஒவ்வொரு வீரனுக்கும் ஒரு மதிப்பு மிக்க சடங்கு. மஞ்சுவிரட்டிற்கு நாள் குறித்து வெற்றிலை பாக்கு வைத்த நாள் முதற்கொண்டு ஒவ்வொரு வீரனும் தன்னைப் புனித உடலாகக் கருதி விரதத்தை மேற்கொள்ளத் தொடங்குகிறான். மதுஅருந்தாமல், தீட்டுக் காரியங்களில் பங்கேற்காமல் ஏறுதழுவல் என்கிற சடங்கில் பங்கேற்க தன்னை ஆயத்தப்படுத்துகிறான். ஒரு வேளை அந்த நிகழ்வில் உயிர் போனால், அது போர்க்களத்தில் பலியாவதைப்போல் ஒரு வீரமரணம். எதற்காக இப்படியெல்லாம் உயிரைப் பணையம் வைக்கும் ஒரு பண்பாடு என்கிற கேள்வி எழலாம். அதற்கான பதில் இதுதான். தமிழர்கள் பெருமிதத்திற்காக மட்டுமே மஞ்சுவிரட்டுக் காளைகளை வளர்க்கிறார்கள், காளைகளை அடக்குகிறார்கள். ஆம்! மஞ்சுவிரட்டு என்பது தமிழ்ப் பெருமிதத்தின் வெளிப்பாடு.

முடிவுரை

தமிழ்நாட்டிற்கே உரிய ஆறுவகையான மாட்டினங்களில் புலிக்குளம் வகை மாட்டினம் தனித்துவம் மிக்கதாகத் திகழ்கிறது. கிடைமாடுகளாக வைத்துப் பராமரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்ச் சமூகத்தில் பண்பாட்டு முக்கியத்துவம் மிக்கக் கூறுகளைத் தன்னகம் கொண்டிருக்கிறது. சங்ககாலத்திலிருந்து தற்காலம்வரை நீண்ட தொடர்ச்சியினைப் பெற்றுள்ள ஆயர் வாழ்வில் கிடைமாடு வளர்ப்பும் அதுசார்ந்த பண்பாடும் பின்னிப்பிணைந்திருக்கிறது. அப்படியொரு பின்புலத்தில் தோன்றிய ஆயர்களின் மணம் சார்ந்த பண்பாடுதான் ஏறு தழுவுதல். இன்றைய நிலையில் ஏறுதழுவுதல் பண்பாடு காலமாற்றங்களுக்கு உட்பட்டு வெளி மஞ்சுவிரட்டு, வாடி மஞ்சுவிரட்டு, எருதுகட்டு, வடமஞ்சுவிரட்டு என்பனவாக நடைபெற்று வருகிறகின்றன. கிடைமாடுகளாக வளர்க்கப்படும் புலிக்குளம் வகை மாட்டினத்தைச் சேர்ந்த “பாய்ச்சல் காளை” என்ற சிறப்பிற்குரிய காளைகள்தான் மஞ்சுவிரட்டிற்கு எனத் தேர்வுசெய்து வளர்க்கப்படுகின்றன. இவ்வாறு இலக்கிய வழக்கிலிலும் சமகால மக்கள் வாழ்க்கையிலும் நிலைபெற்றுள்ள நம்பகத்தன்மையான சான்றுகள் புலிக்குளம் வகை மாட்டினத்திற்கும் ஏறுதழுவுதல் பண்பாட்டு அல்லது மஞ்சுவிரட்டுப் பண்பாட்டிற்கும் இடையிலான நெருங்கிய உறவினைப் புலப்படுத்துகின்றன.

உதவிய நூல்கள்

1. கிருஷ்ணசாமி மாடிக் ராவ் சாகேப் (ப.ஆ), மாடு குதிரைகள் பறவைகள் லட்சணங்களும் வைத்தியமும், தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம், 2018
2. சரவணன், ப (உ.ஆ), சிலப்பதிகாரம், சந்தியா பதிப்பகம், சென்னை, 2008
3. தமிழண்ணல், சங்கமரபு, சிந்தாமணிப் பதிப்பகம், மதுரை, அக்டோபர், 2009
4. பசுபதி, ம.வே., (ப.ஆ), செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், சூன், 2010
5. ராசமாணிக்கனார், மா. மொஹஞ்சொதாரோ (அல்லது) சிந்துவெளி நாகரிகம், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை.
6. ராஜ் கௌதமன், ஆகோள் பூசலும் பெருங்கற்கால நாகரிகமும், தமிழினி, சென்னை, 2009
7. ராஜ்கௌதமன், கலித்தொகை-பரிபாடல் : ஒரு விளிம்புநிலை நோக்கு, விடியல், கோயம்புத்தூர், 2011

ஊர் காலி (ஊக்காலி) மாடு

கோ.இராமசாமி
பழமொழி ஆய்வாளர்
9187543 94312

எனது ஊர் திண்டுக்கல் பழனிச்சாலையில், திண்டுக்கல்லில் இருந்து 8 கி.மீட்டர் - பாலம் ராசக்காபட்டி - 1960ல் சுமார் 60 வீடுகள். கோனார் 30, பிள்ளைமார் 20, ரெட்டியார் 5, இதரர் 5 - கரிசல் பூமி ஊரை ஒட்டி ஓடும் குடவனாற்றில், கோடையிலும் நீர் வற்றாது. ஏறத்தாழ எல்லோர் வீட்டிலும் வண்ணார் வீடு உட்பட எருமைமாடு இருந்தது.

"ஒரு எருமையும், முருங்கையும் இருந்தால் விருந்துக்கு அஞ்ச வேண்டாம்" - சொலவடை

கோனார்களின் குலத்தொழில் ஆடு மாடு வளர்த்தல். நாங்களும் கோனார்கள் கூட வாழ்ந்தால், சில்லறைச் செலவுகளுக்காக ஊரில் எல்லோரும் ஆடு மாடு வளர்த்தோம்!

"நண்டு திங்கிற ஊருக்குப் போனால், நடுத்துண்டம் நமக்கு"

ஆறு ஊர் ஓரத்தில் ஓடியதால் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் பஞ்சம் கிடையாது. பச்சைப் புல்லுக்கும் பஞ்சம் இல்லை. இதையே "ஆறு உள்ள ஊரில் குடி இரு. ஆண் உள்ள வீட்டில் பெண் எடு" என்கிறது பழமொழி.

எல்லோருக்கும் விவசாய நிலம் இருந்ததால், **"ஆடு மேய்க்க ஆள் பஞ்சம், மாடு மறிக்க மக்க பஞ்சம்"**. எனவே ஊர்காலி மாடு மேய்ப்பவர் எங்கள் மாடுகளை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்வார்.

பக்கத்து ஊர் நாச்சக்கோனான்பட்டி, எளிய சாதிக்காரர் பெயர் முனியாண்டி 1960ல் வந்து சேர்ந்தார். அவருக்கு காலை, இரவு, சாப்பாடு வீட்டு வாசலில் வந்து அம்மா முனியாண்டி வந்திருக்கிறேன் என்பார். பெரும்பாலும் காலையில் கரை கஞ்சி தான். கம்மஞ்சோறு, சோளச்சோறு, வரகுச்சோறு, தோட்டம் வயல் உள்ள வீடுகளில் நெல்லுச்சோறு.

இரவில் 7.00 மணிவாக்கில் முனியாண்டி வந்திருக்கேன் என்பார். இரவில் சுடுசோறுதான்! ஒரு சில வீடுகளில் போயிட்டு அப்புறம் வா என்பார்கள். அன்று இரவு அவர்கள் வீட்டில் சோறு ஆக்கவில்லை என்று அர்த்தம். முனியாண்டிக்கும் அது தெரியும். திரும்பவும் அந்த வீட்டுக்குப் போக மாட்டார்.

"வண்ணான் அறிவான், ஊரின் நிலைமை" பழமொழி.

"மாடு மேச்சு வந்தேன்! மணி ஆட்டி வந்தேன்! சோறு போடுடி சொக்காயி"
- நாட்டுப்புறப்பாடல்.

அவர் இரவ சோறு வாங்கிக் கொண்டு அவரது ஊருக்குச் சென்று விடுவார்.

"வனத்தில் அலைஞ்சாலும், இனத்தில் சேர்" என்கிறது பழமொழி.

இது தவிர மாடு ஒன்றுக்கு மாதம் 1 ½ ரூபாய் சம்பளம் ஊரில் விஷேட நாட்களில், விஷேச வீடுகளில் ஏண்ட வேலை, எடுத்த வேலை செய்வார். அவர் சம்சாரமும் கூடவரும். 3 நேரம் விருந்துச் சாப்பாடு தவிர 2 நாள் வேலை பார்த்ததுக்குக் கூலியாக இருவருக்கும் ஐந்து ரூபாய் வரை கிடைக்கும். அது அப்போது பெரிய தொகை.



ஆடி, தீபாவளி, பொங்கலுக்கு இட்லி, தோசை கிடைக்கும். சில வீடுகளில் வேலை ஆட்களுக்குக் கொடுப்பதற்காக, தனியே சோளத் தோசை சுடுவதும் உண்டு. எல்லோர் வீட்டிலும் ஆட்டுரல் இருக்காது. இட்லி அண்டா இல்லாத வீட்டில் மண்சட்டியில் மேல்பகுதியில் வேடுகட்டி அதில் இட்லிமாவு ஊற்றிச் சாப்பிடும் தட்டால் மூடி ‘‘பெரிய இட்லியாகச்’’ சுட்டு எடுப்பார்கள். 1 பெரிய இட்லி கிராமத்து இட்லிக்கு 6 இட்லிக்குச் சமம், டவுன் இட்லி 10க்குச் சமம். சிறியவர்கள் 2 இட்லியும், பெரியவர்கள் 3 இட்லி வரை சாப்பிடுவார்கள். அதுவும் கறிக்கொழம்பும் உண்டு.

‘‘அனுதினமும் கிடைக்குமா அமாவாசை சோறு’’.

தீபாவளிக்கு ஆடு உறித்துக் கூறு கட்டி விற்பார்கள். கடனுக்கும் கிடைக்கும். ஒரு கூறுக்கறி - 1 விசை. அதாவது 1 ½ kg. தீபாவளி முடிந்து ஒரு வாரத்தில் காசு தராவிட்டால் ‘‘கறித் தின்னியா - பீயைத் தின்னியா’’ என்று கறிக்காரர் கேட்பது சாதாரண விசயம்.

‘‘மடியைப் பிடித்து கள்ளை ஊற்றி
முடியைப் பிடித்து காசு வாங்கு’’ என்கிறது பழமொழி.

காலையில் 8.30 மணி அளவில் ‘‘மாடு அவுத்து விடுங்க ஆத்தா’’ என்று முனியாண்டி கூறுவார். எல்லோரும் மாடு அவுத்து விடுவார்கள். மாலை 5 ½ மணிக்கு முனியாண்டியின் குரல் மறுபடியும் கேக்கும். ‘‘ஆத்தா மாடு வந்துருச்சு. புடிச்சுக் கட்டிக்கங்கோ’’.

‘‘பாப்பாத்தியம்மா மாடு வந்திருச்சு. பிடிச்சு கட்டுனா கட்டு கட்டாட்டிப் போ’’ என்கிறது சொலவடை.

அடைமழை காலம். ‘‘ஐப்பசி, கார்த்திகை ஆறு எல்லாம் வெள்ளம், ஊரு எல்லாம் தண்ணி. அப்போதும் வழக்கம் போல் மாடுகளை மேய்ச்சலுக்குக் கூட்டிச் செல்வார். கையில் மழைக்குத் தாழம்பூ மடல்களால் ஆட மடக்க முடியாத தாழங்குடை பிடித்துச் செல்வார். சின்ன மழையானால், சணல் சாக்கை கொங்காணியாகப் பயன்படுத்துவார். அடைமழை காலம் 15 நாள் முதல் 25 நாள் வரை நீடிப்பது உண்டு. மாடுகள் தீனி தின்னாலும் செரிமானம் ஆகாது. செம்மறி ஆடுகளின் நிலைமை படுமோசம்.

‘‘ஆடு மாடு இல்லாதவன் அடைமழைக்கு ராசா, பொண்டு பிள்ளை இல்லாதவன் பஞ்சத்து ராஜா’’ - பழமொழி.

தீபாவளிக்கு முதல் நாள் மதியமே மாடு வீட்டுக்கு வந்துவிடும். தீபாவளியன்று மாட்டுக்காரனுக்கு விடுமுறை. கட்டுத்துறையிலே 1 ½ நாள் மாடுகள் இருக்கும். வைக்கோல், வரகம்புல், சோளத்தட்டை, கம்மந்தட்டை, கடலைக்கொடி போன்ற வறட்சி காலத் தீவனங்கள் கட்டுத்துறையை நிரப்பும். சில வீடுகளில் மொச்சைக்கொடி, பச்சைப்புல், கொள்ளுக்கொடி கிடைக்கும்.

‘‘ஆடாய் பிறந்தாலும் அதிர்ஷ்டம் வேணும்
மாடாய் பிறந்தாலும் மகராசன் வீட்டில் பிறக்கணும்’’ - சொலவடை

பொங்கலுக்கு முதல் நாளும், மாடு மதியான்னம் வீட்டுக்கு வந்து விடும். பொங்கல் அன்றும், மறுநாளும் முனியாண்டிக்கு லீவு. இருந்தாலும் முனியாண்டி எங்கள் ஊரில் தான் இருப்பார்.

"செக்குமாடு சுத்தி சுத்தி வருவது பொல"

மாடுகளைக் குளிப்பாட்ட, கொம்பு சீவ, கொம்புக்கு (சிவப்பு) வண்ணம் தீட்ட, மூக்கணாங்கயிறு, கழுத்துக்கயிறு புதிதாக மாட்ட என்று சின்னச் சின்ன வேலைகள். **"காடு செழிச்சாலும், பாடு ஒழியாது".**

கறவை மாடுகளின் பால் - வீட்டுத் தேவைக்குப் போக மீதியை – சைக்கிளில் வந்து பால்காரர்கள் வாங்கிச் செல்வார்கள். வாரம் ஒருநாள் பணப்பட்டுவாடா நடக்கும். காலை 7 மணிக்கும், மாலை 5 மணிக்கும் கறவைப் பாலில் சிறிது தண்ணீர் சேர்த்துத்தான் விற்பார்கள். அது வியாபாரத் தர்மம். இதுபோக பால்காரனும் தண்ணீர் கலப்பது உண்டு. பால் வெயில் காலத்தில் குறைவாகவே கிடைக்கும். அப்போது தண்ணீர் தாராளமாகப் புழங்கும் **"கறவை குறைந்தால் - தண்ணிக்குப் புடிச்சது கேடு"** என்கிறது பழமொழி.

எருமைப்பால் கெட்டியானது. எவ்வளவும் தாங்கும். இன்றளவும் கிராமங்களில் சிறு குழந்தைகளுக்கு இனாமா 'பிள்ளைப்பால்' கொடுக்கும் தர்மம் நடக்கிறது. முன்பு வீடுகளுக்கு வருபவர்களுக்கு மோர் கொடுத்து உபசரித்தார்கள். இன்று அது அருகி விட்டது.

முன்பு பெண் பார்க்கச் செல்லும் போது, மணப்பெண் மாப்பிள்ளை வீட்டாருக்கு மோர் கொடுக்கும் பழக்கம் இருந்தது. மோர் கொடுக்கும் பாங்கு, மோரின் அளவு, மோரில் உப்பின் அளவு - இவற்றை வைத்துப் பெண்ணை எடை போடுவார்கள்.

"துப்புக்கெட்டவனை - உப்பிலே பாரு"

"சீரு உள்ளவனை மோரிலே பாரு" - என்கிறது பழமொழி.

நெல் சூடு அடித்தல், கொத்தமல்லி சூடு அடித்தல், வரகு சூடு அடித்தல் - இரவு 8 மணிக்கு ஆரம்பித்து நடு இரவு 2 மணிக்கு முடியும். ஏறத்தாழ ஒரு மாதம் சூடு அடித்தல் நடக்கும். இதில் தவறாது முனியாண்டிக்கு வேலை தரப்படும். வேலை முடிந்து களத்திலேயே படுத்து விடுவார். கூலியாகக் கெட்டித் தானியம் (சோளம் கம்பு) ஒரு மரக்காலும், 3 ½ படி - 5kg வழங்கப்படும். உமித்தானியம் (நெல், வரகு) என்றால் 1 ½ மரக்கால் வழங்கப்படும். எனவே முனியாண்டி செல்லப்பிள்ளையாகவே வலம் வந்தார்.

இன்று ஊர்காலி மாடு மேய்ச்சல் முறை ஒரு சில மலையை ஒட்டிய அடிவாரக் கிராமங்களில் உள்ளது. கிராமங்கள் நகர் மயமாக ஆகி வருவதால் - விளைச்சல் நிலப்பரப்புக் குறுகி விட்டது.

"நெல்லு மொளச்ச எடம் எல்லாம்
கல்லு மொளச்சிருச்சு"

என்று விவசாய நிலங்கள் தொழிற்சாலைகளுக்கும், வீட்டடி மனைகளுக்கும் மாற்றப்படுவதை வேதனையுடன் கூறுகிறார் ஒரு கவிஞர்.

இருப்பினும் பால் இன்று அத்தியாவசியத் தேவை ஆகி விட்டது. ஆனாலும் கிராமத்தில் இன்னும் ரூ.20/-க்குத் தான் கொள்முதல் செய்யப்படுகிறது. கார்ப்பரேட் பால் பண்ணைகள், பால் அதிக உற்பத்திக் காலத்தில் இன்னும் அடிமாட்டு விலைக்கு வாங்குகிறார்கள். ஆனால் 1 லிட்டர் ரூ.65/-க்கு விற்கிறார்கள்.

இந்த நிலை மாற குஜராத் அமுல் பால் பண்ணை போல் பால் உற்பத்தியாளர்கள், பங்குதாரர்கள் ஆகி, பால் வணிகத்தை நடத்த வேண்டும்.

'அண்ணன், தம்பி பகை ஆனாலும்
ஆடு மாடு பகை ஆகாது"

"ஆடு வயறும், நெறஞ்சிருச்சி -
மாடு வயறும் நெஞ்சிருச்சு" - ஆனா
மேச்சவன் வயிறு நெறயலியே -

என்று கட்டுரையை முடிக்கிறேன்.

மாடு மேய்ப்பவர்களும், மாடு வளர்ப்பவர்களும் வரும் காலத்தில் வளர்ச்சி பெற வாழ்த்துக்கள்.

ஆநிரையும் நிரை சார்ந்த பழமொழியும்

1. மாட்டை நடையில் பார், ஆட்டைக் கிடையில் பார்
2. மாடு மேய்க்காமல் கெட்டது, பயிர் பாராமல் கெட்டது.
3. மாடு மலையேறி மேஞ்சாலும், கன்னு கோனாரோடதுதான்
4. மாடு தொலைஞ்சவனுக்கு மணிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும்.
5. பசுவும் கன்றும் இல்லாதவனுக்கு, பகலில் தூக்கம் வரும்
6. மாடு இருந்தாலும் பாலாகும், செத்தாலும் தோலாகும்
7. கறப்பது பசு, காசு பாக்குறவன் இடையன்.
8. எருமை கறக்குமுன்னே, ஏழு தரம் வந்ததாம் கோடை மழை
9. எருமைக்காரனுக்குத் தெரியும் மாடு எந்தக் காட்டுல மேயுமுனு
10. எருமைக் கொம்பு நனையும் முன் எழுபது தரம் மழை
11. எருமை மாட்டுல, மழை பேஞ்சது போல
12. எருமை வாலைத் தூக்கிக் குதிச்சா, ஏகத்துக்கு மழை.
13. செம்மறி ஆட்டுப்பால், சீக்கிரம் ஆத்தும் வாய்ப்புண்ணை
14. செம்மறியாட்டு மந்தையிலே, வெள்ளாடு தனிதான்
15. பட்டியிலே ஆடு இருந்தா, பெட்டியில் பணம் இருக்குறமாதிரி
16. கிடை ஆடு வெயிலில் காய, கீதாரி மொதலு காண
17. ஆட்டுப் புழுக்கையும் மூத்திரமும் சேர்ந்தா, பொட்டக்காடும் பொன்னா வெளையும்
18. ஆட்டு மந்தயைக் காக்கும் நாய், ஆட்டுப் புழுக்கையையும்தான் காக்கனும்
19. ஆட்டைப் பார்த்தாலே தெரியும், எடையனோட வள்ளல்.
20. ஆயிரம் உரம் போட்டாலும், ஆடு நின்னதுக்கு ஈடாகுமா
21. ஆள் அம்பு இல்லாதவன், ஆடு மாடு வளக்கலாமா
22. அடை மழைக் காலத்துல ஆடு மாடு ஆகாது, அரும் பஞ்ச காலத்தில புள்ள குட்டி ஆகாது
23. அனுதினமும் ஆட்டுப்பால் குடித்தால், அண்டாது வலிப்பு நோய்
24. ஆடி வெப்பல், ஆட்டுக்கிடைக்குச் சமம்
25. இளசில் நல்லது கத்திரி பாகல் கீரை வெள்ளாடு, முற்றலில் நல்லது மீனும் செம்மறி ஆடும்
26. ஒரு ஆடு மேச்சவனே, ஒருமிக்கக் கெட்டவனே
27. ஈனாத மாட்டுக்கு ஒரு கடுக்காய், இளம் பிள்ளத்தாச்சிக்கு ஏழு கடுக்காய்.
28. இக்கரை மாட்டுக்கு, அக்கரை பச்சை
29. ஓடுற மாட்டுக்குத்தான், கொண்டிக்கட்டை

30. அஞ்சு எருமை கறக்கிறது ஊருக்குத் தெரியும், கஞ்சியும் தண்ணியும் குடிக்கிறது யாருக்குத் தெரியும்.
31. ஆடு இருக்க கடன், இடையனை என்ன செய்யும்
32. ஆடு இருக்க புலி, இடையனை விழுங்குமா
33. ஆடு இருந்தா கோனார்... இல்லாட்டி போனார்
34. குட்டி கிடக்கிற கிடையைப் பார், ஆட்டுப் புழுக்கையைத் தூத்துப்பார்.
35. ஆடு கிடந்த இடம், அதிக விளைச்சல்
36. ஆடு கீதாரியைக் காப்பாத்த, வயித்துக்கு மேஞ்ச மாதிரி
37. ஆடு பயிர் காட்டும், ஆவாரை நெல் காட்டும்
38. ஆட்டு உரம் ஒராண்டு நிக்கும், மாட்டு உரம் ஆறு ஆண்டு நிக்கும்
39. ஆட்டு உரம் தன்னில், மாட்டு உரம் மேல்
40. ஆட்டு எரு காணாத புஞ்சை, அரைப்புஞ்சூ
41. ஆட்டுக்குட்டி தூங்கும்போது தூங்கு, வானம்பாடி எழும்போது எழு
42. கிடை ஆட்டில், பிரிஞ்ச குட்டி போல
43. செம்மறி ஆடு ஒன்னு போக, மற்ற ஆடுகளும் பின்னால் போகும்
44. பட்டி மாறுன ஆடு, பரிதவிச்சது போல
45. எருமைக் கன்று, அருமைக் கன்று
46. கறப்பது பசு, காசு பாக்கிறது இடையன்.
47. பசுவோடு சேர்ந்து மேய்ஞ்ச எருமை, பஞ்சத்திலும் பிரியாது.
48. பட்டி மாட்டைக் கௌப்புனமாதிரி.
49. செம்மறி ஆட்டுக்குச் சீக்கு வந்தா, செத்து மடியும் ஒன்றன்பின் ஒன்றாய்.
50. பசுவோடு சேர்ந்து மேய்ஞ்ச எருமை, பஞ்சத்திலும் பிரியாது
51. கிடைக்குக் கிடை ஆடுதான், கிடை பாராமா, குடை பாராமா.
52. குட்டி ஆடும் கத்தும்போது, குருட்டாடும் கத்துச்சாம்
53. குட்டி தப்பி வந்தா குள்ளநரிக்குச் சொந்தம், குள்ளநரி தப்பி வந்தா, கொறவனுக்குச் சொந்தம்.
54. செத்த ஆட்டுக்குக் கண்ணு பெரிசு, தாயில்லாப் பிள்ளைக்கு வயிறு பெரிசு.
55. ஆட்டை உரிக்கத் தெரியாம, பித்தைக் கலக்குனானாம்.
56. ஆட்டுக்குட்டி களவுக்கு, ஆனை விலை கொடுப்பதா.
57. ஆட்டு எரு மூனு பொதி, மாட்டு எரு ரெண்டு பொதி.
58. ஆட்டுக்கார எடையனுக்குத் தூக்கம் வரக்கூடாது, அவுசாரி போறவளுக்கு தும்மல் வரக்கூடாது
59. ஆட்டுக்காரனுக்குக் கம்பு, ஆசானுக்கு பெரம்பு
60. ஆடும் மாடும் உள்ளவன், அடகுக்கடைக்குப் போக வேணாம்
61. ஆடு மேஞ்ச காட்டை நோக்கும், மழை பேஞ்ச காட்டை நோக்கும்
62. ஆடு பகை, குட்டி உறவா?
63. ஆடு மாடு, கோனார் இன்றி தானாப் போகாமா?
64. ஆடு தின்னாப் பாலைய, மாடும் தின்னாது.
65. யாரு பாவத்துல விழுந்தாலும், மாட்டோட பாவத்துல விழாதே
66. ஆடுற மாட்டை ஆடிக் கறக்கனும், பாடுற மாட்டை பாடிக் கறக்கனும்
67. ஓடுன மாட்டைத் தேடுவாரும் இல்லை, மேய்ச்சலில் கூலி தருவாரும் இல்லை
68. காடு வளம், குண்டை வளம், குடி வளம், கோன் வளம்
69. ஆடு செத்துப் போனப்பவே ,சினையும் செத்துப்போச்சு
70. ஆடு மறிச்சவன் புஞ்சை வெளையுமா, அங்கலாயச்சவன் புஞ்சை வெளையுமா

71. ஆடு மாடு இல்லாதவனுக்கு, அளவு கடந்த துன்பம்
72. ஆட்டுச் சண்டையில, நரி மூளைக்கு ஆசைப்பட்டதாம்
73. ஆட்டுக்கு வழக்காடி, மாட்டைத் தொலைச்ச கதையா.
74. இடையன் கோபம் ஆட்டு மேல, இடைச்சி கோபம் குட்டி மேல
75. ஆட்டைப் பிடிக்க இடம் கொடுத்தா, மாட்டைப் பிடிக்க ஆசைப்படுவான்
76. பசு உண்ட தண்ணீர், தேம்படு அமுதம் போல!
77. ஆயிரம் மாட்டில், ஒரு மாடு உதைத்தா நட்டமா?
78. பசுவும் எருமையும் ஒன்னாகுமா, பாலுந் தண்ணியும் ஒன்னாகுமா?
79. புல்லு கண்ட பக்கம் மேயுறது, பட்டி கண்ட பக்கம் அடையிறது.
80. மாடுகள் குதிச்சு ஓட, மழை நிச்சயம் உண்டு
81. மாடுகள் சேர்ந்தா மந்தை, பெண்டுகள் சேர்ந்தா சண்டை
82. மாடு வாங்குனா, மடியைப் பாத்து வாங்கு
83. ஆடு வாங்குனா, கொழுப்பைப் பாத்து வாங்கு
84. மாடு மயங்கி வானம் பாத்தா, மழை நிச்சயம்
85. மாட்டுக்கு ஒரு அடி, மனுசனுக்கு ஒரு சொல்
86. மாட்டுக்கு மாடு சொன்னாக் கேக்காதாம், மணி கெட்டுன மாடு சொன்னாத்தான் கேக்குமாம்
87. மாட்டெறு புஞ்சைக்கு, தழையெரு நஞ்சைக்கு
88. ஓர் ஆடு நீர் சுரந்தால், ஒரு பட்டி ஆடும் நீர் சொரக்கும்.
89. எட்டு மாட்டுக் காரி, உறைமோருக்கு அலைஞ்சாலாம்.
90. இரண்டு சுழி மாடு, இடி மேல் இடி
91. அஞ்சு சுழி மாடு, கெஞ்சினாலும் கெடையாது
92. ஈன்ட ஆடு, செனை ஆடு தெரியாதவன்
93. ஆயிரம் மாடு இருக்கிற வீட்டுல, அழுகிற புள்ளைக்குப் பால் இல்லையாம்
94. ஆடு பிடிக்க நரி வரும்போதுதான், நரியைப் பிடிக்கனும்.
95. ஆடு வரும் பின்னே, ஆடு தலையாடி வரும் முன்னே
96. எட்டு பாடு கண்டாலும், தொலைஞ்ச மாடு காணாது
97. அரசு சுழி மாடு, அனைவருக்கும் நல்லது
98. அடங்காத மாட்டுக்கு, அரசன் மூங்கில் தடி
99. ஓடுற மாட்டை மடக்கத் தெரியாதவன், படுக்கிற மாட்டை பாஞ்சு பாஞ்சு அடிச்சானாம்
100. இனம் இனத்தோட, வெள்ளாடு குட்டியோட

கிடை (மரபும் புதுமையும்)

எழுத்தாளர் வெற்றிச்செல்வன் இராசேந்திரன்
etrichelvan2992@gmail.com

ஒரு பண்பாடு சார்ந்த ஓர் இனக்குழு மக்களின் வாழ்வைப் பறைசாற்றுவது அவர்கள் பேசிக்கொள்ளும் மொழிதான். அப்படியான சூழலில் கிடையிலே பிறந்து வளர்ந்ததன் பொருட்டு அம்மக்களின் பண்பாட்டு மொழியினைக் கேட்டு வளர்ந்தது நற்பேறாகக் கருதுகிறேன். அப்படியே அவர்கள் பேசிக்கொள்ளும் மொழி எப்படியெல்லாம் சங்ககாலத் தமிழோடு இணைந்துள்ளது என்பதை ஆராய உதவுகிறது

நம்மில் பலருக்குக் கிடை என்ற அமைப்பு எத்தகைய காலத்திலிருந்து இருக்கிறது என்ற எண்ணம் எழலாம். குறிப்பாக சங்க இலக்கிய காலத்தில் இடையர்கள் பற்றியும் ஆநிரைகள் பற்றியும் பல்வேறு குறிப்புகள் உள்ளன. ஆனால் இப்போது இருக்கக்கூடிய கிடைத் தொழில் என்ற ஒன்று முந்தைய சங்க காலத்திலிருந்ததா என்பது பற்றி அறியுமுன் கிடைத்தொழில் இப்போது எவ்வாறு உள்ளது என்பதை முதலில் அறிய வேண்டும். அதற்குக் கிடையை முதன்மைத் தொழிலாகக் கொண்டு இயங்கும் மக்களின் பண்பாட்டையும், அவர்களின் மொழியையும் உற்று நோக்க வேண்டியுள்ளது.

கிடையின் பண்பாட்டை அறிந்துகொள்ள இப்போது உள்ள சூழல் ஒத்துப்போனாலும், இன்னும் நெருங்கி வரப் பசுமைப் புரட்சிக்கு முந்தைய கால கட்டத்தை ஆராய வேண்டும். தமிழர் வேளாண்மையில் பசுமைப் புரட்சியும் வெண்மைப் புரட்சியும் ஏற்படுத்திய தாக்கங்கள் மிகையானது. பசுமைப் புரட்சி, வெண்மைப் புரட்சி போன்றவற்றால் இன்று கிடைத்தொழில் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. இன்று இதுபோன்ற மேய்ச்சலியக் கருத்துகள் உருவாவதற்கே அறுபது ஆண்டுகளுக்கு மேலாகியுள்ளது. அந்தளவுக்கு நம்மைப் புரட்டிப் போட்டுள்ளது பசுமை மற்றும் வெண்மைப் புரட்சியோடு உருவான புதிய தொழில் வளர்ச்சி.

கிடை என்றால் கிட என்ற வினைச் சொல்லிலிருந்து உருவான ஒரு சொல். கிட என்னால் எதன் மேலாவது போட்டு வைத்தல். நிலத்தின் மீது ஆடுகளையோ மாடுகளையோ கிடக்க வைத்தலுக்குக் கிடை என்ற பெயர். கிட+ஐ= கிடை. கிட என்ற வினைச் சொல்லோடு ஐ விகுதி சேர்ந்து கிடை என்ற பெயர்ச்சொல்லானது.

பொதுவாகத் தமிழகக் கிடைத்தொழிலை முக்கியத் தொழிலாகக் கொண்டு வாழ்பவர்களின் பூர்வீகமாக இருப்பது தென் தமிழக மக்களே. குறிப்பாக இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களைப் பூர்வீகமாகக் கொண்ட மக்களே மிகுதியாகக் கிடைத்தொழிலை மையமாக வைத்துள்ளவர்கள்.

இன்றைய தமிழ் நிலத்தைப் பொறுத்தவரை, காவேரி, வைகை, தாமிரபரணி, கரிசல் நிலம் சார்ந்த வைப்பாறு போன்றவற்றை மையமாக வைத்தே கிடைத்தொழில் நெடுங்காலமாக நடந்து வருகிறது. மேலே குறிப்பிட்ட இடங்களில் நீள் வலசை சென்று வரக்கூடிய இடமாகக் காவேரி பாயும் இடங்கள் இருந்து வருகிறது. குறிப்பாக இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட இடையர்களே தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கும்பகோணம், திண்டுக்கல், மதுரை, தேனி, பெரம்பலூர், அரியலூர், கடலூர், சேலம்,

திருவண்ணாமலை போன்ற மாவட்டங்களுக்கு வலசை சென்று கிடை போடுகிறார்கள். ஏன் பொள்ளாச்சி வரை கூட வலசை சென்று வந்த இடையர்களும் உள்ளார்கள்.

இப்படியாகத் தமிழகத்தின் பெரும்பான்மையான இடங்களுக்கு வலசை சென்று போடக்கூடிய மரபை இராமநாதபுரம், சிவகங்கை மாவட்ட இடையர்களே வைத்துள்ளார்கள். ஆநிரை மேய்த்தலில் மிக இன்றியமையாத கூறுகளில் ஒன்று வலசை போதல். பருவத்திற்கு ஏற்ப வலசை போகுதல். இப்படிப் போகும் இடையர்கள் யாவரும் எல்லா ஊர்களுக்கும் போவது இல்லை. இந்த ஆண்டு ஒரு திசை அடுத்த ஆண்டு ஒரு திசை என்று வேறு வேறு நிலங்களுக்கும் போவதில்லை.

ஒவ்வொருவரின் வலசைப் பாதையும் தனித்துவமானது. தஞ்சையில் ஒரத்தநாடு பக்கம் போகும் ஓர் இடையர் அங்கு மட்டுமே போகும் வழக்கமுடையவர். இப்படியாக ஒவ்வொரு இடையருக்கும் தனித்துவமான மரபு வழி வலசைத் தடம் உள்ளது. இப்படியாக ஒவ்வொரு இடையரும் தங்களுடைய வலசைப்பாதையில் தை மாதம் தொழுவில் பொங்கல் வைத்து ஆடுகளை ஓட்டிக்கொண்டு அவரவர் வலசைத்தடத்தில் சமவெளிக்கு வருவார்கள். தை முதல் ஆனி, ஆடி வரை ஆறேழு மாதங்கள் வேளாண் நிலங்களில் ஆடு மாடுகள் மேயும் அதோடு கிடை அமர்த்துவார்கள். முன்பெல்லாம் ஊருக்கு மூவர் நால்வர் என ஒன்றாகச் சேர்ந்து கிடை போடுவார்கள்

அப்படிக் கிடை போட்டு முடிந்ததும், மீண்டும் ஆடுகளும் மாடுகளும் சமவெளி விட்டு வன் நிலங்களான மலை சார்ந்த மேய்ச்சல் நிலங்களுக்கு இடம்பெயரும். அங்குத் தொழு அமைத்துக் கார்காலத்தை கழித்துப் பின் மீண்டும் சமவெளிக்கு வருவது இயல்பு. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தில் மிக நீண்ட வலசை இல்லை. ஆனாலும் பருவத்திற்கும் வலைக்குள் ஏற்ப குறுகிய இடம்பெயர்வு உள்ளது. தமிழகத்தின் மேய்ச்சல் நிலமைப்பு என்பது கார்காலத்தில் மேய்ச்சல் நிலமாகவும், கோடைக் காலத்தில் மேய்ச்சல் நிலமாகவும் இருக்கும் தகவமைப்பைக் கொண்டது. பிற உலக நாடுகளை ஒப்பிடும்போது தமிழகத்திற்கென்று நிகழ்காலத்தில் ஒதுக்கப்பட்ட பெரிய மேய்ச்சல் நிலங்கள் என்று இல்லை. அப்படி இருக்கும் மேய்ச்சல் நிலங்கள் கூட ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ளூர் ஆடு மாடுகள் மேய்வதற்கே உண்டான தகவமைப்பைக் கொண்டுள்ளன. கிடை ஆடு மாடுகள் போல குவியலாக இருப்பவகைளுக்குப் போதுமானவையாக இல்லை. அதனால்தான் தமிழ்நாட்டில் மேயச்சலுக்கும் வேளாண்மைக்கும் நெருங்கிய நட்பு ஒன்று இன்றுவரை தொடர்கிறது.

உலக நாடுகளில் மேய்ச்சல் மற்றும் வேளாண்மை இரண்டு இரு வேறு காரணி. இரண்டுக்குமே மிகை நிலம் தேவைப்படுகிறது. பாரம்பரிய மேய்ச்சல் நிலம் வேளாண்மைக்குக் கையாளப்பயடுபோது மேய்ச்சல் நிலத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களின் வாழ்வு கேள்விக்குள்ளாகப்படும். இதனாலே மேய்ச்சலுக்கும் வேளாண்மைக்கு நெடுங்காலப் பகை உருவாகிறது. நடக்கும் அதிபுதிய தொழில்நுட்ப வளர்ச்சியில் மேய்ச்சல் நிலங்கள் சூறையாடப்படுவதை எளிதாகக் காண முடிகிறது. ஆனால் நற்பேறாகத் தமிழ்நாட்டில் கிடைத் தொழிலமைப்பு இருப்பதால் இந்த உறவுமுறை பாதுகாக்கப்பட்டு மேய்ச்சலும், கிடைத்தொழிலும் பருவத்திற்கேற்ப நடைபெறுகிறது. கிடை என்ற அமைப்பு மருத நிலம் உருவாகிய காலத்திலிருந்தே உருவாகிய ஒரு தொழிலாக இருக்க வேண்டும். இன்று வரை தை பிறந்தால் இந்தக் கீதாரி இங்க வந்திடுவார் என்று எண்ணிக்கொண்டு இருக்கும் வேளாண் நிலத்தை உடைய மக்களைத் தஞ்சைப் பகுதியில் காணலாம். ஒரே நிலத்தில் இரண்டு தொழில் பருவத்திற்கேற்ப நடப்பது உண்மையில் பெரிய வியப்புத்தான். அதற்கு இந்த நிலத்தின் தகவமைப்பே இன்றியமையாத காரணம்.

தமிழர்களின் மனிதகுல வளர்ச்சியில் வேளாண்மை புத்தாக்கம் பெற மருத நிலம் இன்றியமையாதது. அதற்கு முன் வேளாண்மை நடந்தாலும் நீர் தேக்கி வைத்து நடக்கும் வேளாண்மை இருந்த சான்றுகள் இல்லை. மருத நிலம்தான் நீரைத் தேக்கி வைத்து வேளாண்மை நடைபெறும் இடம். வேளாண்மைக்கும், மனிதர்களின் வாழ்விடத்திற்கும் இடங்கள் கையாளப்படும் போது மேய்ச்சல் நிலம் குறைவது இயல்பாகிவிட்டது. ஆனால் சங்க காலத்தில் ஐந்திணைகளில் பாலை என்ற ஒரு நிலம் மட்டும் பல்வேறு உயிரினங்களுக்கு மேய்ச்சல் நிலமாக இருப்பதைக் காண முடிகிறது. இடையர்களின் ஆடு மாடு மட்டுமின்றி, செந்நாய், பன்றி, யானை, காட்டுப் பூனை, புலி, மான் போன்ற விலங்குகளைப் பற்றியக் குறிப்புப் பாலை நிலத்தில் தான் உள்ளது. பாலை என்றால் பாலைவனம் என்று பொருள் கொள்வது தவறு. பாலை என்றால் வெப்பமிகுந்த காடு என்று பொருள். பாலை நிலத்தின் சிறப்புக் கோடைக் காலம். பாலைத்திணையில் வரும் பாடல்களில் சுரம் என்று சொல்லாடல் உள்ளது. சுரம் என்றால் காடு என்பது பொருள். உண்மையில் சங்ககாலத்தில் குறிஞ்சி, முல்லை தவிர்த்து இந்நிலம்தான் மாபெரும் மேய்ச்சல் நிலமாக இருந்துள்ளது.

இடையர்கள் தங்கள் ஆடு மாடுகளைப் பாலைத்திணை சார்ந்த நிலத்தில் மேய்ப்பதைக் குறிக்கும் செய்திகள் உள்ளன. பாலை நிலத்தில் ஆடு மாடுகளுக்காக இடையர்கள் ஊற்றுத் தோன்றியதைக் குறிக்கும் செய்திகள் உள்ளன. இங்குதான் சங்ககாலத்தில் கிடை இருந்ததற்கான சான்றைச் சங்கப் பாடல்களின் வழியாகக் காண முடிகிறது.

மேய்ச்சல் நிலத்தின் மாபெரும் கூறே பருவத்திற்கேற்ப வலசை போவதுதான். உலக அளவில் எல்லா மேய்ச்சல் இனக்குழுவிடமும் இருக்கும் ஒன்றுதான். தமிழ்நாட்டில் வலசை போவதோடு கிடைபோடும் பண்பாட்டுக் கூறுகளில் அவர்கள் புழங்கும் மொழி நாம் நெருங்கி ஆராய வேண்டும்

ஒரு மொழியின் கூறுகள் உண்மையில் இது போன்ற ஒவ்வொரு வட்டாரம் சார்ந்த இடங்களில்தான் செழுமையாக இருக்கும். மாலையில் சேர்த்துவிட்டுக் கிடை வயலில் வந்து அடையும் ஆடுகளும் மாடுகளை மறுநாள் மேய்ச்சலுக்கு ஓட்டிப் போகும் வரை ஓர் இரவு அமர்த்தி வைத்திருப்பார்கள். அப்படி ஒரு வயல் விட்டு மறு வயலுக்கு ஆடுகளையோ மாடுகளையோ மாற்றிக் கிடை அமர்த்துவதைக் கிடையைத் தலை பெயர்த்துப் போடுதல் என்று சொல்வது அவர்கள் வழக்கம். இரவில் ஆண்கள் கிடையிலிருந்து காவல் காக்கப் பெண்கள் வலசையில் (தங்குமிடம்) இருப்பார்கள். பெரும்பாலும் இந்தத் தங்குமிடம் ஊர் சார்ந்த பகுதியில் இருக்கும்.

“அவரோ வாரார் முல்லையும் பூத்தன்
பறியுடைக் கையர் மறி இனத்து ஒழியப்,
பாலொடு வந்து, கூழொடு பெயரும்,
யாடுடை இடைமகன், சென்னிச் சூடிய எல்லாம்,
சிறுபசு முகையே” குறுந்தொகைப் பாடல் (221)

கார்காலத்தில் முல்லை பூத்துவிட்டது. இடையன் தன் தலையில் முல்லை மொட்டுக்களைக் கோர்த்துச் சூடியுள்ளான். கார்காலம் வந்ததும் முல்லை பூத்துவிட்டது. இடையர்கள் மழைக்காலத்தில் தலையில் போட்டுக்கொள்ளும் பனையோலையால் செய்யப்பட்ட பறியோடு வலசை வந்து பாலைக் கொடுத்துவிட்டு, கூழை வாங்கிக்கொண்டு கிளம்புகிறான். அவன் தலையில் முல்லை முட்டுக்களை சூடியுள்ளதாகப் பாடுகிறது இப்பாடல்.

கிடையில் ஆடுகளைக் காவல் காத்து விட்டுக் காலையில் வலைக்குள் வரும் இடையர், எழுந்ததும் ஆட்டிலோ மாட்டிலோ பாலைக் கறந்து கொண்டு வந்து

வலசையில் கொடுத்துவிட்டு, உணவருந்திவிட்டுத் தனக்கான மதியை உணவை வாங்கிக்கொண்டு ஆடுகளையோ மாடுகளையோ மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வது இன்றுவரை உள்ள வழக்கு. அதையா? அப்படியே காட்சிப்படுத்துகிறது இந்த சங்கப் பாடலான குறுந்தொகைப் பாட்டு. இதுதான் ஒரு மக்களை அதன் மரபோடு பொருத்திப் பார்க்கும் இடம்.

இதையே ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு நீண்ட வலசை போன ஓர் இடையன் நெடுநாட்களாக வீடு வந்து சேராத காரணத்தில் வீட்டில் தவித்திருக்கும் இடையனின் மனைவி, தன்னோடு வந்து உணவருந்திவிட்டுப் போகுமாறு எண்ணுகிறாள். விளா மரங்களின் கனி பழுத்துப் புளிப்புச் சுவையுடையதாக மாறிவிட்டது. செம்மறி ஆட்டின் நிறத்தை ஒத்த தயிரில், கொல்லையில் விளைந்த வரகைக் குத்தி, புற்றில் இருந்த ஈசலை சேத்து சமைத்த சுடு சோற்றில் செவலைப் பசுவின் வெண்ணெய் உருகி ஓட அதை ஆடு மாடு மேய்ப்பவர் சாப்பிட, பின்னர் நீயும் சாப்பிட்டுப் போக ஒரு நாள் வீட்டிற்கு வந்து போவாயாக என்று பாடுவதாக உள்ளது இந்தப் புறநானூற்றுப் பாடல்.

“களவும் புளித்தன் விளவும் பழுநின்
சிறுதலைத் துருவின் பழுப்புறு விளைதயிர்
இதைப்புன வரகின் அவைப்புமாண் அரிசியொடு
கார்வாய்த்து ஒழிந்த ஈர்வாய்ப் புற்றத்து
ஈயல்பெய்து அட்ட இன்புளி வெஞ்சோறு

சேதான் வெண்ணெய் வெயபுறத்து உருக
இளையர் அருந்தப் பின்றை, நீயும்
இடுமுள் வேலி முடக்காற் பந்தர்ப்
புதுக்கலத்து அன்ன செவ்வாய்ச் சிற்றிற்
புனையிருங் கதுப்பின்நின் மனையோள் அயரப்

பாலுடை அடிசில் தொடீஇய ஒருநாள்
மாவண் தோன்றல்” அகநானூறு 394 (வரி 1- 12)

கிட்டத்தட்ட இந்த வாழ்வியலில் இன்று அப்படியே ஒத்துப்போகும் ஒன்றாக உள்ளது. ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு போகிற ஒரு இடையன் தனித்து விடப்படும்போது வீட்டில் உள்ள மனைவி ஒரு நற்சோறு செய்தால் கூடக் கணவன் கூட இருந்தால் நன்றாக இருக்கும் என்று ஏங்குவதைக் காணலாம். ஆடு மாடுகளை ஓட்டிக்கொண்டு வலசை போகும் இடையர்கள் பெண் இல்லாமல் தங்களுக்குள் காச்சும் கஞ்சியைக் கைக்கஞ்சி என்று குறிப்பிடுவார்கள்

அப்படி ஆடு மாடுகளையும் பார்த்துக்கொண்டு தனக்கான உணவையும் செய்து சாப்பிடும் காலம் உருவாவது இயல்பு. இடையர் வீட்டுப் பெண்கள் கார்காலத்தில் ஆடு மாடுகளை விட்டு ஊர் வந்து வேளாண்மை செய்யும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். அப்படியான சூழலில் தனித்திருக்கும் தன் கணவரை எண்ணி நோகுதல் இயல்பான ஒன்று. இன்றைய சூழலோடு ஒரு சங்கப்பாடல் ஒத்துப்போவது என்பது சிறப்பான ஒன்று. இதே பாடலில் கீழே உள்ள அடிகளானவை கிடையைப் பற்றிக் குறிப்பதாக உள்ளதைக் காணலாம்.



“வந்தனை
சென்மோ - காடுறை இடையன் யாடுதலைப்
பெயர்க்கும் மடிவிடு வீளை வெரீ இக்
குறுமுயல் மன்ற இரும்புதல் ஒளிக்கும்
புன்புல வைப்பின்எம் சிறுநல் ஊரே” அகநானூறு 394 (வரி 12- 16)

கால்நடை வளர்ப்பில் பட்டி முறை, கிடை முறை, தொழு முறை என்ற மூன்று வகை உள்ளது. தொழு என்பது மாடுகளைக் கார்காலத்தில் மட்டும் அடைத்து வைக்கப் பயன்படும் இடம். எந்நேரமும் ஈரமாக இருக்கும். பட்டி முறை எங்கும் மேய்ச்சலுக்காகப் புலம்பெயராமல் உள்ளூரிலே ஆடுகளை வைத்து ஓரிடத்திலே வளர்ப்பது. இங்கெல்லாம் ஆடுகளையோ மாடுகளையோ இடம் பெயர்த்துப்போடும் வழக்கம் இல்லை

ஆனால் கிடையில்தான் அப்பழக்கம் உண்டு. கிடை மாலையில் ஓரிடத்திலும் காலையில் ஓரிடத்திலும் ஆடுகளைத் தலை பெயர்த்துப் போடும் வழக்கம் உண்டு.

கூடவே இரவில் ஆடுகள் ஒரே இடத்தில் அடைந்து படுத்துக் கொள்ளும் என்பதற்காக அவற்றைக் கிளைத்துப் பெயர்த்துப் போடுவது இடையரின் இயல்பான வேலை. ஒருநாள் கிடை அடைந்ததும் மறுநாள் கிடைக்கு வலையைப் பெயர்த்து அடிக்கனும் என்ற சொல்லை இயல்பாகவே புழங்குவார்கள். ஆடுகளை அதட்ட மடக்க இடையர்கள் இன்றளவும் வேறுபாடுடைய ஒலிகளை எழுப்பிக் கட்டுப்படுத்துவது இயல்பு. அதில் சீத்திச் சத்தம் இயல்பானது. அதையே இப்பாடல் வீளை என்று புழங்குகிறது.

இன்றளவும் ஆடு மாடுகளோடு காட்டில் வாழக்கூடிய வாழ்க்கையை இடையர்கள் மேற்கொள்கிறார்கள். காடு என்றால் அடர்ந்த மரம் வளர்ந்த காடு மட்டுமன்று, வயற்காடு, பிஞ்சைக்காடு போன்ற காடுகளைக் குறிக்கும் சொல் இது. ஆய்வாளர் பலர் குறிஞ்சிக்கும் மருதத்திற்கும் இடையில் வாழ்ந்ததால் இடையர் என்று சொல்லுவதாகக் கூறுகிறார்கள். மேய்ச்சல் நிலத்திற்காக வலசை போகும் இடையர் வாழ்வில் இரண்டு நிலத்திற்கு இடையில் மட்டும் வாழ்ந்தார்கள் என்பது ஏற்புடையதாயில்லை. உண்மையில் காட்டு வாழ்க்கையும் இல்லாத வீட்டு இல்லாமல் இரண்டு வாழ்வுக்கும் இடைப்பட்ட வாழ்வைத்தான் இடை வாழ்வாகும். அதுதான் இன்றளவும் கிடைகளில் நடக்கும் நிகழ்வு. எப்போதும் காடு மட்டுமே சார்ந்து வாழாமல், வீடு, குடும்பம் என்றான பின்னும் நிலைத்த வாழ்வை வாழ இயலாமல் ஆடு மாடுகளுக்காகவோ பாதி நிலை பெற்றும் பாதி நிலைபெறாமலும் வாழும் வாழ்வையே இடையர் வாழ்வாகும். அதற்காக இவர்களை நாடோடி என்று குறிப்பிட வேண்டி தேவையுமில்லை. ஈரானிய, துருக்கிய, ஆப்கானிய மக்களின் வாழ்வதைக் காட்டிட ஆங்கிலத்தில் Nomadic என்பதை அப்படியே மொழி பெயர்த்து நாடோடி என்றாக்கி இடையர் வாழ்வை அரை நாடோடி என்று சொல்வது ஏற்புடையதன்று.

மேலும் சங்க இலக்கியம் தொடங்கிப் பள்ளு இலக்கியம் வரை எங்குமே இடையர்களை நாடோடி என்ற சொல்லால் குறிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் மராட்டிய நிலத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வாகிரி மொழி பேசும் குருவிக்கார சமூகத்தோடு ஒப்பிடுவதாக இருக்கலாம். குருவிக்கார சமூகம் இன்றுவரை வரை கூட நிலைபெறாமல் ஓடிக்கொண்டிருப்பவர்களைக் குறிக்க நாடோடி என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. அதே சொல்லை இடையர்களுக்குப் பயன்படுத்துவது ஏற்புடையதன்று. நாடோடி வாழ்வு தவறான வாழ்வும் இல்லை. அஃது இடையர்களுக்குப் பொருந்தாது. இடையர்கள் கலப்பை கொண்டு வேளாண்மை செய்ததைச் சங்க இலக்கியப் பாடல்கள் காட்டுகின்றன.

அப்படி நாடோடி என்ற சொல்லால் குறிப்பிட்டால் இடையர்கள் வேறு எந்த நிலத்திலிருந்தோ வந்தவர்கள் என்ற பொருளில் கூட பிற்காலத்தில் அடையாளப்படுத்தப்பட வாய்ப்புள்ளது. இடையர்கள் போவது பாரம்பரிய வலசை. ஒரே தடத்தில் சென்று அதே தடத்தில் திரும்பி வருவது. இந்தியாவில் கிட்டத்தட்டப் பத்து வகையான மேய்ச்சல் இனக்குழுக்கள் தங்களுக்கென்ற தனித்துவ பண்பாட்டு அடையாளங்களோடு வாழ்ந்து வருகிறார்கள். அவர்களை அப்படியே அவர்களின் அடையாளங்களோடு வாழ விடுவதில் தான் கால்நடை வளர்ப்பின் முக்கியத்துவம் உள்ளது. எந்தவொரு தொழிலிலும் அதன் பண்பாட்டு மூலக்கூறுகளை விட்டு விலகும்போது சிதைவுக்குள்ளாகும்.

உண்மையில் ஓரிடத்தில் நிலைபெறாமல் ஓடிக்கொண்டிருக்கும் வாழ்வு மேலை நாட்டினருடைய பழங்குடி வாழ்வு. இடையர் என்ற சொல்லே போதுமானதாக இருந்தாலும், இன்றைய சூழலில் இடையர்கள் வலசையோடிகள் என்றுதான் அடையாளப்படுத்த வேண்டும். இடையர்களுக்கென்று வீடு இருந்ததைப் பின்வரும் சங்கப் பாடல்கள் பாடுகின்றன. கூடவே காட்டில் ஆண் மட்டுமே ஆநிரைகளைக் காப்பதைக் குறிக்கிறது. அதே கோவில் பெண்கள் வீட்டிலிருந்து ஏங்குவதையும், வீடு தேடி வருவோர்க்கு உணவு விருந்து தருவதையும், நிலைபெற்ற வீட்டோடு இருந்ததையும் பின்வரும் பாடல் குறிக்கிறது.

"வேறு புலம் படர்ந்த ஏறுடை இனத்த்
வளை ஆன் தீம்பால் மிளை சூழ் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்,
பலம் பெறு நசையொடு பதிவயின் தீர்ந்த நும்
புலம்பு சேண் அகலப் புதுவிர் ஆகுவிர்" மலைபடுகடாம் (அடி 408- 412)

ஒரே பாடலில் இடையரின் வீடு இருப்பதையும், அதில் வேறு இடத்தில் இருக்கும் ஆடு மாடுகளில் கறந்து வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட பாலினை அன்போடு இடையர் வீட்டுப் பெண் உண்ணக் கொடுப்பாள் என்பதை மேலே உள்ள பாடல் பாடுகிறது.

"பகர் விரவு நெல்லின் பல அரியன்ன
தகர் விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென கடத்திடைக் கடலின் இரைக்கும்
பல் யாட்டு இன நிரை எல்லினிர் புகினே,
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்" மலைபடுகடாம் (அடி 413- 417)

அதே சூழலில் செம்மறியாடுகளோடு வெள்ளாடும் கலந்த ஆட்டுக்கூட்டங்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றால் இடையர் தங்களுக்கென்று வைத்திருந்த பாற்சோற்றைக் கொடுப்பார்கள் என்பதை மேலே உள்ள பாடல் பாடுகிறது. பல்யாட்டு இன நிரை என்று செம்மறி, வெள்ளாடு என்ற இரண்டும் கலந்து இருப்பதைக் குறிக்கிறது. இன்றளவும் கிடை ஆடுகளின் செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் கலந்து இருப்பது கண்கூடாகப் பார்க்கலாம். அது மட்டுல்லாமல் கொடி ஆடுகளை மட்டுமே வைத்துத் தனிக் கிடை போட்ட பழக்கமும் இடையர்களிடம் இருந்துள்ளது. இப்போதும் தங்கள் கிடையில் செம்மறியும் வெள்ளாடுகளும் கலந்திருப்பதைக் காணலாம்.

"வையகம் பனிப்ப வலன் ஏர்பு வளைஇ,
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்,
ஏறுடை இன நிரை வேறு புலம் பரப்பிப்
புலம் பெயர் புலம்பொடு கலங்கிக் கோடல்
நீடு இதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ,

மெய்க்கொள் பெரும் பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள் புடையூஉ நடுங்க" (நெடுநல்வாடை 3-8)

இடையர்கள் கார்காலம் தொடங்கி புது மழை பெய்ததும், பலவாகிய நிரைகளான ஆடு, மாடு, எருமை போன்றவற்றை ஓட்டிக்கொண்டு வேறு இடம் வேறு புலத்திற்குப் போவதைப் பாடுகிறது. அப்படி வேறு இடம் புலம் பெயர்ந்த பின்னர் குளிருக்காகத் தீக்கடைக்கோலில் தீமூட்டிக் குளிர் காய்வதைக் குறிக்கிறது. இன்றளவும் கார்காலம் தொடங்கிவிட்டால் வேறு நிலம் போவது கிடைப் போடும் மக்கள் மட்டுமே,

ஆடுகளையோ மாடுகளையோ தொழு அல்லது பட்டி முறையில் வளர்க்கும் மக்கள் போவதில்லை.

"பறி, ஓலை, மேலொடு கீழா, இடையர்
பிறியோலை பேர்த்து, விளியா, கதிப்ப,
நரி உளையும் யாமத்தும் தோன்றாரால்"

(திணை மாலை நூற்றம்பைது 113)

கிடையில் பனையோலையால் செய்யப்பட்ட பறியைத் தோளில் போட்டுள்ள ஓர் இடையர் இரவில் ஆடுகளைப் பிரிக்கும் பொருட்டுப் பிறிவோலையை ஆட்டி ஒதுக்குகிறார். அந்தச் சத்தத்தில் ஆடுகளைக் கொல்ல எண்ணிய நரிகள் பயந்து ஓடுவதாகப் பாடல் பாடுகிறது.

திணை மாலை நூற்றைம்பதில் கார்காலத்தைக் குறிக்கும் இப்பாடலில் சொல்லப்படும் காட்சி இன்றளவும் இடையரின் கிடைகளில் நடக்கும் அன்றாட நிகழ்வு

பிறிவோலை என்றால் பனங்குருத்தோலையை வெட்டி எடுத்து அதனை இடை இடை விட்டுக் கிழித்தால் கிடைப்பது

அதனை இன்றளவும் குட்டிகளை ஆட்டிடம் இருந்து பிரிப்பதற்கு இடையர்கள் பயன்படுத்துகிறார்கள். அந்த ஓலையை ஆட்டும் போது அதில் வரும் சத்தத்தால் குட்டிகள் ஆட்டை விட்டுப் பிரிந்து நிற்கும். அதைத்தான் இப்பாடல் குறிப்பிடுகிறது.

"வான் எனப் பூத்த பானாட் கங்குல்
மறித் துரூஉத் தொகுத்த பறிப் புற இடையன்" (அகநானூறு 94 (3-4)

யாமத்து இருளில் இடையன், ஆட்டுக்குட்டிகளை ஒரு சேர தொகுத்தான் ஓலைப் பாயாற் செய்யப்பட்ட குடலையை முதுகிற் போட்டுக்கொண்டான்

"தொடுதோல் மரீஇய வடு ஆழ் நோன்அடி,
விழுத்தண்டு ஊன்றிய மழுத்தின் வன் கை,
உறிக் கா ஊர்ந்த மறுப்படு மயிர்ச்சுவல்,
மேம்பால் உரைத்த ஓரி, ஓங்கு மிசைக்
கோட்டவும் கொடியவும் விரைஇக் காட்ட"

(பெரும்பாணாற்றுப்படை 169-173)

செருப்பு விடாமல் அழுத்தியதால் வடு ஆழ்ந்த வலிமையான அடியினையும், பசுக்களுக்கு வருத்தம் செய்யும் தடியை உடைய கோடரித் தழும்பு இருந்த வலிய கையினையும், இரண்டு பக்கங்களிலும் உறியினையுடைய காவடிக் கம்பு மேலே இருந்ததால் உண்டாகிய தழும்பு நிறைந்த மயிருடைய தோளினையும்.

"பல்பூ மிடைந்த படலைக் கண்ணி,
ஒன்று அமர் உடுக்கைக் கூழ் ஆர் இடையன்
கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி,"

(பெரும்பாணாற்றுப்படை 174-176)

பல பூக்களைத் தலையில் தொகுத்த இடையன், கன்று விரும்பும் ஆநிரைகளோடு காட்டில் தங்கியிருப்பைத் காட்டுகிறது இப்பாடல்.

"………………… மறிய
குளகு அரை யாத்த குறுங்கால் குரம்பைச்
செற்றை வாயில் செறிகழிக் கதவின்,
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பின்,
அதளோன் துஞ்சும் காப்பின் உதள,
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றில்,
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கும்
இடுமுள் வேலி எருப்படு வரைப்பின்," (பெரும்பாணாற்றுப்படை 147-154)

ஆட்டுக்குட்டிகள் தின்னுவதற்காக அவற்றிற்கு ஏற்ற இலைகள் கட்டப்பட்ட குறிய கால்களையுடைய குடிசையின் சிறு தூறுகளையுடைய வாயிலையும், மரக்கம்புகளால் செய்த கதவினையும், வரகுக் கற்றையால் வேய்ந்த மரக்கம்புகளை மேல்பகுதியில் கொண்ட சேக்கையில் தோல் படுக்கையில் படுப்பவன் வசிக்கும் காவல் உடைய இடத்தையும், கிடாய்களைக் கட்டிய நெடிய கயிறுகளைத் தொடுத்த குறிய தறிகளை உடைய முற்றத்தில், வளைந்த முகத்தையுடைய செம்மறி ஆட்டுடன் வெள்ளாடுகள் கிடக்கும், இட்ட முள்ளினையுடைய வேலியினை உடைய ஊரில் இருந்த இடையர் வாழ்வைப் பற்றிப் பாடுகிறது இப்பாடல்.

இவ்வாறாகக் கிடை சார்ந்த வாழ்வு சாங்க இலக்கியத்தில் காணப்படுகிறது. கூடவே சங்க இலக்கியச் சொல்லும் இப்போது இடையர்கள் கிடையில் புழுங்குகின்ற சொல்லும் ஒன்றிப்போவதைக் கண்டுணர முடிகிறது. சங்க இலக்கியத்தில் கிடை என்ற சொல் நேரடியாக இல்லாவிட்டாலும், கிடை சார்ந்த வாழ்வும் அதன் கூறுகளும் இருப்பதை வைத்துச் சங்க இலக்கியத்தில் கிடை இருந்ததை உறுதி செய்யலாம்.

மேய்ச்சல் நிலப் பழமொழிகள்

மேய்ச்சல் நிலத்தை இன்றுவரை உயிர்ப்போடு வைத்திருப்பதில் முக்கியப் பங்காற்றும் மக்களிடையே உள்ள மேய்ச்சல் நிலப் பழமொழிகளைக் கண்டறிந்து தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு தொழில் சார்ந்த இடத்திலும் பலநூறு பழமொழிகள் கொட்டிக்கிடக்கின்றன. ஒரு மொழிக்கு வளம் சேர்க்கும் இடத்தில் இது போலான சொலவடைகள் பெரும்பங்கு ஆற்றுகின்றன. இவற்றை உயிர்ப்போடு வைத்திருப்பது நமது கடமை. அதற்கு மேய்ச்சல் நில வாழ்வை நாம் உயிர்ப்போடு வைத்திருக்க வேண்டும். மேய்ச்சல் நிலத்தில் இதுபோன்ற பல சொலவடைகளைப் புழங்கி இன்று வரை உயிர்ப்புடன் வைத்திருக்கும் மேய்ச்சல் நிலம் சார்ந்த மாந்தர்களுக்கு நன்றி!

1. கெட்ட எடையனுக்கு எட்டாடு- ஆடுகளை வெள்ளத்தாலும் நோயினாலும் பாதிக்கப்பட்ட இடையர்களுக்காக மற்ற இடையர்கள் தானமாக ஆடுகள் வழங்குவதைக் குறிப்பது. ஒவ்வொரு கிடையிலும் ஒன்று இரண்டு என்று ஆடுகளை இனாமாகக் கண் கொடுக்கும் பொருட்டு உருவான பழமொழி, எந்த உடைமையில்லாமல் இருந்தாலும் எட்டு ஆடுகள் இருந்தால் கூட ஒரு குடும்பம் தன்னிறைவாக வாழலாம்.

2. மனுசனுக்கு ஒரு வயிறு, ஆட்டுக்குத் தேகமெங்கும் வயிறு - செம்மறி ஆடுகள் அல்லும் பகலும் மேய்ந்து கொண்டே இருக்கும் பழக்கமுடையதைக் கூறும் பழமொழி.
3. மாட்டுக்கெடைக்கு மறு வருசம் பலன், ஆட்டுக்கெடைக்கு அப்பவே பலன் - மாட்டின் எரு அடர்த்தியாக இருக்கும் அது மக்கி வேளாண்மையில் பலன் கொடுக்க ஒரு ஆண்டு ஆகும். ஆனால் ஆட்டின் எரு சிறு சிறு புழுக்கைகளாக இருப்பதால் உடனே மக்கி கிடை வைத்த அதே ஆண்டில் பலன் கொடுக்கும்.
4. வாழ்ந்தாட்டுப்பாலும், செத்தாட்டுக் கறியுந்தேன் இடையனுக்குச் சொந்தம் - இடையர்கள் பொதுவாகத் தாங்கள் வளர்க்கும் கிடை ஆடுகளை உணவுக்காக வெட்டி உண்பது கிடையாது. ஆனால் அவை நோயாலோ, இன்ன பிற காரணங்களாலோ இறந்தால் அவற்றின் கறியை உப்புக்கண்டமாக்கி உண்பார்கள். அதேபோல் ஆட்டின் பாலை மட்டும் பயன்படுத்துவார்கள். குலதெய்வத்திற்கு நேந்துவிடுவது தவிர வேறு எந்தக் காரணத்திற்கும் தாங்கள் வளர்க்கும் ஆடுகளை வெட்டி உண்பதில்லை. ஆடு மாட்டில் வேறேதும் தங்களுக்குச் சொந்தமில்லை. அடுத்த தலைமுறைக்குக் கடத்திவிட்டுச் சொல்வதையும் குறிக்கும்.
5. ஆடுக ஊடாடாம, காடு வெளையாது - ஆட்டுக் கிடை போடாமல் வேளாண்மை விளையாது என்று கிடையின் சிறப்பைச் சொல்லும் பழமொழி.
6. ஊரானுக்கு எத்தனை புள்ளை இருந்தாலும், எடையனுக்கு முன்ன போறதெல்லாம் புள்ளை – ஆடு மாடுகளை முன்னே விட்டுப் பின்னே ஓட்டுவது இடையர் வழக்கம். பின்னாடி இருந்தே தங்கள் சத்தத்தால் முன்னாடி செல்லும் ஆட்டினையும் மாட்டினையும் கட்டுக்குள் கொண்டு வருவதையும், ஒவ்வொன்றும் தங்கள் பிள்ளைகளைப் போலப் பாவித்து வளர்ப்பதையும் குறிப்பது.
7. காட வீடானு கேட்டா, எடையனுக்குக் கால்நடைதான் வாழ்க்கை - காடு வீடு எதையும் பொருட்படுத்தாமல் ஆடு மாடுகளுக்காக வாழும் இடையர்களின் வாழ்வைக் குறிக்கும் பழமொழி
8. வரப்பைத் தலையணை, வயலே பஞ்சுமெத்தை - எப்போதும் ஆடு மாடுகளுக்காகவே வாழும் இடையர்கள் காட்டிலும் மேட்டிலும் அலைந்து திரிந்தாலும் வயலைப் பஞ்சாகவும், வரப்பைத் தலையணையாகவும் நினைத்துக் கொண்டு படுத்துறங்கி வாழ்வதைக் காட்டும் பழமொழி.
9. ஆடு போன பாதையில ஆளு போகலாம், மாடுக போன பாதையில வண்டி போகலாம் - ஆடுகளும் மாடுகளும் குவியலாக ஓட்டினால் அவை நடந்து போன காட்டில் புதிய பாதை உருவாகும்.
10. பல்லாக்குல தூக்கி வச்சாலும், எடையன் புத்தி ஆட்டுக் காலுக்குள்ள - இடையரை எந்த உயரமான சொகுசான இடத்தில் வைத்தாலும் அவரால் ஆடு மாடுகளை விட்டு இருக்க முடியாது என்பதைக் குறிப்பது.
11. நல்ல மாட்டுக்குச் ஒரு சூடு- மாடுகளின் நோய் தாக்குதலில் காப்பாற்றச் சூடு போடும் பழக்கத்தைக் குறிப்பது.
12. கலம் பால் கறந்தாலும், கன்னு முதலுக்கு ஈடாகாது - முன்பு பொதுவாக இடையர்கள் பால் விற்பனையில் ஈடுபடத் தில்லை. நம் நாட்டு மாடுகள் மிகையான பால் கறப்பதில்லை. நாட்டு மாட்டின் பாலிலிருந்து கிடைக்கும் இலாபத்தைவிட நாட்டு மாட்டுக் கன்றில் மிகை இலாபம் கிடைக்கும் என்று நாட்டு மாடுகளின் சிறப்பைச் சொல்லும் பழமொழி

13. குடம் பால் கறந்தாலும், கூறைய புடுங்குற மாடு வேணாம் - எப்போதும் அதிகமான இரை எடுக்கும் மாட்டையும், அடங்காமல் திரியும் மாட்டையும் குறிக்கும் பழமொழி
14. தழைய தழைய வால், தழும்ப தழும்ப பால் - வால் நீளமாக இருக்கும் மாடுகள் பால் நிறைய கறக்கும் என்பதைக் குறிக்கும் பழமொழி
15. இடையன் கொழுத்தாலும், இடையன் கெடை நாய் கொழுக்காது - கிடை காக்கும் நாய் இரவும் பகலும் கண் விழித்து ஆடு காக்கும். கொழுத்துப்போனால் கிடையை ஒழுங்காகக் கிடை காக்காது என்பதைக் குறிக்கும் பழமொழி. கிடையைக் காத்துக் காத்து நாய்கள் விரைப்பாக இருக்கும் என்பதைக் குறிப்பது.
16. வாலாட்டி நின்னா, காலாட்டி சாப்பிடலாம் - எருமையும் பசுவும் இருந்தால் காலாட்டி சாப்பிடலாம் என்பது பொருள்.
17. ஆட்லயும் ஊட்டுவான், குட்டிலயும் ஊட்டுவான் - வரையறை இல்லாமல் வாழும் மனிதர்களைக் குறிப்பது. ஒழுக்கமின்மையைக் குறிப்பது.
18. மாடு நல்லமாடுதான், சுழிதான் கெட்டசுழி - மாட்டின் சுழியால் விற்பனையாகாத மாட்டைக் குறிப்பது.
19. வெள்ளாட்டுக்கும் வெள்ளாமைக்கும் சென்ம பகை - வெள்ளாடு மேஞ்சா செடிகள் துளிர்க்காது என்பதைக் குறிக்கும் பழமொழி.
20. ஆடுடா வெள்ளாமை, அறை வெள்ளாமை - ஆட்டுக் கிடை போடாமல் செய்யும் வேளாண்மை விளையாது என்பதைக் குறிக்கும்.
21. தொப்புள் நனைஞ்சாதான் சேறு - டெல்டா சேற்று உலை வயல்களில் தெக்கத்திமாடுகள் தன் வயிறு சேறாகும்படி உழ வேண்டும்.
22. தெய்வம் கெடுத்தாலும், தெக்கத்திமாடு கெடுக்காது - தெக்கத்தி மாடுகளான உம்பளாச்சேரி மாடுகள் அதை நம்பி இருப்பவர்களைக் கைவிடாது என்பதைக் குறிப்பது.
23. கப்பல்ல போய் சம்பாரிக்குற காச, கன்னுமாட்ல சம்பாரிச்சிடலாம்- தெக்கத்தி மாடு ஈனும் காளைக் கன்றுகளைத் தரமாகப் பார்த்து வாங்கி சோடி சேத்து வளர்த்தால் நல்ல வருமானம் வரும் என்று சொல்லும் தஞ்சை வழக்கு.
24. தெக்கத்தி மாட்டுப்பால்ல பொட்டு வச்சி திருவாலூர போய்ட்டு வந்துடலாம் - உம்பளச்சேரி மாட்டுப்பால் அடர்த்தியாக இருக்கும் என்பதைக் குறிப்பது. இதன் பாலைத் தொட்டுப் பொட்டு வச்சிட்டு திருவாரூர் போய்ட்டு வந்தாலும் நெற்றியில் வைத்தப்படி இருக்கும் என்றும் சொல்வார்கள்.
25. மூத்தது மோளை, இளையது காளை- தலைச்சன் ஈத்தில் பிறக்கும் கன்றுகளைப் பொலிக்காக வளர்க்காமல் வண்டிமாடுகளாக ஆக்கவேண்டும் அடுத்தடுத்த ஈற்றில் கிடைக்கும் கன்றுகளையே பொலிக்காகத் தேர்தெடுக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லப்படும் வழக்கு.
26. ஆனை வயிரு நிறைந்தாலும், ஆட்டு குட்டி வயிரு நிறையாது - செம்மறி ஆடுகளுக்கு எவ்வளவு மேய்ந்தாலும் வயிறு நிறையாது என்பதைக் குறிக்கும் பழமொழி.
27. இடையன் செய்றத மடையனும் செய்யான் - இடையன் ஐந்நூறு ஆயிரம் ஆடு மாடுகளைக் காக்கும் அருஞ்செயலை வேறு யாராலும் செய்ய முடியாது என்பதைக் குறிக்கும் பழமொழி.
28. நொண்டி ஆட்டுக் கிடை பெருகும், நல்லாட்டு கிடை மருகும்- நொண்டி ஆடுகள் இருக்கிற கிடைதான் நன்கு பெருகும் என்று இடையர்களால் நம்பப்படுவதைக் குறிக்கும் பழமொழி.

29. இடையனுக்குப் பொடதில கண்ணு- காடுகளில் ஆடு மாடு மேய்க்கும் போது கொடிய ஆடுகளும் மாடுகளும் பரந்து விரிந்து மேயும். அப்போது அவைகளைக் கண்காணிக்கும் பொருட்டு இடையர்களுக்கு எல்லாப் பக்கமும் கவனம் இருக்கும் என்பதைக் குறிப்பது. கொடிய விலங்குகள் போன்றவைகளால் ஏற்படும் ஆபத்தைத் தன்னுடைய பட்டறிவால் கண்டுகொள்வதைக் குறிப்பது. கேலிச் சொல்லாகவும் பார்க்கப்படுகிறது.
30. தானம் கொடுத்த ஆட்டை, பல்லைப் புடிச்சுப் பார்க்கக்கூடாது- ஆடு அழிந்து போன பின்பு மற்ற இடையர் இனமாகக் கொடுத்த ஆட்டையோ மாட்டையோ பல்லைப் பிடித்துப் பார்க்கக்கூடாது என்பதைக் குறிக்கும் பழமொழி.
31. மேயிறது காடா இருந்தாலும், அடையிறது இனமா இருக்கனும்- இனத்தோடு கூடி வாழ வேண்டும் என்பதைக் காட்டும் பழமொழி.
32. ஆட்டைப் போல குட்டி, மாட்டைப் போல கன்னு – ஒன்றின் குணத்தைப் போல ஒன்று இருப்பதைக் காட்டும் பழமொழி.
33. படிச்சுப் பாழா போறதவிட, ஆடு மேச்சா ஆளாப் போகலாம்- கல்வியை விட ஆடு மாடு பெருஞ்செல்வம் என்று நம்பிய காலத்தில் சொல்லப்பட்ட பழமொழி.
34. எக்கோலம் போனாலும், இடைக் கோலம் போகாதே - ஆடு மாடு மேய்ப்பது அவ்வளவு சிரமமான வேலை என்பதைக் காட்டும் பழமொழி.
35. இடையன் பொழப்பு நாப்பொழப்பு - எந்நேரமும் ஆடுகளுக்காக அலைந்து திரிந்து வாழ்வைக் குறிப்பது.
36. மூலி ஆடு, முழு வாழ்வு - காது சுருண்டு இருக்கும் ஆடுகள் கிடையில் இருந்தால் நல்லது என்ற நம்பிக்கையில் சொல்லும் பழமொழி.
37. வித்தாடு பெருகும், செத்தாடு அருகும் - ஆடுகள் நோய் வாய்ப்படுவது எளிதான ஒன்று. அப்படி நோய்வாய்ப்பட்டு ஆடுகள் இறந்து போனாலும் அதற்குப் பதிலாகக் கிடையில் உள்ள ஆடுகள் ஒன்றுக்கு இரண்டாகப் பலுகும். நோய்வாய்ப்பட்ட ஆடுகளை உடனே விறாகாமல் அதன் கடைசி மூச்சுவரை இடையர்கள் பண்டுவம் செய்வார்கள். அப்படியும் இறந்து போனால் செத்தாடு பெருகும், வித்தாடு அருகும் என்று நம்பிக்கை கொள்வார்கள்.
38. ஒன்னு போனா ரெண்டா வரும் - ஆடுகள் குவியலாக இறந்து போகும் சூழல் வரும்போது சொல்லும் நம்பிக்கைக்கான சொல்.
39. ஆட்சிக்கி ஆட்டப்பாரு, அப்பறம் ஆடு மேக்க ஆளப்பாரு - ஆட்சியாடு, ஆட்சி மாடு என்ற சொல் இடையர்களில் கிடைகளில் புழங்கப்படும் சொல். கிடை போட வாங்கிச் சேர்க்கும் ஆடு மாடுகளுக்கு ஆட்சியாடு, ஆட்சி மாடு என்று பெயர். ஆடுகளையும் மாடுகளையும் வைத்து ஆளும் முறையைக் குறிக்கும் சொல். ஒன்றை வாங்குவதற்கு முன்னரே விலை பேசக்கூடாது என்பதைக் குறிக்கும் சொல்.
40. கோனாங் கோலெடுக்கையில, வெசத்திட்பத்துக்கு மருந்த வெரல்லயே எடுத்துபோவனும் - இடையர்கள் ஆடு மாடு மேய்க்கும் போது, அவைகளுக்கு ஏற்படும் நஞ்சுகடி, நோய்களுக்கான மருத்துவத்தை அறிந்து வைத்திருப்பர் என்பதைக் குறிக்கும் சொல்.
41. கால்ல ஒட்டுன சாணியும், வாயில பட்ட பாலுந்தே இடையனுக்குச் சொந்தம் - மாட்டுக் கிடையில் சொல்லும் பழமொழி. மாடு மேய்த்து அதை அப்படியே அடுத்த தலைமுறைக்கு ஒப்படைக்கும் இடையர்களுக்கு பாலும் சாணி மட்டும் தனக்கானது என்று சொல்லிக்கொள்வது வழக்கு.

42. எட்டுரு தள்ளிப் போனாலும், எடையனுக்கு ஆட்டுச் சத்தம் கேட்குமாம் - இடையர்கள் ஆடுகளைக் குவியலாக வைத்திருந்தாலும் எந்த ஒரு ஆடு காணாமல் போனாலும் எளிதாக அடையாளம் கண்டு விடுவார்கள் என்பதைக் குறிக்கும் பழமொழி
43. மேயுற மாட்டை, நக்குற மாடு கெடுத்துச்சாம் - மாடுகள் நாவறட்சி கொள்ளும்போது, தாது உப்புச் சத்துக் குறையும்போது அடுத்த மாட்டினை நக்கும் குணமுடையவை.
44. நோஞ்ச மாட்டுல ஈ ஓட்டனும் - நோஞ்ச மாடுகளை இயல்பாகவே ஈக்கள் கடிக்கும் பழக்கமுடையவை. ஈக்களை ஓட்டினாலே மாடு பாதி குணமுடையும்.
45. நூத்தக் கெடுக்கமா குருனி- நூறு மாட்டில் ஒரு மாடு சோடையா இருந்தாலும் கிடையோட நலன் கெட்டுவிடும் என்பதைக் குறிப்பது.
46. நாலு மடத் தண்ணி ஒரு குண்டுல பாஞ்சா, நாலு வெதைத் தானியம் வரனும்- மாட்டின் நான்கு காம்புகளிலிருந்து பீச்சப்படும் பால், ஒரு செம்பில் விழுந்து, பால், தயிர், வெண்ணெய் மற்றும் மோர் ஆவதைக் குறிக்கும் சொல்.
47. கோடையில ஆடுக காதடிச்சா, எடையனுக்குக் கொண்டாட்டம் - ஆடுகள் மழையில் நனைந்தால் உடம்பைக் குளிக்கி காதை ஆட்டும் அப்போது இரண்டு காதும் உரசும் போது ஒலி வரும். அதுபோல மழை வருவதை உணர்ந்த ஆடுகள் காதுகளை அடித்துக்கொண்டால் சடசடவென சத்தம் வரும். அப்படி கோடையில் ஆடுகள் காதடித்தால் மழை வந்து பெய்யும். அப்போது புற்கள் முளைக்கும் என்பதைக் குறிக்கும் பழமொழி.
48. ஆடு மாடு இல்லாதவன் அடை மழைக்கு இராசா... புள்ள குட்டி இல்லாதவன் பஞ்சத்துக்கு இராசா - இருப்பதிலே மழைகாலத்தில் ஆடு மாடுகளை காப்பதுதான் சிரமமான செயல். அப்படியான சூழலில் ஆடுகளையும் மாடுகளையும் வைத்து பராமரிப்பதை மறைமுகமாக குறிக்கும் பழமொழி.
49. ஆட்டுக்கும் மாட்டுக்கும் உசுரு அதோட வாயில - ஆடும் மாடும் அசைப்போடுவதை நிறுத்திவிட்டால் இறந்துவிடும். அசைப் போடாமல் இருந்தால் ஆடு மாடும் நோயில் உள்ளது என்பதை எளிதாகக் கண்டுகொள்ளலாம்.
50. கொண்டிக்குக் கொண்டி சோடி- மாட்டுக் கிடையில் இரு மாடுகளைப் புனைந்துவிடுவது வழக்கம். அடங்காத மாட்டோட இன்னொரு அடங்காத மாட்டைச் சேர்த்து புனைவதைக் குறிப்பது.
51. ஏழு ஈத்து ஈன்ட ஆட்டை, கன்னிப்பிருவை முட்டுச்சாம்- அனுபவம் வாய்ந்த மனிதனுக்கு அறைகுறை மனிதன் அறிவுரை சொல்லுவதைக் குறிப்பது.
52. ஆடுற மாட்டை ஆடிக் கறக்கனும், பாடுற மாட்டைப் பாடிக் கறக்கனும் - கிடையில் மாடுகளைப் படிப்பது அவ்வளவு எளிதல்ல. ஆனால் இடையர்கள் மாடுகளைப் பிடிக்க அழகர் வர்ணிப்பு போன்ற பாடல்களைப் பாடி மயக்கிப் பால் கறப்பது கட்டுவதும் நடக்கும். ஒரு மனிதனின் குணமறிந்து செயல்பட வேண்டும் என்பதை மறைமுகமாகக் குறிப்பது.

மேய்ச்சல் நிலக் கலைச்சொற்கள்

ஒரு மொழியின் செம்மார்ந்த வடிவம் அம்மக்களின் பண்பாட்டு மற்றும் வட்டார வழக்கிலிருந்து உருவாகிறது. தமிழ் மொழி உயிர்ப்போடும் செழுமையோடும் இருக்க வட்டார வழக்கு இன்றியமையாத கூறாக நெடுங்காலமாக இருந்துவருகிறது. அதனாலே தான் தமிழில் யானைக்கு மட்டும் 37 தனித்தனி சொற்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். மேய்ச்சல் நிலத்தின் பண்பாட்டுக் கூறுகளும் அப்படியான ஒன்றுதான். இன்னும் முழுமையாகக் குமரி முதல் வேங்கடம் வரை ஆராய்ந்தால் இன்னும் பல அரிய தூய தமிழ்ச் சொற்களை இனம் காணலாம். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் பல சொற்கள் சங்க இலக்கிய காலத்திலிருந்து மக்களிடை புழக்கத்தில் இருப்பவை. இதில் உள்ள பல அரிய கலைச்சொற்கள் ஏற்கனவே குளம்படி நூலில் வந்திருந்தாலும், இன்னும் ஆராயப்பட வேண்டும். கீழே உள்ள மொழிச்சொற்ளை நெடுங்காலமாகப் புழங்கும் மேய்ச்சல் நில மக்களுக்கு இவ்வாய்ப்பின் மூலம் நன்றி கூறிக்கொள்கிறேன்.

வலசை - இடையர்கள் தங்கியிருக்கும் பனை ஓலையால் நிறைந்த இடம். கவைக் கம்புகள் ஊன்றி அதன் மேல் குட்டி அடைக்கப் பயன்படும் கூட்டைத் தூக்கி வைத்து அதனைச் சுற்றிப் பனை ஓலை நிறைந்திருக்கும். குடியானவர்கள் அதாவது நிலை சென்றவர்கள் இருப்பது குடிசை. வலசெய் என்பது வலம் செய்யக்கூடியவர்கள் இருப்பது. எப்போதும் வலசைத் தடத்தை மையப்படுத்தி வாழ்பவர்கள். வலசை என்ற சொல்லைப் புழக்கத்தில் இன்று வரைப் பயன்படுத்துவது இடையர்களே.

கோன்- இடையர்களின் தலைவன். கீதாரி- என்ற சொல்ல புழக்கத்தில் வருமுன் கோன் என்ற பெயரே இருந்தது.

கூடு - இளங்குட்டிகளை அடைக்கும் பனையோலை மற்றும் மூங்கில் கம்புகளால் செய்த கூடு. இதைச் சிலர் குடாப்பு என்றும் சொல்வர். சிலர் கூண்டு என்றும் சொல்வர். கூண்டு என்றால் எப்போது அடைத்து வைக்கப்படும் சிறை போன்ற இடம். எ.கா: பறவைக் கூண்டு. ஆதலால் கூண்டு என்பது ஏற்புடையதல்ல. குடாப்பு என்பதைவிடக் கூடு என்பதுதான் பொருத்தமான பெயர். பறவைகள் தங்களுக்கான கூடு செய்வதைப்போல இடையர்கள் தமக்கான கூட்டைச் செய்வர்.

பறியோலை - குட்டிகளை ஆட்டிலிருந்து பிரிக்கப் பயன்படும் காய்ந்த குருத்தோலை. பனை மட்டையுடன் கூடிய இவ்வோலையை ஆட்டும் போது எழும் சத்தத்தில் குட்டிகள் தானாக ஆட்டிலிருந்து பிரிந்து கொள்ளும்.

விரிவோலை - ஒரு பனைவோலையை இரண்டாகக் கிழித்தால் கிடைப்பது சிறகு. அதனை வளைத்து மட்டையோடு கட்டினால் அதற்குப் பெயர் விரிவோலை. இவ்விரியோலையை வைத்தே குட்டி அடைக்கப்படும் கூடும் வலசையும் நிறையப்படும்.

வலசைக்கூடை - ஓர் இடையர் குடும்பம் தங்கும் இடத்தில் மிக முக்கியப் பங்கு வகிப்பது வலசைக்கூடை. இது முழுவதும் மூங்கிலால் செய்யப்பட்ட கூடை. இது குறவர்களால் செய்யப்பட்ட கூடை. இதனை வாங்கி வரும் இடையர் அதை வலுப்படுத்த பனை நாரை வைத்து அடிபோட்டு கூடவே சாணி மொழுகுவார்கள்.இடையர் வீட்டுச் சீரில் மிக முக்கியப் பங்கு வகிப்பது இவ்வலசைக்கூடை. ஒரு வலசைக்கூடை ஒரு தலைமுறை தாண்டி கூட வரும். வலசைக்கூடை ஆடுகளை ஓட்டிப் பயணம் போகும்போது சுமைகளைத் தூக்கிச் செல்ல உதவும்.

கைக்கம்பு - ஆடு மேய்க்கப் பயன்படும் மூங்கில் கம்பு

தொரட்டி - ஆடுகளுக்குத் தழை வளைத்துக் கொடுக்கப் பயன்படும் மூங்கிலால் ஆனது.

பிருவை - செம்மறி ஆட்டின் இளம் பருவம்- குட்டிக்கும் ஆட்டுக்கும் இடைப்பட்ட பருவம்.

ஆடு - இரண்டு குட்டி அதற்கு மேல் ஈன்றது

கன்னிப் பிருவை - தலையீத்துப் பிருவை.

குறாள் - வெள்ளாட்டில் குட்டிக்கும் ஆட்டுக்கும் இடைப்பட்ட பருவம்.

கிளிக்கொம்பாடு - வெள்ளாட்டின் கொம்பு நீண்டு வளைந்து நுனி மட்டும் உள்பக்கமாக வளைந்து இருப்பது.

பள்ளையாடு - தஞ்சைப் பக்கம் உள்ள குள்ளமான நாட்டு வெள்ளாடுகளை இடையர்கள் இவ்வாறே அடையாளப்படுத்துகிறார்கள். அதாவது பள்ளமான மருத நிலத்தில் வாழும் நாட்டாடுகள்.

கராமரையாடு - மயிலம்பாடி செம்மறி ஆட்டின் காலில் வரும் கருப்புக்குப் பதிலாக வெள்ளையாக வரும் மரை. இவையே நாட்டு கண் கருப்பு இராமநாதபுரம் வெள்ளை ஆடுகளும் நெல்லூரைப் பூர்வீகமாகக் கொண்ட மயிலம்பாடி ஆடுகளும் இனக் கலப்பு ஏற்பட்டதற்கான சான்று. இம்மறை தொடை, அடி வயிறு போன்ற இடங்களில் இருக்கும்.

கராத்தாளி ஆடு - செம்மறி ஆட்டின் கழுத்தில் தொங்கும் இரண்டு நீளமான தாளியால் இப்பெயர்.

பட்டணம் கருவி ஆடு, மயிலம்பாடி - நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக இராமநாதபுரம் இடையர்கள் அளவில் உயரமான நெல்லூர்க் கிடாய்களை வாங்கி வந்து இராமநாதபுரம் நாட்டு வெள்ளை ஆடுகளில் விட்டதில் விளைவாக இராமநாதபுரம் வெள்ளை ஆடுகள் முழுவதும் மாறி எல்லாமே நெல்லூர் ஆடுகளைப்போல நிறத்திலும் உயரத்திலும் மாறிவிட்டன.

தடுக்கு - கோரையால் செய்யப்பட்ட இடையர்களின் படுக்கை.

பாங்கு - கிடை வயலில் இடையர்கள் கிடை காக்க ஒதுக்கப்படும் இடம். அதோடு மூன்று நான்கு துண்டு ஆடுகள் ஒன்றாக அடையும்போது ஒவ்வொரு துண்டு ஆட்டிற்கும் ஒதுக்கப்படும் இடம். காலையில் மேய்ச்சலுக்கு ஓட்டுவதற்கு முன் ஆடுகள் அவற்றின் பாங்கில் தானாகவே சென்று நிற்கும்.

துண்டு - ஒன்றாகக் கிடை அடையும் ஆடுகளில் ஒருவரின் நூற்றுக்கு மேற்பட்ட ஆடுகள். குறைந்தது நூறில் இருந்து இருநூறு வரைகூட இருக்கும்.

கிடை - ஓர் இரவில் ஆடுகளையோ மாடுகளையோ வேளாண் நிலத்தில் அடையை வைத்து அவற்றின் கழிவுகளை நேரடியாக வேளாண் நிலத்ததிற்கு இடும்முறை. இவ்வகையிலே ஆடுகளும் மாடுகளும் மேய்ச்சல் நிலம் தேடி வலசை போகும்.

பட்டி - இம்முறை எல்லாக் காலத்திலும் ஒரே இடத்தில் எங்கும் புலம்பெயராமல் அடைத்து வைத்து மேய்க்கும் முறை. இம்முறையில் ஓர் ஊரில் இருக்கும் மேய்ச்சல் நிலத்தை மட்டுமே நம்பி இருக்கும். முழுவதும் மேய்ச்சலை மட்டுமே நம்பி வாழும். இவைகளைக் கட்டுவது கிடையாது. இம்முறையே உலகம் முழுதும் மிகையாக உள்ளது.

தொழு - இம்முறையில் பாதி நேரம் மேயச்சலிலும், பாதி நேரம் கட்டியும் கிடக்கும். பெரும்பாலும் உணவு அவை கட்டியிருக்கும் இடத்திலே கொடுக்கப்படும்.

பரணிமுறை - எப்போதும் அடைத்தே வைக்கப்பட்டுத் தீனி வழங்கப்படும் முறை.

அரியாடு - உடம்பில் எந்தக் கருப்பும் இல்லாத, செம்பழுப்பு நிறத்தில் இருக்கும் செம்மறி ஆடுகள். இவைகள் கொங்கு மண்டலத்தின் பூர்வீக மேச்சேரி ஆடுகள்.

வெளிச்சையாடு - இராமநாதபுரத்தின் பூர்வீக ஆட்டில் ஒரு வகை. இவ்வகை ஆட்டின் உப்பு முழுவதும் பழுப்புக் கலந்த வெள்ளை நிறத்தில் இருக்கும். ஆனால் கண்ணாய் பட்ட, தொடையில் மெல்லிய கருப்புச் சில இடங்களில் மட்டும் இருக்கும்.

தளத்தாடு - இடையர்களின் ஆடுகள் பேரிழப்பு நடந்தபின் கிடை போடுவதற்காக வீட்டில் வளர்க்கும் ஆடுகளை ஓட்டி வந்து கோடைக் காலத்தில் கிடை போட்டுவிட்டுக் கார்காலத்தில் ஆட்டின் உரிமையாளரிடம் ஒப்படைக்கும் முறை.

பள்ளிக்கிடை - விடிந்ததிலிருந்து ஆடுகள் மேயச் செல்லுமுன் ஆடுகளைத் காக்கும் முறை. இடையர் வீட்டின் சிறுவர்களே இம்முறைக்குப் பழக்கப்படுத்தப்படுவார்கள். ஆடுகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்த இக்கிடை உதவும்.

அந்திக் கிடை - ஆடு மாடுகளை மாலையில் கிடை வயலில் அடைத்தபின் அந்தி நேரத்தில் காக்கும் முறை.

இராக்கிடை - இரவில் ஆடுகளையும் மாடுகளையும் கிடை வயலில் காக்கும் முறை.

கிடை வயல் - ஆடுகளோ மாடுகளோ இரவில் அடையும் நிலம்.

இளங்கொடி - நஞ்சுக்கொடியை இடையர்கள் இவ்வாறு சொல்கிறார்கள். இதுதான் நல்ல பொருளுடைய பெயரும் கூட. குழந்தை கருவில் வளர்க்கும் இளங்கொடியில் எவ்வாறு நஞ்சு இருக்கும்.

தெக்கத்திமாடு - கீழ் தஞ்சைப் பகுதியில் உள்ள உம்பளாச்சேரி மாட்டினைத் தெக்கத்தி மாடு என்று அழைப்பது வழக்கம்.இம்மாடுகள் கார்காலத்தில் வலசை போவதில்லை.

வடக்கத்தி கெடை மாடு - தஞ்சைக்கு வடக்கே உள்ள கிடை மாடுகளை, திருவண்ணாமலை மலை மாடு என்றும் வடக்கத்தி மாடு என்றும் அழைப்பது வழக்கு. இவை வலசை போகும் பண்புடையவை.

வாங்கருவாள் - ஆடுகளுக்கு மயிர் அறுக்கப் பயன்படும் அரிவாள்.

ஆந்துதல் - ஆடுகளை அடிப்பது போல் பாவனை காட்டுதல்.

மயிலக்குறா - கருப்பும் செவளையும் அடர்ந்த நிறத்தில் இருக்கும் வெள்ளாட்டங் குறாள்.

மலங்காடு - மலையின் அடிவாரத்தில் இருக்கும் கார்கால மேய்ச்சல் காடுகள்.

நத்துதல் - குட்டியை ஈன்றபின் குட்டியின் மேல் இருக்கும் அக்கியை ஆடு தனது நாவால் துடைப்பது.

மருகுதல் - குட்டியை ஈன்றபின் ஆடு ஓரிரு நாட்களுக்கு ஒரு விதமான வாயைத் திறந்து கத்தாமல் எழுப்பும் ஒலி.

முள்வாங்கி - ஆட்டின் காலில் உள்ள முற்களைப் புடுங்கப் பயன்படும் சிறு கருவி.

மடக்குக் கத்தி - மழைக்காலங்களில் ஆட்டின் கொறும்பைச் சீவிப் பார்க்கப் பயன்படும் கத்தி.

ஆட்சியாடு - ஒரு காலத்தில் ஆடுகளை முழுவதும் இயற்கைப் பேரிடர் அல்லது நோயினால் இழந்தவர்கள் மற்ற இடையர்களிடம் இரந்தோ அல்லது பணம் கொடுத்தோ வாங்கும் ஆடுகள். அவற்றை வைத்து ஆட்சி செய்வது என்று பொருள். மேய்க்க இயலாமையால் ஆடுகளை விற்கும் இடையர்கள் இப்படி ஆட்சிக்கு ஆடு வேண்டுவோரிடமே விற்பார்கள். கறிக்கு விற்பதில்லை.

பொந்தை - தாயாடுகளை இழந்த குட்டிகள் அல்லது தாயிடம் பால் இல்லாத குட்டிகள் வளர்ச்சி குன்றி முடி மட்டும் அடர்த்தியாக வளர்ந்து பொந்தையாக மாறிவிடும்.

பேத்தைக் குட்டி - மந்தையோடு வேகமாக நடக்காமல் சத்தற்று எப்போதும் பின்னாலே திரியும் குட்டி.

பொழுதுக்கால் - சூரியன் தோன்றும் கிழக்குத் திசை

கோடேறுதல் - மழை தாங்காது ஆடுகள் பசியில் இறக்கும் நிலைக்குச் செல்லுதல்

வழுக்குக் குட்டி - மயிர் முளைக்காத குறை மாதக் குட்டிகள்

லெக்கு - அடையாளம் காணுதல்

மீன் முள்ச்செடி - நீர் முள்ளிச் செடி

அகடம் பகடம் - திருட்டு, பொய் பேசுதல்

தாடி போடுதல் - வெள்ளாடு கால்களைத் தூக்கி வேலியில் போட்டு மேய்வது

மட்டப்புள்ள - பதின்ம வயதுப் பருவம்

மூட்டப் பிருவை - சினைப் பருவத்திற்குத் தயாராக இருக்கும் பிருவை.

தெளு - கஞ்சி அல்லது சோறு காய்ச்சுவது

காரச்சலம் - குருதியும் சலமும் கலந்த ஆட்டின் புண்ணில் வழியும் நீர்.

பருக்குதல் - புதிதாய்ப் பிறந்த இளங்குட்டிக்கு ஆட்டின் காம்பில் வாயை வைத்துச் சப்பிப் பால் குடிக்க வைப்பது. தாயில்லாக் குட்டிகளுக்கு வேறொரு ஆட்டைப் பிடித்துக்கொண்டு அக்குட்டியே பால் குடிக்கவிடும் முறை.

ஈரத்தி ஆடு - மழையில் நனைந்த ஆடுகள்

பொடசப்படுதல் - பொறாமைப் படுதல்

வங்கொலையா - தற்கொலை

செங்கமங்கல் - சூரியன் உதிக்கும் செந்நிறம் பொருந்திய அதிகாலைப்பொழுது.

ஓர ஒண்டு - வேளாண்மை செய்யப்பட்ட நிலத்தின் அருகில்.

சுப்பி - விறகை விடச் சிறியதாக இருக்கும் மரக்கிளையின் நுனிப்பாகம்.

பால் மதக்கம் - ஆட்டின் பால் அளவுக்கு அதிகமாக இருக்கும் சூழல்களில் மிகையான பாலைக் குட்டிக் குடித்துவிட்டு இருத்தல்.

கருத்தமரையாடு - முழுதும் கருப்பாக இருக்கும் ஆண்டால் எங்காவது சிறு இடத்தில் வயிற்றிலோ அல்லது காலிலோ வெள்ளை இருத்தல் அதற்கு மரை என்று பொருள்.

வெண்டளை ஆடு - முகம் முழுதும் வெள்ளையாக இருக்கும் செம்மறியாடு

இளங்குட்டி - புதியதாகப் பிறந்த குட்டி

மைக்கருவி ஆடு – தொடை, வயிறு, கால்கள் அடர் கருப்பு நிறத்திலும் உடம்பு நல்ல வெள்ளை நிறத்திலும் இருக்கும் நெல்லூர் மயிலம்பாடி ஆடு.

கொப்பாடு - சில பெட்டை செம்மறி ஆடுகளுக்குக் கொம்பு இருக்கும். அவைகளுக்குக் கொப்பாடு என்று பெயர்.

மோளைக்கிடா - கொம்பு இல்லது கிடா.

வரத்தாடு - வேறு ஊரிலிருந்து மற்ற ஊருக்கு கிடை போட வரும் ஆடுகள். வரத்தாடு என்று இடையர்கள் சொல்வதில்லை. கிடைத்தொழில் சாரா மக்கள் சொல்வதுண்டு.

கிடை அம்பலம் - கிடையின் தலைவனைக் குறிக்கும் சொல் திருநெல்வேலிப் பக்கம் புழங்கப்படுவது.

புட்டாணி - ஆடு மாட்டின் முதுகுப்புறத்தின் முடிவு.

காடறிதல் - ஓர் ஊரிலிருந்து மற்ற ஊருக்கு ஆடுகளை ஓட்டிப் பயணம் போகும் முன் அந்த ஊரைப் பற்றி ஆராய்வது.

பத்திக்கொண்டு போவது - ஆடுகளை ஓட்டிச் செல்வது.

சொமை ஏத்துதல் - ஆட்டிடையர்கள் வலசை போவதற்கு முன் தங்களின் உடைமைகளை ஏற்றிச் செல்வது.

மண்டை நாய் - இராமநாதபுரத்தைப் பூர்வீகமாகக் கொண்ட கிடை காக்கும் நாய். இவை மந்தை நாயை இடையர்கள் மண்டை நாய் என்று பேச்சு வழக்கில் சொல்வார்கள். இவை மந்தயைக் காக்கும் திறனுடையவை.

மடு - ஆடு மாட்டின் பாலுறுப்பு

ரோமம் - ஆடு மாட்டின் மயிர்.

குளம்படி - ஆடு மாடு போன்று பாலூட்டும் தாவர உண்ணிகள் நடந்து செல்லும் தடம்.

குளம்பு - ஆடு மாடுகளின் காலின் அடிப்பகுதியில் உள்ள வலிமையான பகுதி.

படுசாவு - ஆடு மாடுகள் தீடீரென்று துடித்துக்கொண்டு விழுந்து இறப்பது.

வாக்காணை - வாயில் வரும் கோமாரி நோய். கார்காலத்தின் தொடக்கத்தில் வரும்.

குதிரை வலிப்பு - ஆடுகள் படுத்துக்கொண்டு வலிப்பு நோயால் விரைத்துக்கொண்டு கிடக்கும்.

மாகை - ஆடுகள் பைத்தியம் பிடித்தது போல சுத்திச் சுத்தி ஓடும் நோய்.

செம்போர் ஆடு - வெள்ளாட்டின் நிறத்தைக் குறிப்பது. கொடி ஆட்டில் செம்பழுப்பு நிற புள்ளிகள் இருப்பின் அது செம்போர் ஆடு.

புளியம்போர் ஆடு - வெள்ளை பிறந்தோர் உன் புளியின் நிறமும் செவளை நிறமும் கலந்த நிறத்தில் இருக்கும் கொடியாடு

கரும்போர் ஆடு - வெள்ளை நிறத்தில் கருப்புப் புள்ளிகளைக் கொண்ட கொடியாடு.

இராயாடு அல்லது வரிக்கணை ஆடு - ஆட்டின் அடிவயிறு, காதுகளின் உள்பகுதி, கன்னாம்பட்டை போன்றவை பழுப்பு நிறத்திலும், மற்ற உடல் பாகங்கள் கறுப்பு நிறத்தில் இருக்கும் இராமநாதபுரத்தின் பூர்வீக ஆடு. அரசால் அடையாளப்படுத்தும் படாத ஆட்டு வகையினம். வெள்ளாட்டின் கன்னியாடு போலத் தோற்றம் கொண்டவை.

கம்பளை ஆடு - அணிலுக்கு இருக்கும் கோடு போல உடலின் நிறைத்தைக் கறுப்பிலும் பழுப்பிலும் கொண்ட இராமநாதபுரத்தைப் பூர்வுகமாகக் கொண்ட ஒரு வகை ஆட்டினம். இன்னும் பதிவு செய்யப்படாத ஆட்டினம்.

குத்துக்கால் கிடா - கால்கள் அழுத்தமாகத் திடமாக இருக்கும் கிடா.

தும்பு - வெள்ளாடுதளைக் கட்டிப்போடத் திரிக்கப்பட்டக் கயிறு.

கொண்டி மாடு - மாட்டுக் கிடையில் இடையர்களுக்கு அடங்காமல் திரியும் ஒரு சில மாடுகள்.

கொண்டிக்கட்டை - அடங்காத மாடுகளுக்குக் கழுத்தில் அவற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்த கட்டப்படும் கட்டை.

கிண்கிணி மணி அல்லது கொடலை மணி - ஆடு மாடுகளின் கழுத்தில் கட்டப்படும் மணி

மூங்கிப் படல் - ஆடு மாடுகள் அடைக்கப் பயன்படும் வேலி முறை.

செறகு - கூடு நிறைய வெட்டி வரும் பனைவோலையை இரண்டாக கிழித்தால் கிடைப்பது சிறகு.

நிறைதல் - இடையர்கள் தங்கும் வலசைக்காகக் கவைக் கம்பை ஊண்டி அதனைச் சுத்தி ஓலையை வைத்து நிறைவார்கள். வேய்தல் என்பது கூரையின் மேல் செய்வது. நிறைதல் என்பது பக்கவாட்டில் செய்வது.

சிம்பு - பனை மட்டையின் இளக்கப்பட்ட வடிவம்.

பர்கூர் மலைமாடு கிடைக்காரர்களின் கோரிக்கைகள்

நாங்கள் அந்தியூர் வட்டம், பர்கூர் மலைப்பகுதியில் நிரந்தரமாக வசித்து வருகிறோம். எங்களின் பூர்வீகம் மலைப்பகுதி ஆகும். இந்தப் மலைப்பகுதியில் மொத்தம் 33 குக்கிராமங்கள் உள்ளது. அதில் சுமார் 35 ஆயிரம் மக்கள் வாழ்த்து வருகிறோம். அதில் 20 ஆயிரம் வாக்காளர்கள் இருந்து வருகிறோம். இங்கு வாழும் மக்கள் அனைவரும் வானம் பார்த்த பூமியில் விவசாயம் செய்து வாழ்கிறோம். பர்கூர் மலைப்பகுதியில் வாழும் மக்கள் அனைவரும் வறுமைக்கோட்டுக்கு கீழ் இன்று வரை வாழ்ந்து வருகிறோம். எங்களின் வாழ்வாதாரம் விவசாயம் நிலம் மற்றும் மாடுகள் ஆடுகள் மேய்ப்பதாகும். பர்கூர் மலைப்பகுதி மக்களாகிய நாங்கள் வனத்தை நம்பி இருந்து வருகிறோம். நாங்கள் பர்கூர் வனப்பகுதில் பல நூற்றாண்டுகளாக பர்கூர் செம்மறை நாட்டு பசு கால்நடை இனங்களையும் பாரம்பரிய அறிவையும் பாதுகாத்து பயன்படுத்தி வருகிறோம். எங்கள் மலைபகுதியில் இயற்கை சூழலில் பராமரிக்கப்படும் பர்கூர் மலை மாடுகள், மலை எருமைகள், மலை ஆடுகள் அதே சூழலில் தொடர்ந்து பாதுகாக்க வேண்டியுள்ளது. அதற்க்கு வனம் முக்கிய பங்கு வகிக்கிறது. எங்களுடைய கால்நடைஇனங்களையும் பாரம்பரிய அறிவையும் அங்கீகரித்து தொடர்ந்து பாதுகாத்திட ஐக்கிய நாடுகள் சபையின் பல்லுயிர் பரவல் ஒப்பந்த நிபந்தனை 8-J (Article United Nations Convention) ன் படி வேண்டுகோள் விடுகின்றோம். பர்கூர் இனமாடுகளின் எண்ணிக்கை 1991 ல் ஒரு லட்சத்திற்க்கு மேலாக இருந்தது. இம்மாடுகள் நூறுக்கும் மேற்பட்ட கிடைகளில் பராமரிக்கப்பட்டு வந்தன. தற்பொழுது மாடுகளின் எண்ணிக்கை குறைந்து 25000 ஆக உள்ளது. மொத்த கிடைகள் 22 ஆக குறைந்துள்ளன. மாடுகள் 8 மாதங்களில் வனங்களில் மேய்ப்பதற்காக கிடைகளாக சேர்க்கப்படும். ஒவ்வொரு கிடையிலும் 300 முதல் 400 வரை மாடுகள் காணப்படும். சில பகுதிகளில் வனத்துறையினர் கூட்டு வனநிர்வாகத்திட்டத்தில் மரக்கன்றுகளை நட்டதால் மேய்ச்சலுக்கு தடைவிதித்து விட்டனர். இதனால் வனத்துறையினரின் கெடுபிடி தாங்க முடியாமல் பலர் மாடுகளை விற்றுவிற்றனர். இக்காரணங்களால் பர்கூர் இன செம்மறை மாட்டு ரகத்தின எண்ணிக்கை 30,000 குறைந்து விட்டது என்று தமிழ்நாடு கால்நடை பல்கலைகழக அறிக்கை மூலம் தெரிவிக்கப்படுகிறது. பர்கூர்இன மலைமாடுகள் வனத்தில் உள்ள மலைசரிவுகளில் மேய்ப்பதால் அதனுடைய இனத்தை காப்பாற்ற முடியும். இல்லை எனில் ஊர்ப்பகுதிகளில் மேய்ப்பதனால் இந்த இனமாடுகள் அழிந்து விடும்.

தமிழ்நாடுஅரசு பர்கூர் மலை காப்பு காடுகளை வனவிலங்கு சரணாலயம் அமைப்பதற்க்கு அரசாணை வெளிட்டதை அறிந்து இது குறித்து பிப்ரவரி மாதம் 25.2.2024 த் தேதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி அளவில் தாமைக்கரையில் அனைத்து கிராம மக்களின் ஆலேசனை கூட்டம் நடைபெற்றது. அதில் கீழ்க்கண்டவாறு தீர்மானங்கள் ஒருமனதாக கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இது குறித்து தாங்கள் தக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆவணம் செய்யுமாறு 33 கிராமம் பர்கூர் மலைவாழ் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

தீர்மானங்கள்

1. முக்கிய தீர்மானங்கள்: வன உரிமைச்சட்டம் 2006 ன்படி பாரம்பரியமாக (பட்டி) கிடைவைத்து மலையில் மாடுகளை மேய்ப்பதற்கு தொடர்ந்து அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். மாடு மேய்க்கும் காலமான ஆனி மாதம் முதல் மாசி மாதம் வரை கீழ்கண்ட இடங்களில் பட்டி அமைத்து மாடு மேய்ப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும். இடங்களின் பெயர் பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
2. பாரம்பரியமாக மலைகளில் நாங்கள் வணங்கி வந்த தெய்வங்களுக்கு குறிப்பிடப்பட்ட மாதங்களில் (ஆனி, ஆவணி, கார்த்திகை, மார்கழி, தை பங்குனி) சென்று வழிபாடு செய்து வர அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். தெய்வங்களின் இடம் விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
3. வனத்திலுள்ள கிராமங்களான தொள்ளி, சுண்டப்பூர், தம்மரெட்டி ஒன்னக்கரை, வேலாம்பட்டி, குட்டையூர், சோழகனை கத்திரிமலை ஆகிய கிராமங்களில் சாலை வசதி ஏற்படுத்த தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இதர தீர்மானங்கள்

4. வயதான பசு மாடுகளை எங்கள் குல வழக்கப்படி கடைசி காலம்வரை வாழ்ந்து உயிர்விட எங்களுக்கு வனப்பகுதியில் சுமார் 200 ஏக்கர் நிலம் ஒதுக்கி தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.
5. அபூர்வமாக அழிந்து போகும் நிலையில் உள்ள மூலிகை செடிகளை கிராமங்களை ஒட்டியுள்ள வனப்பகுதியில் 2-3 ஏக்கர் நிலம் ஒதுக்கி 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தில் சேர்த்து தருமாறு கேட்டுக்கொள்கிறோம். இதற்கு ஏற்ற இடங்கள் கிழக்கு மலை, மேற்கு மலை, வடக்கு மலை.
6. வனத்தில் உள்ள உன்னி செடிகளை அப்புறப்படுத்தி விட்டு அந்த இடங்களில் பாரம்பரிய மரங்களான மூங்கில், ஆச்சாமரம், உசிலைமரம், வேங்கைமரம், சாம்பிராணிமரம், ஜால்துமரம், ஆலமரம், எகவாரமரம் கிச்சரனமரம், நாவல்மரம், தடச்சரல், உடுப்பே கும்லா, ஜாதிக்காய், நெல்லிக்காய் பூஞ்சமரம், புளியமரம், விளாமரம், வில்வமரம், மாமரம், ஆகிய மரவகைகளையும் ஈஞ்சம்புல், பாளேபுல் நானேபுல், காரேகண்டேபுல் ஆகியவற்றையும் நட்டு பராமரிக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
7. பர்கூர் மலையில் பொது இடங்களில் உள்ள மேச்சல் இடங்களை மற்றும் புறம்போக்கு நிலங்களையும் தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் பயன்படுத்த தடை விதிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதனால் இந்த இடங்களை அண்டி இருக்கும் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதுகாப்பு கிடைக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
8. விவசாய உற்பத்தி பொருள்களை மலையில் இருந்து கீழே கொண்டு செல்லும் சமயம் செக்போஸ்ட் போன்ற இடங்களில் எந்த தடையும் இல்லாமல் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
9. ஈரோடு மாவட்டத்தில் பர்கூர் மலைப்பகுதியை பிளாஸ்டிக் இல்லாத பகுதியாக பிரகடனம் செய்யப்பட வேண்டும். எங்கள் பகுதியில் உள்ள அங்க அங்கே கிடைக்கும் காலி மதுபாட்டில்களை அப்புறப்படுத்த ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

10. பர்கூர் மலைப்பகுதியில் அரசு தொழில் நுட்பக் கல்லூரி அமைத்து இளைஞர்களுக்கு கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் அதற்கான வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்

பர்கூர் மலைவாழ் பொதுமக்கள்

மலைவாழ் பேடகம்பன லிங்கயத் முன்னேற்ற மலைச்சங்கம்,
தாமரைக்கரை, அந்தியூர் தாலுகா, ஈரோடு மாவட்டம் – 638501
வீரபத்திரன், செல் : 9489988553

தமிழ்நாடு பர்கூர் மலைப்பகுதிகளில் உள்ள வன தெய்வங்களின் மற்றும் மாடு பட்டிகளின் விபரம்

வ. எண்.	வனத்தில் உள்ள பட்டிகளின் விவரங்கள்	வ. எண்.	வனத்தில் உள்ள தெய்வங்களின் விவரங்கள்
1	கர்கேகண்டி (மபுட்டி பட்டி)	1	ஆஞ்சநேயர் கர்கேகண்டி
2	தொட்டு மடுவு	2	சுனுவார்த்தி பசுவேஸ்வரர்
3	சொனெட்டி	3	பெண்ணே பசுவேஸ்வரர்
4	பூதொட்டி	4	மாரியம்மன்
5	அரே கட	5	ஆல் மஜ்ஜன குட்டே
6	எருகனேட்டி	6	ரூக்கேல் முனியப்பா சுவாமி
7	பொஜவர்த்தி பட்டி	7	துர்க்கை அம்மன்
8	அன்னார் பட்டி மந்தை	8	அன்னார் எட்டி பசுவேஸ்வரர்
9	கெருக்கல் பட்டி	9	கெருநாத் பசுவேஸ்வரர்
10	கோபை பட்டி	10	தொட்டுநாத் பசவேஸ்வரர்
11	சித்தி மடுவு பட்டி	11	ஆல் மஜ்ஜன குட்டே சுவாமி
12	கொடகாடி பட்டி	12	பூஜை கடா சுவாமி
13	மல் படுக பட்டி	13	எத்துமலை பசுவேஸ்வரர்
14	கொடலட்டி பட்டி	14	மாதப்பா சுவாமி
15	எத்தமலை பட்டி	15	தொள்ளொட்டு மாரியம்மன்
16	உளுமடுவு பட்டி	16	மஞ்சு மலை மாதேஸ்வரர்
17	தாடிப்படுவு பட்டி	17	தாடிப்படுவு பசுவேஸ்வரர்
18	பாறை (அரை) பட்டி	18	காரையா பில்லையா சுவாமி
19	பேரல்லத பட்டி	19	ஜெடைருத்ரா சுவாமி
20	எத்திமரத பட்டி	20	கெத்து கெல் சுவாமி
21	ஏம்மெட்டி பட்டி	21	ஜீயப்பா மாதேஸ்வரா சுவாமி
22	கொங்கரெட்டி பட்டி	22	மாரியம்மன்
23	பசரெட்டி பட்டி	23	கொடி மாதப்பா சுவாமி
24	சேபன குழி பட்டி	24	பசுவேஸ்வரர் சுவாமி
25	சொரெட்டி பட்டி	25	கோட்டை முனியாப்பா சுவாமி
26	சொரமல்லை பட்டி	26	பேரு பசுவேஸ்வரர்
27	பாண்டி மத்தாப்பு பட்டி	27	சொரமல்லை பசுவேஸ்வரர்
28	காரே கொந்தி பட்டி	28	சித்தேஸ்வரா சுவாமி

29	கூலே மரத்து பட்டி	29	குத்துக் கெட்டு பசுவேஸ்வரர் தொல்லி பிரிவு
30	பொட்லட்டி பட்டி	30	குரு மாதப்பா சுவாமி
31	நவுனே மொடுவு பட்டி	31	ஆலனை மாரியம்மன்
32	பொட்பெட்டி பட்டி	32	பகவன் கட்டே சுவாமி
33	பாளை குழி பட்டி	33	சித்தேஸ்வரா குட்டே சுவாமி
34	தின்னெல்லி பட்டி	34	ரங்கசாமி சுவாமி
35	காரண்மலை பட்டி	35	பசுவேஸ்வரர்
36	கொடலட்டி பட்டி	37	ஒசஆடய்ய சுவாமி
37	நில போதை பட்டி	37	ஆதி மாதப்ப கண்டப்பூர்
38	எலந்த மரத்து பட்டி	38	போதைபசுவேஸ்வரர்
39	ஆச்ச மரத்து பட்டி	39	குசலைகல்லு சுவாமி
40	காரச மரத்து பட்டி	40	கெனவே பசுவேஸ்வரர்
41	பூ தெட்டி பட்டி	41	உடும்பு கெரெ பசுவேஸ்வரர்
42	கல்லெட்டி பட்டி	42	நேரில் கெரெ பசுவேஸ்வரர்
43	சீபனெட்டி பட்டி	43	பசுவன ஓல பசுவேஸ்வரர்
44	உடும்பே மரத்து பட்டி	44	எத்னோர மாதேஸ்வரா சுவாமி
45	பொட்டெட்டி பட்டி	45	குந்து கெட்டு பசுவேஸ்வரர்
46	நுக்கே மரத்து பட்டி	46	குந்து கெட்டு பசுவேஸ்வரர்
47	உள் போதை பட்டி	47	பர்கூர் கிரி மலை சுவாமி
48	வெளி போதை பட்டி	48	தாமரைக்கரை கிரி மலை சுவாமி
49	பாளே குழி பட்டி	49	தேவர்மலை கிரிமலை சுவாமி
50	குள்ளெட்டி பட்டி	50	கிரிமலை பெஜ்ஜில் பாளையம்
51	கெத்தகல் பட்டி	51	தேவர்மலை கெலதி வீரன் குட்டை சுவாமி
52	தோன் படுவு பட்டி	52	தேவர்மலை குக்குல்கேகல் மாரியம்மன்
53	மொட்ட கோபே பட்டி	53	தேவர்மலை ஜெடகெல் மாரியம்மன்
54	ஒரத்திக்கோம்பே பட்டி	54	தேவர்மலை ஜலக்க மடவு சுவாமி
55		55	காரண்பெட்டா பசுவேஸ்வரர் சுவாமி
56		56	லெக்கரை பசுவேஸ்வரர்
57		57	ஆதி பசுவேஸ்வரர் சுவாமி தாமரைக்கரை

கர்நாடகா மாநிலத்தில் உள்ள பட்டிகளின் விபரம்

1	மோரனூர் பட்டி	1	தெர்கன கோடு பசுவேஸ்வரர்
2	தெர்கன கோடு பட்டி	2	கும்பேஸ்வரர் பசுவேஸ்வரர்
3	எப்பாவுன மொட பட்டி	3	பசுவேஸ்வரர்
4	மூலம் பட்டி		
5	கொங்கன மடுவு பட்டி		
6	கல் மாத்தூர் பட்டி		
7	ஆலே சொப்பன எட்டி		
8	சாவுரஅணே எட்டி		
9	கொளகத அணை எட்டி		
10	ஒளேன் குந்தனை எட்டி		
11	குருபெல்லி மந்தை எட்டி		
12	கெள்ளா எட்டி		
13	ஒன்னுனுசை எட்டி		

தமிழ்நாடு மேய்ச்சல் சமூக சங்கங்களின் கூட்டமைப்பை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் உயர்திரு. பி.மூர்த்தி அவர்கள் தொடங்கி வைத்தார். உடன் மதுரை காமராசர் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் ஜெ.குமார், நபார்டு திரு.சக்திபாலன், திரு.விவேகானந்தன் ஆகியோர் உடன் இருந்தனர். (24.10.2022, மதுரை காமராசர் பல்கலைக்கழகக் கல்லூரி வளாகம்)

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026
(International Year of Rangelands and Pastoralists 2026)

“மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026” என அறிவிக்கும் தீர்மானம் நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையில் 15.03.2022 அன்று நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்தை மங்கோலியா என்ற நாடு முன்மொழிந்தது. இதற்கு இந்தியா உள்பட 102 நாட்களும் மற்றும் பன்னாட்டுக் கால்நடை ஆய்வு நிறுவனம் உள்பட 300-க்கும் மேற்பட்ட அமைப்புகளும் ஆதரவு அளித்தன.

வளங்குன்றா வளர்ச்சி குறிக்கோள்கள்படி 2030-க்குள் உலகில் வறுமையை எந்த வடிவிலும் தலை தூக்கவிடாமல் ஒழிக்க வேண்டும். நாட்டில் பசி, பஞ்சம் இல்லாது இருக்க வேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்குச் சாதகமாக மண்ணின் வளம் கூட்டி உற்பத்தித் திறனை அதிகரித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பல்லுயிர் பன்மயம் பாதுகாப்பு, பருவநிலை மாறுபாட்டிற்கு ஈடுகட்டுதல் போன்ற திட்டங்களுக்கு உறுதுணையாக மேய்ச்சல் நிலம் பாதுகாத்து இதனை நம்பி பாரம்பரிய முறையில் கால்நடை வளர்க்கும் கிடைக்காரர்களை ஆதரிக்க வேண்டும் என்று ஐ.நா. சபை கூறியுள்ளது. இதனைச் செயல்படுத்த உணவு மற்றும் வேளாண்மை அமைப்பிற்கு (Food and Agriculture Organization) வேண்டுகோளும் விடுத்துள்ளது.

பூமியின் நிலப்பரப்பில் சரிபாதியாக மேய்ச்சல் நிலங்கள் இருப்பதால் இவை மிகப்பெரிய சூழல் மண்டலம் ஆக விளங்குகிறது. எனினும் மேய்ச்சல் நிலங்கள் முறையாகப் பாதுகாக்கப்படாததால் பெரும் அழிவுக்கு உள்ளாகியிருக்கிறது. உலகெங்கிலும் இருக்கக்கூடிய மேய்ச்சல் நிலமானது 50 கோடி கிடைக்காரர்களின் வாழ்வாதாரத்திற்கும் உணவு பாதுகாப்பிற்கும் ஆதரவாக விளங்குகிறது. மேய்ச்சல் சமூகத்தினர் உற்பத்தி செய்யும் கால்நடைப் பொருட்கள் உலகெங்கும் வாழும் பல லட்சக்கணக்கான மக்களுக்குக் கிடைத்து வருகின்றன.

மேய்ச்சல் நிலத்தில் காணப்படும் புல், பூண்டு இவைகளை மேய்ந்து கிடைக்காரர்களுக்கு வாழ்வாதாரம் வழங்கும் கால்நடைகள் இயற்கையான முறையில் பராமரிக்கப்படுகின்றன. இதனால் சமுதாயத்திற்குத் தேவைப்படும் பால், இறைச்சி, முட்டை, உபரி பொருட்களாக ரோமம், தோல் போன்றனவும் கிடைக்கின்றது. நமது நாட்டில் 53 சதவீதம் பாலும், 74 சதவீதம் இறைச்சியும் கிடைகளிலிருந்து கிடைக்கின்றதாகக் கூறப்படுகிறது. இதன் மூலம் மக்களுக்கு மலிவான சுத்தமான புரதச்சத்து நிறைந்த உணவு கிடைக்கின்றது. உள்நாட்டு உற்பத்தியில் கால்நடைப் பொருட்கள் மூலம் 4.5 விகிதமாகவும் (4.5% GDP) இதில் கிடைகள் மூலம் மூன்றில் இரண்டு பங்காகவும் கணக்கிடப்படுகிறது. இதுதவிர பாரம்பரிய கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் ஜல்லிக்கட்டு, ரேக்ளா பந்தயம், உழவுத்தொழில், மாட்டு வண்டிகளுக்குத் தேவைப்படும் காளைகள் கிடைகளிலிருந்து பெறப்படுகின்றன. கிராமப்புறங்களில் 70 சதவீதம் மக்களுக்குப் பாரம்பரிய கால்நடை வளர்ப்பு மூலம் வேலை வாய்ப்பும் கிடைக்கின்றது.

இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட 202 கால்நடை இனங்களில் 75 இனங்கள் கிடைக்காரர்களிடம் காணப்படுகின்றன. இந்தியாவில் 1.3 கோடி கால்நடைகளைப் பராமரித்து வருகின்றனர். இவர்கள் 46 சமூகங்களைச் சார்ந்தவர்கள். தமிழ்நாட்டில்



தோடர், பர்கூர் லிங்காயாத், யாதவர், குறும்பக் கவுண்டர், வன்னியர் மற்றும் பிற சமூகத்தைச் சார்ந்தவர்கள் கிடைக்காரர்களாக உள்ளனர்.

கடந்த 60 ஆண்டுகளில் பாரம்பரிய மேய்ச்சல் நிலத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றம், மேய்ச்சல் நிலம் ஆக்கிரமிப்பு, மேய்ச்சல் அல்லாத பிற பயன்பாட்டிற்குப் பயன்படுத்துதல், கால்நடை செல்லும் நடைபாதை இடைமறிப்பு ஆகியன மேய்ச்சல் சமூகத்தினர் அனுபவித்து வரும் இன்னல்களாகும். மேய்ச்சல் சமூகத்தினர் பல்லுயிர் பெருக்கத்தை அதிகரிப்பதிலும் சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையிலும் மீதேன் வெளிபாட்டைக் குறைப்பதிலும், நீர்நிலைகளைப் பாதுகாப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறார்கள். வனத்திலுள்ள மரங்களைவிட புல்வெளி பகுதி கரிமத்தைக் கிரகித்து நிலத்திற்கு அடியில் இருத்திக் கொள்ளும் திறன் (carbon sequestration) அதிகமாக உள்ளதா நிரூபிக்கப்பட்டுள்ளது. மேய்ச்சல் நிலம் மூலம் பூமியில் மூன்றில் ஒரு பங்கு கரிமம் சேமிக்கப்படுகிறது. இது காலநில மாற்றத்தைத் தணிப்பதற்கும், பல்லுயிர் பெருக்கத்திற்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் உணவு பாதுகாப்பிற்கும் உதவியாயிருக்கும். மேய்ச்சல் முறையில் கால்நடை வளர்ப்பதற்கு மிக குறைவான எரிபொருளே தேவைப்படுகிறது. மேய்ச்சல் நிலம் இயற்கையின் உதவியால் சுயமாகவே தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது. மேயச்சல் நிலத்தில் மரங்களை நட்டு வனமாக மாற்றும் முறை உகந்ததல்ல எனக் கூறப்படுகிறது. மேய்ச்சலின் போது கால்நடைகள் நிலத்தின் மேல் பகுதியில் உள்ள புல் மற்றும் சிறு தாவரங்களை உண்பதால் காட்டுத் தீ ஏற்படாமல் தடுக்க உதவுகிறது. மேய்ச்சல் முறை கால்நடை வளர்ப்பு இயற்கைக்கு உகந்த உற்பத்தி அமைப்பாக இருப்பதோடு நிலையற்ற காலநிலை மாறுபாடுகளுக்கு இடையில் உற்பத்தி மற்றும் வளங்குன்றா வளர்ச்சிக்கும் சமநிலையை உருவாக்குகிறது.

நீடித்த மேய்ச்சல் முறை மற்றும் வளமான மேய்ச்சல் நிலங்கள் மூலம் கிடைக்கின்ற நன்மைகள் குறித்த செய்திகளை உலக அளவில் எடுத்துச் செல்வதிலும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதிலும் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டு 2026 முனைப்பாகச் செயல்படும். தற்போது மிஞ்சியுள்ள மேய்ச்சல் நிலங்களை வேறு பயன்பாட்டிற்குப் பயன்படுத்தாமலும், ஆக்கிரமிப்புகளை அடையாளம் பார்த்து அகற்றுவதிலும், பயன்படாத தரிசு நிலத்தில் மீண்டும் புல்வெளி உண்டாக்குவதிலும் முனைப்பாகச் செயல்பட உறுதி கொள்வோம். நமது பாரம்பரிய அறிவுடன் அறிவியல் தொழில் நுட்பத்துடன் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு வழிகோலுவோம்.

மேலும் விவரஙகளுக்கு:

1. மேய்ச்சல் நிலங்கள் மற்றும் கிடைக்காரர்கள் சர்வதேச ஆண்டிற்கு உதவும் தெற்கு ஆசியா நாடுகளின் கூட்டமைப்பு (IYRP Support Group for South Asia) இணையதளம் : www.iyrp.info
2. C/o. சேவா, 45, டி.பி.எம். நகர், விராட்டிபத்து, மதுரை-16. தொலைபேசி : 0452-2380082, செல்: 7708852334
3. தமிழ்நாடு மேய்ச்சல் சமூக கூட்டமைப்பு, காளையார் கோவில், சிவகங்கை மாவட்டம். செல் : 9677517899
4. தொழுவம் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், 8, Nabard – Mabif, மதுரை வேளாண்மைக் கல்லூரி வளாகம், மதுரை. செல்: 9843406111. www.thozhuvam.org
5. இந்திய மேய்ச்சல் நில மேலாண்மை சங்கம், C/o. இந்திய மேய்ச்சல் நில வன ஆராய்ச்சி நிறுவனம், ஜான்சி, உத்திரபிரதேசம்.
6. கிடைக்காரர்கள் மையம், மத்திய மீன், கால்நடை மற்றும் பால்வள அமைச்சகம், புதுடெல்லி.

வளங்குன்றாத மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் மூலமாக நிலச்சீரழிவு நடுநிலையை அடைய உலகளாவிய செயற்பாடுகள்

பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடும் பெருங்குழும உறுப்பினர்களுக்குப் பரிந்துரைகளுடன் கூடிய கொள்கைச்சுருக்கம்

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூக சர்வதேச ஆண்டு 2026இன் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் நிலச்சீரழிவு நடுநிலை செயற்பாட்டுக் குழுவால் தயாரிக்கப்பட்டது.

குறிப்பாக நிலச்சீரழிவு நடுநிலையை அடைவதற்காகவும் உள்ளூர் மற்றும் உலகளாவிய இலக்குகளை நிறைவேற்றுவதற்காகவும், மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினர் மதிக்கப்பட்டு ஆதரிக்கப்பட வேண்டும்.

உலகின் நிலப்பரப்பில் பாதிக்கும் மேற்பட்டவை மேய்ச்சல் நிலங்களாகும். இந்த நிலப்பரப்புகளும், அவற்றில் வாழ்ந்து அவற்றை நிர்வகிக்கும் மக்களும் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மனித குலத்திற்கான உணவு மற்றும் உணவின் முக்கிய ஆதாரமாக இருந்தபோதிலும் அவர்கள் உலகப் பொருளாதாரத்தின் கவனிக்கப்படாத குப்பைக்கிடங்காக உள்ளனர். மேய்ச்சல் நிலப்பிரச்சினை என்பதிலிருந்து வளங்குன்றாத மேய்ச்சல் நிலத் தீர்வு என்று அணுகுமுறையை மாற்றுவதற்கான நேரம் இது. வகைதொகையற்ற நிலையில் மேய்ச்சல் நிலங்கள் வேறு உபயோகத்திற்கு மாற்றப்படுவதைத் தடுக்கவும், அறிவுபூர்வமான கொள்கை மற்றும் சட்டங்களை இயற்றுவதற்கு உலக அளவில் உறுதியளிக்க வேண்டிய நேரமிது. மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துவதற்கும் வலுவான நிலச்சீரழிவு நடுநிலை இலக்குகளை நிர்ணயிப்பதற்கும், நிதி ஒதுக்குவதற்கும் உலகளாவிய ஒருமித்த கருத்தை அடைய வேண்டிய நேரமிது.

ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை, மேய்ச்சல் நிலங்களின் மேலாண்மை மற்றும் மேய்ச்சல் சமூகத்தினரின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்துவதற்காக 2026ஆம் ஆண்டை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினரின் சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது. இந்தப் பிரகடணத்தின் மூலம் ஐநா உறுப்பு நாடுகள், வளங்குன்றாத மேய்ச்சல் நில மேலாண்மையில் முதலீடு செய்யவும், பாழடைந்த நிலங்களை முண்பிருந்த நிலைக்குக் கொண்டு வரவும், மேய்ச்சல் சமூகத்தினரின் சந்தை அணுகல் மற்றும் கால்நடை விரிவாக்கச் சேவைகளை மேம்படுத்தவும், மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் வாழ்வியல் பற்றிய அறிவு இடைவெளிகளை நிரப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உலகின் நிலம் சார்ந்த இயற்கை மூலதனத்தைப் பராமரிப்பதற்காகப் பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடும் ஐ.நா பெருங்குழுமம் தீர்மானித்த நிலச்சீரழிவு நடுநிலை இலக்குகள் மற்றும் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் வாழ்வியலில் தீர்க்கப்பட வேணடிய செயல்களைத் தீர்மாணிப்பதற்காக, உலகெங்கிலும் உள்ள 320-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அடங்கிய IYRP ஆதரவு குழுவின் வல்லுநர்கள் மேற்கொண்ட ஒரு விரிவான அறிவியல் மதிப்பாய்வின் கண்டுபிடிப்புகளை இந்தத் தகவற்குறிப்புச் சுருக்கமாக விவரிக்கிறது.

பூமியின் நிலப்பரப்பில் பாதிக்கும் மேற்பட்ட பகுதியான மேய்ச்சல் நிலங்களில், மேய்ச்சல் சமூகத்தினர் பல்வகைப்பட்ட இயற்கை வளங்களுடன், மாறுபட்ட தட்பவெப்ப சூழல்களுக்கு ஏற்றவாறு தகவமைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மேய்ச்சலை தங்கள் வாழ்வியலாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். இன்றளவில் இரு

நூறு கோடிக்கும் அதிகமான மக்கள், மேய்ச்சல் வாழ்வாதாரங்கள், மதிப்பு சங்கிலிகள் மற்றும் உணவுகளை நேரடியாகவோ அல்லது மறைமுகமாவோ சார்ந்து உள்ளனர். மக்கள் மற்றும் சுற்றுச்சூழல் நலனுக்காக மேய்ச்சல் நிலங்களின் சூழலியலை நிர்வகிப்பதற்கு மேய்ச்சல் வாழ்வியல் மிகவும் சாத்தியமான வழியாக உள்ளது. மேய்ச்சல் வாழ்வியல், ஊட்டச்சத்து மிகுந்த பால், பால் பொருட்கள் மற்றும் இறைச்சியை உற்பத்தி செய்வதோடு, மேய்ச்சல் மற்றும் விளை நிலங்களில் மண்ணை வளப்படுத்துதல், கரிமம் பிடிப்பு, விதைகளைப் பரப்புதல், நிலப்பரப்புகளை வடிவமைத்தல், ஆற்றுப் போக்கிலான பகுதிகள் வெள்ளத்தினால் பாதிப்படையாதபடி பாதுகாத்தல், ஆறுகள் வறண்டு போகாதபடி பாதுகாத்தல், பல்லுயிரைப் பாதுகாத்தல் போன்ற சுற்றுச்சூழல் சேவைகளை அளிப்பதோடு, மேய்ச்சல் நிலங்கள் அநேகமாக அழிந்துவரும் வன உயிரினங்களுக்கு வாழ்விடங்களாகவும் இருக்கின்றன.

எதிர்நோக்கும் சவால்கள்

மேய்ச்சல் நிலங்கள் சீரழிந்து வருவதைத்தவிர, மேய்ச்சல் நிலங்களை மேய்ச்சல் தவிர மற்ற நிலப் பயன்பாட்டு நிலங்களாக வகைமாற்றம் செய்வது மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் வாழ்வியலுக்கான முக்கிய அச்சுறுத்தலாகும். அதிகரித்து வரும் மனித அழுத்தங்களுடன் காலநிலை நெருக்கடிகளும் சேர்ந்து லட்சக்கணக்கான பாரம்பரிய மேய்ச்சல் நிலப் பயனாளிகளைக் கால்நடை உற்பத்தி இழப்புகள், நீர் மற்றும் தீவனப் பற்றாக்குறை, நிலப் பயன்பாட்டுச் சச்சரவுகள், இடப்பெயர்வு, ஒரே இடத்தில் குடியேற்றம் மற்றும் வறுமை ஆகியவற்றைச் சமாளிக்கக் கட்டாயப்படுத்துகின்றன. இந்த பிரச்சினைகளின் பின்னணியில் மோசமான நிர்வாகம், நிறுவன பலவீனங்கள், கொள்கை, புறக்கணிப்பு, குறைவான முதலீடு மற்றும் பெரிய அறிவு மற்றும் தொழில்நுட்ப இடைவெளிகள் முக்கிய காரணிகளாக உள்ளன. சில நாடுகளில் சுரங்க நடவடிக்கைகளின் அத்துமீறல் மற்றும் மோசமாகத் திட்டமிடப்பட்ட பெரிய அளவிலான புதுப்பிக்கத்தக்க சக்தி திட்டங்களின் தலையீடுகள், மேய்ச்சல் சமூகத்தினரின் அணுகல் உரிமைகளைச் சமரசம் செய்வதுடன், அவர்களின் வாழ்வாதாரங்களை சேதப்படுத்துகின்றன. உலகளவில் தொழில்மயமாக்கப்பட்ட தீவிர கால்நடை வளர்ப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கைகள், வளங்குன்றா மேய்ச்சல் வாழ்வியல் நடைமுறைகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. ஒரு சாத்தியமான மற்றும் வளங்குன்றா நிலப்பயன்பாடு மற்றும் அநேக சுற்றுச்சூழல் சேவைகளை வழங்குகின்ற மேய்ச்சல் வாழ்வியலுக்குத் தொடர்ந்து பாராட்டு இல்லாதது மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினரை ஒதுக்கிவைத்து உலகளாவிய நிகழ்ச்சி நிரல் அமைப்பில் கவனிக்கப்படாமல் உள்ளது. இந்தப் படுமோசமான நிலை தொடர்ந்தால், மேய்ச்சல் நிலங்களுக்கும், மக்களுக்கும் மற்றும் முழு கிரகத்திற்கும் மோசமான விளைவுகள் ஏற்படும்.

மாறுதலாகும் அணுகுமுறை

இந்தக் குறிப்பிடப்பட்ட அச்சுறுத்தல்கள் இருந்தபோதிலும், பல புதுமையான கொள்கைகள் மற்றும் நல்ல நடைமுறைகளைச் செயல்படுத்துவது போன்ற செயற்பாடுகள் உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினரின் நல்வாழ்வை மேம்படுத்தியிருக்கிறது. அந்த நிரூபணமான வெற்றிகள், வருங்காலங்களில் நாம் செய்யவேண்டிய கீழ்க்கண்ட எட்டுச் செயற்பாடுகளை அறிவுறுத்துகின்றன. இந்த எட்டுச் செயற்பாடுகளும், மேய்ச்சல் சமூகத்தினர் மற்றும் அவர்கள் கால்நடைகளை மேய்ச்சல் நிலங்களின் பிரச்சினையாகக் கருதுவதிலிருந்து

மாறுபட்டு அவர்களை மேய்ச்சல் நிலம்- விவசாயம்- சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியத்திற்கு இயற்கை அடிப்படையிலான தீர்வாகவும் காலத்தால் சிறப்புப் பெற்றதாகவும் கருதப்படுகிறது.

காடழிப்பை நிறுத்துவதற்கு இருந்த அர்ப்பணிப்பைப் போலவே மேய்ச்சல் நிலங்களைக் கண்மூடித்தனமாக வகைமாற்றம் செய்வதை நிறுத்துவதற்கு அதே அளவிலான உலகளாவிய அர்ப்பணிப்புத் தேவைப்படுகிறது. நிலச் சீரழிவு நடுநிலையை உலகளாவிய அர்ப்பணிப்பு மற்றும் கருவியாக கொண்டு வலுவான இலக்குகள், நடவடிக்கை மற்றும் நிதி மூலம் மேய்ச்சல் நிலங்கள் மீது கவனத்தை அதிகரிக்க வேண்டும். வளங்குன்றா மேய்ச்சல் நில மேலாண்மை மற்றும் மறு சீரமைப்புக்கான அறிவு பூர்வமான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றிக் காலநிலை மாற்றத்தைத் தணித்து தேசிய மற்றும் உலகளவில் ஐ.நா 17 வளங்குன்றா வளர்ச்சி செயற்பொறுப்புகளை நிறைவேற்றலாம். மேய்ச்சல் நிலங்களை வளங்குன்றாத வகையில் நிர்வகித்தல் என்பது நிலச்சீரழிவு நடுநிலையை அடைய பல நாடுகள் செய்துள்ள உறுதிப்பாடாகும். நிலச்சீரழிவு நடுநிலையை, சீரழிந்து வரும் நிலத்தின் அளவிற்கும் மீட்டெடுக்கப்படும் அல்லது மேம்படுத்தப்படும் நிலத்தின் அளவிற்கும் இடையில் சமநிலையை வைத்திருப்பது என்று ஐ.நா பாலைவனமாக்கலை எதிர்த்துப்போராடும் பெருங்குழுமம் வரையறுத்துள்ளது.

முன்னெடுக்க வேணடிய செயற்பாடுகள்

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினர் சர்வதேச ஆண்டு 2026 இன் ஆதரவு குழு, மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினர் எதிர்கொள்ளும் சவால்களைத் திறமையுடன் கையாளுவதற்காக எட்டு முக்கியமான நடவடிக்கைகளை ஐ.நா பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடும் பெருங்குழுமத்திடம் வைத்துள்ளது.

1. கண்மூடித்தனமாக மேய்ச்சல் நிலங்களை வகைமாற்றம் செய்வதை நிறுத்துதல்

தொடர்ந்து மேய்ச்சல் நிலங்களை விளைநிலங்களாக, மரத்தோட்டங்களாக, வனப்பகுதியாக, சுரங்கப்பகுதியாகப் புதுப்பிக்கத் தக்க ஆற்றலை உருவாக்கும் நிலப்பகுதியாக, உட்கட்டமைப்புப் பகுதியாக, மனித குடியேற்றப் பகுதியாக வகைமாற்றம் செய்வது மேய்ச்சல் நிலங்களின் உற்பத்தித்திறன், சுற்றுச்சூழல் சேவைகள் மற்றும் காலநிலை மாற்றத்தைத் தணிப்பதில் சாத்தியமுள்ள பங்கையும் பாதிக்கிறது. தகுந்த சட்டம் மற்றும் கண்காணிப்பு முயற்சிகள் அமலுக்கு வரும் வரை, கண்மூடித்தனமாக மேய்ச்சல் நிலங்களை வகைமாற்றம் செய்யும் நடைமுறைகளை நிறுத்த வேண்டும்.

2. மேய்ச்சல் சமூகத்தினரின் இடம்பெயர் ஆற்றலின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தல்

புலம்பெயரும் வன மற்றும் வளர்ப்புத் தாவரவுண்ணிகளின் மேய்ச்சல், மேய்ச்சல் நிலங்களின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஓர் அங்கமாகும். மேய்ச்சல் நிலங்களின் ஆரோக்கியத்தை வளங்குன்றாத முறையில் நிர்வகிப்பதற்கும், மீட்டெடுப்பதற்கும் இயற்கை அடிப்படையிலான தீர்வாக மேய்ச்சல் இடம்பெயர்வின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும். நெகிழ்வான மற்றும் உறுதியான சட்ட அமைப்புகள், நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் வசதிகளையுடைய இடப்பெயர்வு வழிகள் மற்றும் மேய்ச்சல் கால்நடைகளுக்குத் தேவையான தண்ணீர் வசதிகள் செய்யப்பட வேண்டும்.



3. பயனுள்ள பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் தொழில் நுட்பங்களை புதுமைப்படுத்திப் செயல்படுத்துதல்

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினருக்குத் தீங்கு விளைவிக்கும் பொருளாதாரக் கொள்கைகளை மறுமதிப்பீடு செய்ய வேண்டும். மேய்ச்சல் நிலங்களின் சீரழிவிற்கு வழிவகுக்கும் துணைத் தீவனங்களுக்கான மானியங்களைப் பொருளாதார மாற்றங்களான சூழல் சுற்றுலா மற்றும் சுற்றுச்சூழல் சேவைகளுக்கான ஆதரவு, கால்நடை காப்பீடு, இறைச்சிக்கூடங்கள் போன்ற மாற்று வழிகளால் மாற்றீடு செய்ய வேண்டும். சந்தை தடைகளை நீக்கி விலங்கு பன்முகத்தன்மை, கால்நடை ஆரோக்கியம் மற்றும் உள்நாட்டுக் கால்நடை இனங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பரவலாக்கப்பட்ட மற்றும் சிறிய அளவிலான புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி மற்றும் அணுகலை ஆதரிக்க வேண்டும். மேய்ச்சல் சமூகத்தினரின் கால்நடைப் பொருட்களுக்கு உயிர்க்கூறான சான்றிதழ் வழங்க தேவையான சட்ட அமைப்புகளை அமைத்தல் வேண்டும்.

4. ஒருங்கிணைந்த பல்நோக்கு பயன்பாட்டுத் தன்மையுடைய நில பயன்பாட்டை ஊக்குவித்தல்

ஒருங்கிணைந்த நோக்கங்களான, மரங்களினூடே மேய்ச்சல், வேளாண் காடுகள் திட்டங்கள், வனவிலங்கு-கால்நடை ஒருங்கிணைத்தல் மற்றும் சூழல் சுற்றுலா பல்நோக்குப் பயன்பாட்டுத் தன்மையுடைய நிலப் பயன்பாடு மூலமாகப் பலதரப்பட்ட நிலைத்த நன்மைகளை அடைய வளங்குன்றா மேய்ச்சல் நில நிர்வாகம் மற்றும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

5. மேய்ச்சல் சமூகத்தினரின் பங்கேற்புடன் நேர்மையான நில நிர்வாகத்தை வலுப்படுத்துதல்

நன்கு வரையறுக்கப்பட்ட சட்ட மற்றும் வழக்கமான நில அணுகல் உரிமைகளுடன் மேய்ச்சல் சமூகத்தினரை, மேய்ச்சல் நிலங்களின் பயன்பாடு மற்றும் மேலாண்மை குறித்து முடிவெடுப்பதில் பங்கேற்கச் செய்ய வேண்டும். மேய்ச்சல் நிலங்களின் வளமையில் மேய்ச்சல் சமூகத்தினரின் பங்கு முக்கியமானது என்பதை அங்கீகரிப்பதற்காக மேய்ச்சல் சமூகத்தினரின் பங்கேற்பு ஆளுகை நடைமுறைகளை ஆதரிக்க வேண்டும். விளிம்புநிலை மேய்ச்சல் குழுக்களான பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் பழங்குடி மக்கள் பங்கேற்க வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் சமத்துவத்தை ஊக்குவித்துப் பாரம்பரிய மேய்ச்சல் அறிவை மேம்படுத்த வேண்டும்.

6. நிலச் சீரழிவு நடுநிலை நிதியின் கீழ் மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் திட்டங்களுக்கு 30 விழுக்காடு அதிகரிக்க வேண்டும்

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினரின் சர்வதேச ஆண்டான 2026ஆம் ஆண்டில் நிலச் சீரழிவு நிதியிலிருந்து கிடைக்கும் ஆதரவை 30 விழுக்காடு உயர்த்தி மேய்ச்சல் நிலங்களின் மறுசீரமைப்பு, பாரம்பரிய சுழற்சி இடப்யெர்வு, பருவகால வள அணுகல் மற்றும் பிற அதிக செலவில்லாத வளங்குன்றா மேய்ச்சல் நில மேலாண்மை செயல்முறைகளில் முதலீடு செய்ய வேண்டும்.

7. நிலச் சீரழிவு நடுநிலை இலக்குகளை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் வாழ்வியலுக்கு அர்ப்பணிக்கவும்

ஐநா பாலைவனமாக்கலை எதிர்த்துப்போராடும் பெருங்குழுமத்தின் நிலச்சீரழிவு இலக்குகளில், மேய்ச்சல் நிலங்களின் மறுசீரமைப்பு மற்றும் வளங்குன்றா மேய்ச்சலைச்

சேர்த்து அவற்றை நோக்கிய பணிகளை விரைவு படுத்த வேண்டும். மேய்ச்சல் நிலங்களின் சீரழிவைத் தவிர்க்க, குறைக்க மற்றும் வளங்குன்றாத மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சலை அடைவதற்கான துல்லியமான நிலச்சீரழிவு நடுநிலை இலக்குகளை இதுவரை உருவாக்காதவர்கள் இலக்குகளை உருவாக்கக் கட்டளையிடவேண்டும்.

8. நிலச்சீரழிவு நிதியில் 25 விழுக்காட்டை அறிவு மற்றும் திறன் மேம்பாட்டிற்காக ஒதுக்கவும்

பங்கேற்பு ஆராய்ச்சி, தாக்க மதிப்பீடுகள், அறிவின் இணை உருவாக்கம், கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் மாடலிங் மூலமாக மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் அறிவு இடைவெளியைக் குறைக்க வேண்டும். பல்வேறு நில மேலாண்மை நடைமுறைகளின் தாக்கங்களை மதிப்பிடுவதற்கும், உலகளாவிய புள்ளி விவரங்களைச் சரிபார்க்கவும், நிலப் பயன்பாடு மற்றும் மேலாண்மை நடைமுறைகளில் ஏற்படும் மாற்றங்களை அடையாளம் கண்டு கண்காணிக்கவும் மற்றும் சாதகமான திட்டமிடலுக்கும் இந்த அறிவைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். நிலச்சீரழிவு நடுநிலை நிதியானது அதன் நிதியில் 25 விழுக்காட்டை அறிவுப்பகிர்வு, விழிப்புணர்வு ஏற்படுத்துதல், ஆதாரம் சார்ந்த முடிவு-ஆதரவுப்பணி மற்றும் உள்ளூர் மேய்ச்சல் நில பயனாளிகள் மற்றும் முடிவெடுப்பவர்களின் திறன் மேம்பாடு ஆகியவற்றுக்காக ஒதுக்குவதை உறுதிப்படுத்தவும்.

வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது

மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூக சர்வதேச ஆண்டு 2026, பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடும் பெருங்குழும உறுப்பு நாடுகள் மற்றும் பிற தரப்பினருக்கும் வளங்குன்றா வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான வேகத்தை அதிகரிக்கவும் இந்த ஆண்டை மேய்ச்சல் நிலங்கள் மற்றும் மேய்ச்சல் சமூகத்தினருக்காகவும் ஆரோக்கியமான கிரகத்திற்காகவும் சிறந்த ஆண்டாக மாற்றியமைக்க நல் வாய்ப்பை வழங்குகிறது.

பசுமைப் பொருளாதாரம்

‘எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது பொது’ என்கிறார் தொல்காப்பியர். ‘பல்லுயிர் ஓம்புதலே தலையாய அறம்’ என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார். தமிழ் இலக்கியங்கள் பல்லுயிர் வாழ்வுரிமையை வாழ்நெறியாக வலியுறுத்தின. இன்றைய உலகைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கும் ‘நவீன வளர்ச்சி’ எனும் நம்பிக்கை ‘மனித மைய வாதத்தால்’ நோய் வாய்ப்பட்டிருக்கிறது. தற்போது நிலவுகின்ற சூழலியல் நெருக்கடிகளை எதிர்கொள்ள ‘இயற்கைச் சமநிலை’ சார்ந்த சிந்தனைகள் வாழ்நெறிக்கான கோட்பாடுகளாக முன்வைக்கப்படுகின்றன.

ஆநிரைகளை வழிப்படுத்தி மேய்ச்சலுக்குப் பழக்கப்படுத்திய போது மனித இனம் பண்படத் தொடங்கியது. ‘ஆ காத்து ஓம்பி ஆப் பயன் அளிக்கும்’ ‘மேய்ச்சல் பண்பாடு’ மனித நாகரீகத்தின் தாய் மடியாகத் திகழ்கிறது. மலைகள், காடுகள், வயல்கள் எங்கும் மேய்ந்து அலைந்து வாழும் ஆநிரைகள் தங்கள் குளம்படிகளில் பல்லுயிரியத்தைப் பதியமிட்டுச் செல்கின்றன. இயற்கைச் சூழற்சியோடும், உயிரினங்களின் உணவுச் சங்கிலியோடும் தொப்புள் கொடி உறவினைக் கொண்டுள்ள மேய்ச்சல் பண்பாடு பசுமைப் பொருளாதாரத்திற்கு உரிய வளமான கூறுகளைக் கொண்டுள்ளது.

‘மேய்ச்சலியம்’ இயற்கையுடன் நின்று, மேய்ச்சல் அறிவின் துணை கொண்டு பல்லுயிர்மைக்கான சிந்தனைகளையும் செயல்திட்டங்களையும் முன்மொழிகிறது, அத்துடன் மேய்ச்சல் நிலப் பண்பாட்டின் தொன்மையினையும் தொடர்ச்சியினையும் ஆழ்ந்தறிந்து, இயற்கையோடு இயைந்த வாழுமைக்காண எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் திசையில் புவியியல், அரசியல், சமூகவியல், பொருளாதாரவியல், சூழலியல் ஆகியவற்றை உள்ளடக்கி, காலநிலை மாற்றம் குறித்த ஓர்மையோடு வரலாற்றின் கழிமுகத்தில் ‘மேய்ச்சலியம்’ பல்லுயிர்மைக்கான பயணத்தைத் தொடங்கியுள்ளது.

பட்டி பெருகி பால் பானை பொங்கவும், நல்ல மழை பொழிந்து உலகு செழிக்கவும் ‘நீரின்றி அமையாது உலகு’ என்பதைப் போல ‘ஆவின்றி அமையாது இயற்கைச் சமநிலை’ எனும் உணர்வுடன் ‘மேய்ச்சலியம்’ நிலையான வளர்ச்சிக்கு நாற்றுப் பாவுகிறது.

பசுமைப் பொருளாதாரத்திற்கான உறைமோர்... மேய்ச்சலியம்!

BONbLOC
Digital Solutions Partner for Thozhuvam